௩

# மணை நூல்

சு.வெ. சுப்பிரமணியன்

# மனை நூல்

பதிப்பாசிரியர்

மு. சுப்பிரமணியம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மனை நூல்

பதிப்பாசிரியர்
பூ. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
அடையாறு—சென்னை-600 020

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | — | Manai Nūl |
| Editor | — | P. Subramaniam<br>International Institute<br>of Tamil Studies |
| Publisher | — | International Institute<br>of Tamil Studies,<br>Adaiyaru,<br>Madras—600 020. |
| Publication Number | — | 32 |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | March, 1981 |
| Paper used | — | 18 kg. Hindustan Ptg. |
| Size of the book | — | 21×14 Cms. |
| Printing Types used | — | 10, 12, 18 points |
| No. of copies printed | — | 1200 |
| Number of pages | — | LIV + 300 |
| **Price** | — | **15/= (Fifteen only)** |
| Printers | — | Novel Art Printers<br>137, Jani Jan Khan Rd<br>Madras—600 014<br>Phone : 82731 |
| Binding | — | Card Board |
| Artist | — | Amudhone |
| Subject | — | On House Construction |

# முன்னுரை

**டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்**
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
அடையாறு, சென்னை-600 020.

தமிழர் எல்லாச் செயல்களையும் நன்கு சிந்தித்துச் செய்தனர் என்பதை நம் பழங்கால நூல்கள் அனைத்தும் காட்டுகின்றன. அவற்றுள் மனைநூல் பற்றிய ஒன்று.

மனித வாழ்க்கையின் நாகரிக வளர்ச்சியை, வீடுகட்டி மனிதன் வாழ்ந்தது நிரூபிக்கின்றது. தமிழர் வீடுகட்டும்போது, நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்தனர்; நல்ல மரத்தைத் தேர்ந்தெடுத்தனர்; நல்ல நாள் பார்த்துக் கட்டத் தொடங்கினர்.

தமிழ் நாட்டிலிருந்து தேக்கு மரம் பல நாடுகளுக்கும் சென்றதற்கு அடிப்படைக் காரணம், தமிழர் வீடுகட்டுவதில் சிறந்த மரத்தைத் தேர்ந்தெடுத்ததுதான் என்பது தெளிவாகிறது. நல்ல மரங்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றித் தமிழர், தெளிவாக, அனுபவ அறிவின் வாயிலாக உணர்ந்திருந்தனர் என்பதை, நம் மனைநூல் சாத்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

பெரும்பான்மையும் நம்பிக்கையின் அடிப்படையில் தமிழர்களின் செயல்கள் அமைந்த காரணத்தால், அவர்களுடைய நம்பிக்கைகள் சோதிட சாத்திரங்களின் வாயிலாக நமக்குத் தெரிகின்றன. மனைநூல் சாத்திரங்கள் சோதிட அடிப்படையில் அமைந்துள்ளன. அவை அவர்களுடைய நம்பிக்கையைக் காட்டுகின்றன.

நிலத்தைச் சோதித்துத் தேர்ந்தெடுத்தல், மரங்களைத் தேர்ந்தெடுத்தல், ஒரு வீட்டின் நீள அகலங்கள், ஒரு அறையின் நீள அகலங்கள், சமையல் அறை இருக்கவேண்டிய இடம், படுக்கை அறை அமைக்கவேண்டிய இடம், விருந்தினர் அறை, கல்வி அறை போன்றவற்றை அமைக்கவேண்டிய இடம், கிணறு தோண்டவேண்டிய இடம், மாட்டுத் தொழுவம், குப்பைக்குழி ஆகியவை அமைக்கவேண்டிய இடம், கழிவுநீரை அப்புறப்படுத்தும் திசை ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கும் முறை போன்றவைகளை எல்லாம் தமிழர் தெளிவாக உணர்ந்திருந்தனர் என்பதை இம் மனைநூல் காட்டுகிறது. இவை யாவும் தமிழர்களின் அறிவியல் பூர்வமான எண்ணங்களை நமக்கு உணர்த்துகின்றன.

இந்நூலைப் போற்றிப் பாராட்டுவதனால் நம்முடைய மூதாதையர்களைப் போற்றிப் பாராட்டுகின்றோம்; அவர்களுடைய இறை அறிவு காரணமாக அமைந்த அறிவியல் அறிவை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளுகின்றோம்; அவர்கள் அனுபவ அறிவைப் பயன்படுத்தி நம் நல்வாழ்வை அமைத்துக் கொள்ளுகின்றோம் என்பன உறுதியாகின்றன.

இதுவரை சில மனைநூல்கள் வெளிவந்துள்ளன. இருப்பினும் சுவடி இயல் கல்வியின் ஆழத்தை நன்கு உணர்த்தும் நோக்கத்தில் முயன்று, சுவடிகளை ஆழ்ந்து நோக்கி, திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள் வெளிக்கொணரும் இந்நூல் மூன்று சுவடிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆயினும் 18 சுவடிகளை ஒப்பு நோக்கி இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

சிறந்த முறையில் நுணுகிப் பார்த்து மூலப்பகுதி பதிப்பிக்கப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பெற்ற தொடர்களும், திருத்தம் செய்யப்பெறாத தொடர்களும் தொகுத்துக் காட்டப் பட்டுள்ளன. தனித்தனியாகக் கணக்கிட்டு அறியவேண்டிய மனைப் பொருத்தங்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. இந்நூல் 12 தலைப்புகளில் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டு எளிமையாக்கப் பட்டுள்ளது. பதிப்புச் செய்திகள் அனைத்தும் சுருக்கமாக அடங்கிய பதிப்புரை மிகவும் பயன்தரத்தக்க ஒன்றாகும். இந்நூல் எல்லா வகையிலும் தமிழருக்குப் பயன்படும் என்று நம்புகிறேன்.

பலவகையாலும் முயற்சிசெய்து, எல்லா வகையிலும் தமிழருக்குப் பயன்படும் முறையில் அமைத்து இந்நூலைப் பதிப்பித்து வெளிக்கொணர்ந்த திரு. பூ. சுப்பிரமணியம் அவர்களைப் பாராட்டுகிறேன்; போற்றுகிறேன்.

இந்நிறுவனத்தின் ஆக்கப்பணிகள் அனைத்திற்கும் ஊக்கம் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர், செ. அரங்கநாயகம் அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

இந்நூலினைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர். நாரா நாச்சியப்பன் அவர்களுக்கு என்றும் நன்றி உடையோம்.

சென்னை-600 020 அன்பன்

7-4-1981 ச. வே. சுப்பிரமணியன்

# பதிப்புரை

## ஆதிமனிதன்

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டவன் ஆதி மனிதன். பல இடத்திற்கும் சென்று உணவு தேடினான். தேவை முடிந்தபின் அங்கேயே தங்கினான். தொடர்ந்து சென்றான். இவ்வாறு திரிந்தே வாழ்ந்தான். வெயிலின் கொடுமை உணர்ந்தான்; மரநிழலில் ஒதுங்கினான். மழையின் கடுமை உணர்ந்தான்; மரப்பொந்துகள், கற்குகைகளில் தங்கினான். கொடிய விலங்குகளிடமிருந்து தப்ப மரக்கிளைகளைப் புகலிடமாக்கிக் கொண்டான்.

சுவை பல கண்டான். அச்சுவைப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினான். அத்தொழிலே பயிர்த் தொழிலாயிற்று. செயற்கை வாழ்க்கை தொடங்கிற்று. எங்கு சென்று திரிந்தாலும் தான் பயிரிட்டுள்ள இடத்திற்குத் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது அவ்விடத்தில் தங்க வேண்டியதாயிற்று வெயிலுக்கும் மழைக்கும் ஏற்ற இடம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கொடிய விலங்குகளால் அழிவு ஏற்படாதவாறு அவ்விடத்தை அமைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இந்நிலையின் வளர்ச்சியே இன்றைய மாட மாளிகைகள்.

## வீடும் வாழ்க்கையும்

மரக்கிளைகளில் அமைக்கப்பட்ட பரண்களில் தொடங்கி, இன்றைய பல அடுக்கு மாளிகைகளாக வளர்ந்துள்ள நிலையை நோக்க, வீட்டின் அவசியத்தை மனிதன் எவ்வாறு உணர்ந்திருக்கிறான் என்பதை அறியமுடியும்.

வீடுகட்டி வாழத்தொடங்கிய மனிதன் பலருடன் சேர்ந்து வாழத் தலைப்பட்டான். ஒரே வட்டாரத்தில் பல வீடுகள் தோன்றின. நிலையான வாழ்க்கை ஏற்பட்டது. ஒருவர் அடையும் நன்மை தீமைகள் பிறரால் அறியப்பட்டன. ஒருவர் பெறும் இன்ப துன்பங்களில் பிறரும் பங்குகொள்ளத் தலைப்பட்டனர்.

இந்த நிலையில் தங்கள் பகுதியில் புதியதாக வீடுகட்டிக் கொண்டு குடிவந்தவர்களைப் பிறர் அக்கறையுடன் கவனித்தனர். வேண்டும் துணை புரிந்தனர். இவ்வாறே வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் துணையாக நின்றனர். எனவே, ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பலவகையான இன்ப துன்பங்களுக்கும் காரணம் கண்டனர். அக்காரணங்கள் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டபின் அவற்றிற்குப் பரிகாரங்களும் காணப்பட்டன. இந்த நிலை வீடுகட்டுவதிலும் குடியேறுவதிலும்கூட வளர்ந்தது.

## வாழ்க்கை வேறுபாடுகளை உணர்தல்

பலர் பலகாலத்திலும் ஒவ்வொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அவரவர் விருப்பம்போல வீடுகட்டத் தொடங்கியதைக் கண்டார்கள். அவ்வீடுகளில்,

1. ஒன்றிரண்டு அரைகுறையாக நின்றுவிட்டன.
2. ஒன்றிரண்டில்—வீட்டைக் கட்டத் தொடங்கியவர்கள் வேறு இடம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.
3. சில வீடுகள் முழுமை பெற்றன; குடி புகுந்தனர். ஆனால்—ஒரு வீட்டில் குடும்பத்தலைவன் பலநாள் நோய்வாய்ப்பட்டான். ஒரு வீட்டில் இல்லத் தலைவி இறந்துபட்டாள். ஒரு வீட்டில் எந்நாளும் வறுமை காணப்பட்டது. ஒன்றில் இருந்த செல்வமெல்லாம் அழிந்தன. ஒன்றில் மக்கட்பேறு இல்லை.
4. சில வீடுகள் நன்றாகக் கட்டப்பட்டன. அவற்றில் சீரும் சிறப்பும் நின்று நிலவின. சில வீடுகளில் மாடுகன்றுகள் பெருகி வளர்ந்தன. ஒருசில வீட்டார் பயிரிட்டநிலத்தில் விளைவு பெருகியது.

மக்கள் இவ்வாறான பல நிலைகளைப் பலகாலமும் பலகுடும்பங்களிலும் கண்டார்கள். திரிந்து வாழ்ந்த வாழ்க்கையில் இவ்

வாறான இன்பதுன்பங்களைக் கவனித்து அறியாத மக்களுக்கும் ஒருசேர வாழ்ந்த காலத்துப் பலருக்கும் ஏற்படும் பலவிதமான இன்ப துன்பங்கள் புதிய அனுபவத்தை உண்டாக்கின.

## சிந்தனை

ஒரே இடத்தில் வாழ்கிறோம். சிலர் வாழ்க்கையில் இன்பம் ஏற்படுகிறது; பலர் வாழ்க்கையில் துன்பத்தைக் காணுகிறோம். ஒரே வகையான மண்ணில் பயிர் செய்கிறோம். சிலருடைய பயிர் நல்ல பலனைத் தருகிறது; பலருடைய பயிர் நாசமடைகிறது. இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன என்பதை அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

அவ்விடத்தைத் தேடிவந்த நேரத்தை நினைத்தார்கள். வீடு கட்டத் தேர்ந்தெடுத்த நிலத்தை உன்னிப்பாகக் கவனித்தார்கள். வீடுகட்டத் தொடங்கிய காலம், வாசற்கால் வைத்துள்ள இடம், வைத்தநேரம், வீட்டின் மேடு மூடி முடித்த நேரம் முதலியனவும் அவர்களால் கவனிக்கப்பட்டன. அவ் வீட்டில் குடிபுகுந்த நாள் கவனிக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்ந்த நிமித்தங்களும் கவனிக்கப்பட்டன.

## அனுபவ முடிவுகள்

இறுதியாக அவர்கள் அவ்வீடுகளில் ஏற்பட்ட பலாபலன்களை முறையாகக் கவனிக்கத் தொடங்கினர்கள். இதேபோல பயிர்த்தொழில் போன்றவற்றை மேற்கொள்ளும்போதும் இவை அனைத்தையும் உற்று நோக்கினார்கள். ஒவ்வொன்றையும் காரண காரியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பலாபலன்களுக்கு ஏற்ற காரணங்கள் பலராலும் ஏற்கப்பட்டன. அவ்வனுபவச் செய்திகள் மக்களிடையே பரவத் தொடங்கின. அவற்றுள் நல்லனவற்றைத் தேர்ந்து மக்கள் தம் ஒவ்வொரு செயலிலும் அவற்றைப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

மக்கள் வாழ்க்கையில் செல்வமும் வறுமையும், மாடுகன்றுகளின் விருத்தியும் அழிவும், பயிர் பச்சைகளின் விளைவும் சேதமும், மகட்பேறும் மலட்டுத் தன்மையும், பிணியும் அகால மரணமும், நட்பும் பகையும், பிறவகை நன்மை தீமைகளும் உயர்வு தாழ்வுகளும் தாங்கள் வாழும் வீட்டின் அமைப்பினாலேயே வருகின்றன என்பதை முழுமையாக அவர்கள்

அனைவரும் உணர்ந்தார்கள். அதுமுதல் அனைவரும் வீடு கட்டுவதில் பலர் அனுபவங்களையும் அறிந்து தங்கள், தங்கள் வீடுகளை முறையாகக் கட்டத் தொடங்கினார்கள்.

## முடிவுகள் ஏட்டில் ஏறுதல்

இந்த வரன்முறைகள் பலகாலம் வாய்வழி வழக்காற்றிலேயே இருந்துவந்தன. யாரோ ஒருவர், ஏதோ ஒரு காலத்தில் இச் செய்திகளுக்கு வரிவடிவம் கொடுக்கத் தொடங்கினார் அதன்பயனே இன்று நம்மிடை உலவிவரும் மனையடி சாஸ்திரம் என்னும் சுவடிகள்.

"தீதிலா மயனார் சொன்ன
சிற்பசாஸ் திரமாம் நூலை
நீதியாய்த் தமிழி னாலே
நிலைபட உரைக்க லுற்றேன்"

என்னும் இந்நூலின் முதற்பா அடிகள், இந்நூல் மயன் என்பவரால் எழுதப்பெற்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு என்பதை உணர்த்துகின்றன. எனவே தமிழரிடையே வாய் மொழியாக வழங்கிவந்த இந்நூலின் செய்திகளுக்கு முதலில் வடமொழியில் வடிவம் கொடுக்கப்பட்டது என்பதை அறியலாம். அல்லது மயன் எழுதிய நூலுக்கு முன் இருந்த இந்நூலின் தமிழ்ச் சுவடிகள், அழிந்துபட்ட தமிழ்ச் சுவடிகளுள் இடம் பெற்று விட்டன என்று கொள்ளுவதும் பொருந்தும்.

இந்நூல் மயன் என்பவரால் எழுதப்பட்ட 'மயமதம்' என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகும் என்றாலும், மயமதம் என்னும் நூலில் காணப்பெறும் வீடுகட்டுதற்குரிய இலக்கணங்களைக் கூறும் பகுதிகள் மட்டுமே தொகுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மயமதம் முழுமையும் இந்நூலுள் காணப்பெறவில்லை.

## மயமதமும் மனைநூலும்

மயமதம் என்னும் நூலில் சொல்லப்பெறும் செய்திகளைத் தொகுத்துக்கூறி, 'நுதலிப்புகுதல்' என்னும் உத்தியால் முதல் அத்தியாயத்தைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

வஸ்து பிரகாரம், பூ பரீட்சை, பூ பரிகிரஹம் என்னும் இரண்டாம், மூன்றாம், நான்காம் அத்தியாயங்களில் பூமியைச்

சோதித்துத் தகுதி உள்ளதைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் கூறப் படுகின்றன.

மனோபகரணம் என்னும் ஐந்தாம் அத்தியாயத்தில் பரமாணு முதலாக உள்ள அளவு முறைகள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

திக்பரிச்சேதம், பததேவதாவின்யாசம், பலிகர்மவிதானம் எனப்பெறும் ஆறு, ஏழு, எட்டு ஆகிய அத்தியாயங்களில் திசைகளைப் பிரித்தல், சங்கு அமைத்தல், அடிகளுக்குரிய தேவதைகளை இறுத்துதல், பூசை முதலிய சடங்குகளைச் செய்தல் போல்வன கூறப்படுகின்றன.

ஒன்பது முதல் பதினான்கு வரையிலுள்ள அத்தியாயங்கள், கிராமம், நகரம், கோயில்கள் முதலியவற்றை அமைக்கும் முறைகளைக் கூறுகின்றன.

பதினைந்து முதல் பதினேழு முடிய உள்ள அத்தியாயங்கள் தூண்களின் எண்ணிக்கை, ஏற்றமரம், அளவு போல்வனவற்றையும், உத்திரம் முதல் கூரை வரையிலுள்ள பிறபொருள்களுக்குரிய இலக்கணங்களையும் கூறுகின்றன.

இவற்றுள் கிராமம், நகரம், கோயில்கள் போன்றவற்றின் இலக்கணங்களை விடுத்து வீடுகட்டும் மனைக்குரிய செய்திகளை மட்டுமே தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்துள்ளார் இம்மனை நூல் ஆசிரியர்.

## மனைநூல் சுவடிகள்

சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் **ஆர். 3396 ஆம்** எண்ணில் பாதுகாக்கப்பெற்று வரும் 'மனையடி சாஸ்திரம்' என்னும் சுவடியே இந்நூலுக்கு அடிப்படைச் சுவடியாக எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது. இச் சுவடியினைத் தவிர, இந்த நூலகத்தில்,

1. 'மனையடி சாஸ்திரம்' என்னும் பெயரில் நான்கு சுவடிகள் உள்ளன. அவை:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஓலைச்சுவடி | ஆர். | 2678ஆம் | எண்ணில் | 15 | ஏடுகள் |
| 2. | ,, | ,, | 3018 | ,, | 54 | ,, |
| 3. | ,, | ,, | 6083 | ,, | 30 | ,, |
| 4. | ,, | ,, | 6189 | ,, | 42 | ,, |

2. 'மனையடி சாஸ்திரம்' என்ற பெயரில் ஏழு சுவடிகள் இருக்கின்றன. அவை:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஓலைச்சுவடி | ஆர். | 165 | ஆம் | எண்ணில் | 36 ஏடுகள் |
| 2. | ,, | ,, | 195(a) | ,, | ,, | 33 ,, |
| 3. | ,, | ,, | 238(o) | ,, | ,, | 6 ,, |
| 4. | ,, | ,, | 2165 | ,, | ,, | 3 ,, |
| 5. | ,, | ,, | 2539 | ,, | ,, | 2 ,, |
| 6. | ,, | ,, | 7113 | ,, | ,, | 11 ,, |
| 7. | தாள் சுவடி | ,, | 5950 | ,, | ,, | 8 ,, |

3. 'மனை நூல்' என்ற பெயரில் இரண்டு சுவடிகள் உள்ளன. அவை:

1. ஓலைச்சுவடி ஆர். 243 (b) ஆம் எண்ணில் ஏடுகள்
2. தாள்சுவடி ஆர். 5951 (b) ஆம் எண்ணில் 15 ஏடுகள்

4. 'மனை வாஸ்து லட்சணம்' என்ற பெயரில் இரண்டு சுவடிகள் உள்ளன. அவை:

1. ஓலைச் சுவடி ஆர். 238 (m) ஆம் எண்ணில் 7 ஏடுகள்
2. தாள் சுவடி ஆர். 5952 ஆம் எண்ணில் 8 ஏடுகள்.

5. 'சிற்ப சாஸ்திரம்' என்ற பெயரில் இரண்டு சுவடிகள் இருக்கின்றன. அவை:

1. ஓலைச்சுவடி ஆர். 243 (a) ஆம் எண்ணில் 12 ஏடுகள்
2. தாள் சுவடி ஆர். 1021 ஆம் எண்ணில் 8 ஏடுகள்

6. 'மனை சாஸ்திரம்' என்ற பெயரில், ஆர். 244 ஆம் எண்ணில் 10 ஏடுகளைக் கொண்ட, கிரந்த எழுத்துகளால் எழுதப் பட்ட ஓலைச்சுவடி ஒன்று உள்ளது.

ஆக இந்த பத்தொன்பது சுவடிகளிலுமாக நூலின் பெயர் ஐந்து வகையாகக் காணப்படுவதாலும், பல சுவடிப் பாடல்களையும் இணைத்துப் பதிப்பித்திருப்பதாலும் இந்நூலுக்கு 'மனை நூல்' என்னும் பெயர் கொடுக்கப்பட்டது.

## மனை என்னும் சொல்—அகராதிகளில்

மனை என்ற சொல்லுக்குக் குடிப்பிறப்பு, குடும்பம், சிற்றில், சூதாடுபலகையின் அறை, நற்றாய், நில அளவுவகை, பசுத் தொழுவம், மனைவி, வாழ்க்கை, வீடு, வெற்றிடம், 2400 குழிகொண்ட நிலம் போன்ற பல பொருள்கள் காணப்படு கின்றன.

## மனை—இலக்கியங்கள் பலபொருளில்

"மங்கலம் என்ப மனைமாட்சி"[1]

"பிறன்மனை நோக்காத பேராண்மை"[2]

என்னும் குறள் அடிகளிலும்,

"பிருகு என்னும் பெருந்தவன் தன்மனை"[3]

என்னும் கம்பராமாயண அடியிலும் வரும் 'மனை' என்னும் சொற்கள் 'மனைவி' என்னும் பொருளில் அமைந்துள்ளன.

"மனைப்பாசம் கைவிடாய்"[4]

என்னும் நாலடியார் அடியில், மனைப்பாசம் என்னும் தொடருக்கு 'வாழ்க்கைப் பற்று' என்று பொருள் கூறப் பெற்றுள்ளது.

"தாம்பிற் பிணித்து மனைநிறீஇ"[5]

என்னுமிடத்தில் மனை என்னும் சொல், மாட்டுத் தொழு வத்தைச் சுட்டுகிறது.

"காப்புற வகுத்த கன்னியங் கடிமனை"[6]

என்னும் பெருங்கதையில் வரும் தொடருக்குக் 'கன்னிமாடம் என்று பொருள் கூறுகின்றார் டாக்டர். உ.வே.சா அவர்கள்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகி"[7]

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்"[8]

ஆகிய குறளடிகளில் உள்ள 'மனை' என்னும் சொற்களுக்கு 'மனையறம்' என்று பொருள் கூறப்படுகிறது.

"மனையுறை குரீஇக் கறையணற் சேவல்"[9]

இவ்வடியில் 'மனை இறைப்பில் வாழும் ஊர்க்குருவி' என்னும் பொருள் காணப்படுகிறது.

"இனைமதி வாழிய நெஞ்சே! மனைமரத்து
எல்லுறு மௌவல் நாறும்"[10]

என்ற குறுந்தொகை அடியில் உள்ள 'மனை மரம்' என்பதற்கு 'மனைப் படப்பையிலுள்ள மரத்தின் மீது' என்று உரைகூறி, 'மனை மரம் என்றது வீட்டைச் சார்ந்த தோட்டத்தில் உள்ள நொச்சி மரம் முதலியவற்றை' என்று விளக்கமும் தருகிறார் டாக்டர் உ.வே.சா. அவர்கள்.

---

1. குறள்-68. 2. குறள்-148. 3. பாலகாண்டம்-400 4. நாலடியார்-130. 5. கலித்தொகை-111. 6. பெருங்கதை-46, வரி 266. 7. குறள்-51. 8. குறள்-52. 9. புறம்-318. 10. குறுந்தொகை-19.

"மனைஇள நொச்சி மௌவல் வான்முகை"[11]

"மனைய தாழ்வில் நொச்சி"[12]

ஆகிய அடிகளில் உள்ள மனை என்ற சொற்களுக்கு 'மனை முன்றிலில்' என்ற பொருள் கூறப்பட்டுள்ளது.

"மனை மரம் ஒசிய ஒற்றி"[13]

என்பதில் 'மனையின் அயலில்' என்றும்,

"மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய"[14]

என்பதில் 'மனையைச் சார்ந்த தோட்டத்தில்' என்றும்,

"மனைநடு மௌவலொடு ஊழ்முகை அவிழ"[15]

என்பதில் 'இல்லின் நடுமுற்றத்தில்' என்றும் பலவாறான பொருள்கள் கூற்றப்பட்டுள்ளன.

## மனை—தொல்காப்பியத்தில்

"புணர்ந்துடன் போகிய கிழவோள்
மனை இருந்து"[16]

"மனையோர் கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக் காலை யான"[17]

என்னும் தொல்காப்பிய நூற்பா அடிகளில் 'மனை' என்னும் சொல் வீடு என்ற பொருளிலேயே கையாளப்பட்டுள்ளது.

## மனை-இலக்கியங்களில்-வீடு என்னும் பொருளில்

"மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை"[18]

"கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ"[19]

"மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்"[20]

"மனையுறைப் புறவின் செங்காற்சேவல்"[21]

"மாதவி மல்லிகை மனைவளர் முல்லை"[22]

"மானமொடு மாயமில ராயமனை யாரும்"[23]

"ஊராண்மைக் கொத்த படிறுடைத்து எம் மனை"[24]

"நெடுநா ஒண்மணி கடிமனை இரட்ட"[25]

---

11. அகநானூறு-21. 12. அகநானூறு-23. 13. அகம்-58. 14. பெருங்கதை-மகத-7 வரி 13. 15. நற்றிணை-115. 16. தொல் பொருள்-14[illegible]. 17. தொல் பொருள்-131. 18. அகம்-384-13. 19. குறுந்தொகை-46. 20. திருவாரூர் மும்மணிக்கோவை-19. 21. நெடுநல்வாடை-46. 22. சிலப்பு-13-120. 23. நீலகேசி-18. 24. கலித்தொகை-89. 25. நற்றிணை-40.

"மனைக்குநிகர் என்றுசிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவும்"[26]
"மாதர் மனைமாட்சி யாள்"[27]
"என்றும்-துஞ்சுமனை நெடுநகர் வருதி"[28]
"பூவை மார்மனை போர்க்களம் என்பவே"[29]
"நர் மனை அறியின் நன்றுமன்"[30]

என்பன போன்ற பல இலக்கிய அடிகளில் மனை என்னும் சொல்லை வீடு என்னும் பொருளிலேயே இலக்கிய ஆசிரியர்கள் கையாண்டு உள்ளனர்.

## மனை—மனை நூலினுள்

1. மனை கோலச் செல்லுங்கால் காணப்பெறும் நிமித்தங்களின் பலன்கள்,
2. மனை கோலுங்கால் மண்ணின்கீழ் கிடைக்கும் பொருள்களுக்கேற்ற பலன்கள்,
3. மனை மண்ணின் நிறம், சுவைபோன்ற தன்மைகளுக்கு ஏற்ற பலன்கள்,
4. மனையின் உயர்வு தாழ்வுகளுக்கு உரிய பலன்கள்,
5. மனையில் புற்று காணப்பெறும் திசைகளுக்குரிய பலன்கள்,
6. மனை கோலுங்கால் குழிவெட்டி, நீரும் மலரும் விட்டு அறியும் நிமித்தங்களின் பலன்கள்,
7. மனை கோலுங்கால் தேங்காய் உடைக்க, அதனால் காணும் அறிகுறிகளுக்குரிய பலன்கள்,
8. மனையின் நீள, அகலங்களைத் தேர்ந்தெடுப்பதற்குரிய முறைகள், அளவு முறைகள்,
9. மனையில் தேவதைகளின் இருப்பிடமும் பலனும்,
10. மனைகோல ஆகும் நாள், மாதம், ஆகாநாள், மாதம் போல்வன,
11. மனைக்குரிய 11 வகைப் பொருத்தங்கள்,
12. மனையில் கிணறு, மாட்டுத்தொழுவம், குப்பைகொட்டுமிடம் போன்ற இடங்களை அமைக்கும் விதிகள் போன்ற

---

26. குமரேச சதகம்-அவையடக்கப்பா. 27. நாலடி-39.
28. ஐங்குறுநூறு-60. 29. பிரபுலிங்க லீலை-3-3.
30. நற்றிணை-392.

பல செய்திகளைக் கூறுகிறது மனை நூல் என்னும் இந்நூல். இவையாவற்றிலும் மனை என்பது வீடுகட்டுவதற்குரிய வெற்று நிலத்தையே உணர்த்துகிறது என்பதை அறியலாம்.

## மனை—வடமொழியும் வழக்காறும்

1. மனை நூலினை வடமொழி 'வாஸ்து லட்சணம்' என்று கூறுகிறது.
2. மனையின் தீமைகள் விலகச் செய்யப்பெறும் பரிகாரங்களையும் வடமொழியில் 'வாஸ்து சாந்தி' என்றே குறிப்பிடுகிறார்கள்.
3. வஸ (வசித்தல்) என்னும் வேர்ச்சொல்லின் வழிவந்த வாஸ்து என்னும் சொல்லுக்கு 'உயிரினங்கள் வசிக்கத் தகுதி வாய்ந்த இடம்' என்று பொருள் கூறுகிறது வடமொழி அகராதி.[31]
4. "தேவர்களும் மனிதர்களும் எந்த எந்த இடத்தில் வசிக்கிறார்களோ அந்த அந்த இடங்கள் வஸ்து எனப்படுகின்றன."

   "அந்த வஸ்து வானது 1. பூமி, 2. மாளிகை, 3. வாகனம், 4. படுக்கை என நான்கு வகைப்படும். இவற்றுள் மாளிகை, வாகனம், படுக்கை ஆகிய மூன்று பொருள்களுக்கும் ஆதாரமாக இருப்பது பூமியே ஆதலால் பூமியே முக்கியமான வஸ்துவாகும்"[32] என்று கூறுகிறது மயமதம்.
5. "வீடு கட்டடப்படும் பூமியையும் வீட்டையும் மனை என்பர்"[33] என்று கலைக் களஞ்சியமும்

   "மனை=2400 குழி கொண்ட நிலம்"[34] என்று பிற அகராதிகளும் கூறுகின்றன.

   இவற்றின் துணை கொண்டும், 2400 சதுர அடிகொண்ட வீடு கட்டுதற்குரிய வெற்று நிலத்தை மனை என்று குறிக்கும் தற்கால வழக்காறு கொண்டும் வீடுகட்டுவதற்குரிய வெற்று நிலத்தையே 'மனை' என்று கொள்ளுகிறோம்.

## நூல் என்னும் சொல்—அகராதிகளில்

நூல் என்னும் சொல்லுக்கு இழை, எண்ணம், எற்று நூல், கல்வி நூல், சாஸ்திரம், தாலிநூல், நூலென்ஏவல், பூணூல்,

---

31. சப்த கல்பத்ருமம். 32. மயமதம் இரண்டாம் அத்தியாயம். 33. கலைக் களஞ்சியம்-தொகுதி-8, 34. ஜாம்பிலி-தமிழ்ப் பேரகராதி and வின்சுலோவின் தமிழ்-ஆங்கில அகராதி.

பொருத்தனை நூல் போன்ற பல பொருள்கள் காணப்படு கின்றன.

## நூல்—வேறு பெயர்கள்

ஏடு, ஓலை, சுவடி, தூக்கு, பனுவல், புத்தகம், தந்திரம் போன்ற பல சொற்களும் நூல் என்னும் பொருளை உணர்த்து கின்றன.

## நூல்—வழக்குத் தொடர்கள்

நூலறி புலவர், நூலறிவு, நூலகம், நூலழகு, நூலாசிரியன் நூலாய்வோர், நூலுரை, நூல்நயம், நூல்பொருள், நூன்முகம், நூல்முடிவு, நூல்வகை, நூல்வழக்கு போன்ற வழக்குத் தொடர்கள் பல நூல் என்னும் சொல்லோடு வழங்கி வருகின்றன.

நீதி நூல் பயில்; நூலினைப் பகுத்துணர்;[35] நூல் பல கல்[35a] என்ற அறவுரைகளும் வழக்காற்றில் உள்ளவையாகும்.

## நூல்—இலக்கியங்களில்

"நவில்தொறும் நூல்நயம் போலும்"[36]
"நுண்ணிய நூல்பல கற்பினும்"[37]

என்னும் குறளடிகள் இலக்சண இலக்கிய நூல்கள் அனைத்தை யுமே நூல் என்று சுட்டுகின்றன.

இதேபோல 322, 401, 4'0, 560, 683 ஆகிய எண்களில் காணும் குறட்பாக்களும் எடுத்துக் கூறுகின்றன.

"மாலை மார்ப நூலறி புலவ"[38]

என்னும் சங்க இலக்கியக் கூற்று முதலாக,

"இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்"[39]

என்னும் பாரதியார் பாடல் ஈறாக, பல இலக்கியங்களில் நூல் என்னும் சொல், இலக்கண, இலக்கியங்கள் அனைத்தையுமே சுட்டுகின்றது.

## நூல்—இலக்கண நூல்களில்

"நூல்எனப் படுவது நுவலுங் காலை"[40]
"முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"[41]
"நூல்என மொழிய நுணங்குமொழிப் புலவர்"[42]

---

35. புதிய ஆத்தி சூடி-பாரதியார். 35a. ஆத்திசூடி-70
36. குறள்-738. 37. குறள்-373. 38. திருமுருகாற்றுப்படை.
39. பாரதியார் கவிதைகள் 40. தொல். பொருள்-468.
41. தொல். பொருள்-640. 42. தொல். பொருள்-644.

என்பன போன்ற தொல்காப்பிய நூற்பா அடிகளும் அவற்றின் உரைகளும் நூல் என்பதை இலக்கண நூல் என்றே உணர்த்து கின்றன.

"நூலின் இயல்பே நுவலின்"[48]

என்னும் நன்னூல் நூற்பா தரும் பொருளும் இதுவே. இது போன்றே 5, 6, 7, 8, 9, 10, 36, 37 ஆகிய நன்னூல் நூற்பாக்களும் இலக்கண நூலையே பெரும்பாலும் சுட்டுகின்றன.

இவற்றால் நூல் என்பது இலக்கணம் என்று கொள்ளு கிறோம்.

## நூல்—மனை நூலில்

"சிற்பநூல் என்னும் மனையடி சாஸ்திரம்"[44]

"தீதிலா மயனார் சொன்ன
சிற்பசாஸ் திரமாம் நூலை"[45]

"தெல்லாம் உணர்ந்த சிற்பநூல் பண்டிதர்"[46]

"வாசமின் குழலி னாளே
மயனுரை நூல்கண் டாயே"[47]

"ஒருமையாய் இந்த நூலை
உமையவள் தனக்கு உரைத்தார்"[43]

என்பன போன்று இந்த நூலினுள் பலவிடங்களிலும் இதனை நூல் என்றே ஆசிரியர் குறிப்பிட்டுச் செல்லுகிறார்.

மேலும் மயனார் சொன்ன இசையு நூல், முறைமை நூல், பங்கயன் வகுத்த நூல், சதாசிவன் சொன்ன நூல், சரஸ்வதி சொன்ன நூல், மறையவர் நூலைப்பாரீர் என்றும் பல பாக்களில் கூறிச் செல்லுகிறார் ஆசிரியர்.

## மனை நூல்

மேலே கூறிய மனை என்னும் சொல்லின் பொருளையும், நூல் என்னும் சொல்லின் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு நோக்க 'மனை நூல்' என்னும் பெயர் பொருத்த முடையதாய் அமைகிறது.

---

43. நன்னூல்-4. 44. மனை நூல்-தலைப்பு. 45. மனை நூல்-1. 46. மனை நூல்-39. 47. மனை நூல்-54. 48. மனை நூல்-84

'மனைக்கு உரிய இலக்கணம்' என்ற பொருள் தரும் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளுகிறோம். அதாவது வீடு கட்டுதற்கான மனைக்கு உரிய இலக்கணங்களைக் கூறும் நூல் என்று பொருள் விளக்கம் தருவதாகும்.

## நூல்

### சுவடி

சென்னை, அரசினர் சுவடி நூலகத்தில் ஆர். 3396 ஆம் எண்ணில் பாதுகாக்கப்பட்டு வரும் ஓலைச் சுவடியிலிருந்தே இந்நூல் பதிப்பிக்கப்படுகிறது. சுமார் 35 செ.மீ. நீளமும் 3 செ.மீ. அகலமும் உள்ள 118 ஓலைகளைக் கொண்டது இச்சுவடி.

பல பாடல்களுக்குப் பொழிப்புரை தரப்பட்டுள்ளது. பாடல் இல்லாமல், சில செய்திகளை உரைநடையில் மட்டும் கூறிச் செல்லுகிறது. சில பாடல்களுக்கு உரை இல்லை.

சேலம் மாவட்டம், அகளாபுரம் என்னும் ஊரைச் சார்ந்த (பொம்மனப்பட்டி அஞ்சல்) நாட்டு மருத்துவர், திரு வேலாயுதம் என்பவர் 30-3-1952 இல் இந்த சுவடியை அன்பளிப்பாக இந் நூலகத்திற்குக் கொடுத்திருக்கிறார்.

### சுவடியில் பொருளடக்கம்

இச்சுவடியின் முதல் ஏட்டில் 'அட்டவணை' என்ற தலைப்புக் கொடுத்து அகரவரிசையில் பொருளடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை நூலினுள் தனியாக 'ஏட்டில் அட்டவணை' என்ற தலைப்பில் கொடுத்திருக்கிறேன். தற்கால அச்சுநூல்களில் கொடுப்பது போல இன்ன செய்தியைப் பற்றிக் காணவேண்டும் என்று கருதுவோருக்கு இந்த ஏட்டைப் பாருங்கள் என்பதாக ஏட்டின் எண் அடங்கிய இவ் அட்டவணை, பழையகாலத்திலேயே இவ்வெளியமுறை கையாளப்பட்டது என்பதற்குச் சான்றாக விளங்குகிறது.

### ஆண்டும் ஆசிரியரும்

இவ் அட்டவணையை அடுத்து ஒரு தனி ஏட்டில்,

'சர்வதாரி வருஷம், ஐப்பசி மாதம் 14 ஆம் தேதி ஆதித்த வாரம், அஷ்டமி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் இந்த சிற்ப சாஸ்திர மென்னும் மனையடி சபஸ்திரம், கார் காத்த வேளாளஜாதி, சைவ கோத்திரம்

ஆறுமுகம் பிள்ளை குமாரன் பழனியப்பப் பிள்ளை, ஓலைப் பாளையத்தில் பள்ளிக்கூடம் வைத்திருக்கும் போது எழுதி நிறைவேறினது. முற்றுப் பெற்றது" என்று எழுதப்பட்டுள்ளது.

சுவடியில் குறிக்கப்பட்டுள்ள சர்வதாரி ஆண்டு, மாதம், நாள் போன்ற எல்லாவற்றிற்கும் கி.பி. 1888 அக்டோபர், 28 ஆம் தேதி ஒத்துக் காணப்படுகிறது.[49]

இதற்கு முற்பட்ட காலங்களை நோக்க, கி.பி. 1343-அக்டோபர் 12ஆம் நாள், சர்வதாரி, ஐப்பசி, 14 ஆம்தேதி என்று காணப்படுகின்றது.[50] அந்நாளில் அஷ்டமிதிதி ஒத்திருக்கிறது என்றாலும் நட்சத்திரம் சித்திரை என்று காணப்படுகிறது. மேலும் ஓலையின் தன்மையையும், சுவடி எழுதியவரின் குறிப்பு களையும் நோக்க இச்சுவடி 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூற இயலவில்லை. எனவே இச்சுவடியின் சரியான காலம் 28—10—1888 என்றே உறுதிப்படுத்த முடிகிறது. ஆனால் நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியர் யார் என்பதும் அவரது காலம் எது என்பதும் அறிய இயலவில்லை.

## நூல் தொடக்கம்

"விஸ்வ கர்மாவாகிய மயன் என்பவர் திருவாய் மலர்ந் தருளிய சிற்ப நூல் என்னும் மனையடி சாஸ்திரம்" என்று நூலின் தொடக்க ஏட்டில் இடதுபக்கப் பகுதியில் எழுதப் பட்டுள்ளது. முதற்பாட்டின் உரையிலும் இதே கருத்து கூறப்படுகிறது.

## முதல் நூல் ஆசிரியர்

1. "பிரமன், விசுவகர்மா, மயன் போன்றவர்களாலும் சிற்பத்தில் பலவகையான கிரந்தங்கள் இயற்றப்பட்டுள்ளன" என்கிறார் சில்பரத்தினப் பதிப்பாசிரியர்.[51]

2. "விசுவகன்மியம், மயமதம், மானசாரம், வாஸ்து வித்தை என லெநூல்கள் எழுதப்பட்டுள்ளன"[52] என்று கூறுகிறது கலைக் களஞ்சியம்.

---

49. நூறுவருடப் பஞ்சாங்கம்-எஸ். கூடலிங்கம்பிள்ளை.
50. Indian Ephemeries Vol IV.
51. சில்பரத்தினம்-முகவுரை பக்கம் 3.
52. கலைக்களஞ்சியம். தொகுதி 8.

3. ''விசுவ கர்மா என்பவன் ஒரு சில்ப பிராஜாபதி (சிற்ப சிருஷ்டிகர்த்தா) என்று மேதினீ கோசம் என்ற நிகண்டு கூறுகிறது; இவன் தேவ சில்பியாவான்'' ''மயன் என்பவன் தைத்தியானாம் சில்பீ (அசுரசிற்பி) என்று மேதினீ கோசம் கூறுகிறது'' என்பன 'சப்த கல்பத்ருமம்' என்னும் வடமொழி அகராதியில் காணப் பெறும் செய்திகள்.

4. ''விசுவகர்மாவின் வாஸ்து சாஸ்திரம் இந்நூலகத்தில் முன்பே அச்சாகியுள்ளது. மயமதம் தற்போது அச்சாகிறது''[53] என்கிறார் மயமதம் பதிப்பாசிரியர்.

5. ''நுண்ணிதின் உணர்ந்தோர் உணர்தரும் சிற்ப
நூலறி புலவனை நோக்கி
திண்ணிதின் அமரர் சேகரன் மொழிந்தான்''[54]

''தேவர் தலைவனாகிய இந்திரன்...சிற்ப சாஸ்திரத்தில் தேர்ந்த விசுவ கர்மாவைப் பார்த்துக் கூறினான்''

என்று கூறுகின்றன வில்லிபுத்தூரார் பாரதமும் அதன் உரையும்

இக் கூற்றுகளை நோக்க, தேவசிற்பியாகிய விசுவ கர்மா என்பவர் ஒருவர்; அசுர சிற்பியாகிய மயன் என்பவர் வேறு ஒருவர் என்ற கருத்துத்தெள்ளிவாகிறது. ஆனால் சுவடியின் தொடர்களோ இருவரும் ஒருவரே என்பதாகச் சுட்டுகின்றன.

**மயன்**

''மாகணத் தரசன் மந்திரம் அமைத்த
வனத்திடை இருந்தமா மயனை
யாசுசிக் கணிசென்று அடர்த்தலும் வெருவி
அருச்சுனா அபயம்என்று அரற்ற''[55]

அருச்சுனனால் காப்பாற்றப்பட்டுக் காண்டவவனத்திலிருந்து தப்பிப் பிழைத்தவனே மயன் என்பதை ஆதிபருவம் உணர்த்து கிறது.

''பயங்கெழு மாமலர் இட்டுக் காட்ட
மயன்பண்டு இழைத்த மரபினது அதுதான்''[56]

---

53. மயமதம்-தஞ்சைவெளியீடு-ஆங்கில முன்னுரை.
54. இந்திரப்பிரத்தச் சருக்கம் பா. 10. வை.மு.கோ.உரை.
55. காண்டவதகனச் சருக்கம் பா. 74.
56. மணிமேகலை-225 226.

"பாங்குற மண்ணீட்டுற் பண்புற வகுத்து
மிக்க மயனால் இழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டமீங்கு இதுகாண்"[57]

என்னும் மணிமேகலை அடிகள், காவிரிப்பூம்பட்டினத்து உவ வனத்துப் பளிக்கறையில் உள்ள புத்த பீடிகையும், சக்கர வாளக் கோட்டமும் மயனால் அமைக்கப்பட்டவை என்பதை உணர்த்துகின்றன. மேலும்

"மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து"[58]

என்னும் சிலம்பு அடிகள், மயனது சிற்பத் தொழிலின் சிறப்பை உவமையாகக் காட்டி மயனது சிறப்பை உணர்த்துவனவாகும்.

## வழிநூல்

"தீதிலா மயனார் சொன்ன சிற்பசாஸ் திரமாம் நூலை
நீதியாய்த் தமிழினாலே நிலைபட உரைக்க லுற்றேன்"

இந்நூலின் முதற்பாடலின் அடிகளாகிய இவ்வடிகளும் மயனுடைய சிற்ப சாஸ்திரமே முதல்நூல் என்பதை உணர்த்து கின்றன. எனவே,

"முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"[59]
"வழிஎனப் படுவது அதன்வழித் தாகும்"[60]

என்னும் இலக்கணப்படி இம் 'மனைநூல்' வழிநூல் ஆகும். அன்றியும்,

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து"[61]
என்னும் அவ்வழிநூல் வகை நான்கினுள், இது மொழிபெயர்ப்பு வகையைச் சார்ந்ததாகும்.

இம் முதற் பாட்டினுள் இறைவணக்கமும் நூலின் பெயரும் கூறப்பட்டன. பூதலம் தனைப்படைத்த புண்ணியனாகிய இறைவனது தாள்களை வணங்கித் தொடங்குகிறேன்; அவன் அருளால்இந்நூல் நிலையான பயனுடையதாக அமையும் என்றதனால் இது தற்புகழ்ச்சி என்னும் குற்றத்தின்பாற் படாது.

---

57. மணிமேகலை 784-786.
58. சிலம்பு-2.12. 59. தொல். பொருள்-649. 60. தொல். பொருள்-650, 61. தொல். பொருள்-652.

## நிமித்தங்கள்

மனைக்கு ஏகும்போது சகுனம், மனையில் நிற்கும் போது, மனை நடுவே கெல்லிப் பார்க்க, எலும்பு காண, புற்று தோன்ற தேங்காய் உடைக்க ஏற்படும் சகுனங்கள் போல்வன இம் முதற் பகுதியில் கூறப்படுகின்றன.

## இலக்கணத்தில்—நிமித்தம்

"ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்"[62]

என்னும் தொல்காப்பிய நூற்பா அடிகள், பசு கலம் நிறையக் கறத்தலால் ஏற்படும் நல் நிமித்தம் கண்டு தலைவனுக்கு ஏற்படவிருக்கும் நன்மை அறிந்து பணிமேல் செல்லுக என்று கூறி அனுப்புதலும்,

பசு பால் கறவாது பயன் குறைதலால் ஏற்படும் தீய நிமித்தம் கண்டு, தலைவனுக்கு ஏற்படவிருக்கும் தீமைகளை ஆய்ந்து 'செல்லற்க' என்று கூறிவிடுத்தலும் நிமித்தம் கூறுவோர் கடமையாகும் (அந்தணர் கூற்று நிகழுமிடம்) என்று நிமித்த இலக்கணம் கூறுகின்றது.

கட்டுக் கொடியினாலும், கழங்கு கொண்டும் நிமித்தம் பார்த்து, கட்டுவிச்சியும் வேலனும் நோய் தீர்தற்குரிய வழிகளை எடுத்துக் கூறுவர் என்பதை

"கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்
ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்"[63]

என்னும் தொல்காப்பிய அடிகள் சுட்டுகின்றன.

கங்குலின்கண் எதிர் வரும் நிமித்தம் காண இயலாது ஆதலின் நல்வாய் ஒலி, புள் ஒலி முதலியன கேட்டு, அவற்றுள் நல்லன ஆய்ந்து புறப்படும் நிமித்த முறையினை,

"படைஇயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி"[64]

என்று பாக்கத்து விரிச்சி என்னும் துறையாக அமைத்துக் கூறுகிறது தொல்காப்பியம்.

---

62. தொல்-பொருள் 177.
63. தொல்-பொருள்-115. 64. தொல். பொருள்-53.

## இலக்கியங்களில்—நிமித்தம்

"பொலந்துடி மருங்குலாய் புருவம் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன்"[65]

என்னும் கம்பராமாயண அடிகளும்,

"எல்இருள் கனவில் கண்டேன்
கண்இடன் ஆடும் இன்னே"[66]

என்னும் சிந்தாமணி அடியும்,

"இறைவன் கண்வலன் ஆடிற்று இயைந்தரோ"[67]

"இறைவன் வலக்கண் பலகாலும் துடித்தது"

என்னும் சிந்தாமணி அடியும் அதன் நச்சினார்க்கினியர் உரையும் இவை போல்வன பிறவும், தம்கண் தோன்றிய, ஆக்கம் பற்றிய குறிப்புகளுக்குரிய நல்மித்தங்களாக இலக்கியங்களில் காணப் பெறுவன வாகும்.

இவற்றுள் ஆடவருக்கு வலப்புறமும், மகளிருக்கு இடப் புறமும் கண், புருவம், தோள் முதலியன துடித்தல் நல்ல நிமித்தங்களாகும்.

"சிறுவெண் சங்கு முரன்றன திண்முரசு
அறையும் மாக்கடல் கார்என ஆர்த்தன
நெறியில் நல்கின புள்ளும் நிமித்தமும்"[68]

என்னும் சிந்தாமணிப் பாடலடிகளுக்கு

"சங்கு முழங்கின; கடலும் காரும்போல முரசு ஆர்த்தன; நெறியிலே பறவைகளும், நிறைகுடம் முதலியனவும் நன்மையே அறிவித்தன" என்று உரை கூறுவார் நச்சினார்க்கினியர்.

"பாங்கர் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள்"[69]

"ஆறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர்"[70]

"சொன்ன வாயுளே ஒருவன் புட்குரல்
முன்னம் கூறினான்"[71]

---

65. சுந்தரகாண்டம்-காட்சி-32. 66. சீவகசிந்தாமணி-1909.
67. சீவக சிந்தாமணி-2168-உரை.
68. சீவக 2168. 69. அகம்-9 70. குறுந்தொகை-140.
71. சீவக-415.

போன்ற இலக்கிய அடிகளும் பல்லி சொல்லுதல், பறவை காணுதல், பறவையின் குரல் கேட்டல் போன்ற பல நிமித்தங்களைக் கூறுகின்றன.

இவை போல்வன பிறிதின்கண் தோன்றிய, ஆக்கம் பற்றிய குறிப்புகளுக்குரிய நல்ல நிமித்தங்களாக இலக்கியங்களில் காணப்பெறுவனவாகும்

இவற்றைப் போல தன் கண் தோன்றியனவும் பிறிதின்கண் தோன்றியனவுமாகிய ஆக்கம் பற்றிய நல் நிமித்தங்கள் பலவற்றையும் இலக்கியங்களில் காணலாம்.

சான்று:

> "மனைவயிற்—பல்லியும் பாங்குஒத்து இசைத்தன
> நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே"[72]

இவ்வாறு இலக்கண இலக்கியங்கள் பலவற்றிலும் பலவகையான நிமித்தங்கள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன என்றாலும் அவற்றுள் ஒன்றிரண்டு நிமித்தங்களைத் தவிர பிறவற்றை நாம் கையாள இயலாது. காரணம்,

1. பசு கறத்தல் நல் நிமித்தம்-கறவாமை தீநிமித்தம்
2. கண் இடம் துடித்தல் மகளிர்க்கு நல்நிமித்தம்; வலந்துடித்தல்ஆடவர்க்குநல்நிமித்தம். மாறித்துடித்தல் தீநிமித்தம் போன்ற ஒருசிலவற்றை மட்டுமே உணர முடிகிறது. ஆனால்,

பறவைகள் நன்மையே அறிவித்தன; பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தது போன்றவற்றில் நல்லன எவை, தீயன எவை, என்பனவற்றை அறிய இயலவில்லை.

இவ்வாறு இல்லாமல் நல்ல நிமித்தங்கள் எவை; தீய நிமித்தங்கள்எவை என்பனவற்றைப் பொருள் வாரியாக, திசை வாரியாக, இடம், வலம் அடிப்படையாகத் தெளிவாகவும் முழுமையாகவும் எளிய நடையில் எடுத்துக் கூறுகிறது இம் மனை நூல். இவை யாவும் அனுபவத்தால் உணர்ந்து கூறப்படுவன வாகும்.

## நாளும் கோளும்

கோள் நிலை அறிந்து அவற்றிற்கேற்ற பலன் கூறும் கணித நூல் வல்லுனர் பலர் அரசவையில் இருந்தனர். அவர்கள்

---

72. கலித்தொகை-19.

பன்னிரண்டு மாதமும் கோள்கள் நிற்கும் நிலையினை நன்கு கற்றவர்களாய் விளங்கினர். அக் கணித நூலுக்குரியனவாகிய திதி, வாரம், நாள் (நட்சத்திரம்), யோகம், கரணம் என்னும் ஐவகை உறுப்புகளின் இலக்கணங்களையும் அவர்கள் அறிந்திருந் தார்கள். அவர்கள் பஞ்சாங்கம் கூறுவோர் எனப்பட்டனர். (பஞ்ச அங்கங்களைக் கூறுவோர்). மேலும் அக்கோள் களின் தன்மைகளாகிய நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் ஆகிய ஐந்து நிலைகளையும் நுட்பமாய் அறிந்து கூறும் திறம் பெற்றிருந்தனர்.

அக் கணித நூல் வல்லோர் மன்னர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலுக்கும், மன்னர் பிறந்த நட்சத்திரத்திற்கேற்ற நாளும் கோளும் பார்த்து நன்னாளினைக் குறித்துக் கொடுத் தனர் என்பன போன்ற பல செய்திகள்,

> "ஆறிரு மதியினும் காருக அடிப்பயின்று
> ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து
> ..........................................
> இருநில மருங்கின் மன்னர் எலாம்நின்
> திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
> முழுத்தம் ஈங்குஇது முன்னிய திசைமேல்
> எழுச்சிப் பாலை யாகஎன்று ஏத்த"[73]

என்னும் சிலப்பதிகார அடிகளாலும்,

> "மந்திரத் தரசன் வல்லே
> நிமித்தகன் வருக வென்றார்க்கு
> அந்தரத் தோடு கோளில்
> சாதகம் அவனும் செய்தான்"[74]

என்னும் சீவக சிந்தாமணியடிகளாலும் அவற்றின் உரையாலும் அறிய வருகின்றன.

இதேபோல, மன்னவன் தன் ஆக்கம் கருதி, குடிப்புறம் காத்து ஓம்புதற்கு எடுத்த தன் வெண்கொற்றக் குடையினைத் தனக்கு ஏற்ற நாளும் கோளும் பார்த்து மேற்கொண்டான் என்ற செய்தியையும், பகைவர் அழிவு கருதி அதற்கு ஏற்ற நாளும் கோளும் பார்த்து, தன்படை வாளினைக் கொண்டான் என்ற செய்தியையும்

---

73. சிலம்பு-26 வரி-25-31. 74. சீவகசிந்தாமணி-பா 539.

"குடையும் வாளும் நாள் கோள்"[75]

என்னும் இலக்கண அடி எடுத்துக் காட்டுகிறது.

"நாளும் புள்ளும் நயத்தகு நன்னிலைக்
கோளும் ஓரையும் கொண்ட நிமித்தமும்
ஆளும் மாந்தரின் ஆய்ந்து கொண்டு"[76]

என்பதும் இத்தகையதே. இவை யாவும் பொதுப்படக் கூறப்பட்டுள்ளவையே ஆகும்.

ஒரு ஆண்டின் சித்திரை மாதம் பிறக்கும் கிழமை எதுவோ அதே கிழமையில் அவ்வாண்டு கார்த்திகை மாதமும் பிறக்கும்.

அந்த நாளின் மறுநாளில் மார்கழி மாதம் பிறக்கும்.

மூன்றாம் நாள் புரட்டாசி மாதம் பிறக்கும்.

நான்காம் நாள் வைகாசிமாதம், ஆடிமாதம், தைமாதம் ஆகியவை பிறக்கும்.

ஐந்தாம் நாள் மாசி மாதம்

ஆறாம் நாள் ஐப்பசி மாதம்

ஏழாம் நாள் ஆனி, ஆவணி, பங்குனி ஆகிய மாதங்கள் பிறக்கும் என்ற நிலையான இக்கணித முறையினை உணர்த்தும் இலக்கியங்களும் தமிழில் உள்ளன. இதேபோல வருடம் அறுபதிற்குமுரிய வாரம், நட்சத்திரம், திதி, நாழிகை, அமாவாசை, பௌர்ணமிகளில்வரும் நட்சத்திரங்கள் போன்றவற்றையும் கணக்கிட்டுக் கூறுகிறது சதகநூல்.[77]

இவற்றின் முழுத்தன்மைகளும் இவற்றை மேற்கொள்ளும் செயல்களும் அவற்றிற்காம் பலன்களும் தெளிவாக விளங்குமாறு கூறுகிறது இம் மனைநூல்.

## தொடக்க வழிபாடு

எடுத்துக் கொண்ட செயல் இனிதே முடிய விரும்பி, எந்த செயலையும் இறைவனை வழிபட்டுத் தொடங்குவது தமிழர் மரபு. வழிபடு கடவுள் வணக்கம் ஏற்புடை கடவுள் வணக்கம் என அவ்இறை வழிபாடு இரண்டு வகைப்படும்.

கலைகளைக் கற்க விரும்பிக் கல்விபயிலத் தொடங்குவோன் கலைமகளை வணங்குகிறான். செல்வத்தை விரும்பி ஒரு தொழிலைத் தொடங்குபவன் இலக்குமியை வணங்குகிறான்.

---

75. தொல். பொருள் 68 76. சீவகசிந்தாமணி 1775.
77. கயிலாசநாதர் சதகம் 51-52

வெற்றியை விரும்பி போருக்குப் புறப்படுபவன் கொற்றவையை வணங்குகிறான். இவை ஏற்புடைக் கடவுள் வணக்கங்களாகின்றன. அவைபோல வீடுகட்டத்தொடங்குவோர் 'வாஸ்து புருஷன'ாகிய நிலத்தேவதையை வணங்கித் தொடங்குமாறு பணிக்கிறது நூல்.

## வாஸ்து வழிபாடு

வாஸ்து புருஷன் எப்போதும் படுத்தே இருப்பான் என்ற அவனது தன்மை கூறி, அவன் உறங்கும் மாதங்களைக் கூறி, அவற்றை விடுத்து, எழுந்திருக்கும்மாதமும் நாளும் நாழிகையும் உணர்த்தி, அந்த நேரங்களில் மனைகோலி வீடுகட்டத் தொடங்குமாறு பணிக்கும் ஆசிரியர் கூற்று பலவகை அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

வாஸ்து புருஷன் விழித்திருக்கும் ஒரு முகூர்த்த நேரத்தில் அவனது செயல்களைச் சொல்லி, இறுதி இரண்டு பகுதிகளைத் தேர்ந்து கூறும்முறை தற்கால முகூர்த்தச் செயல்களை ஒத்து விளங்குவதை அறியலாம்.

> "சித்திரைக்கு ஈராற தாம்துலாம் எட்டினில்
> செய்கார்த்தி கைப்பத்தினில்
> சீர்ஆடி பதினொன்று சிங்கம்ஆறு உயர்மாசி
> தேதிஇரு பத்திரண்டில்
> வைத்தவை காசியிரு பானொன்றாம் நாளினில்
> வாஸ்துஎழு கின்றதினமாம்"[78]

என்னும் சதகப் பாடலடிகள் வாஸ்துபுருஷன் எழும் நாட்களை அறிவிக்கின்றன. இம்மனை நூல் இதனை மேலும் விளக்கமாக நாழிகை உட்பட நுணுக்கமாக எடுத்துக் கூறுவது, நடைமுறையில் பயன்படுத்துவதற்கு ஏற்ற விளக்கமாக அமைகிறது.

## வாஸ்து வழிபாடு-வடமொழி நூல்களில்

'இந்த பூமியில் வசிக்கக் கூடிய பூதங்களும் தேவதைகளும் இராட்சசர்களும் இந்த பூமியிலிருந்து விலகி, வேறு வாசஸ்தலத்திற்குச் செல்ல வேண்டும்; இந்த பூமியை நான் எடுத்துக்கொள்ளப் போகிறேன்' என்ற மந்திரத்தைச் சொல்லிப் பூபரிகிரஹம் செய்ய வேண்டும்.

---

78. கயிலாசநாதர் சதகம் 67.

பின் அந்த பூமியை உழுது, கோமயம் கலந்த சகலவிதமான விதைகளையும் விதைத்து, முளைத்துப் பக்குவமடைந்ததும், காளைகளுடனும் கன்றுகளுடனும் கூடிய பசுமாடுகளை வசிக்கும் படிச் செய்யவேண்டும். காரணம்:

1. பசுக்கள் சஞ்சரித்து, அவற்றின் காலடிகள்பட்டநுசர்ந்து பார்த்த அப்பூமி பூஜிக்கத் தக்கதாகிறது.

2. கன்றுகளின் வாயிலிருந்து சிந்திய நுரையினாலும், பசுக்களின் பால் பெருக்காலும் பூமி சுத்தம்செய்யப்பட்டதாகிறது.

3. தோஷம் நீங்கி, மங்களம் தருகிறது. "பூமியைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றியும் வழிபாட்டு முறைபற்றியும். இவ்வாறு கூறுகிறது மயமதம்[79].

"வீடுகட்டும் பகுதியின் தென்மேற்குத் திசையில் ஒரு பள்ளம் வெட்டி, வெட்டிய மண்ணைக் கூடையில் வாரி எடுத்துச் சென்று, தென்மேற்குத் திசையில் வெளியே கொட்ட வேண்டும். அப்போது,

"யத்பூமே: க்ரூரம்ததிதோ ஹராமி
பராசீம் நிருருதிம் நிர்வாகயாமி
இதம் ஸ்ரேயோ அவசானம் ஆகன்ம தேவா
கோமதஸ்வாவதீத மஸ்து ப்ரபூம |"

என்ற மந்திரத்தை மூன்றுமுறை சொல்ல வேண்டும்,

பொருள்: பூமியில் உள்ள துஷ்டமான எலும்பு, முள் முதலியவற்றை இந்த இடத்திலிருந்து வேறிடம் கொண்டு போகிறேன்; இங்கு வசிக்கிற அலட்சுமியை (வறுமையை) பராங்முகியாகும்படி (நெருங்காதபடி) விரட்டுகிறேன். ஓ! வாஸ்து தேவதைகாள்! இந்த கிருஹமானது, பசு, குதிரைகளும், பிற ஐசுவரியங்களும் உள்ளதாக நன்றாக விளங்கவேண்டும்"[80] என்று கூறுகிறது 'மந்திரப் பிரச்னம்' என்னும் வடமொழிநூல்.

**மண்**

வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் நிலமானது கெட்டியானதாகவும் உறுதிவாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். இலேசான மண்ணையுடைய நிலமாயின் கட்டடம் கட்டிய பிறகு கீழே இறங்கி விடுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். அதுவும்

79. 4 ஆம் அத்தியாயம்-பூபரிகிரஹம்.
80. கடலங்குடி நடேச சாஸ்திரிகள் பதிப்பு-பக்கம், 238.

கட்டடம் எல்லா பக்கமும் சமநிலையில் இறங்காது. மேலே உள்ள சுமைக்கும் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள மண்ணின் தன்மைக்கும் ஏற்ப இறங்கிவிடும். அதனால்தான் சுவர்களில் பிளவு ஏற்படுவது முதலிய தீமைகள் ஏற்படுகின்றன.

இவ்வாறு நிகழாமலிருக்க மண்ணைச் சோதிப்பதில் இரண்டு முறைகள் இந்நூலினுள் கூறப்படுகின்றன.

''அகழ்ந்ததோர் குழியின் மண்ணை
அகழ்ந்துஅதன் மேலே இட்டால்
வளர்ந்திடில் செல்வம் உண்டாம்''[81]

ஒரு குழிவெட்டி, அக்குழியிலிருந்து வெட்டி எடுத்த மண்ணை மீண்டும் அக்குழியில் நிரப்பிப் பார்க்கவேண்டும். உண்மையில் கெட்டியான நிலமானால் தான் மண் மிகுதியாகும். இல்லையேல் நிச்சயமாக மண்குறையும். குழி நிரம்பாது.

சான்றாகக் குப்பைகளைக் கொட்டி நிரப்பிய நிலத்தைச் சிலகாலம் கழித்துத் தோண்டிநிரப்பிப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்.

இதேபோல ஒருகுழிவெட்டி, அக்குழியில்

''நிறையநீர் இட்டு வைத்து
நீள்கதிர் எழுந்த போது
முறைமையாய் வந்து பார்த்தால்
முப்பிடி நீரே நன்றாம்''[82]

என்ற முறையும் இதே கருத்தை விளக்குவதாகும். மேற்கூறிய படி நிலம் குப்பை மண் நிறைந்ததாக இருந்தால் நீர் ஊறி மண் வெடித்துக்காணப்படும், இந்த முறைகளை ஆழ்ந்து உணராமல், மண் மிகுதியாவது இயற்கையே என்று அலட்சியம் செய்தல் கூடாது.

இச் சோதனையை விரத முறையோடு செய்து காண வேண்டும் என்று கூறுகிறது மயமதம். அதாவது,

'ஒரு முழ நீள, அகல, ஆழம் உடையதாய் மனையின் நடுவில் ஒரு குழியினைத் தோண்டவேண்டும். வீட்டுத் தலைவன் உபவாசம் இருந்து, இரவின் தொடக்கத்தில் பூசைசெய்து அக் குழியில் நீரை நிரப்பி, அதன் அருகே தருப்பைப் புல்லைப்பரப்பி, கிழக்கே தலைவைத்து அப்புல்லின்மீது படுத்திருக்கவேண்டும். காலையில் எழுந்து காணவேண்டும்'[83] என்று கூறுகிறது அந் நூல்.

---

81. மனைநூல் 62. 82. மனைநூல் 52,
83. மயமதம் 4 ஆம் அத்தியாயம்

## நீரும் மலரும்

மேலும், குழியில் நீரும் மலரும் விட்டுப் பார்க்கும்முறை கூறப்படுவது நிமித்த இலக்கணத்திற்கு மேலும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

"கூடல் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேல் கூடுஎன்று—கூடல்
இழைப்பாள்போல் காட்டி"[84]

"குழைத்தபூங் கொம்பனாள் ஒருத்தி கூடலை
இழைத்தனள்"[85]

"..................................செருவேலான்
பொன்தாங்கு அணியகலம் புல்லப் பொருந்துமேல்
குன்றாது கூடுக எனக்கூறி முத்தவார் மணல்மேல்
அன்றாங்கு அணியிழையாள் ஆழி இழைத்தாளே"[86]

என்பன இலக்கியங்களில் காணும் கூடல் இழைத்தல் குறிக்கும் எடுத்துக் காட்டுகளாகும். இவற்றிற்குரிய இலக்கணம் எதுவும் அமைக்கப்படவில்லை. ஆனால் கூடலிழைத்து, வரும் நன்மை தீமைகள், இன்பதுன்பங்களை அறிவது போலவே, குழியில் நீரும் மலரும்விட்டு அது இடமாகச் சுற்றுவது, வலமாகச் சுற்றுவது, சுற்றிவந்து இறுதியில் நிற்கும் திசைபோன்ற குறிகளின் அடிப்படையில், அவ்வீடு கட்டுவதனால் ஏற்படும் பலாபலன்களை மிகவும் நுணுக்கமாக அறிய இந்நூல் இலக்கணம் வகுத்துக்காட்டுகிறது.

## முழக்கோல்

"செப்புப் பிரதிமங்கள், உடையார் கோயிலில்
முழத்தால் அளந்தும்"[87]

"பாதாதிகேசாந்தம் பதினேழுவிரலே இரண்டுதோரை
உசரமும்"[88]

8 தோரை (நெல்)=1 விரல்; 12 விரல்=1 சாண்; 2 சாண்=1 முழம் என்ற அளவில் இராசராசேசுரமுடையார் கோயில் முழக்கோல் இருந்தது எனவும், அக்கோலே இவ்வளவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது எனவும் இக்கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

---

84. முத்தொள்ளாயிரம் 82. 85. உண்டாட்டுபடலம் 33. (கம்பராமா) 86. சீவக சிந்தாமணி. 1037 87. முதலாம் இராசராசன் சாசனங்கள் தங்கைய நாடார் பதிப்பு பக்-36. 88. மேற்படி பக்கம்-36.

"எங்கஞூர் அளந்து கூறிட்ட பதினெண் சாண் கோலால் குழி 5136½யும் இத்தேவர்க்கு இறையிலியாகக் கொடுத்தோம்"[89] என்னும் சாசன அடிகள், நிலத்தை அளப்பதற்கு ஒன்பது முழம் கொண்ட கோல் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறுகின்றன.

"இந்நிலம் கழநிகோலால் ஆயிரத்து நானூறுகுழி ஊர் மஞ்சிக்கமாக...கல்நட்டு சிலாலேகை செய்து கொள்க"[90] என்னும் பார்த்திவேந்திராதிவர்மனின் சாசன அடிகளால், நிலம் அளக்கப் பயன்படுத்தப்பட்ட நீண்ட கோல் 'கழநிகோல்' என்றும் கூறப்பட்டது என்பதை அறிகிறோம்.

இவ்வாறு பல வகையான அளவுகோல்கள் அக்காலத்தே வழங்கி வந்திருப்பதனால், இந்நூலினுள்ளும் முழக்கோல் என்ற தலைப்பில் பலவகையான அளவுகள் கூறப்படுகின்றன.

அணு எட்டு கொண்டது ஒரு புல்நுனி என்று மிக நுண்ணிய அளவில் தொடங்கி, 24 விரல் கொண்ட முழக்கோலுக்கு அளவு கூறுகிறது இந்நூல். மேலும் யார் யாருக்கு எத்தகு அளவுகோல் எனவும் அக்கோல் செய்தற்குரிய மரம் எது எனவும் விளக்கம் தருகிறது. இவ்வரையறைகள் நடைமுறைக்கு அவசியமில்லை என்று வழக்காற்றில் ஒரே அளவு முறையினை அனைவரும் பயன் படுத்துகின்றனர். அதாவது 36 அங்குலம் அல்லது 3அடிகொண்ட கஜக்கோலைக் கொண்டு குழி கணக்கிடும் முறையினை நூலினுள் விளக்கியிருக்கிறேன்.

## பொருத்தங்கள்

வீடு கட்டுவதில் மிக மிக முக்கியமாகக் கவனித்து அறியக் கூடியவை மனைக்குரிய பொருத்தங்களேயாகும். நூலினுள் கூறப்பெறும் பொருத்தங்கள் ஒவ்வொன்றையும் கணக்கிட்டுப் பார்த்துத் தொகுப்பது மிகவும் கடினம். ஆதலின், அவற்றிற் கான விளக்கங்களைத் தொகுத்துப் "பொருத்தப் பலன்களின் அட்டவணை" என்ற தலைப்பில் நூலின் இறுதியில் இணைத் திருக்கிறேன். குழிகளைக் கணக்கிடும் முறைகளை, எடுத்துக் காட்டுகளுடன் அவ் அட்டவணையின் முதற்பக்கத்தில் விளக்கி யிருக்கிறேன். அந்த அடிப்படையில் குழிகளை மட்டும் கணக் கிட்டுக்கொண்டு அக்குழிக்கு ஏற்ற எல்லா பலன்களையும், அக்குழி எண்ணுக்கு நேரே ஒரே வரிசையில் பார்த்து அறிந்து கொள்ள லாம். மிகச் சிறிய வீடு கட்டக்கூடிய அளவு என்று கருதி 34 குழி

89. ஷை சாசனம் பக்-64. 90, மேற்படி பதிப்பு பக்-26.

யிலிருந்து தொடங்கி, மிகப்பெரிய அளவாக 300 குழி அளவு வரை அவ் அட்டவணையினைத் தயாரித்து அளித்திருக்கிறேன்.

### சுருங்கிய, அனுபவக் கருத்துகள்

1. கிருதயுக தருமம்—தவறு செய்தவன் நாட்டைவிட்டே விலக்கப்படவேண்டும் என்பது. ஆனால்
2. திரேதாயுக தருமம்—தவறு செய்தவன் கிராமத்தைவிட்டு விலக்கப்படவேண்டும் என்று ஆயிற்று.
3. துவாபரயுக தருமமோ—தவறு செய்தவனைக் குடும்பத்தி லிருந்து விலக்கினால் போதும் என்று வகுக்கப்பட்டது.
4. கலியுக தருமம்—குற்றம் செய்தவன் மட்டும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைக்குத் தளர்ச்சி அடைந்தது.

இதேபோல, ஒருவனைப் பாவம் வந்து அடைதற்குரிய காரணங்களும் முறையே இந்த நான்கு யுகங்களிலும் பெரிதும் மாற்றம் அடைந்துவிட்டன. அதாவது,

1. பாவம் செய்தவனோடு பேசினாலே பாவம்.
2. பாவம் செய்தவனைத் தொட்டால்தான் பாவம்.
3. பாவம் செய்தவனுடைய உணவை உண்பதுதான் பாவம்.

என்பனபோன்ற நிலையில் முறையே மூன்று யுகங்களிலும் மாறுபட்டு இறுதியாகக் கலியுகத்தில் அதே தவற்றினை நாம் செய்தால்தான் பாவம் என்ற நிலை உருவாகிவிட்டது.

சிறந்த பொருள்களை வழங்கி வந்த நிலையிலும் இந்த யுகங்களுக்கு ஏற்ப மாற்றம் இருந்து வந்துள்ளது. அதாவது, முதல் நிலையில் மக்கள் இருக்கும் இடத்தைத் தேடிச்சென்று வழங்கப் பட்டது. இரண்டாவது யுகத்தில் அவர்களை அழைத்து வழங்கப் பட்டது. மூன்றாம் யுகத்திலோ கேட்டுக் கொடுக்கப்பட்டது. கலியுக வழங்குமுறையோ 'வேலைவாங்கிக்கொண்டு கொடுப்பது' என்ற நிலைக்கு இறங்கி வந்துவிட்டது. இவற்றை நோக்கத் தருமங்கள் மாறுவதைக் குறை கூறக்கூடாது. இவை யுகமாற்றத் தால் ஏற்படும் இயற்கையாகும். இதேபோல மனை நூல்களில் கூறப்படும் அத்துணை அரிய விதிமுறைகளையும் கையாள இயலாது என்பது இயற்கை. இருப்பினும் நடைமுறைக்கு ஏற்ற இன்றியமையா சில விதிமுறைகளை மேற்கொள்ளுவது நல்வாழ் விற்குத் துணை செய்வதாகும். அவ்விதிமுறைகளுள் சில;

1. வீட்டின் நான்கு புறமும் அமையும் தாய்ச் சுவர்களைச் சேர்த்தே ஆயக்கணக்கினைக் கணக்கிடவேண்டும்.
2. வாசற்காலின் அளவு—உயரம்: அகலம், 9:5 என்ற விகிதத்தில் அமையவேண்டும். இந்த அளவில் அமைவது சிறந்த செல்வச் சிறப்புடையதாக இருக்கும்.
3. வேங்கை, தேக்கு ஆகிய மரங்கள் யாவருக்கும் சிறந்தவை.
4. கதவுகள் ஒற்றைப்படைப் பலகைகளால் அமையவேண்டும்.

   ஒரே பலகையில் அமைவது உத்தமம். இன்றேல் 3, 5, 7 பலகைகளை உடையதாக அமையலாம்.
5. இப்பலகைகள் ஒரே மரப்பலகையாக இருத்தல்வேண்டும்.
6. தலைவாயிற்படியைவிட, உள்வாயிற்படிகள் சிறிது உயர்வாகவும் உயரமாகவும் இருத்தல்வேண்டும்.
7. வீட்டின்

   வடகிழக்குப் பகுதியில்—பூசை அறை, தானிய அறை, படுக்கை அறை

   கிழக்குப் பகுதியில் —பூசைஅறை, படுக்கைஅறை, குளிக்குமிடம்

   தென்கிழக்குப் பகுதியில்—சமையல் அறை, விருந்தினர்அறை

   தெற்குப்பகுதியில் —பூசை அறை, உணவு அறை

   தென்மேற்குப் பகுதியில்—கருவிகள் அறை, கல்வி அறை

   மேற்குப்பகுதியில் —படுக்கை அறை

   வடமேற்குப்பகுதியில் —பூசை அறை, பிரசவ அறை, நெற்களஞ்சியம்

   வடக்குப் பகுதியில்—செல்வம் வைக்கும் அறை, படுக்கை அறை

என்ற முறைகளைக் கையாண்டு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

8. வடக்கு அல்லது கிழக்கு நோக்கிய வீடுகளுக்குத் தென்மேற்குப் பகுதியிலும் தெற்கு அல்லது மேற்கு நோக்கிய வீடுகளுக்கு வடகிழக்குப் பகுதியிலும் கிணறு எடுத்தல்வேண்டும்.
9. முற்றிய நெல்லிமரப் பலகைகளைக்—கனத்த வண்டிச் சக்கர வட்டைபோல் அறுத்த பலகைகளைக்—கிணற்றின் அடியில் வட்டமாய்ப் பரப்பி அதன்மீது சுற்றுச் சுவர் கட்டினால் கிணற்று நீர் சுவை உள்ளதாக மாறிவிடும்.

10. ஒருகட்டு வீடுகட்டப்பட்டபின், அதே மனையில் வேறு ஒரு கட்டுவீடு கட்டப்படுமானால், அதற்கான அளவுமுறைகளை மீண்டும் தனியாகவே கணக்கிடவேண்டும். முதல் கட்டோடு இணைத்துக் கணக்கிடக் கூடாது.

11. மேல் மாடிகள் கட்டுவதானால் கிழக்குப் பக்கத்திலும் வடக்குப் பக்கத்திலும் கட்டுவது நல்லது.

12. மாடிப்படிகளை, வடக்கு நோக்கி அல்லது கிழக்கு நோக்கி ஏறுமாறு அமைப்பது நல்லது.

13. வீட்டின் தண்ணீர் வடக்கு, கிழக்கு, வடகிழக்கு ஆகிய வற்றில் ஏதேனும் ஒரு திசையில் செல்லுமாறு .விடுதல் வேண்டும்.

14. வீட்டினுள் வாசல் விடப்படுமாயின், அவ்வாசல், கிழக்கு மேற்கில் சிறிது நீண்டும், வடக்குத் தெற்கில் குறைந்தும் இருக்குமாறு அமைத்தல் வேண்டும்.

15. எந்த எந்த முறைகளைக் கையாண்டாலும் நடைமுறை வசதிகளையும் மனத்தில் கொண்டு அமைத்தல்வேண்டும். நண்பர்களோ விருந்தினர்களோ வீட்டிற்குள்வரவோ, சிறிது நேரம் தங்கவோ சங்கடப்படாவண்ணம் அமைப்பது மிகவும் முக்கியமாகும்.

தூய்மையும் நலமும் போற்றப்படவேண்டும் என்று கருதப்படும் இக்காலத்தில், வீட்டிற்குள் நுழைந்தவுடன் சமையல்கட்டும், அதன் எதிரிலேயே கழிவு அறைகளும் என்று அமைக்கும் வல்லுநர்களின் முறை மிகவும் சங்கடமானது என்பதை யாவரும் அறிவோம். சொந்த வீடுகள் இவ்வாறு அமையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

16. வீடு குடிபுகும்போது, நூலினுள் கூறியதுபோல, நண்டு வளைமண், யானைக் கொம்புமண், எருதுகொம்புமண், புற்றுமண், குளத்துமண் இவற்றால் கருப்பப்பேழை ஒன்று செய்து, ஒன்பது குழிகள் அமைத்து, அவற்றுள் நவரத்தினங் களை வைத்து, மண் பலகையால் மூடி வீட்டின் வடகிழக்குப் பகுதியில் அமைத்தல் வேண்டும். தங்கத் தகட்டில் வாஸ்து யந்திரம் ஒன்று செய்து, அதனைச் சுத்திசெய்து கருப்பப் பேழையுடன் வைத்து, நவக்கிரக பூசை, வாஸ்துபூசை முதலியன செய்தல்வேண்டும். இப்பூசையினை 48 நாட்கள் செய்வது மிகவும் நன்மையைத் தரும்.

இத்தகு சில கொள்கைகளையேனும் கடைப்பிடித்து, நிரந்தரமான வீட்டினை அமைத்து, மகிழ்ச்சியான வாழ்வினைப் பெறவேண்டும்.

"சாஸ்திர முறைப்படிக் கட்டப்பட்ட கிருஹத்தில் சாஸ்திர முறைப்படி பிரவேசம் செய்வதால், எதிர்பார்க்கும் ஆயுள், யக்ஞம், தனம் முதலிய பலன் சித்திபெறும்"[91] என்பது சான்றோர் கருத்து.

## பதிப்பில் திருத்தங்கள்

"முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவர் பொற்புலவர்—அன்னோர்
நடையிடையத் தம்வழியே நாட்டி மொழிமாற்றல்
கடையிடையர் மாட்டுவினை காண்

என்னும் செய்யுளில் கூறியபடி சுவடிகளில் காண்பதைத் தம் மதத்தின்படி திருத்துதல்....விபரீத அறிவினை உடைய மத்திமர்க்கும், சந்தேக ஞானத்தையுடைய அதமர்க்கும் உரியதொழில் என்று உணர்க"[92]

"அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஓர் அக்ஷரமாவது மாற்றுதல் பெருந்தவறு என்பது யார்க்கும் உடம்பாடே"[93]

என்ற கருத்துகளைக் காரண காரியங்களுடன் நன்கு அறிவோம். என்றாலும் வழிவழியாக, ஏடுகள் படியெடுக்கப் பட்டுக் காப்பாற்றப்பட்டு வந்திருப்பதால் படியெடுப்போரால் பல பிழைகள் நேர்ந்துள்ளன என்பதையும் அறிவோம். இவை இவை, இன்ன இன்ன சொற்களே; படியெடுப்போர் பிழையாக எழுதியுள்ளனர் என்பதை இடத்திற்கேற்ப மிகத் தெளிவாக அறியவும் முடிகிறது. அவ்வாறு மிகத்தெளிவாக அறிந்த தவறுகளையும் 'சுவடிகளில் உள்ளதைத் திருத்தக்கூடாது' என்ற கருத்தால் சில பதிப்பாசிரியர்கள் சிறிதும் திருத்தாமலும், திருத்தினால் இரண்டுவகை அடைப்புக் குறிகளைக் கையாண்டும் பதிப்பித்துள்ளனர். சான்றாக,

"சாசனங்களின் பாடம் மூலப்பிரதிகளில் கண்டவாறே பின் கண்ட குறியீடுகளுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

---

91. மந்திரப் பிரச்னம்-பக்கம்-238. 92. கலித்தொகை-பதிப்புரை பக்-23, சி.வை. தாமோதரம் பிள்ளை. 93. வீரசோழியம் பதிப்புரை பக்-24 சி.வை. தாமோதரம் பிள்ளை.

( ) இவ்விரு குறிகளுக்குள் அகப்பட்ட எழுத்துக்கள் தவறாகவோ அதிகப்படியாகவோ காணப்படுகின்றன. அவற்றை நீக்கி விட்டு வாசிக்கவேண்டும்.

[ ] இக்குறிக்குள் காணப்படும் எழுத்துக்கள் அவ்விடம் இருக்க வேண்டியவை. மூலத்தில் அவை சிதைந்தோ அல்லது சரியாக எழுதப் பெறாமலோ உள்ளன.

[*] இக்குறிக்குள் காட்டப்பெறும் எழுத்துக்கள் இவ்விடத்தில் இருக்கவேண்டியவை. ஆனால் மூலப்பிரதியில் காணவில்லை."[94]

"திருவிளம் உண்டா (க) [வ] தாகவும்"

"சொஸ்தஸ்ரீ [II*] [ஸ்ரீ] (ஸ்ரீ) மன் பிறிதிவிராச்சியம்
கலியுகம் ஆதி பிறவெசெ தாம்பிரசாதனம்."

"துலுக்க மொகர்ரம் தவி [ர்*]த் தொன்
(யி) [எ]ம் மண்டலமும் கொண்டு யிழ(மு)ந்
திறைகொண்ட ராசாதி ராசன்"[95]

"தெக்குவிடு குப்பை திகழ் நிருதி
யிடுவைக்கோலில் வடதிசைக்கு எருமைத் தொழுகம்"[96]

இவை, தெற்கிலிடு குப்பைதிகழ் நிருதியிடு வைக்கோல்
இக்குட திசைக்குளெரு மைத்தொழு வியற்று

என்றிருக்கவேண்டிய அடிகள்.[97]

"இயத்துவட கீழ்த்திசை யிடுக்களையே வைப்போம்
என்பது: யிருக்கிற வளவுக்கு வடிகீழ் மூலையிலே
அடுக்களை விடுவது"[98]

இவையும் முறையே

இயற்றுவட கீழ்த்திசை யடுக்களையே வைப்போம்—

வடகிழக்கில் அடுக்களை வீடுகட்டவும். என்றிருக்க வேண்டியவையாகும்.[99]

பிழைபட எழுதப்பட்ட தொடர்களை அப்படியே பதிப்பிப்பதோ, அடைப்புக் குறிகளைப் பயன்படுத்திப் பதிப்பிப்பதோ

---

94. தென்னிந்திய கோயில் சாசனங்கள் பக்-388 பாகம் 3-பகுதி 2. அரசினர் சுவடி நூலகம்-1957. 95. தென்னிந்திய கோயில் சாசனங்கள் பக்-1080 பாகம் 3-பகுதி 1. ஷை நூலகம். 96. கப்பல் சாத்திரம் பக்-34 அரசினர்சுவடி நூலக வெளியீடு. 97. இம்மனை நூல் பாட்டு-402 98. கப்பல் சாத்திரம் பக்-35. 99. இம்மனை நூல் பாட்டு 403, அதன் உரை.

நூலை முழுமையாக்கித் தரும் பதிப்பு முறையாகாது. கற்போர் முறையே எளிதில் பொருள் விளங்கிக்கொள்ள இயலாத நிலையையும், மிக ஆழ்ந்து படித்துச் சொற்களை முழுமையாக அறிந்து கொள்ளக்கூடிய நிலையையும் உண்டாக்கிவிடுகிறது. இதனால் நூல்களில் வெறுப்புணர்ச்சி தோன்றிவிடுவதையும் அறிகிறோம்.

பதிப்பிக்கும் நூலைச் சிறந்த முறையில் பொருள் விளங்கிப் பயன்படுத்தும் அளவிற்கு மக்களிடையே முழுமையாக்கித்தருவது பதிப்பாசிரியரின் கடமையாகும் என்பதை உணர்ந்து சில எளிய முறை திருத்தங்களை மட்டும் செய்திருக்கிறேன். சான்றாக,

1. 'மனையில் நிற்க்கும்போது சகுனம்'
2. 'கண்டிடிற்க் கருதவேண்டாம்'
3. 'பண்ப்பாகக் கொள்வார்'
4. 'நீதியாய்த் தமிளிநாலே....வுறைக்கலுற்றேன்'
5. 'பகற்ந்ததோறடிசில் தன்னை'

போன்ற அடிகளில் முறையே

1. நிற்கும்போது, 2. கண்டிடிற் கருத 3. பண்பாகக் கொள்வார். 4. தமிழினாலே உரைக்க 5. பகர்ந்ததோரடிசில் என்று திருத்தம் செய்திருக்கிறேன்.

சான்றோர்களின் கருத்துகளுக்கிணங்க, அத்திருத்தங்களி னால் ஏதேனும் பொருள் மாற்றம் உண்டானால் கற்போர் அறிதல் கூடும் என்ற எண்ணத்தினால் இவ்வாறு திருத்தம் செய்த இடங்களை எல்லாம் ஒன்றுவிடாமல் தொகுத்து, பாட்டு எண் கொடுத்து,

"சுவடியில் உள்ள தொடர்—திருத்தம் செய்யப்பட்ட தொடர்" என்ற தலைப்பில் இறுதிப் பகுதியில் பதிப்பித்திருக் கிறேன்.

சகுனம் என்ற தலைப்பில் 3–9 பாடல்களிலும் மீண்டும் 122-124, 185–188 ஆகிய பலவிடங்களிலும் காணப்பட்டன. வாஸ்து புருஷன் கிடக்கை—பா-33, 34; எழுந்திருக்கும் நாள்-சமயம் 5க்குலட்சணம் 171-173 என்று பலபாடல்களில்; சிதறிக் கிடந்தன. முழக்கோல் அளவு 51, 52, 53-மீண்டும் 166,169. பாடல்கள். இவ்வாறு பல தலைப்புகளுக்குரிய பாடல்கள் பலவிடங்களில் காணப்பட்டன. இவற்றை ஓரளவு முறைப்படுத்தி ஒருவரிசையில் அமையுமாறு செய்திருக்கிறேன். இருந்தாலும்

ஆங்காங்கு காணப்பட்ட தலைப்புகளையே அந்தந்த பாடல்களுக்கு அமைத்திருக்கிறேன்.

தொகுக்கப்பட்ட தலைப்புகளில் உள்ள பாடல்கள், உரை நடைப்பகுதிகள் ஆகியவற்றிற்கான ஒரு தொகுப்புரையினை அந்தந்த தலைப்புகளின் முதலில் கொடுத்துவிட்டுப்பிறகு நூலின் பகுதியினை அமைத்திருக்கிறேன். நூலைப்படித்து, விளங்காத ஒருசில இடங்களுக்காக, உரை, விளக்கஉரை, அருஞ்சொல் பொருள் போன்ற பல இடங்களுக்கும் அலைந்து திரிந்தும் விளக்கம் அகப்படாமல் ஏமாறுவதுண்டு. பிறநூல் உரைகளில் உள்ள இந்த நிலைக்கு மாறாக என்னுடைய தொகுப்புரைகள் விதிவிலக்காக நிற்கவில்லை.

## நன்றி

'தூங்கா விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்' என்பர். தூங்கும் விளக்கினுக்கோ! சொல்லத் தேவையே இல்லை. அடிக்கடி தூண்டி விடுவது அன்று தூண்டிவிட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். இதே செயலை மேற்கொண்டு நூலை முழுமை பெறச் செய்த பெருமை, நிறுவன இயக்குநர். வணக்கத்திற்குரிய டாக்டர். ச. வே. சுப்பிரமணியன் அவர்களையே முழுமையாகச் சாருமாதலின் அவர்களுக்கு நான் நன்றிசெலுத்துவது பொருளற்றதாகிவிடும்.

இந்த நூல் ஓலையிலிருந்து தாள் ஏறவும், பிற சுவடிகளோடு ஒப்பிட்டுச் சீர்மை பெறவும், தொகுப்புரை பெறவும், பலதிருத்தங்களைப் பெற்றபின் அச்சுப்படிநிலையை அடையவும் உள்ளன்போடு உழைத்து இதனை முழுமை பெறச் செய்த என் மாணவ மணிகளான திருமதி ந. விசயா, எம்.ஏ, பி.லிட்., பி.எட். அவர்களுக்கும், லயோலா கல்லூரி, பி. காம். மாணவர் சு. இளங்கோவுக்கும் சு. இளவரசுவுக்கும் என்னுடைய உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களோடு கூடிய நன்றியை உரித்தாக்குகிறேன்.

சென்னை, அரசினர் சுவடி நூலகத்திலிருந்து பல ஓலைச் சுவடிகளையும் நூல்களையும் பெறுவதில் தடை ஏதுமின்றி, அன்போடு உதவிசெய்த, நூலகக்காப்பாளர், உயர்திரு. ஆர். பாஸ்கரன், எம்.ஏ, அவர்களுக்கும் உறுதுணையாக இருந்து உதவிய, உதவி நூலகர், திருமதி. V. பத்மாவதி, எம்.ஏ. அவர்களுக்கும் நூலக நண்பர்களுக்கும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

—C—

நூல் அச்சாகும் நிலையில் அருஞ்சொற்கள், திருத்தச்சொற்கள் போன்றவற்றைத் தொகுக்கும் பயிற்சிபெறும் அடிப்படையில் முழுமையாகத் தொகுத்தளித்து உதவிய சுவடி இயல் மாணவர் - களான திரு. வி. ஆர். மாதவன், திரு வி. சதாசிவம், திருமதி. கே. இலலிதா, செல்வி. கே. பேபி, செல்வி. கே. பிரேமகுமாரி ஆகியோருக்கும் என் நன்றி.

**பூ. சுப்பிரமணியம்**

# Introduction

### Ancient Man

The ancient man led a nature oriented life. He moved from place to place in search of his livelyhood. He found shelter under trees and in caves. Branches of trees became his residence, When he faced a threat from wild animals.

In due course, he started growing plants of eatables that he found tasty. It put a full stop to his tendency to migrate and was compelled to return to his farm. His farm activities made him stay at a particular place necessitating him to build artificial shelters that can with stand the natural wrath. This was the origin which has developed to-day to modern skyscrappers.

### Home and life

The man realised the need for an house. Settlements prompted him living in groups. They shared the pains and pleasures of life. They rendered all help to any new comer in their area, to build his own house and settle there. They shared their experiences with each other. They analysed the cause for their problems. They found solutions agreeable to all. This had the reflection in building of houses, and immigration too.

### Realisation of different aspects of life

People found new houses emerging in and around. Of those houses, some were left unfinished some were shaped fuliy

and people dwelt in; but in one house the head of the family became bedridden; in another the housewife died. Poverty ruled in one; wealth disappeared in another; in some there were no wards flor the family. Some were built well. Wealth flourished in them. Cattle wealth grow simultanously in some houses. Harvest was good for some house holders. This presented a new experience to the people as they had not come across such in their nomadic life.

**Thought**

Their thought was provoked by events. They lived in the same place, but some were happy and some were distressed. They saved in the same soil. But some crops yielded well whereas others suffered. They started thinking what the reasons are for all these.

They thought of the time of their arrival at that place, they clearly observe the place they selected to build the house. They also observed the time of commencement of building the house, position of the entrance of houses, time of placement of entrance frame, time of completion of roof. Incidents that took place at each and every stage were also watched.

**Conclusions based on experience**

Finally they watched the pros and cons the people faced in the houses that were built in strict observation. Likewise also when they took up the Profession such as agriculture they observed all these factors. They related each factor with their experience, reasons thus arrived at, for each happening were accepted by all. This knowledge of experience spread among the masses. People selected the best and chose to adopt them in their lives.

They fully understood that the cause for their prosperity and poverty, the nourishing and perishing of their cattle wealth, the gains and losses in their farming, birth of children and barren sick and untimely death, friends and foes and other vices and virtues have been oriented with the design of the

house in which they live. Then onwards they learnt out of the experience of others in building the houses and they started building their own properly.

**Conclusions taken to Manuscripts**

These regulations were carried on orally from generation to generation. Some one, on some occasion gave the letter form to these news, the benefit of which is the manuscript "Manaiyadi Sastram" in vogue among us. The lines of the opening stanza of the above work reveals that this is a translation of the Sanskrit work of one "Mayan". Hence we may come to a conclusion that either the treatise, which was orally in vogue among the Tamils were given written form in Sankrit or it will be relevant to hold that the manuscripts in Tamil pertaining to this treatise which existed even before the work written by Mayan in Sanskrit are among the missing manuscripts.

Though this work is only a translation of 'Maya Madham' of Mayan, only those portions which deal with the aspects relating to the formalities to be observed in building of houses alone have been compiled and translated.

**Maya Madham and Manai Nool**

The author starts writing his first chapter saying that he compiles the message contained in 'Maya Madham'. In second, third and fourth chapters he deals with the selection of sites after testing the soil; the fifth chapter deals with the modes of measurement; in sixth, seventh and eigth chapters selection of directions, performing poojas to the deities of directions have been indicated. The methods of construction of villages, towns and temples are envisaged in 9th to 14th chapters. Chapters 15 to 17th deal with the formalities in fixing the number of pillars, selection of wood and measurement. It also underlines specifications for the horizantal beams supporting the roof and also for all other building materials required for roof.

In translating the above topics of 'Maya Madham' into Tamil, the author of 'Manai Nool', has selected only those portions dealing with the building of houses.

**Manuscripts of Manai Nool**

The manuscript named "Manaiyadi Sastram" bearing Number R. 3396 preserved in Government Oriental Manuscripts library, Madras, is considered to be the basic script for this publication. Apart from this there are eighteen more manuscripts under five titles namely

i) Manaiyadi Sastram
ii) Manai Sastram
iii) Manai Nool
iv) Manai vasthu Lakshanam
v) Silpa Sastram

This book has been titled 'Manai Nool' as this is a collection of materials available in the said scripts.

**Manai**

The word 'Manai' has been interpteted in different meanings in Literature as:

i) Wife
ii) life
iii) Cattle Shed
iv) house

In most of the literature, literarians have used the word 'Manai' only to mean 'the house'. But in 'Manai Nool' in various occasions, i.e., in prescribing the ceremonies and indicating the benefits of the position of the plot etc , this word is used to mean only the vacant land suitable for the construction of a house.

In sanskrit also the term vasthu equivalent to 'Manai' has been used to mean the 'Plot'. Dictionaries also state Manai as plot measuring 2400 square feet.

## Nool

Dictionaries term 'Nool' as 'thread' and 'book'. In literature different authors have used this term to denote grammatical and literary pieces. Hence it is upheld that here the word 'Nool' means the Grammar.

## "Manai Nool"

The title "Manai Nool" seems very relevant on examining the usage of the words 'Manai' and 'Nool' independantly.

Also 'Manai Nool' means the book giving details regarding the rules and regulations to be adopted in constructing houses.

## Manuscript

This publication is based on the Manuscript bearing Number R. 3396, preserved in govt. Oriental Manuscripts Library, Madras, which is of the size 34×3cm. It contains 118 leaves.

This manuscript was contributed to the library on 30.3.1952 by a native doctor namely Thiru. Velayutham, belonging to Akalapuram village of Salam District in Tamil Nadu.

Index is given in the first leaf. The details pertaining to the date and time (equalent to 28-10-1888) on which the manuscript has been written and completed by Palaniyappa Pillai, son of Arumugam Pillai when he was running a school at Olapalayam village are given afterwards.

## Origin of the Work

It can be seen on the left side of the first leaf that "Silpa Nool called Maniyadi Sastram told by Mayan alias Viswakarma'

## The author of first work

Illustrious persons like Brahma, Viswakarma and Mayan are also have written granthas on Silpasastra. According to the editors of Silpa Ratna and Mayamatha and Dictionaries like Kalaikalanjiyam and *Sabda Kalpa* drumam and also certain lite-

ratures it is evident that Viswa Karma and Maya are different personalities. But the verse in the manuscript shows that both are same.

**Mayan**

Adi Paruvam ascertain the fact that Mayan is none but who has been escaped from Kandava Vanam and saved by Arjuna. 'Manimegalai' portrays that 'Buddha Vihar' and 'Chakkaravala Kottam' have been built by Mayan at Kaviripumpattinam.

Not only that, the workmanship of Mayan in sculture is vividly denoted in 'Silappatikaram'. The first stanza in this work also asserts the fact that the 'Silpa Sastram' of Mayan alone can be considered as the primary book, and Manai Nool is a Tamil narration based on Silpa Sastram.

**Omen**

The first chapter speaks about good and bad Omen. The occurance, happening of incidents which forbodes some events good or bad implied with circumstances such as seeing bones in the plot and breaking coconut are vividly described.

**Omen in Grammar**

"Tholkappiyam" clearly correlate the good and bad omen with that of milking and non-milking of a cow. This enables one to think and act accordingly before his performance.

**Omen in literature**

Fluttering of eyes especially right for men and left for women seems to be the good omen. In the words of Nachinarkkiniyar blowing of conches, beating of drums, presence of filled up pot are all said to be the indications of good omen.

Sounds emanated from Lizards, passing of birds, and response to their screaming are ascribed as omen in literature. Similarly manifestation of certain symptoms physically or mentally from the individual or from other objects can be seen in literature.

Thus several incidents pertaining to good and bad omen can be studied from literature but except few things we cannot adhere to everyone of then as such milking from the cow with over flowing lather, fluttering of eyes experienced by the individual may be considered as indication of good omen. Whereas screaming of birds and sounds emanated from the lizard eventhough they are good expressions cannot be judged which is good or bad.

Not with standing to the abore, the "Manai Nool" describes the various implications of Omen according to the subject direction place, occuring of incidents, physical manifestations right or left respectively.

**time and Orbit**

Several persons well versed in Astronomy were in the king's champer and they were able to assess the zodiacal movements in each month of the year. It is known from the verses of "Jeevaga Chintamani" that the astronomers guided their majesty in all sphere of his activities carried out, suggested auspices occasions suiting to the birth star of the king.

Similarly the king coronated for the betterment of the citizens and to confront the enemy in the battle field selected auspices occasions.

Whereas, the Manai Nool provides specific information regarding the months, days, auspices stars, Full moon and new moon days, for the activities to be carried out suiting to the occurance of stars ete.

**Invocations**

It is a tradition of Tamils to invoke the blessings of the Almighty for the efficacy of the endeavour undertaken by them. They worship several deities ascribed to tne occasions such as invocation of Goddess 'Kotravai' to subdue his enemies. Likewise the 'Manai Nool' suggests that the invocation of 'Mother Earth, otherwise called "Vaasthu Purushan" is quite necessary before constructing a house.

The "Manai Nool" also advises the month and time on which the awakening of 'Vaasthu Purushan' from his slumbering can be chosen as auspies time to start the construction. And the above facts are all based on the wide range of experiences of the author.

**Sanskrit works on Vasthu offerings**

According to sanskrit works on Vasthu vidya there are certain hymns to ward off evil spirits from the plot on which one wants to construct his house. Then the land is to be tilled and seeds sown. After germination the plants are grazed by cows and calves for purification.

**Soil**

Soil is to be tested before construction. Many methods are narrated in this regard. One is to dig a pit and fill it with the earth removed from the pit. Another one is to fill the pit with water in the evening and observing the quantum of water in the next morning This method shows the strength of the soil to withstand the weight of the building to be constructed.

Good and bad effects of a plot is also decided by another method which is precisely narrated in this work. Hence a circular pit is dig around a portion of the earth and water and flower is put in the circular pit. The movement and direction of the water along with the flower with indicate the results whether good or bad.

**Measurement**

The conventional methods in measurement of lands in vogue on ancient period is described in this treatise. An instrument comprising from minute length to 24 fingers is used for measuring the plot. The wood used for preparing the scale is also differed according to the community using it. But in modern only yard stick measuring 36 inches is found convenient and suitable for persons engaged in this work.

An elaborate and instructive Index is given in the end showing the characteristic peculiarities of plinth area depending on the numbar of squire yards it contains.

While designing a house it may not be possible to adopt all rules and regulations prescribed in scriptures at least certain items can easily be introduced for prosperity. For instance the area of the plinth should be calculated taking into account the volume of four main walls.

Hight and breath of the door frames should be in ratio 9:5. The inner door frames should be smaller in hight than the front door frame.

Doors with single plank is desirable. At least the planks used should be in odd numbers.

Well should be situated either in south west or north east.

Steps should be so arranged to climb them facing north or east.

In any case whatever method is adopted in designing a house it shoul d be born in mind that it should suit the need of the persons who occupy it and also be convenient to his guests. Even modern houses constructed by eminent and expert persons. are found lacking the required convenience since in certain places kitchen and adjoining lavatory are to welcome a visitor and the lady in kitchen dress is embarrassed on arrival of such guests. Persons who want to construct a house to suit his taste must take particular care not to design houses like these.

**Correction in the Edition**

We are fully aware of the fact with reasons that no correction or alteration should be made in the edition while editing a manuscripr. It is also known that the seribes also commit many mistakes while copying. The mistakes are so dare in the context is also evident. Even than some editors do not attempt to rectify or alter the readings as they think that such act on their part is forbidden. If at all they do some correction on their own accord they indicate the same by placing them within square bracket leaving the original reading in round bracket. Both these methods adopted by editors make the readers disinterested in going through the works.

It should be the bounden duty of an editor to please his readers as far as possible by making the editions perfect and complete. For that matter it is only proper to correct daring mistakes in own accord. Bearing this in mind I have taken the liberty of making neccessary corrections in this edition. This fact is separately listed in the end. To fecilitate easy reference I have also arranged the stanzas dealing with similar or same topics scatered here and there in one and the same place.

A gist of topics dealt in chapters is given in lucid style in the beginning of each chapter. It is quite common that in certain places editors are silent in respect of giving accurate meaning or explanations for certain words inspite of their sincere efforts by refering commentaries and super commentaries on the texts. The present gist of the chapters is not an exemption

**Acknowledgement**

The full credit In bringing out this edition in this form goes to **Dr. S. V. Subramanian, Director of International Institute of Tamil Studies, Madras**, but for his continuous inspiration and guidance it would not have been materialized. I think it is impertinence to thank him.

I am very much grateful Thiru. **R. Baskaran** M.A., **curator** and Thirumathi **V. Pathmavathi**, M.A., **Asst. Librarian** of Govt. Oriental Manuscripts Library, Madras, for their kindness to issue the Original Manuscripts and books immediately when ever I was in need of them.

My thanks are due to Thirumathi **N. Vijaya**, M.A., B.Lit., B.Ed., **Mr. S. Ilango**, B.Com. student of Loyola College and **Mr. S. Ilavarasu**, for the sincere help rendered in bringing out this edition.

Thiru. V. R. Madhavan, Thiru. V. Sadhasivam, Thirumathi K. Lalitha, Selvi. K. Baby, and Selvi. K. PremaKumari students of manuscriptology, deserve my hearty gratitude for their attitude and efforts relevant to their training in preparing words index etc., for this publication.

**P. Subramaniam**

# பொருளடக்கம்


1. முன்னுரை III — IV
2. பதிப்புரை V—XXXVIII
3. Introduction XXXIX—XLVIII
4. பொருளடக்கம் XLIX—LIV
5. நூல்—தலைப்புகள்
   1. நிமித்தங்கள் 1-13
   2. மண்சோதனையும் பிறநிமித்தங்களும் 14-35
   3. நீள அகலம் 36-46
   4. முழக்கோல் 47-62
   5. மரத்தின் இலக்கணம் 63-83
   6. வாஸ்து புருஷன் 84-95
   7. மனைகோல நல்லநாள் தேர்தல் 96-108
   8. வீடுகட்டுவதற்குரிய பலன்கள் 109-132
   9. நட்சத்திரம் 133-155
   10. பொருத்தம் 156-186
   11. அருக்கன் நிலை 187-200
   12. ஆரூடம் முதலியன 201-217
   13. நட்சத்திரங்களுக்கு ஏற்ப-கிழமைகளுக்குரிய யோகங்கள் 218-219
   14. பொருத்தப் பலன்கள் 220-221
   15. பொருத்தப் பலன்களின் அட்டவணை 222-257
   16. திருத்தப் பெற்ற தொடர்கள் 258-265
   17. திருத்தம் பெறாத சில தொடர்களுக்கு விளக்கம் 266-271
   18. ஏட்டில் அட்டவணை 272-273
   19. சொல்லடைவு 274-297
   20. பயன்பட்ட நூல்கள் 298

## உள்தலைப்புகள்—அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| அகல நீளம் - பலன்கள் | 36 |
| அங்காரகசாரபலன் | 110 |
| அங்காரக சாரம் | 116 |
| அங்கிஷப் பொருத்தம் | 181 |
| அதோமுகம் எனப்படும் கீழ் நோக்குநாள் | 134 |
| அமிசப் பொருத்தம் | 163 |
| அருக்கன் நிலை | 187, 193 |
| அருக்கன் நிற்கும் நேரமும் திசையும் | 187 |
| அரையற்ற நாள் | 150 |
| அலிமரம் | 63, 69 |
| அவையடக்கம் | 1, 7 |
| அளவு நூல் கயிறு | 49, 57 |
| அறைகள், கூடங்கள், வாசல்கள் வைக்கும் இலட்சணம் | 39 |
| அஷ்டதிக்கு இலட்சணம் | 31 |
| ஆடிமாதம் | 113 |
| ஆண்மரம் | 63, 69 |
| ஆதாயம் | 176 |
| ஆயங்களில் குணங்கள் விபரம் | 175 |
| ஆயகம் | 175 |
| ஆயப்பொருத்தமும் பலனும் | 157 |
| ஆயம்-ஆதாயம் அறிய | 168 |
| ஆருடம் | 201 |
| ஆவணிமாதம் | 113 |
| ஆனி மாதம் | 113 |
| இரவுக்குளிகை | 192 |
| இராகுகாலக் கவி | 199 |
| இராகு சாரபலன் | 111, 118 |
| இராக் குளிகன் | 200 |
| இராசி சூல நிர்ணயம் | 166 |
| இராசி பலன் | 111, 119 |
| இராசிப் பொருத்தம் | 134, 180 |
| இராசி விசேஷம் | 194 |
| இராவிழிப்பு இராசியாவண | 148 |
| இலக்கின சுபக்கிரக இராசி நிர்ணயம் | 208 |
| இலக்கினத் தியாச்சியம் | 199 |
| இலக்கினப் பொருத்தம் | 162 |
| இலக்கின முகூர்த்தம் | 100 |
| இறை வணக்கம் | 1 |
| இனப் பொருத்தம் | 162 |
| உச்சிக் கோபுரம் வைக்க | 135 |
| உச்சி மேடு மூட | 135 |
| உபயராசி | 199 |
| ஊர்த்துவ முகம் எனப்படும் மேல் நோக்குநாள் | 134 |
| ஏடுசளுக்கு இரட்டைத் துவாரம் இடும் விதி | 77 |
| ஏறுநாள், இறங்குநாள் | 136 |
| ஐப்பசிமாதம் | 114 |
| கடவுள் வணக்கம் | 7 |
| கடைக்கால் எடுத்தல் | 98 |
| கடைக்கால், சங்குஸ்தாபனம் | 103 |
| கணப்பொருத்தம் | 164 |
| கணம் அறிய | 165 |
| கதவு | 80 |
| கதவுகளின் இலக்கணம் | 78, 79 |
| கதவுக்கு நெம்பு முளை | 77 |
| கயிறு பிடித்து அளக்கும் இலட்சணம் | 58 |
| கயிற்றினால் அளக்கும் போது | 58 |
| கரண பலன் | 125 |
| கரி நாள் | 191 |
| கரிநாள் வரும் தேதிகள் | 197 |
| கருப்பப் பேழை | 99 |
| கர்ப்பம் வைக்கப் பேழை | 108 |
| கன்னிகா சக்கரம் | 152 |
| கார்த்திகை மாதம் | 114 |
| கால கர்ப்பகதி இலட்சணம் | 209 |
| காலற்ற நாள் | 150 |
| காலாமிர்த சுலோகத்தின் கருத்து | 184 |
| கால்வைக்க, கைஏற்ற நாள் இலக்கினம் | 72 |
| கிணறு அமைத்தல் | 202 |
| கிணறு எடுக்க—ராசி | 202 |
| கிணறு எடுக்கும் இலட்சணம் | 213 |
| கிணறு எடுக்கும் திசை | 203 |
| கிணறு வெட்ட, கரைகட்ட | 216 |

கிணறு வெட்டும் மாதம் 203
இரக ஆரம்ப விதி 87
கிரகப்பலன் 110
கிரகப் பிரவேசம் 147
கிராம க்ஷேத்திர இலட்சணம் 24
கீழ்வீடு, மேல்வீடு, உயரம் 217
குடிபுக 91
குடிபோகும் மாத பலன் 147
குருசார பலன் 110, 117
குழிகெல்லி, மண் எடுத்துப் பார்க்கும் இலட்சணம் 34
குழியில் எடுத்த மண்ணை அடைத்தல் 33
குழியில் சாயரட்சை நீர்விட்டுப்பார்த்தல் 30
குழியில் நீரும்பூவும் விட்டுப் பலாபலன் அறியும் விதி 30
குழியில் நீர்விட்டு அறியும் நிமித்தம் 17
குழியில் நீர்விட்டு மறுநாள் பார்க்கும் குறி 20
குளிகை காலம் 92
குறிஞ்சி நிலம் 215
கூரைக்கால் நடுதல் 51
கூரைக்கால்-முகூர்த்தம் செய்தல் 61
கோயில் கட்ட 13
கோயில், கோபுரம், மனை அளவு முழக்கோல் 54
கோளச்சக்கர நிலை 185
சங்கின் அளவு 98
சங்கு செய்ய மரம் 106
சங்கு மரம் 98
சங்கு வைக்கும் காலம் 98
சங்கு வைக்குமிடம் 98
சங்கு வைக்கும் முறை 98
சங்கு வைத்தல் 98
சங்கு ஸ்தாபன இலட்சணம் 105
சங்கு ஸ்தாபனம் 104, 105
சமயம் ஐந்திற்கும் வஸ்து அதிகார இலட்சணம் 90
சர ராசி 199
சலதாரை இலட்சணம் 212
சனற்குமார வாஸ்து சொல்லிய கிரக ஆரம்பவிதி 87
சனற்குமார வாஸ்து சொல்லியது 167
சனி சாரபலன் 111, 118
சாதிகள் பொருத்தம் 180
சாயல் மாத விலக்கம் 216
சித்திரை மாதம் 113
சில நல்ல நாட்கள் 140
சிற்ப ஆசாரி 100
சிற்ப ஆசாரியின் இலக்கணம் 103
சுக்கிர சார பலன் 110, 117
சுக்கிர பலன் 102, 213
சுக்கிரன் பாடு 150
சுபகாரியங்கள் செய்யக் கூடாத நாட்கள் 150
சுவர்கனம் உயர்வு இலட்சணம் 211
சூசிகா சங்கராந்தி நிர்ணயம் 209
சூத்திரப் பொருத்தம் 166
சூரிய சார பலன் 110
சூரிய சாரம் 115
சூல நிர்ணயம் 217
செலவு 158
தண்ணீர் ஓட்டம் 202
தலையற்ற நாள் 150
தள மட்டம் 61
தள மட்டம் காணுதல் 50
தாரகால பலன் 182
தானும் தன் கிளை முதலான வர்களும் வாசம் செய்யும் மனை இலட்சணம் 24
திக்குகளுக்கு ஆகாத இராசி 128
திசையறிந்துவாசற்கால் வைக்கும் விதி 74
திசை யோனி நிலை 193
திதிபலன் 111, 179
திதிபலன் — வேறு 120
திதிப்பொருத்தம் 160
திரிமுகம் எனப்படும் பக்க நோக்கு நாள் 134
தினப் பொருத்த முகூர்த்தம் 149
தீமைதரும் நிமித்தங்கள் 2
தீய பலன்கள் 4
துரவுகள் எடுக்க 216
தெரு வாசற் கால் 65
தெரு வாசற்கால் வைக்கும் இலக்கணம் 73
தேங்காய்க்குறி 20, 34
தைமாதம் 114
தொடுகுறி இலக்கணம் 203
தொடும உறுப்பு — பலன் 203
தோஷப் பரிகாரம் 130

நட்சத்திரத் தியாச்சியத் துருவம் 198
நட்சத்திரம் 133, 203
நட்சத்திரங்களின் நன்மை, தீமை அறியும் விதி 144
நட்சத்திரமும் நாளும் 136
நட்சத்திரப்பலன் 112, 121 142, 179, 211
நட்சத்திரப் பலன் - பொது 133
நட்சத்திரம் பார்க்கும் விவரம் 184
நட்சத்திரப் பொருத்தம் 159
நட்சத்திரம்-மிருகம்-பட்சி-கணம் 140
நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாரபலன் 124
நல்ல பலன்கள் 3, 4
நன்மை தரும் நிமித்தங்கள் 2
நாம நட்சத்திரம் 133
நாம நட்சத்திர எழுத்துக்கள் 141
நால்வகை வருணத்தாருக்கும் மனை இலட்சணம் 24
நாள் பொருத்தம் 161
நான்கு சாண் முழக்கோல் 156
நான்கு சாதிக்கும் அளவு கயிறு அறிந்து கொள்க 57
நான்கு வருணத்தாருக்கும் கிரக திசை 23
நான்கு வருணத்தாருக்கும் பூணுநூல் கொள்ளும் விதி 60
நிமித்தம் 1
நிமித்தங்கள் 1
நிலஅளவு 77
நிலத்தின் உயர்வு தாழ்வு 15
நில நீளம் வைக்கும் விதி 78
நீக்க வேண்டிய நாட்கள் 137
நீக்க வேண்டிய நேரங்கள் 191
நீள அகலம் 36
நெய்தல் நிலம் 215
பகல் குளிகன் 200
பகல் குளிகை 192
பங்குனி மாதம் 115
பஞ்சகம் பார்க்கிறது 182
பஞ்ச கோள்கள் 191
பஞ்ச கோள் நின்ற தோஷம் 196
பல்லி சொல்லுதலின் பலன் 3
பார்வையின் அளவு 200
பார்வைப் பொருத்தம் 163
பால, யவ்வன, மூப்பு-பருவம் அறிய 1815
பாலை நிலம் 215
பிரகஸ்பதி, சுக்கிரன் அஸ்தமனமான பலன் 126
பிற உயிர்களைக் காண்பதன் பலன் 3
பிற சகுனங்கள் 9
பிறந்த நட்சத்திரம் 137
பிறந்த நாளும் வாரமும் கூடில் ஆகாநாள் 148
பிற பொருள்களுக்குரிய நிமித்தங்கள் 3
பிறப்புப் பொருத்தம் 159
புட்பங்கள் விடுவதற்கு இலட்சணக் குறி 31
புதசார பலன் 110, 116
புரட்டாசிமாதம் 114
புற்று இலட்சணம் 27
புற்று நிமித்தம் 15
புற்று நிமித்தம் காணும் 9 பாகங்கள் 17
பூதப்பொருத்தம் 166
பூமி சல்லியம் 205
பூமியைச் சோதித்து வீடு கட்டும் நியமம் 22
பெண்மரம் 63, 69
பொருத்தங்களை அறியும் வழி 156
பொருத்தப் பலன்கள் 220
பொருத்தம் 156
மடசுத்தம் 194
மட்டக்கோல் 48
மண் இலட்சணம் 23
மண் சோதனையும் பிற நிமித்தங்களும் 14
மண்ணின் கீழ் கிடைக்கும் பொருளுக்கேற்ற பலன் 4
மண்வெட்டி முழக்கயிறு சகுனம் 60
மரங்களின் பயன் 69
மரங்கள் வெட்ட திதி நிர்ணயம் 72
மரங்கள் வெட்டும் விதி 64
மரங்கள் வெட்டும் விதி 72
மரத்தில் ஆண்பெண் அறிய 68

மரத்தில் நன்மை தீமை அறிந்து உத்திரம் இணைக்கும் விதி 70
மரத்தின் இலக்கணம் பயன் படுத்தும் முறை 63
மரமிசைத்தல் 59
மரம் அமைத்தல் 64
மரம் வெட்ட ஆகாத நாள் 65, 72
மரம் வெட்டும் நாள் 64
மருதநிலம் 215
மலர் சுற்றி நிற்கும் அறிகுறி 18
மறுமாடி-முளை நற்குறி, துர்க்குறி 60
மறுவாசல் தோஷம் 59
மற்ற இராசிக்காரர் 73
மனை உயர்வு தாழ்வு இலட்சணம் 23
மனை எடுக்கும் பலன் 131
மனைகோல-இராசிப்பொருத்தம் 146
மனைகோல, குடிபுக 91
மனைகோல, குடிபுக ஆகா மாதங்கள் 147
மனைகோல நல்லநாள் தேர்ந்தெடுத்தல் 96
மனை கோலுகையில் இலக்கின முகூர்த்தம் 100
மனைகோலுதல் 17
மனைகோலும் நாள் - ஆகா நாள் 146
மனைகோலும் போது கடைக்கால் சங்குஸ்தாபனம் 103
மனைகோலும் மாதங்கள் 147
மனைக்கு ஏகும்போது சகுனம் 8
மனைக்கு ஆயகம், வயது 167
மனைக்கு வயது 181
மனை பொருத்தத்தின் விவரம் 183
மனையில் 64 பாகங்களில் வீடு கட்டும் இலட்சணம் 154
மனையில் கதவு அடைக்கும் குறி 80
மனையில் சருக்க மூலைக்குமிடங்கள் 212
மனையின் திசை தேர்ந்தெடுத்தல் 15
மனையில் தேவதைகள் இருப்பிடம் 140
—D—
மனையில் நிற்கும்போது சகுனம் 10
மனையில் பிற இடங்கள் அமைத்தல் 201
மனையில் புற்று எழும் இலட்சணம் 26
மனையைச் செல்லிப் பார்க்கும் இலக்கணம் 11
மாசிமாதம் 114
மாத நாளில் கர்ப்பம் ஓடுவது 131
மாத பலன் 109
மாதபலன்கள் 113
மாதம் 203
மாதாமாதம் சூரியன் இருக்கும் நிலை 210
மார்கழிமாதம் 114
மிரத்தியோகம் அறிய 183
முகடு குத்தி மாறுகயிறு 60
முகடு வைக்க 148
முகட்டு நாள் 136
முகூர்த்தம் செய்யும் விவரம் 29
முகூர்த்தம் 146
முழக்கோல் 47
முழக்கோல் அளவு 52
முழக்கோல் மரங்கள் 54
முழக்கோல்-வேறு 53
முளைகடாவும் அளவு 59
முளைக் கயிறுகால் 59
முளைக்குச்சு 50
மூலைக்கால் நடுதல் 51
மூலைக்கால் நாட்டும் விதி 61
மூலைமட்டக்கோல் 48
மேற்கோள் 12, 94, 151
மேற்கோள்-உள்ளமுடையான் 92
யோகங்கள் 128
யோகபலன் 122, 123
யோகினி அறிய 150
யோகினி நிலை-திதிகள் 139
யோகினி நிற்கும் நிலை 151
யோனிப்பொருத்தம் 178
வயதுப் பொருத்தம் 163
வரவு 158
வரவு, செலவு இலட்சணம் 167
வளவு கட்டும் இலட்சணம் 211
வாசல் 93
வாசல் இராசி பார்ப்பது 46

வாசல் சூரியன் கவி 46
வாசல் விடும் திசை 86
வாசல் விடும் பகுதி 86
வாசல் விடும் விதி 92
வாசல் விடுதல் - பொது 86
வாசற்கால் வைக்க நவக்கிரக பலன் 67
வாசற்கால் வைக்கும் பாகம் தேர்ந்தெடுத்தல் 66
வாசற்கால் வைக்கும் முறை 65
வாசற்கால் வைக்கும் விதி 77
வாசற்படி வைக்கும் இலட்சணம் 76
வாரங்களுக்குக் கரணம் 195
வாரத்தியாச்சியம் 198
வாரத்தின் மேல் நேத்திரம் அறிய 181
வாரபலன் 112,121, 195, 211
வாரப்பொருத்தம் 179
வாரம் 170
வாரவிசேஷம் 195
வாஸ்து அதிகார இலட்சணம் 90
வாஸ்து எழுந்திருக்கும் நாட்கள் 85, 90, 94
வாஸ்து எழுந்திருக்கும் நாள் அறிய; மனைகோல, குடிபுக 91
வாஸ்து படுத்திருக்கும் இராசிகள் 84
வாஸ்து புருஷன் 84
வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் ஜாமம், தேதி, நாழிகை, போசனம் 93
வாஸ்து புருஷன் கிடக்கை 87
வாஸ்து புருஷன் கிடக்கை மேற்கோள் 88
வாஸ்து புருஷன் திசையறிந்து வாசல் விடு விதி 92
வாஸ்துவிழிநோக்கில் முகூர்த்தம் 29
வாஸ்துவின் இருப்பு 89
வாஸ்து வீட்டின் பலன் மேற்கோள் 92
வாஸ்துவுக்கு இராசி வீடு 88
விசால லட்சணம் 45
விரையம் 177
விஷ்டி தோஷம் 196
வீடு கட்டுதற்கு ஆகாத மரங்கள் 64
வீடுகட்டுதற்கு உதவா மரங்கள் 71
வீடுகட்டுவதற்குரிய பலன்கள் 109
வீடுகட்டும் பலன் 113
வீடுகட்டும் மனையின் மண் 14
வீட்டுக்கு உரியவர் இராசிக்கு உரிய திசை தேர்ந்தெடுத்தல் 66
வைகாசி மாதம் 113
ஸ்திர ராசி 199
ஸ்திரலக்கின ராசிகள் பலன் 127
வாஸ்து புருஷன் 84
ஜென்ம நட்சத்திரம் பார்க்கும் நிலை 204
க்ஷேத்திர ஆருடம் 204

# 1. நிமித்தங்கள்

## இறைவணக்கம்

நான்கு வேதங்களாகி விளங்குபவன் இறைவன்;
மும்மூர்த்திகளாகி வடிவெடுத்து நிற்பவன் இறைவன்;
முத்தொழிலை நிகழ்த்துபவன் இறைவன்;
முத்தொழிலை நிகழ்த்துவதற்காக இவ்வுலகினைத்
தோற்றுவித்தவன் இறைவன்.

அவ் இறைவனின் திருவடித் தாமரைகளை வணங்கி, தேவ தச்சன் என்று கூறப்படும் சிற்பியாகிய மயன் என்பவர் வடமொழியிலே செய்துள்ள மனைநூலினைத் தமிழிலே சொல்லுகிறேன் என்று இறைவணக்கம் கூறி நூலைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

## அவையடக்கம்

பழமும், நெய்யும், பாலும், கற்கண்டும், சர்க்கரையும் கலந்த உயர்ந்த உணவில் கல் கலந்து கிடக்குமானுல் சான்றோர் கல் உணவு என்று அதனை விலக்கி விட மாட்டார்கள்; அந்தச்சிறு கல்லைக் கண்டு நீக்கி விட்டு உணவை இனிய உணவாகவே ஏற்றுக் கொள்ளுவார்கள். அதுபோல புல்லறிவாளனாகிய நான் செய்யும் இந்நூலுள் பிழை காணப்படினும் அப்பிழையினை நீக்கி உயர்ந்த நூலாகவே ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பது ஆசிரியரின் அவையடக்கக் கருத்து.

## நிமித்தம்

இல்லத்திற்கு உரியவன் வந்து மனைகோல வேண்டும் என்று சிற்பியை அழைக்கிறான். சிற்பியும் மனைக்கு உரியவனுமாக

மனையை நோக்கிச் செல்லுகிறார்கள். அவ்வாறு செல்லும்போது எதிரில் ஆண்கள், பெண்கள் பிற உயிர்கள் வந்தாலும், அவர்கள் பிற பொருள்களோடு வந்தாலும் அவற்றை நிமித்தம் என்று கூறுகிறது மனை நூல். அப்படி வரும் நிமித்தங்களுக்கு ஏற்ப மனையில் நன்மை, தீமைகள் உண்டாகும் என்று கூறுவது அனுபவத்தில் கண்ட உண்மைகளாக ஏற்கப்படுகின்றது. அவ்வாறு இந் நூலின் முதற்பகுதி கூறும் நிமித்தத்தின் நன்மை தீமைகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

## நன்மை தரும் நிமித்தங்கள்

1. அழகு வாய்ந்த மகளிர் எதிரில் வந்தால் நல்ல யோகம் உண்டாகும்.

2. நிறைகுடம்,வண்ணான், தயிர்ச்குடம், பால்குடம், சோறு மதுக்குடம், பருவமகளிர், சாரைப்பாம்பு, தேவதாசி, கரும்புக் கட்டு, இரட்டைப் பார்ப்பனர் போன்ற நிமித்தங்கள் எதிரில் தோன்றினால் மிகவும் நன்மை உண்டாகும்.

3, நரி, கிளி, வேங்கைப்புலி, முயல், கோழி, கொக்கு, மயில், ஓந்தி, மான், பசு, மாடு, நாரை, அணில், கழுதை, செம்போத்து ஆகியவை நாம் மனைகோலப் புறப்படும்போது எதிரில் நமக்கு இடது பக்கத்திலிருந்து வலதுபக்கமாகச் சென்றால் மிகவும் நன்மை உண்டாகும்.

## தீமை தரும் நிமித்தங்கள்

1. அழுக்கு ஆடை அணிந்தவன், செம்பட்டைத் தலையன், சுருட்டைத்தலையன், நொண்டி, உடலில் மயிர் இல்லாதவன், விரிந்த தலையை உடையவன், ஒற்றைக் கண்ணன், விதவைப் பெண், தடி ஊன்றி வருபவன், கையில் கயிறு உடையவன் ஆகியோர் எதிரில் வருவார்களானால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

2. விரிந்த தலையை உடையவன், மொட்டைத் தலையன், மட்டை என்னும் ஒருவகைப் பாம்பு, சன்னியாசி, ஒற்றைப் பார்ப்பனன், முலை இல்லாத பெண், புதிய பானை, மூக்கு இல்லாதவன், வாணியன் ஆகியவை எதிர் காணில் தீமை உண்டாகும்.

## எதிரில் காணும் பிறபொருள்களுக்குரிய பலன்கள்

3. குறைகுடம் — துன்பம் உண்டாகும்
இரைச்சலிட்டு வரும் பாம்பு — பகை உண்டாகும்
நெருப்பு — குடி அழிந்து போகும்
கரி — நோய் உண்டாகும்
எலும்பு — பசுக்கள் நாசமாகும்
உமி — பொருள் அழியும்
விறகு — இகழ்ச்சி உண்டாகும்

மனைக்குரிய தலைவனும் சிற்பியுமாகச் சென்று மனையில் நிற்கும் போது நிகழும் பிற நிமித்தங்களும், அவற்றிற்கான பலன்களும்:-

## பல்லி சொல்லுதலின் பலன்

சிற்பியும் மனைக்குரியவனும் மனையில் சென்று நின்றவுடன் அவர்கள் நிற்கும் நிலைக்கு வலது பக்கத்தில் பல்லி சொல்லுமானால் நல்ல பலனைத் தரும்.

இவ்வாறு முதலில் வலதுபுறம் சொல்லி, அடுத்து இடதுபுறமும் பல்லி சொல்லுமானால் அந்த மனைக்கு உரியவன் அரசனுக்கு மிகவும் பிரியம் உள்ளவனாகவும் சுகவாழ்வு உடையவனாகவும் விளங்குவான்.

## பிற உயிர்களைக் காண்பதன் பலன்

### நல்ல பலன்கள்

அவர்கள் இருவரும் சென்று மனையில் நின்றபோது,

1. வெள்ளைப் புறா, வெள்ளைப் பசு, வெள்ளை எருது ஆசியவை அவர்கள் பார்வையில் காணுமானால் மனைகோலி மேலும் சீரும் சிறப்புமாக வாழ்வார்கள்.

2. பறண்டை என்னும் பறவை பாடிக்கொண்டே வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாகச் செல்லுவதைக் கண்டால் துன்பங்கள் நீங்கி நன்மை உண்டாகும்.

3. மதுக்குடம், மாமிசம், பால், நெய், தண்ணீர், நல்ல புடவை, மங்கலிய மகளிர், நிறைகுடம், யானை, குதிரை, தேர், ஒற்றை ஆடவன் இவற்றை எதிரில் கண்டால் மிகவும் உத்தமம் ஆகும்.

## தீய பலன்கள்

1. எறும்புகள் சாரி சாரியாகச் செல்லாமல் சிதறிச் செல்லுவது.

கரையான்கள் பரவிக் கிடப்பது.

வண்டுகள் பூமியைத் துளைத்துக் கொண்டிருப்பது,

ஓணான் எதிரில் ஓடிவருவது போன்றவற்றைக் காணநேர்ந்தால் தீமை உண்டாகும். ஆதலின் மனைகோலக் கூடாது.

2. குடியன், வலையன் என்னும் சாதியான், சுடுகாட்டு ஆண்டி, முடவன், செக்கு ஆட்டுபவன், மூக்கு அறுபட்டவன், கூனன், குருடன் ஆகியவர்களைக் காண நேர்ந்தால் மனை கோலக் குடி நசித்துப் போகும்.

3. இவ்வாறான தீய நிமித்தங்கள் தோன்றுமானால் அப் பொழுது அந்த செயலை நிறுத்திவிட்டுக் குறைந்தது ஒருமாதம் கழித்து மீண்டும் நல்லநாள் தேர்ந்து எடுத்து அந்த நாளில் நல்ல நிமித்தம் கண்டு அச்செயலைத் தொடங்க வேண்டும்.

நல்லநாள் பார்த்து மனை நடுவில் தோண்டிப் பார்த்தால் மண்ணின் கீழ் கிடைக்கும் பொருள்களுக்கு ஏற்ற பலன்கள்:

## நல்ல பலன்கள்

தவளை, அரணை, பல்லி, சிலந்தி, நண்டு ஆகியவை காணப் பட்டால் அம்மனை சிறந்து விளங்கும்.

பசுவின்கொம்பு, பல தானியங்கள், செங்கல், பஞ்சலோகம் இவற்றுள் ஒன்று காணப்பட்டால் மிகுந்த செல்வம் உண்டாகும்.

பொன், வெள்ளி, செம்பு இவற்றுள் ஒன்று காணப்பட்டால் மிகவும் நன்மை உண்டு.

இரும்பு, ஈயம், பித்தளை இவற்றுள் ஒன்று காணப்பட்டால் மத்திம பலனே உண்டாகும். புதையல் கண்டால் இன்பம் உண்டாகும்.

## தீய பலன்கள்

உடும்பு, பாம்பு, தேன்கூடு, ஆமை, பூரான், வண்டு இவை காணப்பட்டால் அம்மனை அனல்பட்டு அழியும்.

எறும்பு, தேள், கரையான், மரக்கட்டை, முட்டை, நகம், மயிர், வெண்தலை, எறும்பு ஆகிய இவற்றுள் ஒன்று காணுமேல் மிகவும் தீங்கு நேரிடும்.

கரி தோன்றினால் நோய் உண்டாகும்.
உமி தோன்றினால் பொருள் அழியும்.
விறகு தோன்றினால் குலம் அழியும்.

கருங்கல், எலும்பு இவை தோன்றினால் மனையாள் சாவாள்; மனைக்குரியவனும் வியாதியால் மெலிந்து சாவான்.

இக்காரணங்களால் வீடு கட்டும்போது பூமியைத் தோண்டிச் சோதனை செய்த பிறகே வீடுகட்டுதல் வேண்டும். அவ்வாறு அன்றி பூமியைச் சோதனை செய்யாமல் வீடு கட்டி விட்டால் வீட்டில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப மண்ணில் உரிய பொருள்கள் இருந்தே தீரும் என்று உறுதியாக நம்பலாம்.

இதுபற்றிக் கூறும் பகுதியின் விளக்கமாவது :

வீடுகட்டியபின் - வாழ்க்கையில் அவ்வீட்டில்,

1. 'பசு இருந்தும் பால் இல்லை' என்ற நிலை ஏற்பட்டால் வீட்டின் கிழக்குப் பக்கத்தில் மண்ணின் கீழ் குழந்தைகள் எலும்பு கிடக்கும் என்பது பொருள்.

2. வீட்டில் பசுக்கள் இருக்கின்றன. ஆனால் பால் கறவை இல்லை; மேலும் அரசினர் கோபம் கொண்டிருக்கின்றனர் என்ற நிலை இருந்தால் அவ்வீட்டின் தென்கிழக்கு மூலையில் குதிரை எலும்பு கிடக்கிறது என்று கண்டு கொள்ளலாம். ஆயினும் அவ் வீட்டில் நல்ல யோகம் உண்டாகும்.

3. வீட்டுத்தலைவன் ரொண்காரனாக இருந்து துக்கம் அடைவான் ஆனால், வீட்டின் தென்புறத்தில் யானை எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

4. என்றைக்கும் அபம் மிகுத்துத் தோஷம் வந்து அடையு மானால் அவ்வீட்டின் தென்மேற்கு மூலையில் பன்றி எலும்பு இருக்கும்.

5. எப்போதும் ஆருடம் சொல்லுதல், போக்குவரவு சொல் லுதல் ஆகிய தொழிலில் ஈடுபட்டிருந்தால் அவ்வீட்டின் மேற்கே எருது எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

6. எப்பொழுதும் அர்த்த நாசனாய் இருப்பானாகில் அவ் வீட்டில் எங்கோ ஒரு பக்கம் கழுதை எலும்பு இருக்கிறது என்று அறியலாம்.

7. அண்டை, அயலார் எப்பொழுதும் விரோதமாக இருப்பார்களேயானால் அவ்வீட்டின் வடக்கே ஆட்டு எலும்பு இருக்கிறது என்று கொள்ளலாம்.

8. வீட்டில் எப்பொழுதும் கலகம் ஏற்பட்டால் வீட்டின் வடகிழக்கு மூலையில் நாய் எலும்பு புதைந்து கிடக்கிறது என்று அறியலாம்.

வீடு கட்டத் தொடங்குமுன் இவற்றை நன்கு ஆய்ந்து பார்த்து தீயனவற்றை நீக்கி வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

மேலும் மனையின் நடுவே தோண்டிச் சோதனை செய்யும் போது தலைமண்டை ஓடு காணப்பட்டால் அவ்வீட்டு மனையை ஆறுசாண் ஆழம் மண் எடுத்து நன்றாகச் சோதனை செய்து தீயனவற்றை நீக்கி வீடு கட்டினால் எல்லாவித நன்மையும் உண்டாகும்.

★

விஸ்வகர்மாவாகிய மயனென்பவர் திருவாய் மலர்ந்தருளிய சிற்பநூலென்னும் மனையடி சாஸ்திரம்.

## கடவுள் வணக்கம்
## விருத்தம்

1. *வேதநான் மறைக ளாகி விளங்குமும் மூர்த்தி யாகிப்*
*பூதலந் தனைப்ப டைத்த புண்ணியன் தாளைப் போற்றித்*
*தீதிலா மயனார் சொன்ன சிற்பசாஸ் திரமாம் நூலை*
*நீதியாய்த் தமிழி னாலே நிலைபட உரைக்க லுற்றேன்.*

இதன்பொருள்:- இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களாகியும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், என்னும் மும்மூர்த்திகளாகியும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத் தொழில் நடாத்தும் பொருட்டு அண்ட சராசரங்களைப்படைத்த கடவுளினது திருவடிக் கமலத்தைத் துதிசெய்து பஞ்ச முக ஸ்வரூபி யாகிய பரமசிவத்தின் நெற்றிக் கண்ணினிடமாய்த் தோன்றிய ஆதிவிஸ்வகர்மா வென்னும் மயனார் சொல்லிய மனை நூலைத் தமிழிலும் சொல்லலுற்றேன் என்றவாறு.

## அவையடக்கம்

2. *பழத்தொடு நெய்பாற் கண்டு பகர்ந்ததோர் அடிசில் தன்னைக்*
*கழிப்பரோ நல்லோர் தாமும் கலந்ததில் கல்கி டந்தால்*
*வழிப்படு சாத்தி ரத்தின் வளமைபுல் லறிவன் கூற*
*பழுதுஇதில் உறினும் கற்றோர் பாவிப்பார் நலமாய்த் தானே.*

இ-ள்:- வாழைப்பழமும் நெய்யும் பாலும் கற்கண்டும் சர்க்கரை யும் கலந்த அசனத்தில் கல்கிடந்தால் அந்த கற்களை மாத்திரம் நீக்கி இன்பமாகக் கொள்ளுதல்போல, புல்லறிவாளனாகிய யான் சொல்லும் இந்நூலிற் பிழையுறினும் மேலோர் அக்குற்றங்களைக் களைந்து சிரேஷ்டமாகக் கொள்ளுவார்கள் எ-று.

## சகுனம்

### மனைக்கு ஏகும்போது சகுனம்

(மகளிர்)

3. மனையது கோல வென்று வந்தவ னோடு சிற்பி
கனிவுடன் வழிச்செல் போது காணுமேல் காம ரூப
வனிதையர் தமைக்கண் டாக்கால் வந்தது பாக்கிய மென்றே
நனிவுடன் சிரத்தை யாக நன்மையாய் நடக்க நன்றே.

இ-ள்:- மனைகோல வேண்டுமென்று யாரேனுமொருவர் வந்து அழைக்க அவரோடு சிற்பியானவர் போகும்போது காமரூபியா யிருக்கும் ஸ்திரீகள் எதிர்படில் நல்லயோகம் என்று விரைவில் போய் மனைகோல நன்மை யுண்டாம் எ-று.

4. மன்னிய நிறைகு டங்கள் மாறாயம் சொல்லும் வண்ணான்
மின்னிய தயிர்பால் சோறு விடக்குடன் மதுக்கு டங்கள்
கன்னியர் சாரை வேசி கரும்புக்கட்டு எதிரே காணில்
மென்னிய இரட்டைப் பார்ப்பான் எதிர்வரக் கருமம் நன்றே.

இ-ள்:- சகுனமாவது-நிறைகுடம், வண்ணான், தயிர்க்குடம், பால் குடம், அன்னம், மதுக்குடம், யௌவன ஸ்திரீ, சாரை, தேவதாசி, கரும்புக்கட்டு, இரட்டைப் பார்ப்பார் இவர்கள் எதிர்வந்தால் மகா உத்தமம் என்று சொல்லவும் எ-று.

5. கொடிநரி கிள்ளை வேங்கை கூர்முயல் கோழி கொக்கு
வடிவுள மஞ்ஞை ஓந்தி மரையொடு பசுக்கள் மீதே
கடிகமழ் நாரை நாவி கடுவாயன் செம்போத்து என்றும்
வடிவுடன் வலத்தில் சென்றால் வந்திடும் கருமம் நன்றே.

இ-ள்:- நரி, கிளி, வேங்கை, முயல், கோழி, கொக்கு, மயில், ஓந்தி, மான், பசு, மாடு, நாரை, அணில் பிள்ளை, கழுதை, செம்போத்து இவைகள் வலதுபக்கம் சென்றால் மகா உத்தமம் எ-று.

6. செய்யபுன் செய்ய ஆடை செம்மட்டை சுருட்டை நொண்டி
மெய்யினில் மயிர் இல் லாதான் விரிதலை ஒற்றைக் கண்ணன்
தையல்நூல் [இழந்த] மாது தடிக்கொம்பு காண்பான் ஆகில்
கையிலே] கயிறுங் காண காலன்வாய்ப் படுவன் தானே.

இ-ள்:- அழுக்கு வஸ்திரத்தை உடையவன்
செம்பட்டைத் தலையன்
சுருட்டைத்தலையன்
நொண்டி
முகத்தில் மயிர் இல்லாதவன்
விரிந்த தலையை உடையவன்
ஒற்றைக்கண்ணன்
விதவைப்பெண்
தடிக்கொம்பை உடையவன்
கயிறு உடையவன்

இவர்கள் எதிரில் வந்தால் உயிருக்குலயம் வரும் எ-று.

7. தலைவிரி மொட்டை மட்டை தவசி சன்னியாசி பார்ப்பான்
முலையிலாக் கன்னி கும்பம் மூக்கரை விறகுக் கட்டே
நலமிலா முதுநோ யாளன் நாவிதன் குருடன் செக்கான்
பலரும்வந் தெதிரே காணில் பலனிலாக் கருமம் ஆமே.

இ-ள்:- விரிதலை உடையவன், மொட்டைத்தலையன், பாம்பு, சன்னியாசி, ஒற்றைப்பிராமணன், முலையிலாப்பெண், புதுப் பானை, மூக்கு இல்லாதவன், வாணியன் இவர்கள் எதிரே வந்தால் ஆகாது எ-று.

## பிற சகுனங்கள்

8. நிறைந்திடு குடமே காணில் நிலையதாய்ச் செல்வம் எய்தும்
குறைந்திடு குடமே காணில் குறிப்பதாய்த் துன்பம் உண்டாம்
இறைந்திடு பாம்பு காணில் இயல்பிலாப் பகைஉண் டாகும்
அறைந்திடு நெருப்பு காணில் அருங்குடி நசித்துப் போமே.

9. கரியது காணும் ஆகில் காயத்தில் நோயே ஆகும்
உரியதோர் எலும்பு காணில் உற்றகோ அனைத்துஞ் சாவாம்
பிரியமாய் உமியே காணில் பெரும்பொருள் அனைத்துங் கேடாம்
எரியுறு விறகு காணில் இகழ்ச்சியாம் வினையுண் டாமே.

10. ஈண்டிய தனத்தைக் காணில் இன்பமே வந்து சேரும்
காண்தகு தவளை காணில் கனம்பெறு தானியம் உண்டாம்
வேண்டிய அலவன் காணில் மிகுந்ததோர் பாக்கியம் உண்டாம்
பாண்டத்தின் ஓடு காணில் பலமுள்ள உயிரும் போமே,

## மனையில் நிற்கும்போது சகுனம்

(பல்லி சொல்லல்)

11. வலமிகச் சொலினும் பல்லி யல்லது யிடத்திற் கூற
பலமிக வுடைய தாகும் பாங்குடைக் கருமம் நன்றாம்
குலமிக வளரு நாளுங் சோற்குறு காதன் மைந்தர்
பலமிக வுடைய ராவர் பல்லியின் இயல்பு தானே.

இ-ள்:- சிற்பியும் அம்மனைக்கு யசமானனும் அம்மனையில் சென்று நின்றால் கெளளி முன்பு வலமாகச் சொல்லில் அழகியது. பின்பு இடமாகச் சொல்லில் அம்மனைக்குரியவன் அரசர்களுக்குப் பிரியனாய்ப் புத்திர களத்திரத்துடன் சுகித்து வாழ்வான் எ-று.

(புறா, பசு, எருது)

12. வெள்ளிய புறாவி னோடு விளங்கிய பசுவு மற்றும்
ஒள்ளிய மாவின் ஏறும் உருவுடன் காணு மாகில்
தெள்ளிய கருமம் நன்றாம் சீர்மனை கோலச் சீராய்
வள்ளியர் ஆகி வாழ்வர் மண்ணின்மேல் மனையுள் ளோரே.

இ-ள்:- வெள்ளைப் புறாவும் வெள்ளைப் பசுவும் வெள்ளை ரிஷபமும் தங்கள் மனையிலே நின்றபோது காணில் உத்தமம் எ-று.

(எறும்பு ,செல், வண்டு, ஓணான்)

13. எறும்புதான் ஒழுங்கு விட்டே ஏகிடில் இயற்ற வேண்டாம்
கறம்புதான் கரையான் ஒந்தி கண்டிடில் கருத வேண்டாம்
சுரும்புதான் கீண்டு யர்ந்து தோன்றிடிடில் செய்ய வேண்டாம்
கரும்புபோல் மொழியி னாளே காட்டும்ஈது இடரைத் தானே.

இ-ள்:- மேற்சொல்லிய இருவரும் மனையிற் சென்று நின்றபோது எறும்புகள் ஒழுங்குவிட்டுப் பலவாறாய்ச் சிதறினும், செல்லுகள் பரவியிருக்கினும், வண்டுகள் பூமியைத் துளைக்கினும், ஓணான் எதிர்படினும் மனைகோலலாகாது எ-று.

14. பாங்குடைப் பறண்டை யுந்தான் பண்ணொடு வலத்திற் பாடித்
தாங்குடன் இடத்தி னில்போய்த் தனிக்குரல் வழியு மாகில்
ஓங்கிய மனையும் நன்றாம் ஒள்ளிய பயனுண் டாகும்
தீங்குதான் வருவ தில்லை செப்பிய வண்ணந் தானே.

இ-ள்- மேற்சொல்லிய இருவரும் மனையில் நிற்கும்போது பறண்டை வலத்திற்பாடி வலத்திலிருந்து இடத்திற்குப் போந்து வழியுமாகில் மனைக்கு எசமானனுக்குத் துன்பங்கள் நீங்கி நன்மையுண்டாம் எ-று.

15. தண்டொடு வலையன் நீமத் தபசியு முடவன் செக்கான்
கொண்டமூக் கரையன் கூனன் குருடனும் எதிரே தோற்றக்
கண்டிடில் நசித்துப் போகும் கருதிட வேண்டா மென்று
வண்டமர் குழலின் மாதே வகுத்துரை செய்வர் தாமே.

இ-ள்:- குடியன், வலையன், சுடுகாட்டாண்டி, முடவன், செக்கான். மூக்கரையன், கூனன், குருடன் இவர்களை எதிரில் காணில் மனை கோல நசித்துப்போம் எ-று.

16. மதுக்குட முடன்இ றைச்சி மற்றும்பால் நெய்யும் நீரும்
கதித்திடு துகிலுங் கட்டுக் கழுத்தி பூரணகும் பந்தான்
மதித்திடும் யானை தேரும் ஆளுடன் புரவி தானும்
எதிர்க்கவே காணின் நன்றாம் எய்திடும் கருமந் தானே.

இ-ள்:- மதுக்குடம், மாமிசம், பால், நெய், தண்ணீர், நல்ல புடவை, மங்கிலியஸ்திரீ, நிறைகுடம், யானை, தேர், ஒற்றை யான், புரவி இவைகள் எதிர்காணில் உத்தமம் எ-று.

நல்லநாளும் மூகூர்த்தமுங்கொண்டு மனைநடுவில்
கெல்லிப்பார்க்கும் இலக்கணம்

17. நல்லதோர் நாளும் பார்க்க முகூர்த்தமும் பொருந்தக் கொண்டு
கெல்லியே பார்க்கும் போது கரியெழில் நோய தாகும்
புல்லிய உமியே காணில் பொருள்மிகக் கேடு சொல்லும்
வில்லிய விறகு காணில் இவன்குலங் கேட தாமே.

இ-ள்:- நல்லநாளும் பட்சமும் பொருந்த முகூர்த்தங் கொண்டு மனைநடுவில் கெல்லிப் பார்க்கும்போது கரி யெழும்பில் நோயாகும்; உமி காணில் பொருட்கேடு வரும்; விறகு காணில் மனைக்குரியவன் குலம் நசித்துப்போம் எ-று.

18. திண்திறல் எறும்பும் தேளுஞ் சிதலொடு கட்டை பொல்லா
அண்டமும் உகிருங் கேசம் வந்திடில் முற்றும் பொல்லா
வெண்தலை எலும்பு காணில் வெறுமையுங் கேடும் என்று
தண்தமிழ் நூல்கள் வல்லோர் சாற்றினார் தன்மை யாலே.

இ-ள்:- எறும்பு, தேள், கறையான், கட்டை, முட்டை, நகம், மயிர், வெண்டலை, எலும்பு இவைகளில் ஒன்று காணிலும் பொல்லாங்கு நேரிடும் எ-று.

## மேற்கோள்

19. மண்டுகம் அரணை பல்லி வனம்புகு சிலந்தி வட்ட
நண்டுஇவை தோன்று மாகில் நன்மனைக்கு அழகது ஆகும்
கொண்டதில் உடும்பு பாம்பு குருகுதேள் ஆமை பூரான்
வண்டுஇவை தோன்று மாகில் அனற்பட்டு அழிந்து போமே.

இ-ள்:- தவளை, அரணை, பல்லி, சிலந்தி, நண்டு, இவை தோன்றில் உத்தமம். உடும்பு, பாம்பு, தேன்கூடு, தேள், ஆமை, பூரான் இவைகள் தோன்றில் அந்தமனை அக்கினியால் அழிந்துபோம் எ-று.

20. ஈண்டிய தனத்தைக் காணில் இன்பமே வருவ தாகும்
காண்தகு தனங்கள் சேரும் கல்லுறு தவளை காணில்
பாண்டியம் பசுவின் கொம்பு பலதானி யங்கள் செங்கல்
வேண்டிய லோகங் காணில் மிகுந்திடுஞ் செல்வந் தானே.

இ-ள்:- தனப்புதையல் காணில் இன்பம் உண்டாம்; தவளை காணில் உடைமை யுண்டாம்; பசுவின் கொம்பு, பல தானியங்கள் செங்கல், பஞ்சலோகம் இவையுள் ஒன்று காணில் மிகுந்த செல்வ முண்டாம் எ.று.

21. பொன்னுடன் வெள்ளி செம்பு பொருந்திடின் நன்மை யாகும்
பின்னுமோர் இரும்போடு ஈயம் பித்தளை மத்தி மந்தான்
கன்னல்சேர் மொழி யினாளே கருங்கல்லோடு எலும்பு காணின்
மன்னிய மனையாள் சாவள் மாளுவன் கணவன் தானே.

இ-ள்:- பொன், வெள்ளி, செம்பு இவைகளில் ஒன்று காணில் உத்தமம்; இரும்பு, ஈயம், பித்தளை இவைகளில் ஒன்று காணில் மத்திமம்; கருங்கல், எலும்பு இவை காணில் அம்மனைக்குரியவன் மனைவி இறப்பதும் அன்றி அவனும் வியாதியால் மெலிந்து இறப்பான் எ-று.

மண்ணில் எலும்பு இருக்கில் குண லட்சணம்.

வீடுகட்டும்போது பூமியைச் சோதனை செய்யாமல் வீடு கட்டின பலன் யாதெனில்:-

பசு இருந்து பால் இல்லாமல் இருந்தால் குழந்தைகள் எலும்பு கீழண்டையில் இருக்கும்.

பசுக்களிருந்தும் பால் கறவாது துரைத்தனத்தார் கோபம் உண்டாய் இருந்தால் குதிரை எலும்பு அக்கினி மூலையி லிருக்கும். ஆகிலும் எந்நாளும் யோகம் உண்டாம்.

யானை எலும்பு தென்னண்டையில் இருந்தால் எந்நாளும் ரோனகாரனாய் இருந்து துக்கப்படுவான்.

பன்றி எலும்பு நிருதி மூலையில் இருந்தால் என்றைக்கும் அபம் மிகுத்துத் தோஷம் வந்தடையும்.

எருதுஎலும்பு மேற்கே இருந்தால் என்றைக்கும் ஆருடம் சொல்லுவார்; பின்னும் போக்கு வந்தது சொல்லுவார்.

கழுதை எலும்பு இருந்தால் என்றைக்கும் அர்த்த நாசமாய் இருக்கும்.

ஆட்டு எலும்பு வடக்கே இருந்தால் அண்டை அயலார் என் றைக்கும் சண்டையாய் இருப்பர்.

ஈசானியத்தில் நாய் எலும்பு இருந்தால் வீட்டில் எந்நாளும் கலகமாய் இருக்கும்.

நடுவீட்டில் தலைமண்டைஓடு இருந்தால் அவ்வீட்டு மனையை ஆறு சாண்அளவு மண் எடுத்துச் சோதனை செய்து வீடு கட்டினால் சுகம் உண்டாகும்.

கோயில்கள் கட்டவேண்டுமானால்

அந்தபூமி எவ்வளவோ அவ்வளவு விஸ்தாரமும் ஏழு சாண் ஆழம் மண் எடுத்துப்பார்த்துக் கட்டவேண்டும்.

சூத்திரன் மூன்று சாண் மண்ணெடுத்துப் பார்த்துக் கட்ட வேண்டும்.

# 2. மண் சோதனையும் பிற நிமித்தங்களும்

வீடுகட்டும் நிலத்தின் மண்ணைச் சோதித்து அவற்றிற்குரிய பலனை அறியவும், பிற சோதனைகளைச் செய்து வீடுகட்டும் நிலத்தைத் தேர்ந்தெடுக்கவும் உதவும் செய்திகளைக் கூறுவது இப் பகுதி.

**வீடுகட்டும் மனையின் மண்**

1. வெள்ளைநிறம், இனிப்புச்சுவை, தாமரைப்பூவின் மணம் ஆகிய தன்மைகள் உள்ள மனைகளில் அந்தணர் வீடுகட்டினால் எந்த நாளும் செல்வம் நிறைந்து எல்லா நலமும் பெற்று மங்களகர மாக வாழ்வார்கள்.

2. நல்ல சிவப்புநிறம், துவர்ப்புச்சுவை, குதிரை மணம் ஆகிய தன்மைகள் நிறைந்த பூமியில் அரசர்கள் வீடுகட்டினால் குபேர வாழ்வு, என்றும் நிலைத்திருக்கும். எவ்விதத் துன்பமும் நெருங் காது.

3. கருத்தநிறம், கசப்பு, காரம் ஆகிய சுவை, தானியங் களின் மணம் ஆகிய தன்மைகளோடு விளங்கும் மனைகளில் சூத்திரர் வீடுகட்ட மிகவும் உத்தமம் ஆம்.

4. பச்சை நிறம், புளிப்புச் சுவை, உவர்ப்புச் சுவை உடைய நிலங்களில் சங்கம சாதியினர் வீடுகட்ட மிக உயர்வு அடை வார்கள்,

5. என்றும் நீங்காத இனிமையும், நல்ல மணமும் உடைய எந்த பூமியிலும் எந்த சாதியினரும் வீடு கட்டலாம். எவ்விதக் குறையும் இல்லை.

6. இவை தவிர, தயிர், நெய், தேன், இரத்தம், மயிர் சிகிடு, மீன், பட்சி, மோர் ஆகியவற்றின் மணமுள்ள நிலத்தில் மனை எடுத்தால் அம்மனை பாழ் அடையும். இந்த நிலத்தில் பயிர் செய்தாலும் நன்றாக விளையாது.

## நிலத்தின் உயர்வு தாழ்வு

நிலத்தின் கிழக்குப் பக்கமும் வடக்குப் பக்கமும் தாழ்ந்தும் மேற்குப் பக்கமும் தெற்குப் பக்கமும் உயர்ந்தும் உள்ள பூமியானது நல்ல சுகத்தைக் கொடுக்கும்.

## மனையின் திசை தேர்ந்தெடுத்தல்

அந்தணருக்கு : தெற்குப் புறத்தே வடக்கு நோக்கிய மனையாக இருத்தல் வேண்டும்.

அரசருக்கு : மேற்குத்திசையில் கிழக்கு நோக்கிய மனையாக இருத்தல் வேண்டும்.

வைசியருக்கு : வடதிசையில் அமைந்து தெற்கு நோக்கிய மனையாக இருத்தல் நல்லது.

சூத்திரருக்கு : கீழ்த்திசையில் அமைந்து மேற்கு நோக்கிய வாயிலை உடையதாக இருப்பது நன்மைதரும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மனைகளில் மனைக்கு உரியவன் தன்னைக் காட்டிலும் மூத்தவர்கள், குருக்கள், தாய் தந்தையர், தன் சுற்றத்தினருள் மூத்தவர்கள் ஆகியோர் தன் மனைக்கு மேற்கிலும், தெற்கிலும் இருக்குமாறு செய்து அவர்கள் மனைக்குக் கிழக்கிலும், வடக்கிலும் தன் மனையை அமைத்துக் கொள்ளுவது உயர்வை அளிக்கும்.

## புற்று நிமித்தம்

1. மனையின் கிழக்குப் பக்கத்தினை 'இந்திர திசை' என்பர். அத்திசையில் புற்று தோன்றுமானால் செல்வம் பெருகும்.

2. தென் கிழக்குப் பக்கத்தினை 'அக்கினித் திசை' என்பர். அவ் அக்கினித் திசையில் புற்று தோன்றுமானால் அம்மனையில் வீடுகட்ட வீடு இடிந்து பாழாகும்.

3. தெற்குப் பக்கத்தினை 'இயமன் திசை' என்பர். அத் திசையில் புற்று தோன்றுமே யாகில் அவ்வீட்டில் உள்ளாருக்குத் துன்பம் தொடர்ந்து வரும்.

4. தென் மேற்குத் திசையினை'நிருதித் திசை'எனக் கூறுவர். அந்நிருதித் திசையில் புற்று தோன்றக் காண்போமே யானால் எல்லாத் திசையிலும் புகழ் பெற்று உயர்ந்த வாழ்வினைப் பெற்று வாழ்வர்.

5. மனையின் மேற்குப் பக்கத்தினை 'வருண திசை' என்பர். வருணதிசையில் புற்று தோன்றுமானால் சிறந்த புத்திரப்பேறு பெற்று வாழ்வார்கள்.

6. வட மேற்குத் திசையினை 'வாய்வுத் திசை' என்க் கூறுவர். அத்திசையில் புற்று தோன்றினால் மரணம் உண்டாகும்.

7. வடக்குத்திசை 'குபேர திசை' என்று கூறப்படும். அத் திசையில் புற்று தோன்றினால் எல்லா வகையான சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று வாழ்வார்கள்.

8. வடகிழக்குத் திசையினை'ஈசானியத் திசை'என்பர். அத் திசையில் புற்று தோன்றுமானால் எக்காலமும் நோய் மலிந்து அக் குடியும் நாளடைவில் அழிந்து போகும்.

9. மனையின் இந்த எட்டுப் பக்கங்களுக்கும் இடையில் உள்ள நடு மனைப் பகுதி 'பிரம்மஸ்தானம்' என்று பெயர் பெறும். இந்த நடுமனைப் பகுதியில் புற்று தோன்றுமானால் சாவு நிகழும்.

புற்று தோன்றுவதால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பார்க்க மேற்சொன்ன ஒன்பதினையும் திசை என்று மட்டும் கொள் ளாது ஒன்பது பாகம் எனக் கொண்டு பார்ப்பதே பொருத்த முடையதாகும்.

இந்திர திசை,அக்கினித் திசை என்று கொண்டால் மனையின் அவ்வத்திசை ஓரப்பகுதிகளே கொள்ளப்பட்டுவிடும். அவ்வத் திசையின் உட்பகுதிகளில் புற்று தோன்றினால் அதன் பலன் யாது என்பதை அறிவதில் ஐயம் தோன்றும். எனவே அவற்றை இந்திர

பாகம், அக்கினி பாகம் என்பன போன்ற ஒன்பது பாகங்களாகக் கொள்ள வேண்டும்.

இப்பாகங்களை அறிய மனையின் நீள அகலங்களை மும் மூன்று சமபாகங்களாகப் பிரிக்க ஒன்பது சமபாகங்கள் கிடைக்கும். பிறகு, மேற்கூறிய முறைப்படி ஒவ்வொரு, பாகத்தையும் இந்திர பாகம், அக்கினிபாகம், இயமன் பாகம், நிருதிபாகம் என இவ்வாறே ஒன்பது பாகமும் கொண்டு பலன் அறிதல் வேண்டும்.

வ. மே. வ வ. கி.

| | | | | |
|---|---|---|---|---|
| | வாய்வு பாகம் | குபேர பாகம் | ஈசானிய பாகம் | |
| மே | வருண பாகம் | பிரம்ம ஸ்தானம் | இந்திர பாகம் | கி. |
| | நிருதி பாகம் | இயமன் பாகம் | அக்கினி பாகம் | |

தெ. மே. தெ. தெ. கி.

## மனை கோலுதல்

குழியில் நீர்விட்டு அறியும் நிமித்தம்

மனையின் நடுவில் ஒரு முழ அகலம், ஒரு முழ ஆழம் உடைய சதுரமான ஒரு குழியைத் தோண்டி அக்குழியினுள் தண்ணீரை ஊற்றி அதன்மேல் மணமுள்ள மலரை இடுதல் வேண்டும். அந் நீரில் மலர் வலமாகச் சுற்றி வருமானால் அம்மனையில் வீடுகட்ட எல்லா நன்மையும் உண்டாகும். இடமாகச் சுற்றி வருமானால் துன்பம் நேருமாதலின் அப்போது வீடுகட்டத் தொடங்குதல் கூடாது என்பது நூலினுள் கூறப்படும் செய்தி.

நல்லதோர் மங்கல நாளினைத் தேர்ந்தெடுத்து அந்த நாளில் குறித்த நேரத்தில் மனைக்கு உரியவன் தன் குடும்பத்துடன் சிற்பியையும் அழைத்துச் சென்று மனைகோலுதல் என்னும் நிகழ்ச்சியாக இச்செயலைத் தொடங்குவது வழக்கும்.

மனை கோலும் நிகழ்ச்சியைத் தொடங்குங்கால் இவ்வாறு ஒரு குழியினைத் தோண்டி நீரும் மலரும் விட்டுப் பார்த்தல் நிகழும். பெரும்பாலும் இக்குழியினை மனையின் நடுவே தோண்டுவது இல்லை.

வீடு கட்டுவதற்குரிய நீள அகலங்களைக் கோடிட்டு வரைந்து கொண்டு அந்த இடத்தின் ஈசானத் திசையாகிய வடகிழக்கு மூலையில் இக்குழியினை எடுப்பது உண்டு. இக்குழியினை முழுமையாகத் தோண்டாமல் இடையில் திட்டாக ஒரு சாண் அகல மண்ணை விட்டுவிட்டுச் சுற்றிலும் ஒருசாண் அகலத்தில் குழி எடுப்பதே பெரும்பாலும் வழக்காற்றில் இருந்து வருகிறது. பிறகு உரிய முறைப்படி பூசை முதலியன செய்து முன் கூறியபடி குழியில் நீரும், மலரும் விட்டுப் பார்ப்பது உண்டு. ஆனால்,

"வாஸ்து புருஷன் விழிநோக்கில் மனைக்கு முகூர்த்தம் செய்யவேண்டில்
பார்த்து மனையை நாலேழாய்ப் பகிர்ந்து காலில் பதினேழும்
சாத்தும் தலையில் ஈரைந்தும் தள்ளி நடுவில் ஒருபாகம்
ஏத்த மாக முகூர்த்தமிட இராச சம்பத்து உண்டாமே"

என்பதனால், வாஸ்து புருஷன் வீற்றிருக்கும் நிலை அறிந்து, (மனைகோலும் மாதத்தில் வாஸ்து புருஷனின் தலை, கால் இருக்கும் திசை அறிந்து) தலை, கால் உள்ள பக்கத்தை 28 பங்காகச் செய்து தலைப்புறம் பத்துப் பாகமும் கால்புறம் பதினேழு பாகமும் தள்ளி இடை நின்ற ஒரு பாகத்தில் இக் குழியினை எடுத்து மனைகோலுதலே சிறப்புடையதாகும் என்பதை அறியவேண்டும்.

மலர் சுற்றி நிற்கும் அறிகுறி

மேலேகூறியபடி குழிதோண்டி பூசை முதலியன செய்து மூவர் அல்லது ஐவர் சேர்ந்து வடக்குநோக்கி நின்று குழியின் கிழக்குப் பக்கத்தில் நீரை ஊற்றி மலரை விடுவது வழக்கம். அவ்வாறுவிடப் பட்ட மலர்:-

1. கிழக்கிலிருந்து தெற்குநோக்கி நகர்ந்து பின் மேற்கு,வடக்காகச் சுற்றி வருமானால் அது வலமாகச் சுற்றுதல் ஆகும். இவ்வாறு வலம் சுற்றினால் அம்மனையில் வீடுகட்ட உயர்ந்த வாழ்வும், எல்லாச் செல்வமும் புகழும் பெற்றுச் சுகவாழ்வு பெறுவார்கள்.

2. அவ்வாறு இன்றி, கிழக்கில் விடப்பட்ட மலர் வடக்காக நகர்ந்து பின் மேற்கு, தெற்காகச் சுற்றி வருமானால் அது இடமாகச் சுற்றுதல் ஆகும். இவ்வாறு இடம் சுற்றினால் அம்மனையில் வீடுகட்ட மிகுந்த துன்பமும், பலவகை ஆபத்துகளும் நிகழும் ஆதலின் அப்போது வீடுகட்டக் கூடாது.

3. அம்மலரானது வலமாகச் சுற்றிவந்து இறுதியில் ஈசானியத் திசையாகிய வடகிழக்குத் திசையில் நின்றால் வீட்டுத் தலைவன் எல்லாவகையான செல்வமும் பெற்றுத் திகழ்வான். தீர்க்காயுளோடு விளங்குவான். புத்திரப் பேறு பெறுவான். பெரியோருக்கு அன்னமளிக்கும் பெருமை பெற்று வாழ்வான்.

4. இந்திரன் திசையாகிய கிழக்குத் திசையில் வந்து அம்மலர் நிற்குமானால் எல்லாவகையான செல்வமும் தீர்க்காயுளும் புத்திரப் பேறும் பெறுவதோடு பலவகைக் கலைகளிலும் வல்லவனாக விளங்குவான். கால்நடைச் செல்வங்களும் வந்துசேரும்.

5. அம்மலரானது அக்கினித்திசை என்று சொல்லப்படும் தென்கிழக்குத் திசையில் வந்து நிற்குமானால் அவ்வீட்டில் இல்லத்தலைவனின் மனைவி மலடி ஆவாள். பாம்பினால் அச்சம் உண்டாகும். நெருப்பினாலும் திருடர்களாலும் பொருள் அழியும்.

6. இமயன் மூலை என்று சொல்லப்படும் தென்திசையில் அம்மலர் வந்து நின்றால் வீட்டுக்கு உரியவன் உள்ளத்தில் என்றும் ஆழ்ந்த சிந்தனையும் வருத்தமும் தோன்றும். பலரால் கலகம் உண்டாகும். தீமையும், பிணியும், அச்சமும் நாளுக்குநாள் அதிகமாகும்.

7. கன்னிமூலை, நிருதித் திசை என்று சொல்லப்படும். தென்மேற்குத் திசையில் அம்மலர் வந்து நிற்குமானால் நவதானியங்கள் நிறையும்; பொன்னும் பொருளும் நிறைந்து ஒளிவீசும்; அனைத்துச் செல்வமும் கடல் போலப் பெருகி வந்தடையும்.

8. வருணதிசையாகிய மேற்குத் திசையில் மலர்வந்து நின்றுவிடுமானால் அவ்வீட்டில் பெருஞ்செல்வம் உண்டாகும். தீவினைகள் அழியும். எண்ணிய காரியம் வெற்றிபெறும். வீட்டுக்கு உரியவன் கருணை உள்ளம் கொண்டவனாக இருப்பான்.

9. வாயுமூலை என்று சொல்லப்படும் வடமேற்குத் திசையில் அம்மலரானது வந்து நிற்குமானால் காசம் முதலிய நோயினால் மரணம் உண்டாகும். கள்ளரால் பொருள்கள் அழியும். அம்மனையே பேய்வாழும் சுடுகாடாய் மாறிப்போகும்.

10. குபேரதிசை என்னப்படும் வடதிசையில் வந்து அம்மலர் நிற்குமானால் செல்வம் பெருகும். ஆயுள் விருத்தியடையும்.

புத்திரப் பேறு உண்டாகும். அருள் உள்ளம் தோன்றும். அதனால் தலைவன் பலருக்கும் பொருள் உதவிசெய்து புண்ணியமும் புகழும் பெறுவான்.

குழியில் நீர்விட்டு மறுநாள் பார்க்கும் குறி

வெட்டப்பட்ட குழி நிறையுமாறு மாலைநேரத்தில் நீர் ஊற்றி வைக்கவேண்டும். மறுநாள் சூரியன் தோன்றும் நேரத்தில் வந்து பார்க்க:

மூன்றுபிடி நீரேனும் அக்குழியில் தேங்கிநிற்குமானால் மிகவும் நன்மை தரும் மனையாகும் எனக்கொள்ளுதல் வேண்டும். நீர் இன்றிச் சேறாய் இருப்பினும் நன்மைதரும்.

நீர் முழுமையும் வற்றிப் போனால் தாழ்வு நிலை அடையும்.

நீர் வற்றிப் பூமி வெடித்திருக்குமானால் நோயும், சிறைத்தண் டனையும் வந்துசேரும் என்று தெளிதல்வேண்டும்.

எடுத்தமண்ணை அடைத்துப் பார்க்கும் குறி

மனைகோலும் முகூர்த்தமாகத் தோண்டிய குழியிலிருந்து எடுத்த மண்ணை மீண்டும் அக்குழியில் இட்டு நிரப்பிப் பார்க்க வேண்டும்.

குழி நிறைந்து மண் மிகுதி இருந்தால் அவ்வீட்டில் வருவாய் மிகுந்து இலாபம் பெருகும் எனக் கொள்ளவேண்டும்.

மண் குழிக்குச் சரியாக நிரம்புமானால் அவ்வீட்டில் வரவும் செலவும் சமமாகி உயர்வு தாழ்வு இன்றி இல்லறம் நடைபெறும் என்பது அறியலாம்.

குழிக்கு மண் போதாமல் மண் குறைந்து குழி நிரம்பாமல் காணப்படுமே யானால் வருவாய் குறைந்து செலவு மிகுதியாகிக் குடும்பம் ஏழ்மை நிலை அடையும் என்று தெளியலாம்.

## தேங்காய்க் குறி

மனை முகூர்த்தம் செய்யும்போது தேங்காய் உடைத்தால் அது உடையும் தன்மைகளுக்கு ஏற்றபலன்களாவன:

1. குடுமி உள்ள முடிப்பக்கம் பெரியதாகவும், அடிப்பக்கம் சிறியதாகவும் உடைந்தால் அவ்வீட்டில் இலக்குமி அருள் உண் டாகும்.

2. முடிப்பக்கம் மூன்று மடங்கும், அடிப்பக்கம் ஒரு மடங்குமாக உடைந்தால் அந்த வீட்டில் மிக்கமகிழ்ச்சி உண்டாகும்.

3. முடிப்பக்கம் ஐந்தில் மூன்றுபாகமும், அடிப்பக்கம் ஐந்தில் இரண்டு பாகமுமாக உடையினும் அக்குடும்பத்தில் செல்வம் உண்டாகும்.

4. நரம்பு பிடித்திருந்தால் அக்குடும்பத்திலுள்ளார் நீடூழி வாழ்வார்கள்.

5. கடுகளவு துண்டு தேங்காய் முடியினுள் விழுந்தால் அவ் வீட்டில் இரத்தினம் சேரும்.

6. நடுவே நெடுக்காகப் பிளந்து போகுமானால் மிகுந்த துன்பத்தைத் தரும்.

7. சரிபாதியாக நேராய் உடைந்தால் நன்மையே தரும்.

8. நான்கு அல்லது ஆறுசுக்கல்களாக உடைந்தாலும் மிகுந்த துன்பத்தைத் தரும்.

9. தேங்காய்க்கண் உள்ள பகுதி உடல்மேல் வந்து விழுந்தால் வீட்டுக்கு உரியவன் மரணமாவான்.

10. ஓடு தனியாகப் பிரிந்து உடைந்தால் வறுமை உண்டாகும்.

11. ஓடு உடைந்து மேலே தெறித்தால் நோயுண்டாகும்.

12. ஓடு உடைந்து பூமியில் விழுந்தால் வீட்டுக்குரியவன் வீடு வாசலை விற்று வறுமை அடைவான்.

*

## பூமியைச் சோதித்து வீடு கட்டும் நியமம்

22. கூறும் பூமி குறிக்கும் வெளுப்புடன்
வீறும் தித்திப்பு விரும்பும் ருசியுடன்
பேரும் தாமரை பெருத்தபூ வாசனை
ஏறும் பூமி இருக்க மிகநன்றே.

23. நன்றாம் ஆரியர் நவில்மாளி கட்டில்
குன்றாது எந்நாளும் கூறக் குடும்பமும்
நன்றாய் ஓங்கும் நலம்பெறு நற்சுபம்
வன்தாள் மறையாளர் வகுக்கும் வாசமதே.

24. ஓதும் பூமி உயர்ந்த சிவப்புமாய்
காதல் ஆம்துவர் கருதிய பூமியும்
ஏத லாம்பரி எழில்மணம் போலவும்
பூத லத்தில் புகழ்மாளி கட்டவே.

25. கட்டி னால்மாளி காசினி ராசர்கள்
பட்டி னம்வாழ் பகருங் குபேரன்போல்
கட்டம் நீங்கிக் காட்சி மிகப்பெற்று
அட்டி இல்லா அருமையாய் வாழ்வரே.

வெளுத்தபூமி, தித்திப்பானபூமி, தாமரைப்பூ வாசனையுள்ள பூமி இவைகளில் பிராமணாள் வீடுகட்ட உத்தமம். சிவந்தபூமி, துவர்ப்புள்ளபூமி, குதிரை வாசனையுள்ள பூமி இவைகளில் அரசர்கள் வீடுகட்டினால் உத்தமம்.

கருத்தபூமி, கசப்பு, காரம் உள்ளபூமி, தானியவாசனை உள்ள பூமி இவைகளில் சூத்திரர் வீடுகட்ட உத்தமம்.

பச்சைபூமி, புளி, உப்பு பொருந்திய பூமி இவைகளில் சங்கம சாதிகள் வீடுகட்ட உத்தமம்.

நீங்காத மதுரமும் பரிமளமும் பொருந்திய பூமியில் சகலசாதி களும் வீடுகட்ட உத்தமம்.

## மனையில் மண்ணின் சுவை லட்சணம்

26. தயிரொடு நெய்தேன் எண்ணெய் தாக்கிய உதிரத் தோடு
மயிர்பல சிறுமீன் பட்சி மற்றும்மோர் பொல்லா நாற்றம்
பயிரொடு பலமும் காணார் பாழ்படும் மனைஎ டுக்கில்
வயிரவேல் விழியி னாளே மண்களின் குணங்கள் தானே.

இ-ள்:- மண்மணமாவது:- தயிர், நெய், தேன், இரத்தம், மயிர்ச்சிக்கு, மீன்கவுச்சி,பட்சி, மோர் இவ்வித மணமுள்ள பூமியில் பயிரிட்டாலும் பலியாது; மனை எடுக்கில் பாழாம் எ-று.

## மண் இலட்சணம்

27. இனிதா கியமண் ணவைமா மறையோர்
மனதா கியகார்ப் பதுமன் னவர்தாம்
புளிதா கியதாம் புளிதான் வைசியர்
சொனதா கியசூத் திரர்கைத் தமண்ணே.

இ-ள்: இனிப்பாகிய மண் மறையோருக்காம். கார்ப்பாகிய மண் அரசருக்காம். புளிப்பாகிய மண் வைசியருக்காம். கைப்பாகிய மண் சூத்திரருக்காம் எ-று.

## மனை உயர்வு தாழ்வு இலட்சணம்

28. அருக்கனுஞ் சோமன் தானும் அழகுடன் மிகவே தாழ்ந்து
திருக்கிளர் மேற்குந் தெற்குந் தெரிந்துயர் பூமி மேலாம்
வருத்தமில் வாழ்வர் நாளும் மனையினை எடுத்துக் கொள்க
கருத்துயர் புலவர் யாருங் காரணம் விளம்ப லுற்றார்.

இ-ள்:- சூரியனென்பது கிழக்கு; சந்திரனென்பது வடக்கு; இவ்விரண்டுதிக்கும் தாழ்ந்து தெற்கும் மேற்கும் உயர்ந்திருக்கும் பூமி சுகத்தைக் கொடுக்கும் எ-று.

## நான்கு வருணத்தாருக்கும் கிரகதிசை

29. அந்தணர் தென்திசை அரசர் மேற்றிசை
வந்திடு வணிகர்நல் வடக்கு வான்றிசை
தொந்தமில் சூத்திரர் தோன்றுங் கீழ்த்திசை
பிந்திய நடுவது பிரமன் தானமே.

இ-ள்:- பிராமணருக்குத் தெற்கு;வணிகருக்குக் கிழக்குக் குடியிருப் பாகில் இலட்சுமிகரம் பொருந்தி வாழ்வார்கள். நடு பிரமஸ்தான மாகக் கொள்க எ-று.

நால்வகை வருணத்தார்க்கும் வாசஞ்செய்ய சார்பு மனை இலட்சணம்

30. திடமா கியதென் மனைமா மறையோர்
குடசார் பெனுமேன் மனைகோ வரசர்
வடசார் பெனுமா மனைவை சியராம்
துடரா கியகீழ் மனைசூத் திரரே.

இ-ள்:- தென்சார்பாய்- வடக்குப் பார்த்த மனை மறையோருக் காம்; மேற்சார்பாய்- கிழக்குப் பார்த்த வாசல்மனை அரசர் களுக்காம்; வடசார்பாய்- தெற்குப் பார்த்த வாசல்மனை வைசி யருக்காம்; கீழ்ச்சார்பாய்- மேற்குப் பார்த்த வாசல்மனை சூத்திர ருக்காம் எ-று.

தானும் தன்கிளை முதலானவர்களும் வாசஞ்செய்யும்
(மனை) இலட்சணம்

31. நன்குலம் அவர்க்கும் நவிநாய னவர்க்கும்
தன்கிளையின் மூத்தவர் தனக்குமனை யில்தான்
தென்திசையின் மேற்றிசை இருப்புறின் நசிக்கும்
பொன்குலவு மேலையவை பூதல மவர்க்கே.

இ-ள்:- தன்னில் பெரியவர்களுக்கும் குருக்களுக்கும் தாய்தந் தையர்களுக்கும் தன்கிளைஞருக்கும் மூத்தவருக்கும் தெற்கு, மேற்கு தான் இருக்கலாகாது. அவர்களைத் தெற்கு, மேற்கு வைக்க நன்றாம் எ-று.

கிராமக்ஷேத்திர நிர்ணய இராசகேந்திர சொரூப லட்சணம்

32. சொல்லும் கத்திரி தோன்றுகோல் போலவும்
வெல்லும் முக்கோணம் விளம்பிய போலவும்
புல்லும் நேத்திரம் புகன்றன போலவும்
கல்லு மேதலை கருதிய போலவே,

33. போல மத்தளம் புகல அடைக்காய்போல்
ஆல உள்ளும் அறிய புறம்புமாய்
கோல மான குவலயம் தன்னிலே
ஏல மாளி இசைய ஒண்ணாதிதே.

34. சேரும் உப்பு சிறக்கும் கிராமத்தில்
நேரும் மத்திபம் நெருங்கு மூலையிலும்
பாரும் பள்ளம் பகர்நிலம் ஆகிலும்
ஊறும் தண்ணீராய் ஓடும் நிலமதோ.

35. வரவு சொல்லும் வகுக்கும் பலபேர்கள்
திறமுடன் கூடாது என்ற நிலத்திலும்
உறையும் கோபுரம் உற்ற நிலத்திலும்
திரையும் அரவம் சேர்ந்த புத்தும் இதே.

36. புத்துடன் பேரும் பத்துவாய்ச் சீறிய
சத்து மேவும் சதுர்நிலம் ஆகிலும்
தொத்து மேவும் சுடலைப் பதியிலும்
கத்தும் மாடுகள் கழறும் மந்தையதே.

37. சேத மேற்குச் சிறந்த கிழக்குடன்
நீதி யாம்மனை நிறைதப்பு இருந்தாலும்
போத மேசலம் புகழ்நெருக்கு ஆகிலும்
வேதம் ஓத விளங்கிடும் நெய்யதே.

38. நெய்யு டன்தயிர் நேரும்புத் தேனுடன்
கொய்யும் எண்ணெய் குறிக்கும் உதிரமும்
பைய மச்சம் பகரும் சவமுடன்
வெய்ய பட்சி இருக்கைபொல் லாதிதே.

39. பொல்லாது இந்தப் புகலும் வழிமுறை
வல்லாண்மை கண்டு அறிந்து இவையெல்லாம்
தெல்லாம் உணர்ந்த சிற்பநூல் பண்டிதர்
கல்லாஞ் சிறந்தநூல் காட்சிஎய் தாதிதே.

கத்திரிக்கோல் போலும் மூன்று மூலைபோலும் நேத்திரம் போலும் தலைபோலும் மத்தளம் போலும் கொட்டைப்பாக்கு போலும் உள்ளும் புறம்புமாய் இருக்கப்பட்ட பூமியிலும்,உப்பு நில கிராமத்திலும் அல்லது அதற்கு மூலையிலும், பள்ளநிலத்திலும் தண்ணீர் ஓடுகிற நிலத்திலும், பலர் கூடாது என்று தடுக்கும்

நிலத்திலும் கோயில் நிலத்திலும், புற்று இட்டிருந்த நிலத்திலும், சுடுகாட்டு நிலத்திலும் ஆடுமாடு கட்டப்பட்ட நிலத்திலும்,கிழக்கு மேற்கு அகலம் குறைந்த நிலத்திலும், தண்ணீர் சமீபித்த நிலத்திலும்,தேன், நெய், தயிர், எண்ணெய், உதிரம், மீன், சவம், பட்சி இவைகளின் வாசனை பொருந்திய நிலத்திலும் வீடுகட்ட லாகாது. கட்டினால் பலவிதத் துன்பம் உண்டாகும்.

## மனையில் புற்று எழும் இலட்சணம்

40. அறையும் இந்திரன் ஆன கிழக்கினில்
நிறையும் செல்வம் நெருங்கிப் பெருகிடும்
திறையும் அக்கினி தென்கிழக் காய்விடில்
குறையு மேமனை குமுறி இடியுமே.

41. போற்றும் ஏமன் புகலுந்தெற்கு ஆயிடில்
தோற்றும் துக்கம் தொடருமே மாந்தர்க்கு
ஏற்றும் நிருதி எங்கும்தென் மேற்கிடில்
நாற்றிசை கீர்த்தி நவில்வாழ்வு உண்டாமே.

42. கொண்ட வருணன் கூறுமேற்கு ஆயிடில்
வண்தமிழ்ப் பாலர் வகுக்கும்செல் வங்களாம்
தண்டிடா வாய்வு தரும்வட மேற்காகில்
பண்டி தங்கள்பொய் யாது மரணமே.

43. பாருமே குபேரன் வடக் காய்விடில்
சீரும் செல்வமும் சிறப்பும்உண் டாகுமே
வாரும் ஈசன் வடகிழக் காய்விடில்
கோரும் வியாதி குடியும் நசியுமே.

44. பாரி யட்டமர் பகரும் நடுவினில்
சேரும் பிரமம் சிறக்க இவற்றின்முன்
கூறும் நட்டங் குறைந்திடும் போதெல்லாம்
கோரும் சிந்தை குறிக்கும்தெய் வங்களே.

45. வஞ்சி சேளும் வகுக்கும் தருமமாம்
மிஞ்சு பிரமம் மிகுத்திடும் தானத்தில்
செஞ்சொல் புற்று செழிக்கக் கிளம்பிடில்
கஞ்சன் ஆணைக் கருது மிகச்சாவே.

| | | |
|---|---|---|
| கிழக்கு | — | இந்திரன் |
| தென்கிழக்கு | — | அக்கினி |
| தெற்கு | — | இயமன் |
| தென்மேற்கு | — | நிருதி |
| மேற்கு | — | வருணன் |
| வடமேற்கு | — | வாய்வு |
| வடக்கு | — | குபேரன் |
| வடகிழக்கு | — | ஈசானியன் |

இவர்களுக்கு நடுவில் பிரமம்.

இவற்றின் நன்மை சொல்லும் போது:-

தெய்வச்சிந்தை தரும் பிரமதானத்தில் புற்று எடுக்குமாகில் சாவு

| | | |
|---|---|---|
| கிழக்கு | — | செல்வம் |
| தென்கிழக்கு | — | மனை இடியும் |
| தெற்கு | — | துக்கம் |
| தென்மேற்கு | — | வாழ்வு உண்டாம் |
| மேற்கு | — | புத்திரர் உண்டாம் |
| வடமேற்கு | — | மரணம் |
| வடக்கு | — | நன்மை |
| வடகிழக்கு | — | வியாதி உண்டாம். |

## புற்று இலட்சணம்

### வேறு

46. இந்திரன் செல்வம் அக்கினி மனையும்
இடியுமே யமன்திசை நிற்க
அந்தமா நிருதி நன்மையாம் வருணன்
அருளிய புத்திர லாபம்
உந்திய வாயு துறக்கமாம் குபேரன்
ஓங்கிய தன்மை ஈசான்யன்
பிந்திய பிணியாம் பிரமதா னத்தில்
பெருகிய சாவுஎனப் புற்றே.

இ-ள் : இந்திரபாகத்தில் புற்று உண்டாகில் செல்வமானது விருத்தியாகும்.

அக்கினி பாகத்தில் உண்டாகில் மனையானது இடிந்து பாழாகும்.

யமன் திசை துக்கம் உண்டாகும்.
நிருதி பாகத்தில் நன்மை உண்டாகும்.
ஈசானிய பாகத்தில் பிணி உண்டாகும்.
வருண பாகத்தில் புத்திர பாக்கியம் உண்டாகும்.
வாயுபாகத்தில் அதிக துக்கம் உண்டாகும்.
குபேர பாகத்தில் அதிக நன்மை உண்டாகும்.
பிரமதானத்தில் உண்டாகில் மரணமாம் எ-று.

—:o:—

## முகூர்த்தம் செய்யும் விபரம்

47. தாழவே முழங்கால் ஆழம்
    தனி உள்ள குழியை வெட்டி
நீர்குடம் நீரை விட்டு
    நின்றுபத் திரியைப் போட்டு
வாழ்வலம் புரியது ஆகில்
    வாழ்வுமே மிகஉண் டாகும்
நீள்இடம் புரியது ஆகில்
    நிதியுடன் தாழ்வும் உண்டாம்
உள்விழுந்து உறையும் ஆகில்
    உடன்பகை மிகஉண் டாமே.

48. கொட்டுமுறிதல் முனை முறிதல்
    கோத் தக யறு அறுதல்
நட்ட மாய்ப் பிடுங்கி
    நடுவே முறித்து இசைதல்
விட்டவாசல் மாற்றுதல் மேல்படைத்த
    படிவைக்குதல் இவை செய்தால்
சட்டநாள் வாழ்வு இழந்து
    சாவது திண்ணம் தானே.

வாஸ்து விழி நோக்கில் இருபத்தெட்டுப்பங்கில் முகூர்த்தம்

49. வாஸ்து புருஷன் விழிநோக்கில்
    மனைக்கு முகூர்த்தம் செய்ய வேண்டில்
பார்த்து மனையை நாலேழாய்ப்
    பகிர்ந்து காலில் பதினேழும்
சாத்தும் தலையில் ஈரைந்தும்
    தள்ளி நடுவில் ஒருபாகம்
ஏத்த மாக முகூர்த்தமிட
    இராச சம்பத்து உண்டாமே.

இ-ள்:- வாஸ்துவின் விழிநோக்கு அறிந்து முகூர்த்தஞ் செய்வது ஆகையால் அந்த மனையை இருபத்து எட்டுப் பாகஞ்செய்து காலில் பதினேழு பாகம் தள்ளி தலையில் பத்துப்பாகம் தள்ளி நடுவில் ஒரு பாகத்தில் முகூர்த்தஞ்செய்தால் இராச சம்பத்து உண்டாம் எ-று.

50. துலங்கிய குழியைக் கெல்லி சுத்தநீர் விட்ட போது
வலம்புரி வருமே யாகில் வாழ்வொடு சம்பத்து உண்டாம்
இலங்கிஅது இடமே யாகில் இயற்றிடில் மனையை அக்கால்
குலமுதல் நசித்துத்தானும் கொடியநோய்க்கு இரையாவானே.

குழியில் நீரும் பூவும் விட்டுப் பலாபலன் அறியும் விதி

51. வாழ்மனை நடுவே நான்கு வடிவுடன் ஒருமு ழத்தில்
ஆழமும் அகலங் கெல்லி அதனுள்நீர் பூவும்விட்டால்
வாழ்கதி ரோனை நோக்கி வலம்புரிந்து ஓடில் வாழ்வாம்
சூழ்புவி இடமாய்ச் சுற்றில் தொல்லைநோய் ஆகும் அன்றே.

இ-ள்:- மனைக்கு நடுவில் சதுரமாக ஒருமுழம் அகலமும் ஒருமுழம் ஆழமுமாகக் கெல்லி அக்குழியில் தண்ணீரும் பூவும் விட்டால் பூவும் நீரும் வலமாகச் சுற்றிவரில் நன்மை; இடமாகச் சுற்றி வரில்துன்மை எ-று.

மேற்சொல்லிய குழியில் சாயரட்சை நிறைய நீர்விட்டுப் பார்த்தல்

52. நிறையநீர் இட்டுவைத்து நீள்கதிர் எழுந்த போது
முறைமையாய் வந்து பார்த்தால் முப்பிடி நீரே நன்றாம்
தரையினில் வற்றி யக்கால் தாழ்வுற; பிளக்கும் ஆகில்
சிறையொடு நோயாம் என்று தெரிந்தவர் உரைத்த வாறே.

இ-ள்:- மேற்படி குழியில் அந்திப்பொழுதில் நிறையநீர் விட்டு வைத்து சூரியஉதயத்தில் வந்துபார்த்தால் மூன்றுபிடிநீர் இருக்கில் மிகவும் நன்றாம்; நீர் எல்லாம் வற்றிப்போனால் பொல்லாங்குண் டாம். நீர் வற்றிப் பூமி பிளந்திருக்கில் சிறையொடு நோய் முதலா கிய துன்பம் உண்டாம் எ-று

## புட்பங்கள் விடுவதற்கு இலட்சணக் குறி

53. தாழ்விலா மனையின் மீது சதுரமாய் ஒருமு ழத்தில்
ஆழமும் அகலம் கெல்லி அதனுள்நீர் பூவை விட்டால்
வாழ்கதி ரவனை நோக்கி வலம்புரிந்து ஓடில் வாழ்வார்
சூழ்கதிர் இடமாய்ச் சுற்றில் சொல்மனை எடுக்கத் தீதே.

இ-ள்:- மனைக்கு நடுவில் நாற்சதுரமாய் ஒருமுழ அளவு ஆழமும் அகலமும் கெல்லி, அதில் தண்ணீர்விட்டு, ஒரு மலரைக் கையிலெடுத்து பரமசிவத்தைத் தியானித்து அதில் புரோட்சித்தால் அது கதிரோனை நோக்கி வலமாகச் சுற்றிவரில் அதிக வாழ்வும் சம்பத்தும் கீர்த்தியும் இராஜ பிரதிஷ்டையும் வாகனாதிகளும் அதிகரித்துச் சுபேட்சை உண்டாகும். அம்மலரானது இடப்புறம் சுற்றில் அம்மனை எடுக்கில் அதிக துன்பங்களை விளைவிப்பதும் அன்றி எக்காலமும் மனவியாகூலமும் வாராத ஆபத்துகளும் வரும் என்று பெரியோர் சொல்லுவர் எ-று.

## அஷ்டதிக்கு இலட்சணம்

54. ஈசானிய மூலை தன்னில் இன்பமாய் இனிது கொண்டு
வாசமாம் அதனில் நின்றால் வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனம் பெரியோர்க்கு எல்லாம் பொருந்திய மனிதன் ஆவான்
வாசமின் குழலி னாளே மயனுரை நூல்கண் டாயே.

இ-ள்:- ஈசானிய பக்கம் என்றும் சொல்லப்படுகின்ற பரமசிவத்தினது பக்கத்தில் பரிமளம் பொருந்திய மலரானது வந்துநின்றால் கனக ஐஸ் வரியமும் தீர்க்காயுசும் புத்திரசம்பத்தும் வாழ்வும் மேன்மேலும் விருத்தியாய்ப்பெருகி நீடூழிகாலம் நிலைநிற்கும். இது அன்றி பெரியோர்களுக்கும் தபோதனர்களுக்கும் அன்னபானாதி கொடுக்க வல்லவனாய் இருப்பான் எ-று.

55. இந்திரன் மூலை தன்னில் இயல்புடன் கிழக்கில் நின்றால்
செந்திரு வாசம் ஆவாள் செம்பொன்னும் சேரும் இன்ப
மைந்தரைப் பெற்று வாழ்வார் வழற்கண்டு காலி சேரும்
முந்தவே மயனார் சொன்ன முறைமைநூல் இதுகண் டாயே.

இ-ள்: இந்திரன் திக்கில் பரிமளம் பொருந்திய மலரானது நிற்குமாகில் அதிக சௌந்தரிய இலட்சுமி விலாசமும் தனதானிய சம்பத்தும்சந்தான பாக்கியமும்தீர்க்காயுசும்,ஆயுராரோக்கியமும் மன்மத கிரீடையும் அறுபத்து நான்கு கலைஞானமும் பதினெண் புராணங்களும் நான்கு வேதமும் ஆறு சாஸ்திரமு ம் பொருந்துவதும் அன்றி பசுக்கள் முதலிய கறவைகளும் சேரும் எ-று.

56. அக்கினி மீதில் நின்றால் ஆயிழை மலடி ஆவள்
செக்கர்வாள் அரவம் தீண்டும் தீப்படும் மனைஎடுக்கில்
தொக்கது மிகவும் உண்டு சோரங்கள் கலகம் உண்டாம்
இக்கரு மயனார் சொன்ன இசையுநூல் இதுகண் டாயே.

இ-ள்:- அக்கினித்திக்கில் வாசம் வீசுகின்ற புட்பமானது வந்து நிற்குமாகில் கற்பு நிலைமை பொருந்திய பெண் சாதியானவள் மலடியாவாள். இது அன்றி விஷத்தைத் தரா நின்ற பாம்பினால் பயமும் அச்சமும் உண்டாகும். அக்கினிச் சுவாலையினாலும் கள்வர்கள் பயத்தினாலும் பொருள் சற்பாத்திரருக்கு உதவாமல் யசமான் நாசமாம் எ-று.

57. அந்தகன் திக்கு மூலை அன்புடன் வந்து நிற்கில்
சிந்தனை மிகவும் உண்டாம் செருக்கதாம் கலகம் உண்டு
பிந்திய தீமை யோடு பிணியினால் அச்சம் உண்டாம்
செந்தமிழ்ப் புனைந்த பாடல் தீதிலா மயன்சொன் னாரே.

இ-ள்: இயமன் மூலை என்னும்தெற்குத் திக்கில் வாசம் வீசும் மலரானது வந்து நிற்குமாகில் மனத்தில் சிந்தனையும் வியாகூலமும் செருக்கும், பல பேரால் கலகமும் தீங்காகிய காரியமும் தீமை, பிணி, அச்சம் முதலியவைகளும் அதிகரித்து உண்டாம் எ-று.

58. கன்னி மூலையிலே நின்றால் கைப்பொருள் மிக உண்டாகும்
அன்னமும் தனமும் சேரும் ஆயிழை வந்து நிற்பள்
பொன்னொடு தானியங்கள் பொருந்திய செல்வம் உண்டாம்
முன்னமே மயனார் சொன்ன முறைமைநூல் இதுகண்டாயே.

இ-ள்: கன்னிமூலையில் மலர்வந்து நிற்கில்,பொருளும் அன்னமும் தனகனகமும் இலட்சுமிப் பிரகாசமும் நவதானிய இலாபமும் பிறவிச்செல்வமும் எந்நாளும் நீங்காமல் வற்றா சமுத்திரமாய் மேன்மேலும் பெருகியுண்டாம் எ-று.

59. வருணன்தன் மேற்கு நோக்கி வந்துமே நிற்கும் ஆகில்
இருநிதிச் செல்வம் உண்டாய் இருக்குமே வினையும் மாறி
கருதிய கருமம் நன்றாம் கருணையும் பெற்று வாழ்வார்
மருவிய கனதை உண்டாம் வளம்பெறு மயன் சொன்னாரே.

இ-ள்:- வருணன் மூலையில் அழகும் வாசமும் பொருந்திய பூவானது வந்துநிற்கும் ஆகில் நின்ற செல்வம் மாறி அழிவது மல்லாமல் நினைத்த காரியமும் தொழில்களும் செயமாகும் எ-று

60. வாயு மூலை தன்னில் வந்துடன் நிற்கும் ஆகில்
காயுநோய் கொண்டு சாவன் களவினால் பொருளும் போகும்
பேயுமே பிடித்துக் கொள்ளும் பிணம்சுடு காடது ஆகும்
சேயுமே சாகும் என்று செயல்பெறு மயன் சொன்னாரே.

இ-ள்: வாய்வு மூலையில் விகசிதம் பொருந்திய மலர் வந்து நிற்கு மாகில் பதினெண்காசம் என்னும் க்ஷயரோகத்தினால் மரண மும், சோரர்கள் களவினால் பண்டிபண்டாரம் முதலிய பொருள் சேதமும் அன்றி அம்மனையானது அலகை வாழும் சுடுகாடாகும். அன்றியும் சகலபாக்கியமும் அழிந்துபோம். எ-று.

61. குபேரன்தன் திக்கு நோக்கி குணம்பெற நிற்கும் ஆகில்
விபரமாய்ப் பொருள்கை கூடும் வேண்டிய சொர்ணம் சேரும்
சபை நலம் பெரியோன் ஆவன் தனம்சிந் தனை உண்டாகும்
அபயம் என் றோரைக் காப்பன் அருள்பெறு மயன் சொன்
னாரே'

இ-ள்:- குபேரன் திக்கில் விநோதம் பொருந்திய மலரானது வந்து நிற்குமாகில் தனதான்ய சம்பத்தும், புத்திர சந்தானமும், ஆயுள் விருத்தியும், சபையோக்கியமும் பெற்று அதர்மசிந்தை நீங்கி தர்ம சிந்தையோங்கி அபயம் என்றவரைக் காத்துப் பொருள் உதவி செய்து வரப்பட்ட மகாபுண்ணியவானாகவும் இருப்பான் எ-று.

மேற்படி குழியிலெடுத்த மண்ணை அடைத்தல்

62. அளந்ததோர் குழியின் மண்ணை அகழ்ந்துஅதன் மேலே
யிட்டால்
வளர்ந்திடிற் செல்வ முண்டாம் ஒத்திடில் மிகுதி யில்லை
குளந்தனில் குறையு மாகிற் குறைந்திடும் சம்பத்து அன்றே
உளந்தனில் கருதி நல்லோர் உரைத்தனர் புவியின் மாதே.

இ-ள்: முன்கெல்லின குழியிலே எடுத்த மண்ணைக் கொட்டினால் மண்மிஞ்சியிருக்கில் இலாபமுண்டாம்; ஒத்திருக்கில் வரவும், முதலும் (செலவும்) சமமாகும்; குறைந்திடில் செல்வங்குறைந்து செலவுமிகும் எ-று.

குழிகெல்லி மண் எடுத்துப் பார்க்கும் இலட்சணம்

வீட்டுக்குக் கர்த்தா ஆனவன் தன்முழத்தால் ஒரு முழ அகல நீளம், ஒருமுழம் ஆழம் நான்குபக்கமும் கீழ் ஆழமும் சரியாய்ப்பார்த்து பள்ளம் எடுத்து, மறுபடியும் அந்த மண்ணை அப்பள்ளத்தில் நிரப்பிப் பார்க்கும் போது

மண் மிகுந்தால் சுபம்.
சரியாய் இருந்தால் சமமாய் இருக்கும்.
குறைவாய் இருக்குமாகில் தரித்திரம்.

இதன்றி சூரியன் அஸ்தமனமாய் இருக்கும்போது மேற்படிப் பள்ளத்தில் இருக்கிற மண்ணை எடுத்துப்போட்டு, அதில் நிரம்பத் தண்ணீர்விட்டு மறுநாள் உதயத்தில் பார்க்கும்போது

தண்ணீர் இருந்தாலும் சேறாய் இருந்தாலும் சுபம்.

அந்த பள்ளத்தில் தண்ணீரில்லாமல் போனாலும், சேறு இல்லாமல் போனாலும் ஒக்கப்பூச்சி, குடியிருந்தாலும் அது ஆகாது. மேல் சொல்லிய குழியில் தண்ணீரும் பாலும் வார்த்த போது பிரதட்சிணமாய்ச் சுற்றினால் நன்மை.

## தேங்காய்க் குறி

### தேங்காயுடைக்கும் குறி

63. அடித்ததோர் தேங்காய் தானும்
அகலவே சிதறி விட்டால்
முடித்ததோர் மௌலிக்கு ஆகா
முகிலுடன் ஓடும் ஆகில்
எடுத்ததோர் சிற்பன் கையில்
இடறியே விழும தாகில்
வடித்தது சிவாச கங்கள்
வாழ்வில்லா பாலாடும் என்றே.

64. முடிபருத்து வட்டமிடிற் திருவே சேரும்
மூன்றில்ஒரு பங்குடைந்தால் செயசந் தோஷம்
நெடியஐந்து இரண்டிற்குத் துலையாச் செல்வம்
நீங்கிநரம் பேபிடித்தால் நீடு வாழ்வாம்
கடுகுதனை உள்ஆனால் இரத்தினம் சேரும்
கனக்கவந்து இரண்டிறக்கும் கருது பூசல்
வடிவமெனும் தமிழ்ஒதும் மயனார் சொன்ன
வளமைதேங் காய்ச்சகுன வன்மை கேளே.

இ-ள்:- முகூர்த்தஞ்செய்து தேங்காயுடைத்தால் முடிபருத்து அடி சிறுக்கில் இலட்சுமி விலாசமுண்டு. மூன்று பங்கு சிரசிலும் ஒரு பங்கு பாதத்திலும் ஆனாற் சந்தோஷமுண்டு. ஐந்து இரண்டு, ஐந்து மூன்று ஆனால் செல்வம்உண்டு.
நரம்பு பிடித்தால் நீடூழி வாழ்வார்கள்.
கடுகு பிரமாணம் சிதழ் உள்ளே விழுந்தால் இரத்தினம் சேரும்.
நடுவில் பிளந்தால் மகாதுயரத்தை விளைவிக்கும் எ-று.

65. ஒன்றிரண்டு தனக்கு நன்மை; ஆறு நாலாய்
உடையவெகு துன்பமது ஓதக் கேளு
அண்டு மெய்யிற் கண்தெறித்தால் மரணம் ஆவன்
ஆகவும்நல் ஓடுவிட்டால் அசனம் வெல்லம்
விண்டுஓடு தெறித்திடுமேல் பிணியாம் மெய்யில்
மேதினியிலே விளைவிம் விலையு மாவன்
பண்டு தமிழ் அறிந்துஓதும் மயனார் சொன்ன
பாடல் தேங் காய்ச்சகுனம் பகரக் கேளே.

இ-ள்:- நடுமத்தியிலுடைந்தால் நன்மை. ஆறு சுக்கல் நான்கு சுக்கலாய் உடைந்தால் வெகுதுன்பம். சரீரத்தில் தேங்காய்க்கண் தெறித்தால் யசமானன் மரணமாவான். ஓடுவிட்டால் புசிப்பதற்கு அன்னம் கிடைக்கமாட்டாது. ஓடு நெறிந்தால் சரீரத்தில் பிணி யுண்டாகும். பூமியில் விழுந்தால் யசமானன் வீடுவாசலை விற்றுத் துக்கப்படுவான் எ-று.

66. முடி இரண்டாய் உடைந்த தென்றால் தனமே சேரும்
முடிபெருத் தாலும் நன்மை முக்கியம தாகவேகீழ்
மூடிதன்னில் ஒருமுடநில மெத்த நன்மை
கூடிவளர் கீழ்மூடி தன்னிலொரு கூறாவது சமதாகு
கொப்பறையினங்கள் கண்டாலும் வெகுநன்மையாம்
குருந்துடனே முளையும் நன்மை வுடலுடனே
குறுக்காகில் தின்மையாம் உதிரியாய்ச் சிதறுமாகில்
ஒன்றினங்களாய துன்பம் வரும் அழுகலே யென்னில்
உடலிலே வெகுநோய்கள் சேரும்
தேடிய யெறும் பாடலெனிலுயிர்ச் சேதமாம் சிரமே
கொஞ்ச மாகாந் தேங்கா யுடைத்தபல னிவ்வளவென்
றே மயனார் செப்பியது கண்டு கொள்ளே.

# 3. நீள அகலம்

ஒரு மனையில் வீடுகட்டுவதற்குரிய நீள அகலங்களின் நன்மை தீமைகள், அவ்வீட்டினுள் அறைகள், கூடங்கள், தாழ்வாரம் (சறுக்கார்), வாசல்கள் போன்றவற்றிற்கு உரிய நீள அகலங்களின் நன்மைதீமைகள் போன்றவற்றை விளக்குவது இப்பகுதி இவற்றுள் கீழே தருகின்ற அடிகளுக்கான நன்மைதீமைகள் மேலே குறிப்பிட்ட எல்லாவற்றின் நீளத்திற்கும், எல்லாவற்றின் அகலத்திற்கும் பொருந்தும். வீடு கட்ட விரும்புவோர் நீள அகலங்களின் நன்மைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

## அகல நீளம் — பலன்கள்

நீளம் அல்லது அகலம்:

ஏழு அடி ஆனால் —

நினைத்தகாரியம் முடியாது. நோயுண்டாகும்.

எட்டு அடி ஆனால்-

எண்ணிய கருமம் முடியும். பகைவர் விலகுவர். பட்டமரம் துளிர்க்கும்.

ஒன்பது அடி ஆனால் —

ஆயுள் குறையும். மனையாள் இறப்பாள்.

பத்து அடி ஆனால் —

கால்நடைச் செல்வம் பெருகும். வேளாண்மை விருத்தியாகும்.

பதினொரு அடி ஆனால் —

பாலும் சோறும் நிறையும். வேளாண்மை பெருகும்.

பன்னிரண்டு அடி ஆனால்—
செல்வம் அழியும். வருத்தம் மிகுதியாகும்.

பதின்மூன்று அடி ஆனால்—
எண்ணிய கருமம் முடியாது. உறவினர் பகை ஆவர். தொல்லை மிகும்.

பதினான்கு அடி ஆனால்—
இன்பம் அழியும். உயிருக்கு நஷ்டம் ஏற்படும்.

பதினைந்து அடி ஆனால்—
நோயால் மரணம் உண்டாகும். பாவம் வந்து சேரும். செல்வம் சேராது.

பதினாறு அடி ஆனால்—
செல்வம் பெருகும். புத்திரப்பேறு உண்டு. பகைவர் விலகுவர்.

பதினேழு அடி ஆனால்—
பகைவர் வணங்குவர். இறைஅருள் கிடைக்கும். அரசப்பதவி கிட்டும்.

பதினெட்டு அடி ஆனால்—
செல்வம் அழியும். இருந்த பொருள்கள் விலகும். மனைவி நோயுடையவள் ஆவாள்.

பத்தொன்பது அடி ஆனால்—
மனைவி இறப்பாள். சண்டை, பயம் போன்றவை நீங்காது. புத்திரர் மரணமடைவர்.

இருபது அடி ஆனால்—
புத்திரப்பேறு உண்டாகும். வியாபாரம் பெருகும். மகிழ்ச்சியும், செல்வமும் நிலைக்கும்.

இருபத்தோரு அடி ஆனால்—
பால் பாக்கியம் பெருகும். துன்பம் அணுகாது.

இருபத்து இரண்டு அடி ஆனால்—
மகிழ்ச்சியான வாழ்க்கை அமையும். சிறந்த புத்திரர் பேறு உண்டாகும். பகைவர் அஞ்சுவர்.

இருபத்து மூன்று அடி ஆனால்—
ஆயுள் குறையும். நோய் மிகும். சுற்றத்தார் விட்டு விலகுவர்.

இருபத்து நான்கு அடி ஆனால்—
ஆயுள் குறையும்.

இருபத்து ஐந்து அடி ஆனால்—
மனையாள் இறப்பாள்.

இருபத்து ஆறு அடி ஆனால்—
இந்திரன் போல வாழ்வர்.

இருபத்து ஏழு அடி ஆனால்—
உலகம் புகழ வாழ்வர். பாழான பயிர்கள் விளையும்.

இருபத்து எட்டு அடி ஆனால்—
செல்வம் மிகும். நிறைந்த வாழ்வுஉண்டு. எதிரிகள் அஞ்சுவர்.

இருபத்து ஒன்பது அடி ஆனால்—
எல்லாச் செல்வமும் பெருகும்.

முப்பது அடி ஆனால்—
எல்லாச் செல்வமும் பெருகும். புத்திரப்பேறும் உண்டு.

முப்பத்து ஒரு அடி ஆனால்—
இறையருள் உண்டாகும்.

முப்பத்து இரண்டு அடி ஆனால்—
இறையருளால் உலகம் அடிமையாகும்.

முப்பத்து மூன்று அடி ஆனால்—
குடி உயரும்.

முப்பத்து நான்கு அடி ஆனால்—
வீட்டைவிட்டு ஓட நேரிடும்.

முப்பத்து ஐந்து அடி ஆனால்—
பலவகைச் செல்வமும் உண்டாகும்.

முப்பத்து ஆறு அடி ஆனால்—
அரசனுக்குச் சமமாக வாழ்வர்.

முப்பத்து ஏழு அடி ஆனால்—
இன்பமும், லாபமும் உண்டாகும்.

முப்பத்து எட்டு அடி ஆனால்—
வீட்டில் பிசாசுகள் குடியிருக்கும்.

முப்பத்து ஒன்பது அடி ஆனால் —
இன்பமும் சுகமும் உண்டாகும்.

நாற்பது அடி ஆனால்—
சலிப்பும், சோர்வும் உண்டாகும்.

நாற்பத்தோரு அடி ஆனால்—
குபேர வாழ்வு பெறுவர்.

நாற்பத்து இரண்டு அடி ஆனால்—
எல்லாச்செல்வமும் நிலைபெறும்.

நாற்பத்து மூன்று அடி ஆனால்—
சிறப்பு அழியும். தீமையுண்டாகும்.

நாற்பத்து நான்கு அடி ஆனால்—
கண்பார்வை அழியும்.

★

மனைகள் அகலம் நீளத்துக்கு — வீட்டுக்குள் அறைகள், கூடங்கள், சறுக்கார்கள், வாசல்கள் முதலானவைகள் வைப்பதற்கு இலக்கணம் :-

67. மனைதனை அளந்து வைத்து மகிழ்ச்சியாய் வாழ்வோர்க்கு எல்லாம்
வினையில்லா சாத்திரத்தை விளம்புவேன் சொல்லக் கேளும்
பனைநரி குடிபால் போலப் பாரினில் மயங்க வேண்டாம்
முனைமணி பூண்டதந்தி முகவனுங் காப்ப தாமே.

68. ஆரிய மறைகள் தன்னில் அனைவர்க்கும் உதவியாக
பார்புகழ் முகுந்தன் மைந்தன் பங்கயன் வகுத்த நூலும்
தாரணி உமையோர் பாகன் சதாசிவன் சொன்ன நூலும்
சீர்பெற ஆய்ந்து பார்த்து செழித்திட மனைகோல் வாயே.

69. ஏழடி முழமும் ஆகில் எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் மிக்க நோய்தான் வந்தவர் தன்னைக் கொல்லும்
தாழ்விலா விபரமாகச் சரஸ்வதி சொன்ன நூலால்
ஊழ்வினை தீராது இந்த உற்றதோர் வேதம் பாரீர்.

70. எட்டடி அகல நீளம் எண்ணிய கருமம் நன்று
துஷ்டனும் வருவ தில்லை தூரத்தே யகன்று நிற்பான்
பட்டிட்ட மரம்து ளிர்க்கும் பாக்கியம் மெத்த உண்டாம்
வட்டமாம் குழலி னாளே மயேசுரன் சொன்னார் பாரே.

71. ஒன்பது அகல நீளம் ஓங்கிடில் உயிரும் போகும்
ஐம்பது வயதும் ஆகும் ஆயிழை தனக்குச் சாவாம்
சம்புவே பார்த்துச் சொன்னார் சலிப்புகள் மெத்த உண்டாம்
வம்பது செய்ய வேண்டாம் மறையவர் நூலைப் பாரீர்.

72. பத்துமே அகல நீளம் பரிவுடன் வைத்த வர்க்கு
கொத்துடன் ஆடு மாடு குறைவிலா வாழ்வுண் டாகும்
மெத்தவும் நன்மை யுண்டாம் வேளாண்மை மிகுதி யாகும்
கர்த்தனார் இதுக ளெல்லாம் கருதியே சொன்னார் பாரீர்.

73. பத்துமே ஒன்று மாகில் பரிவுடன் சொல்லக் கேளீர்!
சித்தமும் கலங்க வேண்டாம் தீவினை ஒன்றும் இல்லை
மெத்தவே பாலும் சோறும் வேளாண்மை மிகுதி யாகும்
அத்தனார் அருளிச் செய்தார் ஆராய்ந்து நூலைப் பாரீர்.

74. பத்துமே இரண்டு மாகில் பரிவுடன் சொல்லக் கேளும்
தத்துமே செல்வம் எல்லாம் தரணியில் இருப்ப தில்லை
சற்றுநீ பாராய் ஆனால் சதுரமும் குலைந்து போகும்
வைத்தது கூறு போல வருத்தமும் மெத்த வுண்டே.

75. ஏழுடன் உறும்ஆறு ஆனால் எண்ணிய கருமம் தீதாம்
வாழ்வுடன் இருந்த பேர்க்கும் வந்தவர் பகையே யாவர்
சூழவே தொல்லை யுண்டு சுற்றத்தார் அற்றுப் போவார்
தாழ்வது மெத்த உண்டு சங்கரர் சொன்னார் பாரே.

76. எட்டுமே ஆறும் ஆனால் இன்பமும் இல்லை கண்டாய்
நட்டமும் உயிருக்கு ஈனம் நலமில்லை நாதர் சொன்னார்
கெட்டியாய் இந்த நூலைக் கேவலம் பண்ண வேண்டாம்
சட்டமாய்ப் பாரும் பாரும் சாத்திரம் வேறே வேண்டாம்.

77. மூவைந்தாம் அடிய தாக முடிந்திடல் ஆகாது என்றும்
நோயினால் மரணம் செய்யும் நோக்கிய கருமம் தீதாம்
பாவமும் வந்து நிற்கும் பாக்கியம் சேராது என்று
நாவினில் ஊறு கின்ற நாயகி தனக்குச் சொன்னார்.

78. பத்துடன் ஆறே யாகில் பாக்கியம் மிகவும் சேரும்
மெத்தவும் தனயர் உண்டு மேன்மையாம் வாழ்வும் உண்டு
சத்துரு விலகிப் போவான் சங்கரர் சொன்ன தைப்போல்
பத்தியாய் அடிமை வந்து பரிவுடன் தொண்டு செய்வான்.

79. ஈரைந்தும் ஏழும் ஆகில் எதிரியும் வணங்கி நிற்பான்
தாரணி கொன்றை சூடும் சங்கரர் உதவி செய்வார்
பாரினில் மன்னர் ஆவர் பாக்கியம் மிகஉண் டாகும்
சீர்கொண்டு வாழ லாகும் செல்வமும் மெத்த வுண்டாம்.

80. எட்டுடன் பத்தும் ஆகில் இலட்சுமி இருப்ப தில்லை
பட்டுடன் மணிகள் எல்லாம் பாரினில் விலைய தாகும்
கட்டுவன் காலன் வந்து காரிழை பிணியது ஆவாள்
தட்டுதான் செய்யும் என்றே சங்கரர் சொன்னார் பாரீர்.

81. ஈர்ஒன்பது ஒன்றும் ஆகில் ஏந்திழை அடியாள் சாவாள்
பாரினில் செட்டு செய்யப் பலியாது தீது மெத்தப்
போருடன் கிலேசம் உண்டு புத்திரர் மரணம் ஆவார்
மாறுடன் திரிய வேண்டாம் மகதேவர் சொன்னார் பாரீர்.

82. இருபது அடியது ஆனால் ஏற்றமாம் மனையும் நன்றாம்
பெறுவது ஆணும் பெண்ணும் பின்பல இன்பம் உண்டு
வருவதும் அசுவ யோகம் வாணிபம் பலிக்கும் பாரு
திருவுடன் மகிழ்ச்சி செய்யும் திருச்சடைநாதர் சொன்னார்.

83. நாலஞ்சு ஒன்றும் ஆகில் நலமுடன் சொல்லக் கேளாய்
பாலுடன் பசுக்கள் மெத்த பாக்கியம் மிகவுண் டாகும்
சாலவே வாழ்வ தற்குச் சஞ்சலம் ஒன்றும் இல்லை
மாலுடன் ஈசர் தானும் மகிழ்ச்சியாய்ச் சொன்னார் பாரீர்.

84. இருபதும் இரண்டும் ஆகில் எதிரியும் அஞ்சு வான்காண்
வருவது மகிழ்ச்சி யாக வாழ்வுமே மெத்த உண்டாம்
பெறுவது ஆணும் பெண்ணும் பின்பலம் ஆகி நிற்கும்
ஒருமையாய் இந்த நூலை உமையவள் தனக்கு உரைத்தார்

85. இருபதும் மூன்றே யாகில் எந்தநோய் தானும் உண்டு
வருவதும் கலங்கி நிற்கும் வாழ்வுமே அற்பம் ஆகும்
இருவினை மிகவும் உண்டு இருப்பவர் கெடுதி யாகும்
மருவுள்ள சேதம் போகும் மாரியும் பெய்யாது என்னே.

86. அறுநான்காம் அடியது ஆகில் அற்பமாய் வயது குன்றும்
ஒருநான்குள் இருபத்து ஒன்றில் உமையவள் கடாட்சம் போகும்
இருநான்கும் எட்டும் பத்தும் இந்திர செல்வம் பெற்று
ஒருமையாய்வாழ்வர் என்று உமையவள் தனக்குச் சொன்னார்.

87. ஏழுடன் இருபது ஆகில் எழும்புமே யோகம் பாரு
தாழ்விலா வாழ்வு பெற்றுத் தரணியில் மதிக்க வாழ்வார்
பாழ்போன பயிர்கள் தானும் பலிதமாய் விளையும் பாரு
ஊழ்வினை ஒன்றும் இல்லை உமைபரன் சொன்னார் பாரீர்.

88. எட்டுடன் இருபதாகில் எதிரியும் அஞ்சி நிற்பான்
கொட்டுமே மனையில் வாழ்வு குறைவிலா பாக்கியத்தைக்
கெட்டுமே போகா தப்பா கேசரி உதவி யாலே
தட்டுதான் வாரா தென்று தாண்டவ மூர்த்தி சொன்னார்.

89. இருபதும் ஒன்பது ஆனால் எழும்புமே செல்வம் அப்போ
ஒருபதும் இருபது ஆகில் உண்மையாய்ச் சொன்னேன் பாரும்
வருவதும் அனேக யோகம் வந்தவர் சலிப்பில் லாமல்
பெறுவது ஆணும் பெண்ணும் பித்தனார் தாம் உரைத்தார்.

90. முப்பதும் ஒன் றும் ஆனால் முக்கணர் அருளும் உண்டாம்
முப்பதும் இரண்டும் ஆகில் முகுந்தனார் கடாட்சத் தாலே
வைப்பது அடிமை மக்கள் வையகம் முழுதும் வாழ்வார்
தப்பிலை சொன்னேன் அந்த சங்கரர் உமைக்குச் சொன்னார்.

91. ஐயாறும் மூன்றும் ஆனால் ஆனதோர் குடியும் நன்றாம்
ஐயாறும் நான்கும் ஆகில் அண்டிய குடிவிட்டு ஓட்டும்
ஐயாறும் ஐந்தும் ஆனால் அட்டலட் சுமியும் சேர்வாள்
ஐயாறும் ஆறும் ஆகில் அரசரோடு அரசாள் வாரே.

92. ஏழஞ்சும் இரண்டும் ஆகில் இன் பமாய் இலாபம் உண்டு
ஏழஞ்சும் மூன் றும் ஆகில் எப்போதும் பிசாசு சேரும்
ஏழஞ்சும் நாலும் ஆகில் இன்பமும் சுகம்உண் டாகும்
ஏழஞ்சும் ஐந்தும் ஆகில் என்றைக்கும் சலிப்புண் டாகும்.

93. எண்ணைய்ந்தும் ஒன்றே ஆகில் இன்பமாம் குபேரச்செல்வம்
நண்ணவே ஏழாறு ஆகில் இலட்சுமி குடியி ருப்பாள்
திண்ணமாய் ஏழைந்து எட்டும் சிறப்பில்லை தீங்குண் டாகும்
கண்ணவே ஆறாறு எட்டும் கண்கெட்டுப் போவர் தாமே.

வீட்டுக்கு - அறைகள், கூடங்கள், வாசல், முதலானவை வைத்துக் கட்டுவதற்கு- அடி அளவு- அகலம்- நீளம்

6 அடி —நன்மையுண்டு.
7 ,, — தரித்திரம்.
8 ,, — இராச்சியம்.
9 ,, — பீடை.
10 ,, — பாலும் சாதம் உண்டு.
11 ,, — நன்மை.
12 ,, — புத்திர ஆனி.
13 ,, — வியாதி உண்டு.

14 அடி — சஞ்சலம் உண்டு.
15 ,, — உடனே துன்பம்.
16 ,, — மிகுந்த செல்வம் உண்டு.
17 ,, — எதிரி அஞ்சி நிற்பான்.
18 ,, — அமர்ந்தமனை பாழாம்.
19 ,, — தரித்திரம், புத்திரவியாகூலம்.
20 ,, — இன்பம் தரும்.
21 ,, — நன்மை தரும்.
22 ,, — எதிரி அஞ்சுவான்.
23 ,, — தீது உண்டாம்.
24 ,, — மத்திமம்.
25 ,, — மனையாள் மரணம்.
26 ,, — சம்பத்து உண்டாம்.
27 ,, — மிகுந்த செல்வம் உண்டு.
28 ,, — தெய்வக் கடாட்சம் உண்டு.
29 ,, — பால்பாக்கியச் செல்வம் உண்டு.
30 ,, — இலட்சுமி கடாட்சம் உண்டு.
31 ,, — துன்பம் இல்லை. நன்மை உண்டு.
32 ,, — முன் இழந்த பொருள் வரும்.
33 ,, — நன்மை உண்டாம்.
34 ,, — குடிவிட்டு ஓட்டும்.
35 ,, — இலட்சுமி கடாட்சமுண்டு.
36 ,, — வீரலட்சுமி கடாட்சமுண்டு.
37 ,, — கன்று காலி முதலானவை உண்டாம்.
38 ,, — பிரம்ம ராட்சசன் குடி இருப்பான்.
39 ,, — மிகுந்த நன்மை உண்டாம்.
40 ,, — எதிரிகளால் எந்நேரமும் தீது.
41 ,, — குபேர சம்பத்து உண்டாம்.
42 ,, — அஷ்ட லட்சுமி குடியிருப்பாள்.
43 ,, — நன்மை கொடாது துன்பம்.
44 ,, — கண் போம்.

வீடு கட்டுவதற்கு எசமான் காலினாலே அடி, அளவு கணக்கு:-

10 அடி பாக்கிய வானாக இருப்பான்.
11 ,, வியாதியஸ்தனாய் இருப்பான்.
12 ,, பகையாளியால் தெண்டம் வரும்.

13 அடி பாக்கியவானாய் இருப்பன்.
14 ,, பகை மெத்த உண்டாம்.
15 ,, அவன் கவலைப்படுவான்.
16 ,, பெண்ணுக்கு வியாதி.
17 ,, இராச வெகுமதி.
18 ,, பால் பாக்கியமுடன் வாழ்வன்.
19 ,, அவன் தகப்பன் சாவன்.
20 ,, இருந்த இடத்தை விட்டு எழுப்பிவிடும்.
21 ,, ஆடு மாடு சேதம் ஆம்.
22 ,, அந்த வீட்டில் சுபம் நடக்கும்.
23 ,, வாழ்வு உண்டு.
24 ,, கள்ளனால் வீடு கொள்ளைபோம்.
25 ,, பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்திருப்பான்.
26 ,, மிகுந்த காணி காட்சியும் சம்பாத்தியமும் உண்டு.
27 ,, தெண்டம் பெறும்படி உண்டு.
28 ,, ஐசுவரியம் உண்டு.
29 ,, பிள்ளைகள் சாம்,
30 ,, வாழ்வு முடியும் முன்னே வீடுகட்டி ஓடிப்போவான்.
31 ,, தரித்திரிய வானாக இருப்பான்.
32 ,, திரவியம் பெற்றிருப்பான்.
33 ,, இரண்டு பெண் கொள்வன்.
34 ,, குதிரை கட்டி வாழ்வான்.
35 ,, சல்லியமும், விவகாரமும் சாவதாய் உண்டு.
36 ,, குடி கலைந்து ஓடுவன்.
37 ,, ஆண் குழந்தை அதிகம் உண்டு.
38 ,, வியாதியஸ்தனாய் இருப்பான்.
39 ,, இராச வெகுமதி உண்டு.
40 ,, கொண்ட பெண் வாழமாட்டாள்.
41 ,, பால் பாக்கியம் உண்டு.
42 ,, பாக்கியவானாக இருந்து உபகாரம்செய்யப்படுவான்.
43 ,, தெண்டமும் தொங்குசமும் உண்டு.
44 ,, கண்மயனாதும் தொங்குசமும் உண்டு.
45 ,, சத்புத்திரன் உண்டு.
46 ,, மேச்சொல் தொங்கிஷம்.
47 ,, அந்த இடம்விட்டு ஓடிப்போவான்.
48 ,, வீடு உடனே நெருப்புப் படும்.

நீள அகலம்

49 அடி எசமான் மரணம்.
50 ,, ஆலோசனையாய் இருக்கும்.
51 ,, வழக்கு வியவகாரம் தப்பாமல் உண்டு.
52 ,, வீட்டில் சென்று கட்டுப்படும்.
53 ,, கூத்தியா கள்ளனாக இருப்பாள்.
54 ,, இராச வாழ்க்கையுண்டு.
55 ,, உறவின் முறை விரோதம்.

இந்தப்படி அறிந்து கணக்குள் யெறிபார்த்து வீடு போட்டுக் கொள்ளவும். குருகாடி 7½, 9½, அடி வைத்துக் கட்டிக் கொள்ளவும். மனைக்கு நட்சத்திரம், இராசி பார்த்துக் கட்டிக் கொள்ளவும்.

## விசால லட்சணம்

தெற்கு முகம், மேற்குமுகம் கட்டின வீடு விசாலத்துக்குக் கமலாகரம் என்னப்படும்.

இதன்பலன் லட்சுமி பிரதம்.

மேற்கு முகம், வடக்கு முகம் கட்டினவீடு விசாலத்துக்குச் சுவர்ணபலம் என்னப்படும்.

இதன் பலன் சோரபயம், பீடையுண்டாம்.

வடக்கு முகம் கிழக்கு முகம் கட்டினவீடு விசாலத்துக்குப் புஷ்கத முஷ்டிகம் என்னப்படும்.

இதன் பலன் சோரபயமும் விஷபயமுமாகும்.

தெற்கு, மேற்கு, வடக்கு கட்டின வீட்டிற்குக் கிழக்கு அவடத்தில் வாசற்கால் வைத்தால் புத்திரமுஷ்டிகம் என்னப் படும்.

இதன் பலன் பயம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு கட்டினவீட்டுக்கு மேற்கில் வாசற் கால் வைத்தால் அதிசயம் என்னப்படும்.

இதன் பலன் ஆனி.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு கட்டின வீட்டுக்கு வடக்கில் வாசற்கால் வைத்தால் நல்ல சுகமுண்டாம்.

மேற்கு, கிழக்கு, வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசற் கால் இருந்தால் கலியாணபதம் என்னப்படும்.

இதில் சம்பத்துண்டாம்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு இந்த நாலு பக்கத்திலும் வீடு கட்டியிருந்தால் அது சதுரச் சாலை என்னப்படும்.

இதன் பலன் உத்தமம்.

## வாசல் இராசி பார்ப்பது

94. நாயன இராசிதன்னை நலமுற எண்ணிப் பார்க்க
வாசலே வலமும் முன்னும் வடிவாகக் கொள்ளும் நன்மை
ஆயன இராசி தன்னை இடந்தன்னைப் பின்னும் கொள்ள
நாயகன் தன்னை வைத்து மனையவன் தனக்கு நாசம்.

95. நாழிகை குளிகன் ஓரை நல்லதோர் அருக்கன் சூலம்
சூளறைத் திக்கு யோனி சுக்கிரன் இராசி மாதம்
வீழ்தரும் வாஸ்து வின்தான் விட்டமூ லாபக்கம் நாள்கள்
ஏழ்தரும் வார முகூர்த்தம் இயல்விளி முகூர்த்தம் சொல்வாம்.

96. வடபால் மனை ஓங்கி வயிறந்துவ தால
திடமாகிய தென்பால்மனை விழுந்து தான்பணிய
குடமாகிய தனங்கள் சொறிந்து விடும்
மடமேவிய மயனுரைத் தனரே.

97. நடுமனை கம்பம் ஆகில் நடுமனை வாசல்
இடிசிவ இரட்டை யாகில் யேத்துகை ஒத்தை யாகில்
முடிவனை தாளும் ஆகில் முந்துகை ஏரும் ஆகில்
இடுகுடி புகுது முன்னே விடுவது சீவன் தானே.

98. தாளொடு கதவும் அன்றி தரைசுவர் தின்ன தன்றி
வாள்விழி மடந்தை யன்றி மறையவர் பெரியோர் அன்றி
கோளரு நல்லது அன்றி கூறையும் மூட வன்றி
நீள்குடி புகுவீர் ஆகில் நிச்சயம் மரணம் தானே.

## வாசல் சூரியன் கவி

99. சூரியன் வீச்சே ஆகில் துலைவிலாச் செல்வம் உண்டாம்
பாரிய மதிதான் நின்றால் பணம் இல்லை யோகம் இல்லை
சாரியாய் இரண்டும் பார்த்துத் தயவுடன் வன்னி நின்றால்
பாரினைக் கொல்வ தற்குப் பாக்கியம் மெத்த உண்டாம்.

# 4. முழக்கோல்

| | | | |
|---|---|---|---|
| அணு | எட்டுக் | கொண்டது | —புல் நுனி |
| புல் நுனி | ,, | ,, | — நுண்மணல் |
| நுண்மணல் | ,, | ,, | —எள் |
| எள் | ,, | ,, | —நெல் |
| நெல் | ,, | ,, | —துவரை |
| துவரை | ,, | ,, | —விரல் |
| விரல் | ஆறு | ,, | —கால் முழம் (அல்லது) அரை சாண் |
| அரைசாண் | இரண்டு | ,, | —சாண் |
| சாண் | ,, | ,, | —முழம் (24 விரல்) |
| 24 விரல் | | ,, | —கிடகு |
| | | | கிடகு வேளாளருக்கு முழம் என்று சொல்லப்படும் |
| 25 | ,, | ,, | —பிரஜாபத்தியம் |
| | | | பிரஜாபத்தியம் வைசியருக்கு முழம் ஆகும். |
| 26 | ,, | ,, | —தனுமுட்டி |
| | | | தனுமுட்டி அரசருக்கு முழம் எனப்படும் |
| 27 | ,, | ,, | —தனுக்கிரகம் |
| | | | பிராமணருக்கு முழம் எனப்படும். |

## முழக்கோல்—வேறு வகை

| | | | |
|---|---|---|---|
| அணு | எட்டுக் | கொண்டது | ஒரு பஞ்சின் தூள் |
| பஞ்சின் தூள் | ,, | ,, | ,, மயிர் முனை |
| மயிர் நுனி | ,, | ,, | ,, மணல் |

| | | | |
|---|---|---|---|
| மணல் | எட்டுக் கொண்டது | | ஒரு கடுகு |
| கடுகு | ,, | ,, | ,, மூங்கில் அரிசி |
| மூங்கில் அரிசி | ,, | ,, | ,, அங்குலம் |
| அங்குலம் | ஆறு | ,, | கால் முழம் அல்லது அதமாதமம். |
| அங்குலம் | பன்னிரண்டு | ,, | அரைமுழம் அல்லது அதமம் |
| அங்குலம் | பதினெட்டு | ,, | முக்கால் முழம் அல்லது மத்திமம் |
| அங்குலம் | இருபத்துநான்கு | ,, | ஒரு முழம் அல்லது சந்தி அல்லது மாநாங்குலம். |

மூங்கிலால் செய்த கோல் அந்தணர்களுக்கு உரியது
ஆச்சா மரத்தின் கோல் அரசர்களுக்கு ஆகும்
தேக்கினால் செய்த கோல் வைசியர்களுக்கு உரியது
வேங்கை மரத்தினால் செய்த கோல் வேளாளருக்கு உரியது.

1. கோயில், மனை, அறை, மண்டபம், மாளிகை போன்றவற்றை 24 விரல் கொண்ட கிடகால் அளத்தல் வேண்டும்.

2. கோபுரம், கூடம் போன்றவற்றை அறு விரல் முழத்தால் அளத்தால் வேண்டும்.

மட்டக்கோல்

புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா ஆகிய மரங்களால் மட்டக் கோல் செய்வது சிறப்பு உடையது. அவற்றுள்:

| | | |
|---|---|---|
| புளிய மரத்தின் | கோல் | அந்தணர்க்கு உரியது. |
| ஆச்சாவின் | ,, | அரசருக்கு உரியது. |
| தேக்குவின் | ,, | வணிகருக்கு உரியது. |
| வேங்கையின் | ,, | வேளாளருக்கு உரியது. |
| இரும்பினால் செய்த | ,, | தேவர்களுக்குரியது. |

மூலை மட்டக்கோல்

ஒரு பக்கம் பத்து விரல் நீளமும் மறு பக்கம் எட்டு விரல் நீளமும் உள்ளதாய் நடுமூலைப் படுமாறு அமைத்தல் வேண்டும்.

அளவு நூல் கயிறு

பனை, தாழை, சணல், மருள் (கத்தாழை) ஆல், ஆத்தி, இலந்தை இவற்றின் நாரையும் பருத்தி நூலையும் சேர்த்து விரல் நுனி பருமனாகக் கயிறு முறுக்கிக் கொள்ளுதல் வேண்டும். இக் கயிறு மூன்று புரிகளாகவும், இரண்டு புரிகளாகவும் அமைக்கலாம். அவற்றுள்:

முப்புரிக்கயிறு தேவர், அந்தணர், மன்னவர் ஆகியோருக்கு, உரியது. இருபுரிக்கயிறு வணிகர், வேளாளர் ஆகியோருக்கு. உரியது. பட்டுநூலால் ஆன முப்புரிக்கயிறு தேவர்களுக்கு உரியது. தருப்பைப் புல்லால் ஆன முப்புரிக் கயிறு அந்தணருக்கு உரியது. ஆலம் விழுதால் ஆன முப்புரிக்கயிறு அரசர்களுக்கு உரியது பருத்தி நூலால் ஆன இருபுரிக்கயிறு வைசியருக்கு உரியது பனைநாரினால் ஆன இருபுரிக்கயிறு வேளாருக்கு உரியது. பொதுவாகப் பருத்திநூலால் ஆன முப்புக்கயிறு களையே பெரும் பாலும் எல்லாஇனத்தவரும் அளக்கப் பயன்படுத்தி வருகிறார்கள். இக்கயிறுகளால் அளக்கும் போது:

ஒரு கோழிதாண்டினால் ஒரு பட்சி எலும்பு கிழக்குத் திசையில் இருக்கும்.

பூனை தாண்டினால் அதன்எலும்பு அக்கினி மூலையில் (தென் கிழக்கு) இருக்கும்.

எருமை தாண்டினால் முயல் எலும்பு வட கிழக்குத் திசையில் இருக்கும்.

பசு தாண்டினால் அதன்எலும்பு மேற்குப் பாகத்தில் கிடக்கும்.

கழுதை தாண்டினால் அதன் எலும்பு வட மேற்குத் திசையில் இருக்கும்.

மனிதர் தாண்டினால் அவர் எலும்பு மனையின் மத்தியில் இருக்கும்.

ஒரு மனிதன் எண்ணெய் தேய்த்துக் கொண்டு எந்த மூலையில் நின்று பார்க்கின்றானோ அந்தத் திக்கில் எழுபத்து மூன்று அங்குல ஆழம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு கிடைக்கும். பயி தியம் பிடித்தவன் எந்த மூலையில் நின்று பார்க்கின்றானோ அந்த மூலையில் எட்டு அங்குலம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு கிடைக்கும்.

இவ்வாறு மண்ணைச் சோதித்து எலும்புகளை அகற்றி, வீடு கட்ட முயல வேண்டும்.

முளைக்குச்சு

மனையில் வீடு கட்டுதற்குரிய நீள அகலங்களுக்கும், அறைகளின் பகுதிகளுக்கும் முளைக்குச்சு அடித்துக் கயிறு கட்டி கடைக்கால் எடுத்தற்குப் பயன் படுத்துவது உண்டு.

அம்முளை 11 விரல் முதல் 24 விரல் நீளம் வரை ஏற்றாற் போலக் கொள்ளலாம். அம்முளையினை முதலில் வாஸ்துவின் வயிற்றுப் பாகம் அறிந்து அமைத்தல் வேண்டும். பிறகு தென் மேற்கில் தொடங்கி தென் கிழக்கு மூலை, வடகிழக்கு மூலை, வட மேற்கு மூலை ஆகியவற்றில் முறையே இடமாகச் சுற்றிக் கடாவுதல் (அடித்தல்) வேண்டும்.

இவ்வாறு அமைத்த முளையைப் பிடுங்கி எடுத்தல், நன்றாகக் கட்டிய அல்லது பிடித்த கயிறு அறுதல், ஒரு காலை நட்டு மீண்டும் எடுத்து மாற்றுதல், மனை நடுவில் ஒரு மரத்தை அமைத்தல், முதலில் விட்ட வாசலை அடைத்து வேறு வாசல் விடுதல், வீட்டின் உச்சி குத்தாக வருமாறு அமைத்தல், மாறு கயிறாக வருமாறு மனையெடுத்தல், மனையை மேற்கும் தெற்குமாகப் பெயர்த்துக் கட்டுதல், எடுப்பும் சாய்ப்புமாக வீட்டினைக் கட்டுதல் மறுமாடி மூலை வாங்கி நிற்குமாறு கட்டுதல் போன்ற செயல்கள் தீமையைத் தருவனவாம். வீடு கட்டுவோர் இறற்றை அறிந்து செயல் படவேண்டும்.

பெயர்த்துக் கட்டுவதானால் வடக்கும், கிழக்கும் பெயர்த்துக் கட்டுவது நன்மை தரும்.

தளமட்டம் காணுதல்

மனையின் நடுவில் சதுரமாக ஒரு குழியை வெட்டுதல் வேண்டும். மேலே கூறியபடி நான்கு பக்கமும் முளைகளை அமைத்துக் கயிறு கட்டுதல் வேண்டும். அதன் பிறகு குழியில் நீரை ஊற்றுதல் வேண்டும். அவ்வாறு ஊற்றிய நீர் வழிந்து ஓடி நான்கு திக்கும் பரந்து முளையிலும் கயிற்றிலும் தாக்கி நின்றால் தரைமட்டம்

சமமானது என்று கொள்ளுதல் வேண்டும். பிற உயர்வு தாழ்வு களை நீர் ஓடும் தன்மை கொண்டு அறியலாம்.

கூரைக்கால் நடுதல்

வீடுகட்டும் பகுதியின் அகலத்தை ஒன்பது பாகம் செய்து ஒரு பாகத்தைக் குறைக்க, நின்ற அளவே கூரைக்காலின் உயரமாகக் கொள்ள வேண்டும். 9கூறுகளில் இரண்டு கூறு அளவு குழியில் நடுதல் வேண்டும். மேலே கூரை கட்டுவதற்கு ஒரு கூறு பயன் படுத்த வேண்டும். இடையில் 5 கூறு உயரமே கூரைக்கால் நிற்கும்.

இது கூரை வீட்டிற்கு அமைக்கப்படும் அளவு போலக் காணப் பட்டாலும் எல்லாவீடுகளுக்கும் இக்கூற்றுப் பொருந்தும். அதா வது வீட்டின் அகலத்தில் ஒன்பதில் ஐந்து மடங்கு உள் உயரம் அமைதல் வேண்டும் என்பதே கருத்தாகும்.

மூலைக்கால் நடுதல்

சிறந்த முகூர்த்தத்தில் விநாயகரைப் பூசித்து குழியில் பொன்னும், நவமணியும், பாலும் விட்டு முதலில் தென் மேற்கு மூலைக்காலை நாட்டுதல் வேண்டும். தொடர்ந்து தென் கிழக்கு மூலைக்கால் வடகிழக்கு மூலைக்கால், வட மேற்கு மூலைக்கால் இவற்றை நாட்டுதல் வேண்டும்.

இரண்டு பக்கங்களில் அமைக்கப்படும் கீழ் உத்திரங்கள், குறுக்குக் கழிகள், தாங்கிகள் போல்வன வீட்டின் மூலைப் பகுதி களில் வந்து இணையும். அவ்வாறு இணைக்கப்படும் மரங்களை மிகவும் கவனத்துடன் மரத்தின் அடிப்பகுதி, நுனிப்பகுதிகளைக் கவனித்து, எப்போதும்:

1. அடிப்பகுதி கீழேயும் வீட்டின் உட்புறத்தில் அமையுமாறும் வைத்து, நுனிப்பகுதி மரம் மேலேயும் வெளிப்பக்கத்தை நோக்கி அமையுமாறும் வைத்துப் பொருத்தி இணைத்தல் வேண்டும்.

2. மேலும் அம்மரங்கள் நான்கு மூலைகளில் இணைத்துப் பொருத்தப்படும் போதும் மிகவும் கவனத்துடன் இருத்தல் வேண்டும். அதாவது — அடிமரப்பகுதிகள் இரண்டும் தென் மேற்கு மூலையில் பொருந்த வேண்டும். நுனிப் பகுதிகள் இரண்டும் வட கிழக்கு மூலையில் பொருந்த வேண்டும்.

3. இவற்றுள் தெற்கே உள்ள மரம் மேலாகவும், வடக்கே உள்ள மரம் கீழாகவும் வைத்து இணைக்க வேண்டும்.

4. பிற இரண்டு மூலைகளிலும் - அடிப்பகுதி ஒன்றும் நுனிப்பகுதி ஒன்றுமாக அமையும். அவற்றைக் கீழ் மேல் முறைகளை மாற்றாது பொருத்த வேண்டும்.

## முழக்கோல் அளவு

100. துன்னிய அணுவும் புல்லும் நுண்மணல் எள்ளும் நெல்லும்
பன்னிய துவரை யெட்டால் பரவிய விரல தாகும்
எண்ணிய ஆறி னாலே இசைந்தகால் முழம தாகும்
நண்ணிய காலி னாலே நாலினால் முழக்கோல் கொள்ளே.

இ- ள்:— முழக்கோலாவது:

| | | | |
|---|---|---|---|
| அணு | எட்டுக் | கொண்டது - | புல் நுனி |
| புல் நுனி | ,, | ,, | நுண் மணல் |
| நுண் மணல் | ,, | ,, | எள்ளு |
| எள்ளு | ,, | ,, | நெல்லு |
| நெல்லு | ,, | ,, | துவரை |
| துவரை | ,, | ,, | விரல் |
| விரலாறு கொண்டது | | | கால் முழம் |
| கால் முழம் நான்கு கொண்டது - | | | ஒரு முழம் எ-று. |

101. துளங்கு விரல் கிடகுமுழஞ் சூத்திரருக் காகும்
வளம்பிரஜா பத்தியமும் வணிகர்தமக் காகும்
அளந்ததனு முட்டிவிரல் அரசர்களுக் காகும்
விளம்பிய தனுக்கிரகம் வேதியருக் காமே.

இ-ள்:— கிடகு என்னும் இருபத்துநாலு விரல் கொண்டது வேளாளருக்கு முழமென்று சொல்லப்படும்.

பிரஜாபத்தியமென்னும் 25 விரல் கொண்டது வைசியருக்கு முழமென்று சொல்லப்படும்.

தனுமுட்டியென்னும் 26 விரல் கொண்டது அரசர்களுக்கு முழமென்று சொல்லப்படும்.

தனுக்கிரகமென்னும் 27 விரல் கொண்டது பிராமணருக்கு முழமென்று சொல்லப்படும் எ-று.

102. சொன்னதோர் துவரை எட்டு விரலென வறிந்து கொள்வாய்
தன்னிய விரல்கள் ஆறு கொண்டது சாண தாகும்
பன்னிய சாண்இ ரண்டு கொண்டது முழம தாகும்
அன்னிய மில்லா வண்ணம் ஆய்ந்துகொள் இதுபோல்
தானே.

இ-ள்:— துவரை எட்டுக் கொண்டது விரல்.
விரல் ஆறு ,, சாண்.
சாண் இரண்டு ,, முழம்.
இது போல் பகிர்ந்து கொள்ளவும் எ-று.

## முழக்கோல் வேறு

103. துன்னிய அணுவது எட்டு தூக்கிடில் பஞ்சின் தூளாம்
மென்னிய பஞ்சின் தூளோர் எட்டதாம் மயிர்மு னைக்கு
நன்னிய மயிரின் கூர்மை நவில்எட்டு மணலது ஆகும்
திண்ணமாங் கடுகு எட்டுச் செப்ப வேணுவும்ஒன் றாமே.

இ-ள்:— அணு எட்டுக் கொண்டது ஒரு பஞ்சின் தூள்; பஞ்சின் தூள் எட்டுக் கொண்டது ஒரு மயிர்முனை; மயிர்முனை எட்டுக் கொண்டது ஒருமணல்; மணல் எட்டுக்கொண்டது ஒரு கடுகு. கடுகு எட்டுக் கொண்டது ஒரு மூங்கில் அரிசி எ-று.

104. வேணுவோர் எட்டது ஆகில் வேண்டிய விரல் ஒன்று ஆகும்
தாணுஇவ் விரல்ஆறு ஆனால் தகைமைசால் அதமா தமம்
உன்னிய வரையே விள்ள முயன்றிடும் அதம மாகும்
காணுமே முக்கால் பின்னுங் கருதிய மத்தி மந்தான்.

இ-ள்:— மூங்கில் அரிசி எட்டுக் கொண்டது அங்குலம். அங்குலம் ஆறு கொண்டது கால் முழம்; அதற்கு அதமாதமம் என்றும் பெயர். அங்குலம் பன்னிரண்டு கொண்டது அரைமுழம்; அதற்கு அதமம் என்றும் பெயர். அங்குலம் பதினெட்டுக் கொண்டது முக்கால் முழம்; அதற்கு மத்திமம் என்றும் பெயராம் எ-று.

105. சாதியும் ஒன்றது ஆனால் தருமுழம் உத்த மந்தான்
தீதரு பிரம ரோடு சிறந்த க்ஷத்திரியர் சூத்திரர்
சூதரு விவேக வைசியர் சுபமுடன் கொள்வ தற்கு
நீதியால் புனைந்த பாடல் நெறிபட விளம்பல் உற்றேன்.

இ-ள்:— அங்குலம் இருபத்து நான்கு கொண்டது ஒரு முழம் என்றும் சந்தியென்றும், மாநாங்குலம் என்றும் பெயராம். ஆகையால் பிரம, க்ஷத்திரிய, வைசியர், சூத்திரர் இவர்களுக்கும் இன்ன முழம் என்று சொல்லுவோம் எ-று.

106. சிறந்த சாதி நான்கினுக்குஞ்
சிறுகோல் வரிசை செப்பிடுங்கால்
அறைந்த மூங்கில் மறையவர்க்காம்
ஆச்சா சத்திரி யர்க்காகும்
நிறைந்த தேக்கு வணிகருக்காம்
நெடிய வேங்கை சூத்திரருக்காம்
முறிந்தி டாமல் அவரவர்க்கு
முழக்கோல் அது கொண்டு அளப்பதுவே.

இ-ள்:— சாதி நான்கினுக்கும் முழக்கோல் விபரமாவது; மூங்கிலால் செய்த கோல் பிராமணர்களுக்காம்: ஆச்சா மரத்தின் கோல் அரசர்களுக்காம்; தேக்கினால் செய்த கோல் வைசியர்களுக்காம்; உத்திர வேங்கை மரத்தால் செய்தகோல் சூத்திரருக்காம்.

கோயில், கோபுரம், கூடம், மனை, அளவு முழக்கோல்

107. தாபரம் முதலா வுள்ள சமயமும் மனையும் மிக்க
கோபுரம் கூடம் சாலை மாளிகை யளக்கச் சொன்னோம்
தாபரஞ் சமயம் எல்லாம் கிடகுவின் விரல்க ளாலே
கோபுரங் கூட மெல்லாம் அறுவிரல் முழத்தி னாலே.

இ-ள்:- தாபரம், சமயம், மனை, சாலை, மாளிகை இவைகளைக் கிடகுவின் விரலால் அளப்பது. கோபுரம், கூடம் இவைகளை அறுவிரல் முழத்தால் அளப்பது. இதில் பன்னிரண்டு விரலுக்கு விசத்தி யென்றும் பெயராம். இதில் இரட்டி 24 விரல் கொண்டது கிடகுவென்பதாம் எ-று.

## முழக்கோல் மரங்கள்

108. மூங்கிலில் செய்த கோல்கள் முதுமறை வேதி யர்க்காம்
தீங்கிலா ஆச்சா வின்கோல் திறைகொளும் அரசர்க் காகும்
வேங்கையில் செய்த கோல்கள் வேளாளர்க்கு உரிய தாகும்
பாங்குறு தேக்கு வின்கோல் பகர்ந்திடில் வணிகர்க் காமே.

இ-ள்:— மூங்கிலிற் செய்த கோல் பிராமணருக்காம்; ஆச்சாவின் கோல் அரசருக்காம்; தேக்கு வின் கோல் வணிகருக்காம்; வேங்கையின் கோல் வேளாளருக்காம் எ-று.

109. பொருந்திய மட்டக் கோல்தான் புளிவேங்கை தேக்கோடு ஆச்சா
வருந்திய புளிவே தற்காம் மன்னவர்க்கு ஆச்சா வாகும்
விரும்பிய வணிகர் தேக்கு வேளாளர் வேங்கை யாகும்
இரும்புதான் தேவர்க் காகும் இயல்புடன் சமைத்துக் கொள்ளே.

இ-ள்;— மட்டக்கோலுக்குரியவை புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா இவை நான்கு மரமுமாம்.

இவற்றுள்

| | | |
|---|---|---|
| புளிமாவின் | கோல் | மறையோருக்காம். |
| ஆச்சாவின் | ,, | அரசருக்காம். |
| தேக்குவின் | ,, | வணிகருக்காம். |
| வேங்கையின் | ,, | வேளாளருக்காம். |

இரும்பினாற் செய்த கோல் தேவருக்காம் எ-று.

110. மட்டமது கோலினை விளம்பியே உரைக்கின்
விட்டபடி பத்துவிரல் மேவுமொரு தலையாம்
எட்டுவிரல் ஒருதலையது இப்படிகொள் மூலை
பட்டுவளை சதுரமெனப் பார்த்துவிரல் வரையே.

இ-ள்:— மூலை மட்டக் கோலளவு சொல்லுமிடத்து ஒருதலைப் பத்து விரல் நீளம்; ஒரு தலை எட்டு விரல் நீளம்; நடுமூலைப்பட்டு வளைந்து சதுரமாக்கி விரலளவு பார்த்து வரைந்து கொள் எ-று.

வேறு

111. நுண்ணிய வணுவ தெட்டு நோக்கியே பேசிறு துவரை
மன்னிய மயிர் நுனை திலே யெட்டது
நன்னிய மயிற்றானையே நாலிரண்டது மலாம்
தின்னிய கடுகொடு எள்ளும் செப்பிறு துவரை யெட்டே.

இ-ள்:— அணு எட்டுக் கொண்டது பஞ்சுத்தூள். பஞ்சுத்தூள் எட்டுக் கொண்டது மயிர் நுனை. மயிர் நுனை யெட்டுக் கொண்டது கடுகு. கடுகு எட்டுக் கொண்டது யெள்ளு. எள்ளு எட்டுக் கொண்டது துவரை. துவரை யெட்டுக் கொண்டதென்பது விளைவில் ஒன்று கொண்டு எட்டு ஆகுமென்பது.

112. துன்னிய துவரை யெட்டு தோன்றிய விரல தாகும்
நண்ணிய விரலதனால் கொண்டது சாண தாகும்
மன்னிய தமிழி னாலே மறைபட சாணெனக் கருதி
அன்னிய மில்லா வண்ண முழம். முழமென வரைந்து
கொள்ளே

இ-ள்:— முன் சொன்ன துவரை எட்டுக் கொண்டது சாண். சாணாவது கால் முழமென்ற றிவது. இப்படியே சாண் நாலு கொண்டது முழம். முழமென்ற தச்சு விரலில் இரு விரல் ஒரு விரலாய் நிற்கு மென்ற றிவது.

113. துளந்த விரல் கிடக்கும் முழம் சூத்திரருக் காகும்
வளம்பிற சரபமும் வணிகருக் காகும்
அளந்தது தனு முட்டி விரல் அரசருக் காகும்
விளம்பிய தனுக்கிரகம் வேதியற் காமே.

இ-ள்:— கிடக்கு மென்ற இருபத்து நாலு விரலளவுக் கொண்ட முழக்கோல் சூத்திரருக்காமென்றும் தனுக்கிரணமென்னு முப்பத் தேழு விரலளவு கொண்ட முழக்கோல் வேதியருக்காகுமென்றும் கொள்க எ-று.

114. தாபர முதலா யுள்ள சமயமும் மனையும் மிக்க
கோபுர கூட சாலை மாளிகை மகால் சொர்ணம்
தாபரம் சமய மெல்லாம் கிடகு விரல்க ளாலே
கோபுரம் கூட மெல்லாம் மறுவிரல் முழத்தி னாலே.

இ-ள்:— தாபர முதலாயுள்ள சமயமும், மனைகளுக்கெல்லாம் கிடகு மென்ப. இருபத்தி நாலு விரலளவு கோலாலளப்பது. கோபுரம், கூடம் இவைகளெல்லாம் ஆறு விரலளவு கோலாலளப் பது. இப்படி வகை யறிந்து முழக்கோலும் அறிந்து கொண்டு அளப்பதென்றவாறு.

சிற்ப சாஸ்திர முறைப்படி சிற்ப நூலை வைத்துக் கொண்டு மாடமாளிகை கூட கோபுரம் மனைகளுக்கெல்லாம் மரம் வெட்ட சிற்பி சாஸ்திரப் படி நடப்பி விச்சால் அந்தக்காரியம் நன்மையா யிருக்கும். இல்லாது போனால் துக்கத்தைக் காட்டும். சாஸ்திர முறை தப்பாமல் நடக்கவேணும்.

## நான்கு சாதிக்கும் அளவு கயிறறிந்து கொள்க

115. சையவன் மறையவன் தெர்ப்பை நூலால் வணம்புரி மூன்று கொள்க
கையிரவன் அடக்கதம்பை தன்னா லிசைந்தமுப் புரியே கொள்க.
பெறுமேவைசிய னாகில் பெண்ணை நார் புரியும் இரண்டே.

இ-ள். மறையோர்க்கும் சைவருக்கு மாகில் தெர்ப்பை முப்புரிக் ராசாக்களாகில் கதம்பைக் கயிறு முப்புரிக் கொள்க. செட்டி களுக்காகில் பனைநார் இரு புரி கொள்க. வெள்ளாளராகில் ஆத்தி நாரால் இரு புரி கொள்க என்றவாறு.

## மேற்படி அளவு நூல் கயிறு

116. தாலவுரி கேதகை சணத்தொடு மருட்பின்
நாலினவை மேலுரிநல் ஆத்தியுரி நூலால்
வாலிய கயிற்றினை வளம்பட முறுக்கி
ஏலவிர லின்நுனிய தாகமொழி மின்னே.

இ-ள்:— பனை, தாழை, சணல், மருள், ஆல், ஆத்தி, இலதை இவைகளின் நாரினோடு பருத்தி நூல் கூட்டி விரல்நுனி பிரமா ணத்தில் கயிறு முறுக்கிக் கொள்ளவும் எ-று.

117. முப்புரிய தாய்ஒரு கயிற்றினை முறுக்கில்
விப்பிரர்கள் விண்ணவர்கள் மன்னவருக் காகும்
வைப்புரி யிருபுரிகள் வணிகர் உழவர்க்கே
ஒப்புருசி கொள்கவினி ஓதிஉரைக் கின்றேன்.

இ-ள்:- முப்புரிக்கயிறு தேவர்களுக்கும் மறையோருக்கும் மன்ன வருக்கும் ஆகும். இருபுரிக் கயிறு வணிகருக்கும் வேளாளருக்குமாம் எ-று.

118. பட்டுநூல் தருப்பை யோடு பகருமால் விழுது பண்பார்
நட்டணைப் பனையி னாலும் நவிலுநூல் தேவ ரோடு
திட்டமாம் மறையோர் தானும் சிறந்த க்ஷத்திரியர் சூத்திரர்
மட்டவிழ் வைசிய ரோடு வகையது பிரிவு சொல்லே.

இ-ள்:— பட்டு நூல், தருப்பை, ஆலம் விழுது, பனையின்நார் இவைகள் தேவர்முதல் நான்கு சாதிக்கும் தெளிவாக விவரித்துச் சொல்லுவோம் எ-று.

119. தேவர்க்குப் பட்டு நூலால் சிறந்தமுப் புரியது ஆகும்
மேவிய மறையோர் தருப்பை விளங்குமுப் புரியது ஆகும்
காவிஆல் விழுது மூன்று புரியது வைசியர் நூலாம்
த்தாவும் சூத்திரர் பனைநார் தானிரு புரிய தாமே.

இ-ள்:— தேவர்களுக்குப் பட்டு நூலால் முப்புரிக் கயிறு; பிராமணர்களுக்குத் தருப்பை யினால் முப்புரிக் கயிறு; இராசர்களுக்கு ஆலம் விழுதால் முப்புரிக் கயிறு; வைசியர்களுக்குப் பருத்தி நூலால் இரண்டு புரியையுடைய கயிறு; சூத்திரர்களுக்குப் பனை நாரினால் இரண்டு புரிக் கயிறு ஆம் எ-று.

## கயிறுபிடித்து அளக்கும் இலட்சணம்

பிராமணாள், க்ஷத்திரியர் பூமியை முதல் முழங்காலால் தொட்டு அளக்கவேண்டும்.

மறுபடியும் பிராமணாள் தருப்பையால் தொட்டு அளக்க வேண்டும்.

வைசியனும், சூத்திரனும் திரித்த பூத்தண்டால் அளக்க வேண்டும்.

க்ஷத்திரியர் தேங்காய்க் கயிற்றினால் அளக்கவேண்டும்.

வைசியர் பனைநார்க் கயிற்றினால் அளக்கவேண்டும்.

சூத்திரர் நூல் கயிற்றினால் முப்புரி போட்டு அதனால் அளக்க வேண்டும்.

இந்த கயிற்றினால் கோயில்களுக்கும், பிராமணாள் வீட்டுக்கும் க்ஷத்திரியர் வீட்டுக்கும் அளக்கலாம்.

பின்பு இரட்டைப்புரி நூல் கயிற்றினால் வைசியர், சூத்திரர் இவர்கள் வீட்டுக்கும் அளக்கலாம்.

இந்த கயிறு பிடித்து அளக்கும்போது எந்த சீவன் தாண்டு கிறதோ அந்த சாதி எலும்பு அகப்படும். அதையெடுத்துப் போட்டுவிடவும்.

## மேற்படி கயிற்றினால் அளக்கும் போது

ஒரு கோழி தாண்டினால் பட்சி எலும்பு கீழ்மூலையிலிருக்கும். பூனை தாண்டினால் அதன் எலும்பு அக்கினி மூலையில் இருக்கும். எருமை தாண்டினால் முயல் எலும்பு ஈசானியத்தில் இருக்கும்.

பசு தாண்டினால் அதன் எலும்பு வருணன் மூலையில் இருக்கும். கழுதை தாண்டினால் அதன் எலும்பு வாய்வு மூலையில் இருக்கும். குதிரை தாண்டினால் அதன் எலும்பு வடக்கு மூலையில் இருக்கும் மனிதர் தாண்டினால் அவ்எலும்பு மத்தியில் இருக்கும்.

ஒரு மனிதன் எண்ணெய் தேய்த்துக்கொண்டு எந்த மூலையில் நின்று பார்க்கின்றானோ அந்த திக்கில் 73 அங்குலம் ஆழம் பள்ள மெடுத்துப் பார்த்தால் மனிதர் எலும்பு இருக்கும். பைத்தியம் பிடித்தவன் எந்தமூலையில் பார்க்கிறானோ அந்த மூலையில் 8அங்குலம் தோண்டிப் பார்த்தால் மனிதர் எலும்பு அகப்படும்.

இந்தப்படி பூமியைச் சோதித்து வீடுகட்டவேண்டும்.

## முளைகடாவும் அளவு; முளைக்கயிறு கால்

120. பகர்ந்ததோர் முளைக்கு நீளம் பதினொரு விரல் தொடங்கி
இகழ்ந்ததோர் விரலால் எற்றி இருப்பது நான்குங் கொள்க
மகிழ்ந்தவை கடாவும் போது வாஸ்துவின் வயிற்றில் கெல்லி
உகந்ததென் மூலை தன்னை யுற்றுமுன் னிடமாய்த் தாக்கே.

இ-ள்:- முளைக்கு நீளம் 11விரல் தொடங்கி ஒருவிரல் ஏறிட்டு இருபத்து நான்கு விரல் அளவுங்கொள்வது. முளைகடாவும் போது வாஸ்துவின் வயிற்றில் கெல்லி பின்பு தென்மேல் மூலையில் கடாவி தென்கீழ், வடகீழ், வடமேல் மூலைகளில் கடாவிவிடவும் எ-று.

## மரமிசைத்தல் மறுவாசல் தோஷம்

121. கொட்டு முளைத்தட்டிப் பறித்தல் கொத்தே பிடித்த கயிறறுத்தல்
நட்ட காலைப் பின்பறித்தல் நடுவில் ஆணி மரம் இசைத்தல்
விட்டவாசல் தனையடைத்து வேறே வாசல் தனைவிடுத்தல்
சட்ட மனையாள் தனை இழக்கும் தானும் மரணம்தப்பாதே.

இ-ள்:- கொட்டின முளையைத்தட்டிப் பறித்தாலும், செவ்வையாகப் பிடித்த கயிறு இற்றாலும், ஒரு காலைநாட்டி அதைப்பின் பறித்தாலும், மனைநடுவில் ஒரு மரத்தை இசைத்தாலும், விட்ட வாசலை அடைத்து வேறொரு வாசல் விட்டாலும் பொல்லாத தோஷம் எ-று.

## முகடுகுத்தி மாறு கயிறு

122. கூறுவிர லான்முகடு கொண்டமறு மாடி
மாறுகயிறு ஆனவைகள் வாழமனை எடுக்கில்
ஈடுபடு நோய்நலியும் இல்லவனும் இல்லாள்
வேறுபடு வெம்பகை விளம்புவது மெய்யே.

இ-ள்:- முகடுகுத்தாகவும், மாறு கயிறாகவும் மனை எடுக்கில் பொல்லாத தோஷத்தைக் காட்டும் எ-று.

மறுமாடி-முளை-நற்குறி-துற்குறி

123. குடக்கும் தெற்கும் மனைபேரில் குற்றம் மிகவேதான் உண்டாம்
வடக்குங் கிழக்கும் மனைபேரில் வசியம்உண்டு மிகநன்றாம்
எடுப்புஞ் சாய்ப்பும் மிகவாகாது எண்ணுங் கருமம் மிக வுண்டாம்
முடுக்குங் கோடி மறுமாடி மூலை வாங்கு கிலுந்தீதே.

இ-ள்:- மனைக்கு மேற்குந் தெற்கும் பெயர்த்துக் கட்டலாகாது வடக்குங்கிழக்கும் பெயர்த்துக்கட்ட நன்றாம். எடுப்புஞ்சாய்ப்பும் ஆகாது. நிற்கிலும் கோடி மறுமாடி மூலை வாங்கிப்போய் நிற்கிலும் ஆகாது எ-று.

## மண்வெட்டி முழக்கயிறு சகுனம்

124. மனைகோல வந்த மண்வெட்டி தானும்
முனைமுறிந் திடினும் முனைபறிந் திடினும்
இனமுறச் சேர்க்கும் இசைகயிறு இறினும்
வனைகுழ லாளே வந்திடும் துன்பமே.

இ.ள்:- மனைகோலுவதற்குக் கொண்டு வந்த மண்வெட்டி முனையானது முறியினும், முனையானது பறிந்திடினும் கயிறு அறுந்திடினும் ஆகாது. அதனால் என்னெனில் யசமானன், வாராத ஆபத்தும் மனசு கிலேசமும் அனுபவிப்பதும் அன்றி நீடூழி காலம் துன்பத்தை அனுபவித்து யமபதிக்குப் பாத்திரனாவான். ஆகையால் அந்த மனை ஆகாது எ-று.

## நான்கு வருணத்தாரும் பூணுநூல் கொள்ளும்விதி

125. மறையவன் தருப்பை நூலால் வான்புரி மூன்று கொள்க
இறையவன் கதம்பை தன்னால் இருபுரி யதுவே கொள்க
பெறுமென வைசியர்க் காகிற் பெண்ணைநார்புரியி ரண்டாம்
அறிவுள உழவர்க் காகில் ஆத்தி நூல் புரியி ரண்டே.

இ-ள்:- பிராமணர்கள் தருப்பைநூல் முப்புரி கொள்க; அரசர்கள் கதம்பை நூல் இருபுரி கொள்க; வணிகர்கள் பனைநார் இருபுரி கொள்க; சூத்திரர்கள் ஆத்திநார் இருபுரி கொள்க எ-று.

## தளமட்டம்

126. மட்டநீர் கொள்ள வேண்டின் மதித்திடத் தளத்தை நீயும்
திட்டமாய்ச் சதுர மாக்கித் திறமதாய் நடுவி லேதான்
வெட்டெனக் குழியைக் கெல்லி வேகமாய் நீரைவிட்டு
சட்டமாய் முளைக டாவி சார்பினிற் கயிறு கட்டே.

இ-ள்:- தளமட்டங் கொள்ளும்படி:-
நடுவில் சதுரமாகக் குழியைக் கெல்லி தண்ணீர் விட்டு நாலு திக்கும் முளைகடாவி கயிறுகட்டவும் எ-று.

127. நன்றென விட்ட நீர்தான் நாற்றிசை நண்ணி மேலும்
சென்றுமே முளையைத் தொட்டுச் சிதறியே நிற்கும் ஆகில்
மன்றமர் மதிநி லத்துள் மதித்ததோர் நூலால் கொண்டு
குன்றமர் குமரன் பாதம் குறிப்புடன் துதித்துப் போற்றே.

இ-ள்:- நடுவில் விட்டநீர் வழிந்தோடி நான்கு திக்கும் பரந்து முளையிலும் கயிற்றிலும் தாக்கி நின்றால் தளமட்டம் ஒக்கும் எ-று.

## கூரைக்கால் நாட்டல்—முகூர்த்தஞ் செய்தல்

128. அகலத்தை ஒன்ப தாக்கி அதிலொன்று குறைக்கக் கால்ஆம்
புகலுற்ற குழிக்கு இரண்டு போக்குமேல் ஆறு சுற்றின்
மிகலுற்றே கவர்வ தற்கு மேலது ஒன்று போக்கி
சகலர்க்கும் நடுவோர் ஐந்து கூறுஎனச் சாற்றி னாரே.

இ-ள்:- அகலத்தைப் பிடித்து 9 கூறுசெய்து அவற்றுள் ஒன்றைக் குறைக்கில் காலாம். கீழே குழி நாட்டுகைக்கு 2 கூறும் மேலே கவருகிறதற்கு ஒரு கூறும் போக்கி நடுவில் 5கூறு நிறுத்தவும் எ.று.

## மூலைக்கால் நாட்டும் விதி

129. முன்னிய முகூர்த்தந் தன்னில் முதல்வனைப் பூசை செய்து
பொன்னொடு மணியும் பாலும் பொலிவுடன் குழியில் பெய்து
தென்மேலை மூலைக் காலை சிறப்புடன் முந்த நாட்டி
தென்கீழும் வடகீழ் மேலை மூலையும் தெரிந்து நாட்டே.

இ-ள்:- நல்ல முகூர்த்தத்தில் விநாயகரைப் பூசை செய்து பொன் னும் நவமணியும் பாலும் குழியில்விட்டு முதல் தென்மேல், மூலைக் காலை நாட்டி தென்கீழ் மூலை, வடகீழ் மூலை, வடமேல் மூலைக் காலும் அடவு சேர நாட்டவும் எ-று.

130. இசைமுது தலைகீழ் ஆக இளந்தலை மேல தாக
பசையுடன் ஓர மாகில் பருத்தலை உள்ள தாக
வசமுற விசைப்பார் ஆகில் வாழ்வொடு சம்பத்து உண்டாம்
பிசகுதல் வருமே யாகிற் பிணியொடு கேட தாமே.

இ-ள்:- மரம் இசைக்கும் போது முது தலைகீழாகவும் இளந்தலை மேலாகவும்,நார்விசையாகில் முதுதலையுள்ளும் இளந்தலை பிறத் தியுமாக இசைப்பது நன்று. இதற்குப் பிசகு வருமாகில் பிணியுங் கேடு முண்டாம். இளந்தலை கீழும் முதுதலை மேலுமாக இசை பார்க்கில் நோயுண்டாம் எ-று.

131. முதுதலை இரண்டுந் தென்மேல் மூலையில் கூட வைத்து
திதமுற இசைக்கும் போது தென்தலை மேலதாக
மதியிளந் தலைஇ ரண்டும் வடகீழாம் மூலை தன்னில்
விதிவிடத் தலைகீ ழாக விளம்பினர் பிணைக்கத் தானே.

இ-ள்:- முது தலை இரண்டும் தென்மேல் மூலையில் பொருந்த வைத்து தென் தலை மேலாகவும், இளந்தலை இரண்டும் வடதிசை மூலையிற் பொருந்தவைத்து வடதலை கீழாகவும் பிணைக்கவும் எ-று.

132. இளந்தலை இரண்டும் வேறே இடத்தினில் இசைக்கல் ஆகா
வளம்படு முதுத லைகள் வகுத்ததென் மூலை யன்றி
விளம்பினோம் இசைப்பார் ஆகில் வெறுமைநோய் நலியும் என்றே
தெளிந்தவர் உரைக்கல் உற்றார் சிற்பியின் மூலை ஆய்ந்தே-

இ-ள்:- இளந்தலை இரண்டும் வடகீழ் மூலையொழிய வேறு இடத்தினில் இசைக்கலாகாது. முது தலை இரண்டும் தென்மேல் மூலையில் யொழிய மற்றஇடங்களில் இசைக்கலாகாது. இசைக்கில் வறுமையும் நோயுமுண்டாம் எ-று.

133. பரப்பினில் பாதி தன்னைப் பன்னிரு கூறு செய்து
நிறப்புறும் ஐந்து கூறு நின்றதும் ஏற்றம் அஞ்சாம்
இறப்புமஞ் சாகை யாறாம் ஏழது நடுவாங் கையா
முறப்புகொ டாகை யெட்டு மொன்றிது கோடி தானே.

இ-ள்:- பரப்பிற்பாதியைப் பன்னிரண்டு கூறுசெய்து இதில் ஐந்து கூறு ஏற்றம்அஞ்சு; ஆறு; மஞ்சாகை; ஏழு நடுவாகை; எட்டு மர மிசைக் கோடாகை; ஒன்பது கோடி யென்பதாம் எ-று.

# 5. மரத்தின் இலக்கணம்- பயன்படுத்தும் முறை

ஆண் மரம்

மரத்தின் அடிப்பாகமும், நுனிப்பாகமும் ஒரே அளவாய் ஒத்து இருக்கும். தூணைப்போல திரண்டு ஒழுங்காக இருக்கும். இவை ஆண் மரத்தின் அறிகுறிகளாம்.

வாசற்கால், சன்னல் போன்ற கால்களுக்கும் தூண்களுக்கும் ஆண் மரத்தையே பயன்படுத்துதல் வேண்டும்.

பெண் மரம்

அடிப்பகுதி பருத்தும் நுனிப்பகுதி சிறுத்தும் காணப்படும் மரம் பெண்மரம் என்று அறியலாம்.

இம்மரத்தை வீட்டின் உத்திரம் (விட்டம்), தாழ்வாரம், தாங்கிக்கட்டை, சிறியதூண், சுமையடைக் கட்டை போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

அலி மரம்

அடிமரம் சிறுத்து நீண்டு உயர்ந்து நுனிமரம் பருத்துக் காணப்பட்டால் அம்மரம் அலிமரம் எனப்படும்.

சிறுவிட்டம், பிறசட்டங்கள் போன்றவற்றிற்கு இவ் அலிமரத்தைப் பயன்படுத்தலாம்.

மரங்களுள்

| | | | |
|---|---|---|---|
| மாமரம் | — தேவர்களுக்குச் சிறப்புடையது ஆகும் | | |
| வேப்பமரம் | — அந்தணர்களுக்குச் | ,, | ,, |
| தேக்கு மரம் | — அரசர்களுக்குச் | ,, | ,, |

இலுப்பை மரம் — செட்டிகளுக்குச் சிறப்புடையது ஆகும்.
வேங்கை மரம் — வேளாளர்களுக்குச் ,, ,,

### மரம் அமைத்தல்

வாசற்கால், தூண் போன்று மரம் நின்றநிலையில் வைக்க வேண்டுமானால் மரத்தின் அடிப்பக்கம் கீழேயும் நுனிப்பக்கம் மேலேயும் அமையுமாறு நிறுத்துதல் வேண்டும்.

உத்திரம், விட்டம், குறுக்குக்கழிகள் போன்று பயன்படுத்த வேண்டுமானால்-

அடிப்பக்கம் தென்மேற்கு மூலையில் பொருந்துமாறு அமைக்க வேண்டும். அல்லது தெற்குத் திசையில் அமைதல் வேண்டும். உட்புறத்தே அமைதல்வேண்டும்.

மரத்தின் நுனிப்பக்கம் வடகிழக்குப்பக்கம் வடக்குப்பக்கங்களில் அமைக்கவேண்டும். நுனிப்பாகம் வெளிப்புறம் அமையலாம்

### வீடு கட்டுதற்கு ஆகாத மரங்கள்

அத்தி, ஆல், இச்சி, அரசு, இரவு, புரசு, குச்சம், இலந்தைக பீலி, மகிழம், விளா, ஆகிய மரங்களை வீடுகட்டுவதற்குப் பயன்படுத்தினால் செல்வம் அழியும். புத்திரப்பேறு குறையும். வறுமை மிகுந்து துன்பம் உண்டாகும்.

காற்றில் அடிபட்டு விழுந்தமரம், கோயில், மயானம் ஆகிய இடங்களில் இருந்தமரம் ஆகிய மரங்களைப் பயன்படுத்தி வீடு கட்டினால் செல்வம் குறையும். ஆயுள் குறையும். வமிசம் அழியும்.

பருத்தி, அகத்தி, பனை, நாவல், நெல்லி, எருக்கு, புளி,இலவு ஆகிய மரங்கள் வீட்டில் இருந்தால் செல்வம் அழியும்.

### மரங்கள் வெட்டும் விதி

நல்லநாள், யோகம், கரணம், இவற்றை அறிந்து மரம் வெட்டும் தச்சனுக்குத் தாம்பூலம், மலர், தட்சணை கொடுத்து மரம் வெட்டச் செய்யவேண்டும்.

### மரம் வெட்டும் நாள்

பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய ஐந்து திதிகளில் மரம் வெட்டுவது நல்லது. இத் திதிகளில் ரோகிணி நட்சத்திரம் சேர்ந்த நாளாயின் மிகவும் நல்லது .

மரம் வெட்ட ஆகாதநாள்

1. கிருத்திகை நட்சத்திரத்தில்— சூரியன் இருக்கும் நாள்

| | | |
|---|---|---|
| 2. திருவோணம் | — மூன்றாம் பாதம் நான்காம் பாதம் | இவற்றில் |
| அவிட்டம் | — மூன்றாம் பாதம் நான்காம் பாதம் | சுக்கிரன் |
| சதயம் | — மூன்றாம் பாதம் | இருக்கும் |
| பூரட்டாதி | — ,, ,, | நாள் |

| | |
|---|---|
| 3. திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்திரட்டாதி மகம், பூரம், உத்திரம், அஸ்தம் சித்திரை, சுவாதி ஆகிய 11 நட்சத்திரத்திலும் | சந்திரன் இருக்கும் நாள் |

ஆகிய நாட்களில் மரம் வெட்டுதல் கூடாது. ஏற்கனவே வெட்டிய மரமாயினும் வீட்டிற்குக் கொண்டு வரக்கூடாது.

## வாசற்கால் வைக்கும் முறை

பொது

திங்கள் — வாசற்கால், தூண் முதலியன வைக்கநன்று

புதன் — தையை வைத்து

வெள்ளி — கூரை வேய்தல், வீடு மூடுதல் தளம் இடுதல் ஆகியவற்றுக்கு மிகவும் நல்ல நாளாகும்

வியாழன் — குடிபுக மிகவும் உரியநாளாகும். இந்நாட்களைத் தேர்ந்து உரிய செயல்களை மேற்கொள்பவன் நீண்ட நெடுங்காலம் எல்லாவகைச் செல்வங்களுடனும் வாழ்வான்.

தெரு வாசற்கால்

வீடுகட்டுபவர்-

1. கிழக்கு நோக்கிய வாசற்படி வைக்கவிருக்கும் வீட்டினை ஆவணி மாதத்தில் கட்டவேண்டும். கடகம், சிங்கம் ஆகிய 2 இராசியில் சூரியன் நிற்க வீடு கட்டவேண்டும்.
2. தெற்கு நோக்கிய வாசற்படி வைக்கவேண்டிய வீட்டினை கார்த்திகை மாதம் கட்டவேண்டும். துலாம், விருச்சிகம் ஆகிய 2 இராசியில் சூரியன் நிற்க வீடு கட்டவேண்டும்.

3. மேற்கு நோக்கிய வாசற்படி வைக்க வேண்டிய வீடானால் மாசிமாதத்தில் அவ்வீட்டைக் கட்டுவதுநல்லது. மகரம், கும்பம் ஆகிய 2இராசியில் சூரியன்நிற்க வீடுகட்டுவது நல்லது.

4. வடக்கு நோக்கிய வாசற்படி வைக்கவேண்டிய வீடானால் அவ்வீட்டை வைகாசி மாதத்தில் கட்டுவது. நல்லது. மேஷம், ரிஷபம் ஆகிய இரண்டு இராசியில் சூரியன் நிற்க வீடுகட்டுதல் வேண்டும்.

வீட்டுக்கு உரியவரின் இராசிக்கு உரியதிசை தேர்ந்தெடுத்தல்

1. விருச்சிகம், மீனம், கடகம்— ஆகிய 3 இராசிக்காரருக்கும் கிழக்குநோக்கிய வீடு நன்மைதரும்.

2. ரிஷபம், மகரம், கன்னி ஆகிய மூன்று இராசிக்காரருக்கும் தெற்குநோக்கிய வீடு நல்லது.

3. துலாம்,மிதுனம், கும்பம் ஆகிய 3 இராசிக்காரருக்கும் மேற்கு நோக்கிய வீடு மிகவும் நல்லது.

4. தனுசு, மேஷம், சிம்மம் ஆகிய 3 இராசிக்காரருக்கும் வடக்கு நோக்கிய வீடு நன்மைதரும்.

வாசற்கால் வைக்கும் பாகம் தேர்ந்தெடுத்தல்

1. கிழக்கு நோக்கிய வாசற்படி உள்ள வீடானால் வடகிழக்கு மூலை முதல், தென்கிழக்கு மூலை முடிய உள்ள நீளம் அல்லது அகலப் பகுதியை அளந்து அதனை எட்டுப் பாகங்களாகப் பகுக்க வேண்டும். அவற்றுள் 3, 4, 5, 6 ஆகிய பாகங்களில் வாசற்படி வைக்க நன்மைதரும்.

2. தெற்கு நோக்கிய வாசற்படி உள்ள வீடானால் தென் கிழக்கு மூலைமுதல் தென்மேற்கு மூலை முடிய உள்ள நீளம் அல்லது அகல பாகத்தை எட்டுப் பாகங்களாகப் பகுக்கவேண்டும். அந்த எட்டுப் பாகங்களில் 3, 4, 5, 6 ஆகிய பாகங்களில் வாசற்படி வைக்க நன்மை உண்டாகும்.

3. மேற்கு நோக்கிய வாசற்படி உள்ள வீடானால் தென் மேற்கு மூலை முதல் வடமேற்கு மூலைமுடிய உள்ள நீளம் அல்லது அகல பாகத்தை அளந்து அதனை எட்டுப் பாகங்களாகப் பகுக்கவேண்டும். அப்பாகங்களில் 3, 4, 5, 6 ஆகிய பாகங்கள் எவற்றிலேனும் வாசற்படி வைக்கலாம்.

4. வடக்கு நோக்கிய வாசற்படி உள்ள வீடானால் வடமேற்கு மூலை முதல் வடகிழக்கு மூலை வரை உள்ள நீளம் அல்லது அகலபாகத்தை அளந்து எட்டுப் பாகங்களாகப் பகுத்து அவற்றுள் 4, 5, 6 ஆகிய பாகங்களில் வாசற்படி வைக்க நன்மை உண்டாகும்.

வாசற்கால் வைக்க நவக்கிரக பலன்

மேலே கூறிய படியே

1. கிழக்கு நோக்கிய வாசற்படிக்கு வடகிழக்கு மூலை முதலாக தென்கிழக்கு மூலை முடிய;
2. தெற்கு நோக்கிய வாசற்படிக்கு தென்கிழக்கு மூலை முதலாக வடகிழக்கு மூலை முடிய;
3. மேற்கு நோக்கிய வாசற்படிக்கு தென்மேற்கு மூலை முதலாக வடமேற்கு மூலை முடிய;
4. வடக்கு நோக்கிய வாசற்படிக்கு வடமேற்கு மூலை முதலாக வடகிழக்கு மூலை முடிய;

இவற்றுக்கிடையில் உள்ள நீளம் அல்லது அகலத்தை அளந்து அதை ஒன்பது பாகமாகப் பிரிக்க ஒவ்வொரு திசையிலும்

| | |
|---|---|
| முதல்பாகம் | — சூரியன் |
| இரண்டாம் பாகம் | — சந்திரன் |
| மூன்றாம் பாகம் | — அங்காரகன் (செவ்வாய்) |
| நான்காம் பாகம் | — புதன் |
| ஐந்தாம் பாகம் | — குரு(வியாழன்) |
| ஆறாம் பாகம் | — சுக்கிரன் (வெள்ளி) |
| ஏழாம் பாகம் | — சனி |
| எட்டாம் பாகம் | — இராகு |
| ஒன்பதாம் பாகம் | — கேது |

எனக் கொள்ளுதல் வேண்டும். இந்த நவக்கிரக பாகத்தில்:-

பிரகஸ்பதி பாகம்எனப்படும் 'குரு' பாகமாகிய ஐந்தாம் பாகத்தில் கோயிலுக்கு வாசற்கால் வைக்ககலாம்.

சுக்கிரன் பாகமாகிய ஆறாம் பாகத்தில் வீட்டிற்கு வாசற்கால் வைக்கலாம்.

புதன் பாகமாகிய நான்காம் பாகத்தில் மாட்டுத் தொழுவத்திற்கு வாசற்கால் வைக்கலாம்.

புதன், குரு, சுக்கிரன் ஆகிய 4, 5, 6 ஆம் பாகங்களில் கோயிலுக்கும் வீட்டிற்கும், மாட்டுத் தொழுவத்திற்கும் வாசற்கால் வைக்கலாம், வாசற்கால் $6\frac{3}{4}$ அடி உயரம் $3\frac{3}{4}$ அடி அகலம் (அல்லது)

$5\frac{1}{4}$ ,, ,, $2\frac{1}{4}$ ,, ,,

இருப்பது சிறந்தது.

வாசற்கால் இரண்டுவகை மரத்தால் செய்யக்கூடாது. தெரு வாசற்கால் தாழ்ந்தும் உள்வீட்டு வாசற்கால்கள் உயர்ந்தும் இருத்தல் வேண்டும். வாசற்படிக்கு எதிரில் கட்டைச்சுவர் குத்து காணக்கூடாது. அதேபோல தூலக் குத்தும் ஆகாது.

கதவுகள் ஒரே வகைப் பலகையால் அமைதல் வேண்டும். கதவினைத் திறந்து விட்டால் விட்ட இடத்தில் நிலையாக நிற்றல் வேண்டும். அவ்வாறு நில்லாமல் தானாக வந்து மூடிக்கொண்டாலும் ஓசை உண்டானாலும் தீமை விளையும்.

★

## மரத்தில் ஆண் பெண் அறிய

வேறு.

134. அடிதலை இரண்டும் ஒத்தல் ஆண்மரம் ஆகும் என்பர்
அடிப்பருத் திடிலே பெண்ணாம் அலியது தலைப்ப ருக்கும்
வடிவுடன் தூணுக்கு ஆணாம் வளைகள் உத்திரங்கள் போதி
வடிவுடன் விட்டம் சட்டம் மற்றவைக்கு ஏது மாமே.

135. அகலத்தோர் பாரி தன்னை ஆறுஇரு கூறு செய்து
சகலர்க்கும் ஐந்து கூறே தக்கதோர் ஓரம் அஞ்சாம்
மிகலும்மஞ் சாகை ஆறாம் ஏழது நடுவாங் கைக்கு
முகலுங்கோ டாகை எட்டு ஒன்பது கோடி தானே.

136. அஞ்சினில் இரண்ட தான கைக்குச்சரம் அளவு நீளம்
மிஞ்சிய முழம்மூன் றாக வேதித்து ஒன்றை யேற்றித்
தஞ்சமில் அத்தோடு எட்டுத் தாள்புனர் ஆக்கக் காலம்
மிஞ்சிடா து இரண்டு தானும் பிறவாசை என்ன லாமே.

## ஆண்மரம்

137. காணவே மரங்கள் தன்னைக் கருத்துடன் அறியும் போது
தூணெனத் திரண்டு நின்று சுத்தமாய் ஒழுங்க தாக
நீணுயர் பாரின் மீதில் நின்றிடும் ஆகில் நல்ல
ஆண்மரம் என்று சொல்லி அறைந்தனர் வேதத் தோரே.

இ-ள்:- மரமானது தூண் போலத் திரண்டு நின்று ஒழுங்காக இருக்குமாகில் ஆண்மரம் என்று சொல்லப்படும், எ-று.

## பெண்மரம்

138. கண்ணுற மரங்கள் தன்னைக் கருதியே பார்க்கும் போது
விண்ணுமை அடிப்ப ருத்து மேலது சிறுத்து நின்றால்
பெண்ணென வகுத்து நின்றாய் பெருமையாய் ஓதலம்பின்
நுண்ணெனத் தமிழை ஓதும் தூயனாம் மயன்சொன்னானே.

இ-ள்:- மரமானது அடிபருத்து நுனியானது சிறுத்து இருந்தால் அது பெண் மரம் என்று சொல்லப்படும் எ-று.

## அலி மரம்

139. இலங்கிய மரங்கள் தன்னை இயல்புடன் பார்க்கும் போது
நிலமதில் சிறுத்து நின்று நெடுமைய தாகிப் பின்னும்
தலையது மிகப்ப ருத்து தானது நிற்கு மாகில்
அலிமரம் ஆகும் என்றே அறைந்தனர் வேதத் தோரே.

இ-ள்:- மரமானது சிறுத்து நீண்டு நெடுமையாகித் தலை பருத்திருந்தால் அது அலிமரம் என்று சொல்லப்படும். எ-று.

## பயன்

140. கருதுஆண் மரமே யாகில் காலொடு தூணுக்கு ஆகும்
மருவுபெண் மரமே யாகில் வளையுத்திரம் பொதிகைக்கு ஆகும்
விரவுஅலி மரமே யாகில் விட்டமும் சட்டம் ஆகும்
உரவிய கைகள் ஆகி உத்தம மரங்கள் ஆமே.

இ-ள்:- ஆண்மரமாகில் கால்களுக்கும் தூணுக்கும் ஆகும்; பெண் மரமாகில் வளையுத்தரம் பொதிகைக்கும் ஆகும்; அலிமரமாகில் விட்டம் சட்டத்திற்கும் ஆகும்; கைகளுக்குத்த மரங்கள் நன்று எ-று.

141. மாமரம் தேவர்க்கு ஆகும் மறையவர் வேம்பது ஆகும்
கோமகன் தேக்கது ஆகும் குணமுள்ள இலுப்பை செட்டி
பூமகன் வேங்கை யாகும் பொருசாதி நான்கி னுக்குள்
தாமமாம் வல்லி மேவுந் தருமயன் சாற்று வாரே.

இ-ள்:- மாமரம் தேவருக்காகும்; வேம்பு பிராமணர்களுக்கு ஆகும்; தேக்கு அரசர்களுக்கு ஆகும்; இலுப்பை செட்டிகளுக்கு ஆகும்; வேங்கை வேளாளருக்கு ஆகும் எ-று.

மரத்தில் நன்மை தீமை அறிந்து உத்திரம் இணைக்கும் விதி

142. மாடமா ளிகைகள் ஆதல் மதித்ததோர் மண்ட பங்கள்
நீடிய மயனார் சொல்லும் நெறிதனை இயம்பக் கேளீர்
கூடிய மரங்கள் தன்னில் குணங்களாம் நன்மை தீமை
ஆடக மயிலி னாளே அறிந்தவர் உரைக்க லுற்றார்.

143. உத்திரம் இசைக்க வேண்டில் உன்னிநீர் கேளும் எல்லாம்
அத்தனை யகலந் தன்னை யளந்துநற் சதுரம் ஆக்கி
வைத்தன கன்ன னேரே வடிவுற நூலால் கண்டு
இத்தினை என்பதாக இசைத்தனன் குடுமி யாமே.

144. உத்திர மிசையில் ஆணி உலகத்தில் வலம தாகில்
அத்தனார் அருளி னாலே அனேகபாக் கியமுண் டாகும்
உத்திர மிசையில் ஆணி உலகத்தில் இடம தாகில்
சத்துரு பெருத்துப் பின்னும் சாலைதீப் படுகை திண்ணம்.

145. மையரும் மனைகள் தன்னில் மரத்தினை யிசைப்பான் ஆகில்
கையதில் பொருளும் போகும் காவலன் தானும் சாவன்
பையவே ஆகில் மையம் பாரிய பாதி தன்னில்
செய்யவே கடவ நல்ல சேர்ந்ததோர் இசையுந் தானே.

146. அடியது கீழ தாகும் அக்கிரம் மேல தாகும்
படிமுத லான தெல்லாம் பதத்துடன் இசைத்துக் கொள்க
முடியவே ஒரை யாகில் மூலமும் உள்ளே யாகும்
கடிகமழ் குழலி னாளே கண்டவர் உரைத்த வாறே.

வீடுகட்டுதற்கு உதவா மரங்கள்

147. அத்தியும் ஆலும் இச்சி அரசுடன் இலவு தானும்
நத்திய புரசு குச்சம் நவின்றிடும் இலந்தை பீலி
வித்தம மகிழம் கூறும் விளாவுடன் இவைகள் எல்லாம்
சித்தியாய் அகங்கள் கட்டச் செல்வமும் குன்றும் தானே.

இ-ள்:- அத்தி, ஆல், இச்சி, அரசு, இலவு, புரசு, குச்சம், இலந்தை, பீலி, மகிழம், விளா இவைகளால் வீடு கட்டினால் இருக்கப்பட்ட செல்வமும் புத்திரபாக்கியமும் குறைந்து வறுமை மேவிட்டு அதிக துன்பத்தை யுண்டாக்கும் எ-று.

148. சிறிய காற்றில் வீழ்ந்த திறமைசேர் மரமும் அல்லால்
கூறிய ஆல யத்தில் குணம்பெற நிற்கும் நல்ல
தேறிய மரம் மயானத்து இருந்திடும் மரம் அகந்தான்
மாறியே கட்டு மாகில் வமிசமும் நாச மாமே.

இ-ள்:- காற்றில் அடிபட்டு வீழ்ந்தமரம், ஆலயத்தில் இருந்த மரம், மயானத்தில் இருந்தமரம் இவ்வகைப்பட்ட மரங்களால் வீடு கட்டடஞ் செய்தால் செல்வங் குறைந்து ஆயுள் சீரணித்து வமிசம் நாசமாகும் எ. று.

149. பருத்தி அகத்தி பனைநாவல் நெல்லி
எருக்குப் புளிஇல வோடு எட்டும்
பெருக்க முடன்எந்த மனைஆ யிடினும்
இந்திரபதம் ஆனாலும் அந்தமனை பாழாய்விடும்

இ-ள்:- பருத்தி, அகத்தி, பனை, நாவல், நெல்லி, எருக்கு, புளி, இலவு இவ்வகைப்பட்ட மரங்கள் வீட்டில் இருக்கும் ஆகில் தாமரைக் கமலத்தில் வீற்றிருக்கின்ற இலட்சுமியானவள் இவ்விடத்தில் இருக்க மனமில்லாமல் வெறுத்து மனையை விட்டு நீங்குவாள் எ-று.

150. பருத்தி அகத்தி பனைநெல்லீ நாவல்
எருக்கு புளிஇலவ ஏறுஇலந்தை- நெருக்கமுடன்
இல்லத்தில் வேரோடில் இந்திரனே யானாலும்
செல்லப் போய் தீர்க்கும் திரு.

## மரங்கள் வெட்டும் விதி

வாரம், யோகம், கரணம் இவைகளை அறிந்து கர்த்தனுக்கும், சந்திரதார பலன் பார்த்துக்கொண்டு தச்சனுக்குக் கெந்தம், தாம்பூலம், புஷ்பம், தட்சணை கொடுத்துக் காட்டுக்கு அனுப்பி மரம் வெட்டினால் சுபம் உண்டாகும்.

## மரங்கள் வெட்டத் திதி நிர்ணயம்

பஞ்சமி முதல் ஐந்துநாளில் வெட்டினால் பூச்சி பிடியாது. இவ் ஐந்து நாளையில் ரோகணி நட்சத்திரத்தில் ஆனால் மிகவும் உத்தமம். வேலமரம் வெட்டினாலும் பூச்சி பிடியாது.

இதற்கு ஆகாநாள்:-

கிருத்திகை நட்சத்திரத்தில் சூரியன் இருக்கத் திருவோணம் அவிட்டம் மூன்றாம் பாதத்திலும், நாலாம் பாதத்திலும், சதயம் பூரட்டாதி மூன்றாம் பாதத்திலும் சுக்கிரன் நிற்க மரம் வெட்டல் ஆகாது.

முன்பு வெட்டின மரங்கள் ஆனாலும் இந்த நட்சத்திரத்திலும் இவர்கள் இருக்கும் போதும் வீட்டுக்குக் கொண்டு வரக்கூடாது.

பின்பு திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி இந்த 11 நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க மரம் வெட்டலாகாது.

வெட்டின மரங்கள் ஆனாலும் வீட்டுக்குக் கொண்டு வரக்கூடாது.

## கால் வைக்க, கை ஏற்ற நாள் இலக்கினம்

151. மதியினில் காலை நாட்டி வன்புதன் கையை வைத்து
விதியினால் வெள்ளி வேய்ந்து வியாழத்தில் குடியே புக்கில்
சதியுடன் பகைவர் வந்து தணலெரி மூட்டி னாலும்
பதிபெற இந்தி ரன்போற் பரிவுடன் வாழ்வர் தானே.

இ-ள்:- திங்களில் காலை நாட்டி, புதனில் கையை வைத்து, வெள்ளியில் வேய்ந்து, வியாழத்திற் குடிபுகுந்தால் தேவேந்திரன் போல் அஷ்ட ஐசுவரியமும் பெற்று நீடூழி காலம் செல்வம் நீங்காமல் கீர்த்தியுள்ளவனாய் வாழ்வான். எ-று.

### வீடுகளுக்குத் தெரு வாசற்கால் வைக்கும் இலக்கணம்

ஆவணி மாதம் கட்டும் வீட்டுக்குக் கிழக்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கார்த்திகை மாதம் கட்டும் வீட்டுக்குத் தெற்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்,

வைகாசி மாதம் கட்டும் வீட்டுக்கு வடக்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்.

எந்த மாதங்களில் வாசற்கால் வைத்தாலும் திசை அறிந்து வைக்க வேண்டும்.

கடகம், சிங்கம் இந்த இரண்டு இராசியில் சூரியன் நிற்க வீடு கட்டினால் கிழக்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்.

துலாம், விருச்சிகம் இவ்விரண்டு இராசியிலும் சூரியன் இருக்க வீடுகட்டினால் தெற்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்.

மகரம், கும்பம் இவ்விரண்டு இராசியிலும் சூரியன் இருக்க வீடுகட்டினால் மேற்குப் பார்த்த வாசற்படி வைக்கலாம்.

கன்னி, மிதுனம், தனுசு, மீனம் இந்த இராசியில் சூரியன் இருக்க வீடு கட்டினால் வாசற்கால் வைக்கலாகாது.

மற்ற இராசிக்காரர்

விருச்கிகம், மீனம், கடகம் இந்த மூன்று இராசிக்காரருக்கும் கிழக்குப் பார்த்த வீடு.

ரிஷபம், மகரம் இந்த ராசிக்காரருக்குத் தெற்குப் பார்த்த வீடு.

துலாம், மிதுனம், கும்பம் இந்த மூன்று இராசிக்காரருக்கும் மேற்குப் பார்த்த வீடு.

தனுசு, மேஷம், சிம்மம் இந்த இராசிக்காரருக்கு வடக்குப் பார்த்த வீடு.

துலாம் இந்தத் திக்கிலிருக்கின்ற இராசிக்குக் கர்த்தன் நாம இராசிக்கு மித்திருத்துவ மாகையால் நல்லது.

திசையறிந்து வாசற்கால் வைககும் விதி

கிழக்குப் பார்த்த வாசற்படியுள்ள வீட்டுக்கு ஈசானிய முதல் அக்கினி மூலை வரைக்கும் அளந்து அதை எட்டுப் பாகம் பண்ணினால்,

| | | |
|---|---|---|
| முதற்பாகம் | — | ஆனி |
| இரண்டாம் பாகம் | — | சோரம் |
| மூன்றாம் ,, | — | தனப்பிராப்தி |
| நான்காம் ,, | — | இராஜ சன்மானம் |
| ஐந்தாம் ,, | — | புத்திரவிருத்தி |
| ஆறாம் ,, | — | சுகம் |
| ஏழாம் ,, | — | துக்கம் |
| எட்டாம் ,, | — | ரோகம் |

மேற்குப் பார்த்த வாசற்படிக்கு நிருதிமூலை முதல் வாயு மூலை வரைக்கும் அளந்து எட்டுப்பாகம் பண்ணினால்,

| | | |
|---|---|---|
| முதற்பாகம் | — | ஆனி |
| இரண்டாவதுபாகம் | — | சத்துரு விருத்தி |
| மூன்றாவது ,, | — | சுகம் |
| நான்காவது ,, | — | தனம் |
| ஐந்தாவது ,, | — | பாக்கியம் |
| ஆறாவது ,, | — | சுகம் |
| ஏழாவது ,, | — | பயம் |
| எட்டாவது ,, | — | நாசம் |

வடக்குப் பார்த்த வாசற்படிக்கு வாயுமூலை முதல் ஈசானிய மூலை வரைக்கும் அளந்து எடடுப் பாகம் செய்தால்,

| | | |
|---|---|---|
| முதற்பாகம் | — | மனையாள் நாசம் |
| இரண்டாவதுபாகம் | — | பலஹீனம் |
| மூன்றாவது ,, | — | தன ஆனி |
| நான்காவது ,, | — | தானிய விருத்தி |
| ஐந்தாவது ,, | — | தனம் |
| ஆறாவது ,, | — | சௌக்கியம் |
| ஏழாவது ,, | — | துக்கம் |
| எட்டாவது ,, | — | பாதகர்மம் |

தெற்குப் பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலை முதல் நிருதி மூலை வரையில் எட்டுப்பாகம் பண்ணினால்,

| | | |
|---|---|---|
| முதற்பாகம் | — | தன ஆனி |
| இரண்டாவது பாகம் | — | சத்துரு விருத்தி |
| மூன்றாவது ,, | — | சுகம் |
| நான்காவது ,, | — | தனவரவு |
| ஐந்தாவது ,, | — | பாக்கியமுண்டாம் |
| ஆறாவது ,, | — | நன்மையுண்டாம் |
| ஏழாவது ,, | — | பயம் |
| எட்டாவது ,, | — | நாசமாம் |

இந்த பாகங்களின் இயற்கை தெரிந்து நல்ல பாகத்தைப் பார்த்து வாசற்கால் வைக்க வேண்டியது.

நவக்கிரகப் பலன்கள் அறிந்து வாசற்கால் வைக்கும் நிர்ணயம்:-

கிழக்குப் பார்த்த வாசற்படிக்கு ஈசானிய முதல் அக்கினி மூலை வரைக்கும் அடியளந்து ஒன்பது பாகம் பண்ணவும்.

தெற்குப் பார்த்த வாசற்படிக்கு அக்கினிமூலை முதல் நிருதி மூலை வரைக்கும் ஒன்பது பாகம் பண்ணவும்.

மேற்குப் பார்த்த வாசற்படிக்கு நிருதிமூலை முதல் வாயு மூலை வரைக்கும் ஒன்பது பாகம் பண்ணவும்.

வடக்குப் பார்த்த வாசற்படிக்கு வாய்வு மூலை முதல் ஈசானிய மூலை வரைக்கும் ஒன்பது பாகம் பண்ணவும்.

இந்நான்கு திக்குக்கும் முதற்பாகம் சூரியன்.

| | | |
|---|---|---|
| இரண்டாவது | — | சந்திரன் |
| மூன்றாவது | — | அங்காரகன் |
| நான்காவது | — | புதன் |
| ஐந்தாவது | — | குரு |
| ஆறாவது | — | சுக்கிரன் |
| ஏழாவது | — | சனி |
| எட்டாவது | — | இராகு |
| ஒன்பதாவது | — | கேது |

இந்த நவக்கிரக பாகத்தில் பிரகஸ்பதியிருக்கிற பாகத்தில் பிரதானம் கோயிலுக்கு வாசற்கால் வைக்கலாம்.

சுக்கிரன் பாகத்தில் வீட்டிற்கு வாசற்கால் வைக்கலாம்.

புதன் பாகத்தில் மாட்டுத் தொழுவத்திற்கு வாசற்கால் வைக்கலாம்.

மேலும் புதன், குரு, சுக்கிரன் இவைகளில் கோயிலுக்கும், வீட்டிற்கும், மாட்டுத் தொழுவத்திற்கும் வாசற்கால் வைக்கலாம்.

வாசற்காலுக்கு இடதுபாகத்தில் கதவு வைக்கப்படும்.

இப்டால் ஏழு சாண் நீளமும் மூன்று சாண் அகலமும் உள்ள வாசற்கால் உத்தமம்.

ஒன்பது சாண் நீளமும் ஐந்து சாண் அகலமும் உள்ள வாசற் காலும் உத்தமம்.

இரண்டு மரத்தினால் வாசற்கால் பண்ணலாகாது.

மூன்றுவித மரத்தினால் கட்டில் செய்யலாகாது.
கதவுக்கு ஒற்றைப்பட்ட பலகை சேர்த்துச் செய்ய வேண்டும்.
இரட்டைப் பலகை சேர்த்துப் பண்ணலாகாது.

வீட்டில் நுழையும் போது தூலக் குத்து ஆகாது.

வீட்டு வாசற்படிக்கு எதிரில் கட்டைச் சுவர் இருந்தால் சத்துரு பயமாம்.

தெரு வாசற்படி உயர்ந்து உள் வீட்டு வாசற்படி தாழ்ந்து இருக்கக் கூடாது. அப்படியிருக்கில் வரும் பலன் நீங்கி விடும.

## வாசற்படி வைக்கும் இலட்சணம்

ஒரு வீட்டிற்கு நாலு பக்கத்திலும் வாசற்படி வைத்திருந்தால் விசுவதோமுகம் என்று சொல்லப்படும்.

அதன் பலன் விருத்திப் பிரதம்.

கீழண்டை வாசற்படியில்லாமல் மூன்று பக்கத்திற்கும் இருந் தால் வியாக்கிரமபாதம் என்னப்படும்.

இதன்பலன் பசுக்களுக்கும் மிருகங்களுக்கும் பாதையாய் திருடர் பயமும் ஆகும்.

தெற்குமுக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலு மிருந்தால் பாக்கியப்பிரதம்.

மேற்குமுகமாக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்துக்கும் இருந்தால் ஸ்ரீநிலயம் என்று சொல்லப்படும்.

இதன்பலன் நன்றாக வாழ்வார்கள்.

வடக்குமுகமாக வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கத்திலும் இருந்தால் சூரியநிலயம் என்னப்படும்.

இதன்பலன் நாசம், பயம்.

விசுவ தெற்கு முகத்தில் சுவர் இல்லாமல் இருந்து கோண மத்தியில் சுவர் இருந்தால் அது புண்டரீகம் என்னப்படும்.

இதன்பலன் மத்திபம்.

## வாசற்கால் வைக்கும் விதி

152. வந்ததோர் மனையின் நீளம் வகுத்ததோர் முழங்கள் தன்னை
ஒன்பது கூறு செய்துஒரு மூன்றும் இடத்தே போக்கி
நின்றதோர் வலத்தில் ஐந்து நீக்கியே நின்ற கூறில்
அன்பொடு வாசலாக அறிந்தவர் உரைத்த வாறே.

153, ஊனமில் மனையில் வந்த முழந்தனை அளந்து கொண்டு
மானிடர் தமக்கு வாசல் மையத்தில் இடத்தே யாகும்
தேனமர் குழலி னாளே தேவர்கள் தமக்கு மையம்
ஆனது வாசல் என்றே அறிந்தவர் உரைத்த வாறே.

கதவுக்கு நெம்பு, முளை—ஏடுகளுக்கு இரட்டைத் துவாரம் இடும் விதி

154. நாலுக்கு மூன்றுக்கு நடுவுக்கு நடுவே
காலுக்குங் கதவுக்கும் கம்பைக்கும் இதுவே
மேலுக்குங் கீழுக்கும் நடுவுக்கும் உடலாம்
ஓலைக்கு நூலுக்கும் உளவுற்று வையே.

## நில அளவு

155. நிலஅக லங்கள் கொள்ள நேர்படச் சொல்லும் போது
நிலஅக லத்தி னாலே கனமது நீட்டிக் கொண்டு
நிலஅக லத்தில் முக்கால் அரையது காலே யாதல்
நிலஅக லத்தால் வந்த நிலத்தளவு ஒத்த தாமே.

## வெண்பா

156. ஒத்த நிலஅகலம் உண்மையுடன் உரைக்கில்
ஒத்த நிலத்தளவன் றெய்தினான் — மற்ற
எண் கூறு இட்டு ஆறரையும் மேற்கத் துளைஇரண்டும்
பண்பாகக் கொள்வாராம் பார்.

157. பார்க்குங்கூ றொன்றையும் பஞ்சமஞ்சு கூறு செய்து
ஆர்க்கவே யோகை யறிதல் ஒன்பதற்குச் — சீர்க்க
இரு கூறாம் இரு துளைக் கடாவியவை மூன்றும்
வருமாம் படியாக வை.

நில நீளம் வைக்கும் விதி

158. வைத்தசுவர் கனத்தை வாக்காறு கூறுசெய்து
ஒத்ததில் மையங் கிருப்புக்குத்—துத்துப்
புறம்பாக்கி நாலாம் பொருந்தும்மா மன்னர்க்குத்
திறம்பாமல் நூலாற் றெளி,

இ-ள்:- ஒன்றாக நீளம் ஒரு விரல் ஒத்தித் தள்ளி வைப்பது; யாதொரு நீளத்தையும் எட்டுப் பங்கு செய்து 7 உட்கூடு 1-9 செய்து மேல் 5, கீழ 4 தளமிட வைப்பது; நிலநீளத்தை 6 செய்து உட்கூடும் 2-9 செய்து மேல் 5 கீழ் 4 வேறு நில நீளத்தை ஏழு செய்து 6 உட்கூடு 1-6 செய்து மேல் 5, கீழ் 4 நிற்பதங்கள் பற்றிவைக்க வேண்டுமென்பதே. உட்கூடு விரல்-முறியாமல் வைப்பது உட்கோட்டில் பாதி போம். விரலொற்றிக் கொள்வது.

## கதவுகளின் இலக்கணம்

159. சிறப்புடை தேவர்க்கு அன்றே அடைத்தலுந் திறத்தல் தானும்
சிறப்புடை வடம்இ ரண்டாய் அடைத்தலுந் திறத்தல் தானும்
சிறப்புடை வடமது ஒன்றாய் தேவர்கட்கு அன்றி யாகா
சிறப்புடை கதவுங் கோலுஞ் சிக்கெனச் செய்வ தாமே.

160. இருக்கவே யாகும் ஆகில் ஒரு வடம் முன்நோய் செய்யும்
இருவடம் மறையோர் தேவர் மற்றெல்லா விடத்தும் ஆகும்
கருதுகோல் எவர்க்கும் ஒக்க இரட்டித்தல் தேவ ருக்காம்
மருவுதான் நடுவு கண்டால் மார்க்கமாம் அளவு தானே.

## இதுவும் கதவு இலக்கணம்.

161. ஓடி யடைக்குமே லூர்திறந்து போற்றிடினும்
வாடி யதனை வருத்துவிக்கும்—வாடாது
நிற்கு நீற்கும் நிலை கெடுமே கேடாமே
கற்பகஞ்சேர் வாசல் கதவு.

இ-ள்:- மூடின கதவைத்திறந்து நிலையில் நிற்க வைக்கில் தானே வந்து சாற்றுமாகிலும் அதிக இறைச்சலிட்டாலும் உயிர்ச் சேதமுண்டாவதல்லாமல் மனையும் பாழாம். நின்ற நிலையில் நிற்குமாகில் நீடுழி காலம் வாழலாம் எ-று.

## விருத்தம்

162. தாளவே ஒன்று மூன்றும் ஐந்தின் பால் கதவு நிற்க
மீளவே தாம் கபாடம் விடும் அதன் ஓசை வேறு
காளமாங் கழுதை செக்குக் குரலது கவலை யாக்கும்
தாளம் வேழத்தின் ஓசை சங்கொலி மிகவும் நன்றே.

இ-ள்:- கதவைச் சாற்றும் போது கழுதைக்குரல் போலும், செக்கின் ஓசை போலும் சத்தம் உண்டாகில் தீராக் கவலையுண்டாம். யானைக் குரல் போலும் சங்கின் ஒலி போலும் சத்தமுண்டாகில் சகல பாக்கியமுண்டாம் எ-று.

163. மந்தமாய் வாத பித்தம் மருவியே நடந்திட் டாலும்
சிந்தையில் கிளியின் கூச்சல் சிதறியே கேட்டிட் டாலும்
அந்தமாய் நடுச்சட் டத்தில் ஆணியொன்று ஊன மாகித்
தொந்தமாய் இருக்கும் நோய்தான் தீராது துணிந்து சொல்லே.

இ-ள்:- கதவைச் சாற்றும் போது மந்தங் கொண்டு வாதம், பித்தம் என்னும் இரண்டு நாடி போல நடக்கினும் அல்லது கிளியைப்போல கீச்சென்று கூச்சலிடினும் நடுச்சட்டத்தில் ஆணி ஒன்று ஊனமென்று சொல்லவும். அது வீட்டிற்குடையவனுக்கு நோயை யுண்டாக்கும் எ-று.

## வெண்பா

164. கன்னியரே வாசல் கதவுசிக்கிச் செக்குஓசை
மன்னிடில் புத்திரனும் மத்திபமாம்—முன்னமே
கன்னியரைப் போக்கும் கவலை மிகப்படுத்தும்
அன்னமே சொன்னேன் அறி.

இ-ள்:- கதவைச் சாற்றில் சிக்கிச் செக்கோசை போல இரைச்ச விட்டு நடக்குமாகில், புத்திர பாக்கியமில்லை; மனையாள் மரண மாவாள்; மனக்கவலையுண்டாகும் எ-று.

165. கரும்பாலை போலே தானும் கதறியே கத்தும் ஆகில்
வரும்பால கர்க்கு நாசம் மங்கையர் இடத்தில் குற்றம்
பெரும்பாடு மெத்த உண்டு பெண்பழி தனையே வாங்கும்
அரும்பான கொங்கை மாதே ஐயத்தை விளைக்கு மென்னே.

இ-ள்:- கதவைச் சாற்றில் கரும்பாலை போல் சத்தமிடில் புத்திர நாசமும் பெண்பழியும் அதிக அவஸ்தையும் உண்டாம் எ-று.

## மனையில் கதவு அடைக்கும் குறி

166. ஓடி அடைக்க உயிர்போகும் ஓடாமல்
பாடி அடைக்கமனை பாழாகும்—பாடாமல்
நிற்கலும் அந்த நிலைக்கப் பெறுஞ்செல்வம்
ஒத்த கதரு என்றே ஓது.

## கதவு

167. நாயழுதாற் போலே நல்மனையில் கதவு
பேயழுதாற் போலே புலம்பினும் நோய்மிகுந்து
நொந்திடுவார் செல்வம் குறைந்திடுவார் பின்னும்
வெந்திடுவார் என்றே விரும்பு.

168. ஆடுங் கதவோசை அம்புவியில் நாரையைப் போல்
நீடிய காலம் நிறைந்திடும்-தேடிப்
புதைத்திடுவார் பொன்னைப் பூமிதனில் நன்றால்
மிகுத்திடுவார் என்றே விரும்பு.

169. பார்தனில் மனைசெய் வோர்க்குப்
பரிவுடன் மனையில் நாடிப்
பேர்உறைக்க தானும் பிலமுள்ள கதவி னோசை
சர்பபேர் வகையாய்க் கண்டு திறப்படு மொழியினாலே
நோய் பெறும் பலங்க ளெல்லாம் நன்மையாய் உரைக்க லுற்றேன்

170. தள்ளியே கதவு தானும் சடக்கென்று வலியான் போலே
துள்ளியே கத்து மாகில் துக்கமே மிகவுண் டாகும்
கள்ளிதான் சோர மாவாள் கடுக்கென மக்கள் சாகும்
தெள்ளியே தமிழி னாலே தெளிந்தவே தத்தி னோரே.

171. கதவினில் ஓசை தானும்...ஓத... போத்து போலே
விதமுடன் பேசு மாகில் வினையினால் மெலிந்து வாழ்வர்
சுதமுடன் பொருளும் போகும் தரணியில் வறுமை யாகும்
மதமுள்ள கொங்கை மாதே மனையினில் அணுகொட்
டாதே.

172. முறுக்கித் திருக்கிக் கொக்கதுபோல்
மூடு மங்கை த...த்த லொரு
பெருத்த செல்வம் குறையு மப்போ
பிசாசு வந்து மேலாகும்
வருத்தப் படுவார் நோய் மிகுத்து
மனையாள் சொன்ன படிகேளாமல்
விருப்ப முடனே அரனாரும்
உரைத்தார் உலகம் அறிந்திடவே.

173. ஓரிபோல் ஊளை யிட்டு உயர்ந்து மொத்தத் துயரகல
நாரியர்க்கு இடுக்க மாகும் நன்மைகள் தினமே யாகும்
காரியம் சேதமாகும் கடுக்கன மக்கள் சாகும்
வீரியம் குறையுமென்று விளம்பினர் வேதத் தோரே.

174. கழுதையைப் போல வாசல் கதவுதான் கத்து மாகில்
பழுதுவந் துடைந்து மிக்கப் பகையினால் மெலிந்து வாடும்
அழுவது குரலு மாகும் ஆணம்போ லிரக்கப் பண்ணும்
முழுதுமப் படியா மென்று மொழிந்தனர் வேதத் தோரே.

175. வண்டது போலே வாசல் கதவுதான் கத்தும்போது
நன்றது ஆகு மப்போ நலமுடன் மக்கள் பேறாம்
நின்றது தங்கி ஆனம தன்னைப் போல் பேசு மாகில்
கொண்டவள் சாவா ளென்று கூறினர் வேதத் தோரே.

176. ஓங்கிய கதவு தானும் ஓந்திப்போல் சீறி மெத்தத்
தாங்கியே கத்து மாகில் சத்துரு பொருந்து பின்னும்
தூங்கியே து மக்கள் சாவாம் ... ... ...
பாங்கிகேள் மயனார் சொன்ன பழிபடு மென்று பாரே.

177. நீடிய கதவு தானும் ஊழிபோல் முழங்கு மாகில்
சூடிய பொன்னும் முத்தும் துலங்கவே இலங்கி வாழும்
கூடிய வேசி யோடே குணமுள்ள கள்வ னாகும்
நீடிய மயனார் சொன்ன நிச்சயம் அறிந்து கூறே.

178. சங்கது போலே சாத்தித் தாளம் போல் மூடு மாகில்
பொங்கம துடனே தானும் புத்திரன் மிகவுண் டாகும்
துங்கமால் மாது சேர்வாள் சோபன மிகவுண் டாகும்
தங்கமே பொழியு மென்று சாற்றினார் வேதத் தோரே.

179. கதறியே சிக்கிச் சிக்கிக் கரும்பாலை செக்குப் போலே
பதறியே ஓசை கண்டால் பதியைவிட் டேகப் பண்ணும்
குதறிய மைந்தன் நோவாங் கோழுண்ணு சாவான் பின்னும்
சிதறியே அழியு மென்று செப்பினார் வேதத் தோரே.

180. ஆடிய கதவி னோசை ஆண் குரல் செக்கு போல
கூடியே கத்து மாகில் குபேரனைப் போலே வாழ்வார்
நீடிய பிள்ளை பெண்டிர் நீள்நெடுங் காலம் வாழ்வார்
சாடி நோய் வருத்து மென்று சாற்றினார் வேதத் தோரே.

181. பேசிய கதவு தானும் பெண்குரல் செக்குப் போலே
வாசியாய்ப் பேசு மாகில் மனையினில் தனமுண் டாகும்
மாசி யாய் ஆலை போலக் கூறிடு மாகி லேதான்
மாசில்லா மயனார் சொன்ன மனையினில் வாழ்வொண்
ணாதே.

182. சங்கது போலே வாசல் கதவுதான் சாத்து மாகில்
செங்கண்மால் மாது மாது சேர வோன சேற வோன
துங் காய நது தாழாற றேரை தன்னைப் போல் பேசு மாகில்
தங்கமே அழியு மென்று உரைத்தனர் வேதத் தோரே.

183. தும்பி போல் கதவு தானும் துய்யவே கத்து மாகில்
வம்பிடு பேய்கள் கூட்டம் மனையிலே மிகுதி யாகும்
வெம்பிபோல் இடுக்கம் வந்து விதத்தைதான் விளம்ப
லுற்றேன்.

184. பேரிகை மேளம் போலே பேசினால் கதவி னோசை
நாரியர்க் கிடுக்க மாகும் நய்யவே பிணிகள் கூடும்
காரியம் சேதமாகும் கடு கன விதன முண்டாம்
ஊரைவிட் டகலு மென்று உரைத்தனர் வேதத் தோரே.

185. வக்குது செக்குப் போலே வகுத்திடக் கதவி னோசை
சிக்கென மனையாள் சாவாள் சிறுவனும்..... ........யாகும்
மிக் கன பெண் பி சாசும் மிகுத்திடும் மனையில் தானும்
துக்கமே செய்யு மென்று செப்பினார் வேதத் தோரே.

186. மண்டினிக் கதவின் ஓசை மகுடி பூரிகையைப் போலே
நண்டில்லை மனையாள் ரென்றாம் நாடிய பிராளை
யொன்று
அன்றிய பொனங்கள் மூண்டு அகத்திக லொன்று சாகும்
என் றிடை புவன மெல்லாம் இயலுடன் அறிந்து கூறேன்.

187. கரும் பாலை போலே வாசல் கதவது கத்து மாகில்
வரும் பால கற்குத் துன்பம் வந்திடும் மனையில் குத்தம்
மங்கை மா தே அலைச் சலும் குடுக்கும் வாறே.

188. செகத்துத் தா—ற போலே திகைத்திடும் கதவிர் ஓசை
மிகவே பிள்ளை இரண்டு மிகுத்திடு பெண்கள் மூன்றாம்
தக்கவே ஒருவன் நோயன் தடுக்கில்லை கலகப்ப ராயன்
அதிவிறந் தாரென்று செப்பினார் வேதத் தோரே.

★

# 6. வாஸ்து புருஷன்

## பொது

வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்தில் சூரியன் நின்ற இராசியில் காலை நீட்டி அந்த இராசிக்கு எதிராக அதன் ஏழாம் இராசியில் தலையை வைத்துப் படுத்திருப்பான். எப்போதும் இடக்கைக் கீழும் வலக்கை மேலுமாகவே வைத்துப் படுத்திருப்பான்.

வாஸ்து படுத்திருக்கும் இராசிகள்

| தலை வைக்கும் இராசிகள் | கால் நீட்டும் இராசிகள் | நோக்கும் திசை |
|---|---|---|
| 1. கன்னி, துலாம், விருச்சிகம். (மேற்கு) | மீனம், மேடம், ரிஷபம். (கிழக்கு) | வடக்கு |
| 2. தனுசு, மகரம், கும்பம். (வடக்கு) | மிதுனம், கடகம், சிங்கம். (தெற்கு) | கிழக்கு |
| 3. மீனம், மேடம், ரிஷபம். (கிழக்கு) | கன்னி, துலாம், விருச்சிகம். (மேற்கு) | தெற்கு |
| 4. மிதுனம், கடகம், சிங்கம். (தெற்கு) | தனுசு, மகரம், கும்பம். (வடக்கு) | மேற்கு |

வாஸ்து எழுந்திருக்கும் நாட்கள்

| மாதம் | தேதி | நாழிகை | செயல்படும் நேரம் |
|---|---|---|---|
| சித்திரை | 10 | 5 | காலை-8-00 மணி முதல் 9-30 முடிய |
| வைகாசி | 21 | 8 | ,, 9-12 ,, ,, 10-42 ,, |
| ஆடி | 11 | 2 | ,, 6-48 ,, ,, 8-18 ,, |
| ஆவணி | 6 | 21 | பிற்பகல்-2-24 ,, ,, 3-54 ,, |
| ஐப்பசி | 11 | 2 | காலை-6-48 ,, ,, 8-18 ,, |
| கார்த்திகை | 8 | 10 | ,, 10-00 ,, ,, 11-30 ,, |
| தை | 12 | 8 | ,, 9-12 ,, ,, 10-42 ,, |
| மாசி | 20 | 8 | ,, 9-12 ,, ,, 10-42 ,, |

வாஸ்து செயல் படும் நேரங்களாகிய மேலே குறிப்பிட்ட 3¾ நாழிகை (1மணி-30 மணித்துளிகள்) களில்:—

| நேரம் | | செயல் | பயன். |
|---|---|---|---|
| முதல் ¾ நாழி | (18 மணித்துளிகள்) | குளித்தல் | அரச பயம் ஏற்படும். |
| இரண்டாவது ,, | ( ,, ) | பூஜை | துன்பம் உண்டாகும். |
| மூன்றாவது ,, | ( ,, ) | உணவு | வறுமை உண்டாகும். |
| நான்காது ,, | ( ,, ) | தாம்பூலம் | புத்திரப் பேறு உண்டு |
| ஐந்தாவது ,, | ( ,, ) | ஆட்சி | மிகுந்த நன்மை விளையும். |

வாஸ்து வானவன் விழித்திருக்கும் 3¾ நாழியில் இவ்வாறு ஐந்து வகையான தொழில்களை முடிக்கிறான். அந்தந்த தொழிலுக்குரிய நேரத்தின் பயனை அறிந்தால், முதல் மூன்று முக்கால் நாழி நேரங்கள் (2¼ நாழி) எந்த செயலைத் தொடங்கினாலும் தீமை தருவதாகவே அமைகின்றன. எனவே சிறந்த பயனைத் தருவனவாகிய நான்காவது, ஐந்தாவது முக்கால் நாழி நேரங்களைத் தேர்ந்து அந்த நேரங்களில் நல்ல காரியங்க்ளைத் தொடங்குதல் வேண்டும்.

வாஸ்து புருஷன் எழுந்திருந்து செயல்படும் மேல் கண்ட எட்டு மாதங்களிலும் குறிப்பிட்ட நாட்களிலும் நேரங்களிலும் சிறந்தனவற்றைத் தேர்ந்து மனை கோலுதல் வேண்டும்.

இவற்றை அறியாது செய்தால் பலவகைத் தீமைகளும் ஏற்படுவது உறுதி.

வாசல் விடுதல்—பொது

வாஸ்து புருஷன் படுத்திருக்கும் போது அந்தந்த மாதங்களில் அவன் முகம் நோக்கியிருக்கும் திசை அறிந்து வயிற்றுப் பாகத்தில் வாசல் விடுதல் வேண்டும்.

வாசல் விடும் திசை

| மாதம் | தலைதிசை | கால்திசை | பார்வைத் திசை | வாசல்விடும் திசை |
|---|---|---|---|---|
| 1. சித்திரை வைகாசி | மேற்கு | கிழக்கு | வடக்கு | வடக்கு |
| 2. ஆடி ஆவணி | வடக்கு | தெற்கு | கிழக்கு | கிழக்கு |
| 3. ஐப்பசி கார்த்திகை | கிழக்கு | மேற்கு | தெற்கு | தெற்கு |
| 4. தை, மாசி | தெற்கு | வடக்கு | மேற்கு | மேற்கு |

வாசல் விடும் பகுதி

வாஸ்து புருஷனின்,

1. தலைப் பகுதியில் வாசல் விட்டால் — தலைவன் மரணமடைவான்.
2. மார்புப் பகுதியில் ,, — மனை எரிந்து போகும்.
3. கைப் பகுதியில் ,, — குழந்தைகள் மரணமடைவர்.
4. வயிற்றுப் பகுதியில் ,, — சிறந்த வாழ்வு உண்டாகும்.
5. முதுகுப் பகுதியில் ,, — அரசபயம் ஏற்படும்.
6. கால் பகுதியில் ,, — மனைவிக்குத் தீங்கு ஏற்படும்,

வாசல் விடும் திசைகளை ஆராய்ந்து பார்த்து, வீடுகட்டும் திசைகளுக்கு ஏற்ப வீடுகட்டத் தகுந்த மாதங்களை அறிதல் வேண்டும். அதாவது:-

1. கிழக்கு நோக்கிய வாயிலை உடைய வீடுகட்ட விரும்புவோர் ஆடி, ஆவணி மாதங்களில் வீடுகட்ட வேண்டும்.

2. வடக்கு நோக்கிய வாயிலை உடைய வீடுகட்ட விரும்புவோர் சித்திரை, வைகாசி மாதங்களில் வீடுகட்ட வேண்டும்.

3. மேற்கு நோக்கிய வாயிலை உடைய வீடுகட்ட. விரும்புவோர் தை, மாசி மாதங்களில் வீடுகட்ட வேண்டும்.

4. தெற்கு நோக்கிய வாயிலை உடைய வீடுகட்ட விரும்புவோர் ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வீடுகட்ட வேண்டும்.

★

## சனற் குமார வாஸ்து சொல்லிய கிரக ஆரம்பவிதி

189. இலக்கினமுன் விரயந் தன்னில் நலமிலாப் பாவி நிற்க
முக்கியமாய்க் கர்மந் தன்னின் முனிந்தொரு பாவி கூட
நிற்குமிவ் வேளை தன்னில் நீடிய கிரகா ரம்பந்
துக்கமாய் வறுமை சோரம் சொல்லுயிர் இழப்பர் தாமே.

190. இலக்கினத்துக் கியமாம் ராசி நன்வலஞ் சுகம்உண் டாகும்
மிக்கவே யிடமே யாகின் இடர துகளத்தி ரர்க்காம்
சொக்குமா மதிஆ ருக்கன் கோலபாபி திருட்டிக் குள்ளாய்
நிற்கவே கிரகஆ ரம்பம் நிகழ்ந்திடும் உயிர தாமே.

## வாஸ்து புருஷன் கிடக்கை

191. திங்களில் இராசி நிற்கும் திசைதனிற் காலை நீட்டி
இங்கெதிர் தலையை வைத்தே யிடதுகை கீழ தாகப்
பொங்கிய வலக்கை மேலாய்ப் பூதலம் விளங்க வென்று
மங்கையே சொல்லக் கேளாய் வாஸ்துவின் கிடக்கை தானே.

இ-ள்:- வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்து ராசியில் காலைநீட்டி அதற்கு எதிராகிய ஏழாம் ராசியில் தலையை வைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடப்பன் எ-று.

மேற்கோள்

192. எத்திசை அயனும் மாலும் இரவிதான் நிற்கும் போதும்
அத்திசை காலை நீட்டி யதற்கு ஏழில் தலையை வைத்து
மெத்தென இடக்கை கீழாய் வலக்கைதான் மேல தாக
வைத்திடுங் கண்ணி னாளே வாஸ்துவுங் கிடப்பன் தானே.

வாஸ்துவுக்கு இராசி வீடு

193. மீனமும் ஆடும் ஏறும் மேற்றிசை தலைய தாகி
ஊனம் அற்று இடக்கை கீழாய் உத்திரத் திசையை நோக்கி
சேனைவா சவன்தான் வாழுந் திசைதனில் காலை நீட்டி
மான்எனும் விழியாய்க் கேளாய் வாஸ்துதான் கிடக்கும் வாறே.

இ-ள்:- மீனம், மேடம், ரிஷபம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, கன்னி, துலாம், விருச்சிகம் இந்த மூன்று,இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும், வலக்கை மேலுமாக உத்நரத் திசையை நோக்கி இந்திரன் திசையில் காலை நீட்டி வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

194. தண்டொடு நண்டு சிங்கம் தலையது வடக்கே வைத்து
எண்திசை இடக்கை கீழாய் வலக்கைதான் மேல தாக
திண்திறல் இயமன் வாழுந் திசைதனில் காலை நீட்டி
வண்டணி குழலி னாளே வாஸ்துவுங் கிடக்கும் வாறே.

இ ள்:- மிதுனம், கடகம், சிங்கம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, தனுசு, மகரம், கும்பம் இம்மூன்று இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக யமன்மூலையில் காலைநீட்டி வாஸ்து புருஷன் கிடப்பான் எ-று.

195. கன்னியும் துலாமும் தேளுங் கதிர்முடி திசையில் வைத்து
மன்னிய வருணன் மேலே மகிழ்பெறக் காலை நீட்டி
இன்னிசை இடக்கை கீழாய் இயமன்தன் திசையை நோக்கி
வன்னமா மாதே கேளாய் வாஸ்துதான் கிடக்கும் வாறே.

இ-ள்:- கன்னி, துலாம், விருச்சிகம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, மீனம், மேஷம், ரிஷபம் இம்மூன்று இராசியில் சிரசை வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக மயன் திசையை நோக்கி வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

196. தனுசொடும் மகரம் கும்பம் தலையது தெற்கே வைத்து
மனுவொடு இடக்கை கீழாய் வலக்கைதான் மேல தாக
மனமொடு முகமும் மேற்கு வடக்கினில் காலை நீட்டி
வனமுலை மாதே கேளாய் வாஸ்துவும் கிடக்கும் வாறே.

இ-ள்:- தனுசு, மகரம், கும்பம் இம்மூன்று இராசியில் காலை நீட்டி, மிதுனம், கடகம், சிங்கம் இம்மூன்று இராசியில் சிரம் வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலும் மேற்கே முகமும் வடக்கே காலுமாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

வாஸ்துவினிருப்பு

197. திங்கள்ஓர் இராசி தன்னில் திகழவே சிரசை வைத்து
பொங்கிய இராசிக்கு ஏழாய்ப் புகன்றிடும் இராசி தன்னில்
தங்கிய காலை நீட்டிச் சகப்பிர திட்டை யாக
மங்கையே சொல்லக் கேளாய் வாஸ்துதான் கிடக்கும் வாறே.

இ-ள்:- மாதம் ஒரு இராசியில் சிரம் வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் காலை நீட்டி ஜெகப் பிரதிட்டையாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

198. துங்க பானு தான்நின்ற துய்ய இராசி நிலையறிந்து
அங்கே பாதந் தனைநீட்டி அதனுக்கு ஏழில் தலைவைத்து
பங்கை இடக்கை கீழாகப் பகரும் வலக்கை மேலாக
மங்கே பூத லந்தனிலே வாஸ்து புருஷன் கிடப்பதுவே.

இ-ள்:- ஆதித்தன் நின்ற இராசியில் காலை வைத்து, அதற்கு ஏழாம் இராசியில் சிரம் வைத்து, இடக்கை கீழும் வலக்கை மேலுமாக வாஸ்து புருஷன் கிடப்பன் எ-று.

199. கிடப்பதும் இடக்கை கீழாய்க் கிடந்தவன் எழுந்தி ருந்து
நடப்பது வலமே யாகில் நல்லதோர் இராசி தோறும்
படுக்கையில் வயிறு பார்த்து பரிவுடன் வாசல் தன்னை
விடுப்பதும் இல்லை யாகில் வேதனை மூளு மன்னே.

இ-ள்:- இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடந்தவன் எழுந்திருந்து வருவது வலமாகில், படுக்கை, வயிறு அறிந்து வாசல் கோலாவிட்டால் வேதனையினாலே வாடுவார்கள் எ-று.

200. மேய வாஸ்து விரும்பு நிலையன்றி
தூய மாமனை கோலத் துவக்கிடில்
நேய மான மனைவியும் மக்களும்
ஆய்ந்த சிற்பன் அனைவரும் மாள்வரே.

இ-ள்:- வாஸ்துவின் நிதானம் அறிந்து மனைகோலான் ஆகில் யசமானும் மனைவியும், முகூர்த்தம் வைத்த சிற்பனும் இறப்பர் எ-று.

201. சாவது நிச்சயம் தன்மனை கோல்பவன்
பூவா வாஸ்து புருஷன்முன் சென்றிடில்
தாவ ரும்பகை சடுதியில் நேர்ந்திடும்
பாவ நோய்களும் பற்றும் உடம்பிலே.

இ-ள்:- வாஸ்து நிதானம் அறிந்து மனைகோலானாகில் சத்துரு பகையும் ரோகமும் உண்டாம் எ-று.

## வாஸ்து எழுந்திருக்கும் நாள்

202. சித்திரை வைகாசி ஆடி சிறந்த ஆவணியி னூடு
வைத்த ஐப்பசியும் மிக்க மன்னுகார்த் திகையுந் தானும்
மற்றதை மாதத் தோடு மாசிதான் எட்டும் ஆகும்
புத்தியால் மனைகள் கோல புகழுடன் நன்மை யாமே.

இ-ள்:- சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இவ்வெட்டுமாதமும் வாஸ்து எழுந்திருப்பன். இம் மாதங்களில் மனைகோலினால் சகல சம்பத்துமுண்டாகும் எ-று.

## சமயம் ஐந்திற்கும் வாஸ்து அதிகார இலட்சணம்

203. செய்யவாஸ் துவின்தன் நாட்டம் திறமுடன் விழித்து நோக்கில்
துய்யதோர் கடிகை மூன்று துரிதமுக் காலுக் குள்ளே
உய்யவே முதலாம் வேளை உவந்ததோர் கடிகை முக்கால்
நையவே தந்த சுத்தி ராசனார் பயம்உண் டாமே.

இ-ள்:- வாஸ்துவின் அதிகார இலட்சணமாவது:-

நாழிகை மூன்றே முக்காலுக்குச் சமயம் ஐந்து. முதற்சமயம் கடிகை முக்காலுக்குள் தந்த சுத்தி செய்வான். அதில் முகூர்த்தஞ் செய்தால் அரசரால் பயமுண்டாம் எ-று.

204. ஏற்றிய இரண்டாம் வேளை யெழில்உயர் கடிகை முக்கால்
போற்றிய ஸ்தானம் செய்வன் பொருந்திய பீடை உண்டாம்
சாற்றிய மூன்றாம் வேளை தக்கதோர் கடிகை முக்கால்
மாற்றிய பூசை செய்வன் வறுமையால் வாடும் என்னே.

இ-ள்:- வாஸ்துவின் இரண்டாம் சமயமான கடிகை முக்காலுக்குள் ஸ்நானஞ் செய்வன். அதில் முகூர்த்தம் செய்தால் பீடையுண்டாகும்.

மூன்றாம் சமயமான கடிகை முக்காலுக்குள்ளே பூசை செய்வன். அதில் முகூர்த்தஞ் செய்தால் வறுமையால் வாடுவார்கள் எ-று.

205. பெருகிய நாலாம் வேளை பேருயர் கடிகை முக்கால்
அருமையாய் அசனம் செய்வன் அழகிய புத்திரர் உண்டாம்
திறமையாம் ஐந்தாம் வேளை சேர்ந்ததோர் கடிகை முக்கால்
மருவுதாம் பூலம் கொள்வன் மகிழ்ந்துஉத் தமம்என்று ஓதே.

இ-ள்:- நாலாம் சமயமான கடிகை முக்காலுக்குள் போசனம் செய்வன் அதில் முகூர்த்தம் செய்தால் புத்திர சந்தானம் உண்டாகும்.

ஐந்தாம் சமயமான கடிகை முக்காலுக்குள் தாம்பூலம் கொள்வன். அதில் முகூர்த்தம் செய்தால் மகாஉத்தமம் எ-று.

### வாஸ்து எழுந்திருக்கும் நாளறிய, மனைகோல, குடிபுக

வேறு

206. ஏற்றுஞ் சித்திரை யோர்பத்தில் இருபத் தொன்றில் வைகாசி
பார்த்த ஐப்பசி யோடுஆடி பதினொன்று ஆவணி ஓர் ஆறில்
கார்த்திகை எட்டு தைஈ ராறில் காணும்மாசி யிருபதனில்
வாஸ்து வுந்தான் எழுந்திருப்பன் மனைதான் வாசல் கோலலாமே.

இ-ள்:- சித்திரை மீ 10, வைகாசி மீ-21, ஆடி, ஐப்பசி மீ 11, ஆவணி மீ 6, கார்த்திகை மீ 8, தைமீ 12 மாசி மீ 20 இந்த தேதிகளில் வாஸ்து புருஷன் எழுந்திருப்பன். இந்நாளில் மனைகோலில் அவரவர்க்குப் பொருந்திய திக்கில் வாசல் விடலாம்; குடி புகலாம்.

## மேற்கோள்-உள்ளமுடையான்

207. கிடந்தான் மேடம் ஒருபத்தும் கிளரும் விடையு மூவேழும்
அடங்கோல் கடகம் பதினொன்றில் அரியோர் ஆறில் தேள் எட்டில்
குடந்தான் இருபத்து ஆமதனில் கூறு மகரம் பனிரண்டில்
இடந்தான் எடுக்க லாம்என்றார் எல்லா திசையும் நல்லோரே.

## வாஸ்து புருஷன் திசையறிந்து வாசல் விடும் விதி

வாஸ்து புருஷனுக்குப் பங்குனி, சித்திரை, வைகாசி இந்த மூன்று மாதமும் மேற்கே தலையானபடியால் வடக்கே வாசல் விடவும்.

ஆனி, ஆடி, ஆவணி இந்த மூன்று மாதமும் வடக்கே தலை யானபடியால் கிழக்கே வாசல் விடவும்.

மார்கழி, தை, மாசி இந்த மூன்று மாதமும் தெற்கே தலை யானபடியால் மேற்கே வாசல் விடவும்.

## வாஸ்து வீட்டின் பலன்-மேற்கோள்

208. துய்யதோர் வயிற்றில் வாசல் சுகமொடு செல்வம் உண்டாம்
கையது வாசல் ஆகிற் கைக்குழந் தைகளும் பாழாம்
மெய்யதா மார்பே யாகில் மேல்மனை எரிந்து போகும்
பையவே தலையது ஆகில்பதிக்குளோன் இறப்பன் என்னே.

## வாசல்

209. காலதே வாச லாகிற் கனங்குழல் சாவு சொல்லும்
சாலவே தலைய தாகில் தானவன் சாவு சொல்லும்
கோலிய முதுகே யாகிற் கோலினால் அச்ச முண்டாம்
வாலிய வயிற்றில் விட்டால் வான்பொருள் சேரும் அன்றே.

இ-ள்:- வாஸ்து புருஷன் கிடக்கையில் காலில் வாசல் விட்டால் மனையாளுக்குப் பொல்லாங்கு. தலையில் வாசல் விட்டால் கணவனுக்கு ஆகாது. முதுகில் வாசல் விட்டால் இராஜபயம் உண்டாம். வயிற்றில் வாசல் விட்டால் வாழ்வு உண்டாம் எ-று.

## வாஸ்து புருஷன் எழுந்திருக்கும் ஜாமம், தேதி, நாழிகை போசனம்

210. குண்டைமான் குடங்கள் எட்டில் கொடியதேள் பத்த தாகும்
நண்டுகோல் இரண்ட தாகும் நன்மேடம் ஐந்த தாகும்
திண்திறல் சிங்கந் தானே சிறந்தமூ வேழ தாகும்
வண்திறல் மறையோர் சொன்னார் வாஸ்துவும் உதிக்கும் வாறே.

இ-ள்:-

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை மாதம் | 10 | — | நாழிகை | ஐந்து |
| வைகாசி ,, | 21 | — | ,, | எட்டு |
| ஆடி, ஐப்பசி ,, | 11 | — | ,, | இரண்டு |
| ஆவணி ,, | 6 | — | ,, | இருபத்து ஒன்று |
| கார்த்திகை ,, | 8 | — | ,, | பத்து |
| தை ,, | 12 | — | ,, | எட்டு |
| மாசி ,, | 20 | — | ,, | எட்டு |

இந்த நாழிகைக்கு மேல் வாஸ்து புருஷன் எழுந்திருந்து $3\frac{3}{4}$ நாழிகை இருப்பான். அதில்

| | |
|---|---|
| முதல் $\frac{3}{4}$ நாழிகை | ஸ்நானம் |
| இரண்டாவது $\frac{3}{4}$ நாழிகை | பூசை |
| மூன்றாவது $\frac{3}{4}$ நாழிகை | போசனம் |
| நான்காவது $\frac{3}{4}$ நாழிகை | தாம்பூலம் |
| ஐந்தாவது $\frac{3}{4}$ நாழிகை | இராச்சிய பாரம் |

இந்தப்படி சென்றபின் படுத்துக் கொள்ளுவான் எ-று.

## மேற்கோள்

211. வாஸ்துவின் கிடக்கை மாதம் வாழ்மனை கோலிற் பாழாம்
மாற்றுநீர் படுக்கை தன்னில் மதியிலார் மனையெ டுக்கில்
நேத்தியாந் தலைவன் செத்து நிலைகேடாய்க் குலைந்து போவார்
தூற்றியாங் கெழுந்த போதே துதித்துநீ மனைகோல் மன்னா.

212. கூர்த்தநாள் முகூர்த்தம் தன்னைக் குறைவறப் பார்த்துக் கொண்டு
வாஸ்துவின் இடைய றிந்து மனைதனைக் கோலா னாகில்
சீர்த்ததன் பொருளுங் கேடாய் செய்தவை யனைத்தும் பாழாய்
மூர்த்தமாய் நாசஞ் செய்து முனியையுந் தொடரும் அன்றே.

இ·ள்:- நாள் முகூர்த்தமும், வாஸ்துவின் கிடக்கையும் அறிந்து மனைகோலானாகில் பொருளுஞ் சேதமாய், செய்தவையும் பாழாய், மனைகோலின சிற்பனையும் நோய் தொடரும் எ-று.

## வாஸ்து எழுந்திருக்கிற நாள்

சித்திரை, வைகாசி இந்த இரண்டு மாதமும் மேற்கே தலையும், கிழக்கே காலும் வடக்கு முகமாக இடக்கை கீழாய்க் கிடப்பன். கிழக்கு மேற்காக அகம் கட்டி, வடக்கு வாசல் விடவும்.

ஆடி, ஆவணி இரண்டு மாதமும் வடக்கே தலையும் தெற்கே காலுமாக இடக்கை கீழாய்க் கிடப்பன். தெற்கு வடக்காக அகம் கட்டி, கிழக்கே வாசல் விடவும்.

ஐப்பசி, கார்த்திகை இரண்டு மாதமும் கிழக்கே தலையும், மேற்கே காலுமாய்த் தெற்கே முகமாய்க் கிடப்பன். கிழக்கு மேற்காக அகம் கட்டி, தெற்கு வாசல் விடவும்.

தை, மாசி இந்த இரண்டு மாதமும் தெற்கே தலையும், வடக்கே காலுமாக மேற்கு முகமாய்க் கிடப்பன். தெற்கு வடக்காக அகம் கட்டி, மேற்கு வாசல் விடவும்.

வாஸ்து எழுந்திருக்கிற நாளில் அந்த அந்த மாதங்களில் எழுந்திருக்கிற நாழிகை பார்த்து வீடு எடுத்து வாசல் விட சுக வாழ்வாய் வாழ்ந்திருப்பார்கள்.

இப்படி இந்த எட்டு மாதமும் வாஸ்துவானவன் படுத்திருந்து எழுந்திருக்கிற வேளை நாள் பாராமல் வீடு கட்டினாலும் தரச் செய்தாலும் மத்திபமாய் வாழ்க்கையில் பீடையுண்டாம்.

★ ★ ★

# 7. மனை கோல நல்லநாள் தேர்ந் தெடுத்தல்

மனைக்கு உரியவனுக்குரிய பிறப்பு இலக்கினத்தை அடிப் படையாகக் கொண்டு சிறந்த நாளினைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். மனை கோலுதற்கு அவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டிய நல்ல நாட்களும் அவற்றின் பலன்களும்:-

1. பிறந்த இலக்கினத்திற்கு
   நான்காம் இடம் அல்லது பத்தாமிடத்தில் சந்திரன்,
   பதினோராமிடத்தில்-வியாழன், செவ்வாய், சனி

ஆகியோர் இருக்கும் நாளும் நேரமும் தேர்ந்து மனை கோலினால் அவ்வீடு நூறு ஆண்டு காலம் உயர்ந்து விளங்கும்.

2. பிறந்த இலக்கினத்தில் வியாழன், வெள்ளி (சுக்கிரன்)
   ஐந்தாமிடம் அல்லது மூன்றாமிடத்தில் சூரியன்,
   ஆறாமிடத்தில், செவ்வாய் ஆகியோர் இருக்கும்
   நன்னாளில் மனை கோலினாலும் நூறு ஆண்டு விளங்கும்.

3. பிறந்த இலக்கினத்தில் சந்திரன்'
   நாலாமிடத்தில் புதன், அத்தமனத்தில் வியாழன்

இவர்கள் கூடிய நன்னாளில் மனை கோலினால் அறுநூறு ஆண்டு நன்மை தரும்.

4. பிறந்த இலக்கினத்தில் அல்லது.
   பத்தாமிடத்தில் வெள்ளி, மூன்றா மிடத்தில் புதன்,
   அத்தமனத்தில் வியாழன்

இவர்கள் கூடிய நன்னாளில் மனை கோலினால் அறு நூறு ஆண்டு நன்மை தரும்.

5. பிறந்த இலக்கினத்தில் வியாழன்,
வெள்ளியின் வீட்டில் புதன்

இவர்கள் கூடிய நன்னாளில் மனைகோலினால் எண்ணூறு ஆண்டு நன்மை தரும்.

6. பிறந்த இலக்கினத்தில்
பத்தாமிடத்தில் சந்திரன், அத்தமனத்தில் சூரியன்

இவர்கள் கூடிய நன்னாளில் மனைகோலினால் ஆயிரம் ஆண்டு நன்மை தரும்.

7. பிறந்த இலக்கினத்திற்கு
ஏழாமிடத்தில் வியாழன், பத்தாமிடத்தில் சந்திரன்,
உதயத்தில் வெள்ளி இருக்க

ஆயிரம் ஆண்டு நலம் விளங்கும்.

8. பிறந்த இலக்கினத்தில்
வெள்ளி, வியாழன் இருக்க மனை கோலினால்
தீயினால் உண்டாகும் பயம் இல்லை.

9. கடகம், மகரம், மீனம் ஆகிய இலக்கினங்களில் சந்திரன் இருக்க வைக்கோல் போட வெற்றி உண்டாம்.

10. பூராடம், திருவோணம், உரோகிணி, உத்திரம் உத்திராடம், உத்திரட்டாதி, ஆயிலியம், மிருகசீரிடம் ஆகிய நட்சத்திரங்களில் வியாழன் இருக்க வியாழக் கிழமையில் மனை கோலினால் மகிழ்ச்சி உண்டாகும்.

11. சல இராசி எனப்படும்........ இராசியில் வெள்ளி இருக்க வெள்ளிக் கிழமையாகவும் வர அன்று மனை கோலினால் மிகுந்த செல்வம் உண்டு.

12. சல இராசியில்...... திங்கள் நிற்கத் திங்கட் கிழமையாகவும் வர மனை கோலினால் மத்திம பலன் உண்டு.

## கடைக்கால் எடுத்தல், சங்கு வைத்தல்

### சங்கு வைக்கும் இடம்

முதலில் வாஸ்து புருஷனின் படுக்கை அறிதல் வேண்டும். ஈசானிய மூலையில் தலையும் நிருதி மூலையில் காலுமாகக் கிடக்கும் போது, தலை முதல் கால் முடிய 9 பங்காக்கி, தலை முதல் 4 பங்கு தள்ளி, 5 ஆம் பங்கினை மூன்று பாகமாகப் பிரித்து, அவற்றின் மூன்றாம் பாகத்தில் கடைக்கால் போடத் தொடங்கலாம்; அல்லது சங்கு வைக்கலாம்.

### சங்கின் அளவு

உயரம் ஒரு முழம்; அடியில் கனம் 6 அங்குலம்; தலைக்கனம் ஒரு அங்குலம்.

### சங்கு மரம்

யானைக் கொம்பு, சந்தன மரம், வன்னி, ஆல், அரசு, அத்தி, கிச்சிலி, கருங்காலி, பரம்பை, வேங்கை, தேக்கு ஆகியவை சங்கு செய்யச் சிறந்த மரங்கள். இவற்றுள் வேங்கை, தேக்கு ஆகிய மரங்கள் அனைவருக்கும் உரியனவாகும்.

### சங்கு வைக்கும் முறை

இரண்டு முழம் நீளம், அகலம் உள்ள இடத்தைச் சமன் செய்து, நல்ல நேரம் பார்த்துச் சங்கினை நீரினால் தூய்மை செய்து மஞ்சள், குங்குமம் சந்தனம் இட்டு, மலர் தூவிப் பூசை செய்து சமன் செய்யப்பட்ட நிலத்தில் நிறுத்துதல் வேண்டும்,

### சங்கு வைக்கும் காலம்

சங்கு வைக்க ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்கள் சிறந்தவை. இம்மாதங்களில் வளர் பிறை காலத்தில், ஆகாயத்தில் மாசு மருவற்று சூரியன் விளங்கும் காலமாக இருத்தல் வேண்டும். பிரதமை, சஷ்டி, ஏகாதசி ஆகிய மூன்றும் நத்தை திதி; சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய மூன்றும் ரிக்கத்திதி; அமாவாசை முதல் மேற்கண்ட நாட்களில் சங்கு வைக்கக் கூடாது. புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் சிறந்தவை. சனி, ஞாயிறு செவ்வாய் ஆகிய நாட்களில் சங்கு வைக்கக் கூடாது, சதயம், திருவோணம், உத்திரம், அஸ்தம், ரேவதி, சுவாதி, உரோகிணி,

மிருகசீரிடம், சித்திரை பூரம், உத்திரம், புனர்பூசம், அனுஷம், அவிட்டம் ஆகிய பதினைந்தும் சங்கு வைக்க மிகவும் சிறந்த நட்சத்திரங்களாகும்.

சங்கு வைக்கவென்று சொன்ன சிறந்த நாட்களும் காலமும் கடைக்கால் எடுக்கவும் சிறந்தவையாகும்.

கருப்பப் பேழை

நண்டு தோண்டிய மண், யானைக் கோட்டால் கீறிய மண், புற்றுமண், குளத்துமண், எருதுக் கோட்டால் கீறிய மண் இவற்றைச் சேர்த்து,

ஐந்து அறை, ஏழு அறை, ஒன்பது அறை, பதினைந்து அறை ஆகியவற்றுள் ஒரு அளவுடைய அறைகளை உடைய ஒரு பெட்டியைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அப்பெட்டியின் நடு அறையில் பொன்னும் மணியும் இட்டு, மற்ற அறைகளில் பல தானியங்களை நிரப்புதல் வேண்டும் பிறகு வீடு கட்டும் மனைப் பகுதியின் வடக்கு, தெற்கு ஆகிய திசைகளைத் திசை காட்டும் கருவியால் கண்டு மையத்தை அறிய வேண்டும். பின் நீள அகலங்களை முறையே ஒன்பது, கூறு செய்து

மேற்கே நான்கு கூறும், கிழக்கே மூன்று கூறும் விட்டு, இடைப் பட்ட இரண்டு கூறுகளையும், தெற்கே நான்கு கூறும் வடக்கே மூன்று கூறும் விட்டு, இடைப்பட்ட இரண்டு கூறுகளையும் எடுத்துக் கொண்டு அதுவே நடு இடமாகக் கொண்டு அவ் விடத்தில், நிரப்பப்பட்ட கருப்பப் பேழையைப் பூமியில் அமைத்தல் வேண்டும்.

சிற்ப ஆசாரி

சிற்பியானவன் சிவந்த உடல், தூயமனம், தெளிந்த அறிவு, பொறுமை குணம் ஆகியவற்றைப் பெற்றனவாக இருத்தல் வேண்டும்.

உடலைத் தூய்மை செய்து, தூயபட்டு உடுத்தி, வேதம் ஓதி, தெய்வ பூசை செய்து, சிற்ப நூலை நாள்தோறும் ஓதும் பழக்கம் உடையனவாய் இருத்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட சிற்பியானவன் சாத்திர முறைப்படி இக் கருப்பப் பேழையினை அமைப்பானேயானால் மனைக்கு வந்த மனைக்குற்றம், பணிக்குற்றம், நிலக்குற்றம் போன்ற தோஷங்கள் யாவும் விலகி நன்மை ஏற்படும்.

★

## மனைகோலுகையில் இலக்கின முகூர்த்தம்

213. தக்கசெனம் நாலுபத்தில் சசிதான் நிற்கத்
தருபதினொன் றில்குருவுங் குசனும் மந்தன்
மிக்க இவர் தான்இருந்து முகூர்த்தம் செய்தால்
மேவியதோர் மனைதனக்கு வயது நூறாம்
தக்கதொரு இலக்கினத்தில் குருவும் சுக்கிரன்
தரும் ஐந்தில் மூன்றில்வெய்யோன் தகைமை ஆறில்
திக்குஉயரும் குசன்இருந்தால் அகத்துக் கேதான்
திறவயது நூறெனவே செப்பி னாரே.

இ-ள்:- ஜென்ம இலக்கினத்திற்கு நாலுபத்தில் சந்திரன் நிற்க பதினொன்றில் இராசா, செவ்வாய், சனி, இவர்களிருக்க மனைக்கு முகூர்த்தம் செய்தால் வயது நூறு வருஷமாகி விளங்கும். இலக்கினத்தில் குருவும் சுக்கிரனும் இருக்க ஐந்து, மூன்றில் சூரியன் இருக்க ஆறில் செவ்வாய் இருக்க முகூர்த்தம் செய்யில் அந்த மனை நூறு வருக்ஷம் விருத்தியாய் விளங்கும் எ-று.

214. மேவியசீர் இலக்கினத்தில் சோமன் நாலில்
விரும்புபுதன் குருஅத்த மான காலம்
தாவியபட் டணம்நகரம் முகூர்த்தம் செய்தால்
தகைமைவயது இருமூன்று நூறது ஆகும்
மேவியதோர் உதயத்தில் பத்தில் வெள்ளி

ஒருமூன்றில் புதன்குருவும் அத்த மானம்
மாவுயர்பட் டணம்நகரம் முகூர்த்தம் செய்யில்
வரும்நூறு இருமூன்நாய் வகுத்தவாறே.

இ-ள்:- இலக்கினத்திற் சந்திரன் நிற்க, நாலில் புதன் இருக்க, குரு அத்தம் ஆக முகூர்த்தம் செய்யில் அந்த மனைக்கு அறுநூறு வயதாகும்.

இலக்கினத்தில் பத்தில் சுக்கிரன் இருக்க, மூன்றில் புதன் இருக்க, குரு அஸ்தமனமாக முகூர்த்தம் செய்யில் அந்த மனை அறுநூறு வயது விளங்கும் எ-று.

215. பொங்குகுரு க்ஷேத்திரத்தில் வெள்ளி வீட்டிற்
புதன்இருக்க நகரமுகூர்த்தம் புரிவீர் ஆகில்
தங்குவயது இருநான்கு நூறது ஆகும்
தகும்இரவி உதயம்அத்த மான காலம்
சங்கைதரு பத்திலே சோமன் நிற்க
தகைமைநகர் ஆலயமே முகூர்த்தம் செய்தால்
இங்கிதமாய் வயதும்ஒரு சகஸ்த்திரம் என்று
இம்மொழிக்கு மயனுரையும் இயம்பினாரே.

இ-ள்:- குரு, க்ஷேத்திரத்தில் இருக்க, வெள்ளி வீட்டில் புதன் இருக்க முகூர்த்தம் செய்யில் எண்ணூறு வயது இருக்கும். சூரியன் அஸ்தமான காலம் பத்தில் சந்திரன் நிற்க ஆலய முகூர்த்தம் செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும் எ-று.

216. தேசுஉயர்ந்த சுக்கிரனும் உதயம் ஆகத்
திருந்தியதோர் ஏழதிலே குருஇ ருக்க
மாசுஅகன்ற பத்திலே சோமன் நிற்க
வளர்முகூர்த்தம் ஆலயமே மகிழ்ந்து செய்யில்
பேசுவது வயதும்ஒரு சகஸ்திரம் என்றே
பேசலாம் ஓரைதனில் வெள்ளி நிற்க
வாரகுரு க்ஷேத்திரமாம் நகருக் கேதான்
மருவுமன்ற சேதம்இலை மகிழு வாரே.

இ-ள்:- சுக்கிரன் உதயமாக, ஏழில் இராசன் இருக்க, பத்தில் சந்திரன் இருக்க முகூர்த்தம் செய்யில் ஆயிரம் வருஷம் விளங்கும்.

இலக்கினத்திற் சுக்கிரன் இருக்க, குரு க்ஷேத்திரத்தில் இருக்க முகூர்த்தம் செய்யில் அக்கினி பயம் இல்லை எ-று.

217. வரும்கடக மகரம்அது மீனம் தன்னில்
வளமைமிகு சந்திரனும் மருவி நின்றால்
திருஉயர்ந்த கிரகம்அதில் வைக்கோல் போடச்
செயமதுவாம் பூராடம் திருவோ ணம்தான்
தருஉயர்ந்த உரோகணி உத்திரங்கள் மூன்றும்
தங்கியஆ யிலியம்அது சாற்றக் கேளு
வருமிருக சீரிடத்தில் குருஇ ருக்க
வரும்குருவா ரங்கள்செய மகிழ்ச்சி யாமே.

இ-ள்:- கடகம், மகரம், மீனம் இவைகளிற் சந்திரன் இருக்க வைக்கோல் போட்டால் செயமாகும்.

பூராடம், திருவோணம், உரோகணி, உத்திரம், உத்திராடம் உத்திரட்டாதி, ஆயிலியம், மிருகசீரிடம் இவைகளில் இராஜன் இருக்க குருவாரத்தில் செய்ய மகிழ்ச்சி உண்டாம் எ-று.

218. திருந்துசல இராசியதில் வெள்ளி நிற்க
சிறந்தசுக்கிர வாரமுமாய் இருந்தால் ஆக்கம்
பொருந்துசல இராசிதனில் சோமன் நிற்க
புகலுதிங்கள் வாரம்அதாய் இருக்கும் ஆகில்
வருந்துமக மனையாளும் கற்பம் ஆகில்
வளர்முகூர்த்தம் குடிபுகவும் மத்தி பம்தான்
வருந்தியதோர் கிரகபயன் இதுவாம் என்று
மயன்உரைஇவ் வாறுஅதனை மகிழ்ந்து பாரே.

இ-ள்:- சலராசியில் சுக்கிரன் இருக்க சுக்கிரவாரமாய் இருந்தால் செல்வம் உண்டு. சலராசியில் சந்திரன் இருக்கத் திங்கள் வாரம் ஆகில் மனையாள் கர்ப்பமாயினும் முகூர்த்தம் செய்யினும் குடி புகினும் மத்திபம் என்று மயன் என்பவர் சொல்லிய வாக்கியம் எ-று.

## சுக்கிர பலன்

219. இருங்குரு வெள்ளி வாரம் இலக்கினம் நாலேழ் தன்னில்
வருங்கதிர் ஆறில் தக்க வந்தனன் மூன்றில் நிற்க
பெரும்புறங் கோயில் வீடு பீடமே செய்வீர் ஆகில்
திருந்தவே வயது நூறு தீர்க்கமாய் விளங்கும் மாதே.

இ-ள்:- வெள்ளி வாரமும் இலக்கினம் நாலும் ஏழும் ஆக சூரியன் ஆறிலும் இராஜன் மூன்றிலும் நிற்கக் கோபுரம், சாலை, வீடு, மாளிகை இவைகள் கட்டில் நூறுவயது பெற்று விளங்கும் எ-று.

## மனைகோலும் போது கடைக்கால் சங்கு ஸ்தபானம்

சரவாஸ்து புருஷன்-ஒன்பதாகப் பகுந்து சிரசிலிருந்து நான்கு பங்கு தள்ளி ஐந்தாம் பங்கை மூன்று கூறாக்கிச் சிரசுப்பக்கம் இரண்டு கூறுதள்ளி மூன்றாம் பங்கில் கடைக்காலாவது சங்கு ஸ்தாபனமாவது செய்யவும் உத்தமம். மேற்படி சரவாஸ்து எப் போதும் அசையாமல் படுத்திருப்பன்.

கடைக்கால் சங்கு ஸ்தாபனமாவது

வாஸ்து ஒரு மனையில் ஈசானிய மூலையில் சிரசும், நிருதி மூலையில் காலுமாகி இடக்கையைக் கீழேவைத்துப் படுத்திருப் பன். சிரசிலிருந்து நான்கு பங்கு தள்ளி ஐந்தாம் பங்கை மூன்று பங்கு செய்து இரண்டு தள்ளி மற்ற பங்கில் கடைக்கால் போட வும், சங்கு ஸ்தாபனம் பண்ணவும் சுபம்.

சிற்ப ஆசாரியின் இலக்கணம்

2`0. பன்னிய பொற்பூ ணூலும் பௌத்திரங் கையில் இட்டு
சென்னியில் சிகைய தாகிச் செய்யதோர் நிறத்த னாகி
மன்னிய குலமு மிக்க மனமிகத் துய்ய னாகி
வன்னிய சாதி கூடாது அறிந்தவன் சிற்பி தானே.

இ-ள்:- பொற்பூ ணூல் அணிந்து விரல்களில் மோதிரமும் பின் குடுமியுமுடையவனாய்ச் சிவந்த மேனியனாகி வமிசமும் நயகுண மும் தூயமனமும் உடையதானவனாய் அன்னிய சாதியரைச் சேரா மல் அறிவுள்ளவன் சிற்ப ஆசாரியாம் எ-று.

## இதுவும் அது

221. சுத்தமாய் வேத மோதித் துய்யதோர் ஆடை பூண்டு
சித்தமும் வாக்கும் ஒன்றாய்ச் சேர்த்துக் கோபங் கடிந்து
நித்தமும் அனுஷ்டா னங்கள் நிறைவுடன் பூசை பண்ணி
வித்தக நூலைக் காலை விளம்புதல் இயற்கை யாமே.

இ-ள்:- சிற்பாசாரி சுத்தமாயிருந்து, வேதபோதி, பரிசுத்தவஸ்திரம் அல்லது நார்மடியுடுத்தி, தெளிவுஞ் சிறப்பு முடைவனாய், மனமும் வாக்கும் ஒருமைப்பட்டு கோபத்தை நீக்கி. நித்தியானுஷ்டானமும் தெய்வ பூஜையுந்தப்பாமல் முடித்து, சிற்ப நூலைக் காலையில் ஓத வேண்டும்.

## சங்கு ஸ்தாபனம்

222. சங்குவின் நீளம் முன்னம் சாற்றிய விரலி னாலே
தங்கிய முந்நான் காகக் கொண்டது பரும னாகும்
அங்கு அதன் நாலில் மூன்றும் அத்தலைச் சுற்ற தாகும்
வந்த தோர் ஏக மாகக் கொண்டது ஓர் உச்சி தானே.

இ-ள்:- சங்கு நீளம் பன்னிரண்டு விரல் பருமனாம். இது ஒன்று முக்கால் தலையிற் சுற்றும், இதில் மேலுச்சியில் நீளம் ஒரு விரல் கொள்வது எ-று.

223. வானுடைய தேவர்முதல் மானிடர்க்கும் ஆகுந்
தானுடைய சங்குமரந் தக்கதகை சொல்லில்
ஆனஅரசு ஆலமரம் அத்தியுடன் சிக்கில்
கானகருங் காலிபரம் பைகடைந்து கொள்வே.

இ-ள்:- தேவருக்கும், மானிடருக்கும் சங்கு மரமாவது அரசு ஆல் அத்தி, சிச்சிலி, கருங்காலி, பரம்பை, இவையாம் எ-று.

224. பண்ணிய சங்கு வைக்கப் பார்தனை மட்ட மாக்கி
எண்ணிய ஒரு கோல் கொண்டால் அகலமும் அதுவே யாகும்
தண்ணிய மட்ட நீளம் ஒக்கவே கொண்ட பின்பு
திண்ணிய பொருளி னாலே தீங்கிலாச் சங்கு வையே.

இ-ள்:- சங்கு வைக்கும் போது நிலத்தை மட்டம் செய்து ஒரு கோல் முறை அகலம், நீளம், மட்டம் ஒக்கக் கொண்டு பொருள் வைத்துச் சங்கு வைக்கவும் எ-று.

225. ஆவணியும் ஐப்பசியும் ஆனயெறி மாதம்
பூவணியில் வாழ்ந்திடு புராதனர் தமக்காம்
தேவணியில் நாள்தவிர மற்றவை தேவர்க்காம்
தேவணிய தாய்மனையில் சங்கு நடலாமே,

இ-ள்:- ஆவணி, ஐப்பசி, கார்த்திகை இந்த மூன்று மாதங்களில் சங்கு நடல் மனிதருக்காம். மற்றெல்லா மாதங்களும் தேவர்களுக்காம் எ-று.

## சங்கு ஸ்தாபிதம்

226. உத்தரா யணமும் ஆக உயர்ந்தநல் வாரம் பார்த்து
சித்திரை நட்சத் திரங்கள் சிறப்புடன் பார்த்து வானில்
சுத்தமாய்க் களங்கம் இல்லாச் சூரியன் விளங்கும் போது
நத்தியே அவ்வி டத்தில் நவிலுவேன் இனிது கேளே.

இ-ள்:- சங்கு ஸ்தாபிக்கும் நாளாவது உத்தராயணத்தில் வாரம், இலக்கினம், நட்சத்திரம் இவைகளைத் திறமாகப் பார்த்து ஆகாயத்தில் களங்கம் இல்லாமல் சூரியன் விளங்கும் போது செய்யும் விபரத்தைச் சொல்லுவோம் எ-று

227. ஒரு தண்டுக்கு ஒருதண் டேதான் உண்மையாய்ச் சதுரம் ஆக்கி
விரவிய மட்டம் கொண்டு விளங்கநீர் மட்டம் செய்து
பரவிய நடுவின் வட்டம் பரவுமண் டலம்போல் வீசி
திருந்திய சங்கை ஊணச் செய்யும்பிர மாணம் செய்யே.

இ-வ்:- ஒரு தண்டுக்கு ஒருதண்டு சதுரம் செய்து நடுவில் விருத்தமாய்க்கீறி அதில் சங்கு ஊணச் சங்குக்குப் பிரமாணம் சொல்லுவோம் எ-று.

## சங்கு ஸ்தாபன இலட்சணம்

சங்கு ஸ்தாபனம் முன் செய்திருக்கின்ற இடத்தில் தனக்கு வேண்டும் வேளையில் வீடு கட்டலாகும்.

இதற்குத் தோஷம் இல்லை.

சங்கு ஸ்தாபனஞ் செய்ய வேண்டியது:—

சுக்கில பட்சம் சோபனம் உண்டு.
பிரதமை, சஷ்டி, ஏகாதசி இம்மூன்றும் நத்தை திதி.
சவுத்தி, நவமி, சதுர்த்தசி. இம்மூன்றும் ரிக்கத் திதி.

அமாவசை முதல் இந்த நாட்களில் சங்கு ஸ்தாபனம் செய்ய லாகாது.

புதன், வியாழன், வெள்ளி இந்த மூன்று நாளில் செய்தால் சுகப்பிரதம்.

சனி, ஞாயிறு, செவ்வாய் இந்த வாரங்களில் கூடாது

சங்கு ஸ்தாபன நிர்ணயத்துக்கு நட்சத்திரம்.

சதயம், திருவோணம், உத்திரம், அஸ்தம், ரேவதி, சுவாதி,
ரோகிணி, மிருகசீரிஷம், சித்திரை, பூரம், உத்திரம்,
புனர்பூசம், அனுஷம், அவிட்டம் இந்த 15
நட்சத்திரத்தில் சங்கு ஸ்தாபனம் பண்ணினால் நன்மை.

இந்த நட்சத்த்ரங்களுக்குத் தோஷம் இல்லாமல் இருக்க வேண்டும்.

தத்தாதாரம், சுபஸ்தாரம், தூமதாரம், ரோகதாரம்,
நிற்சீவதாரம் இந்தத்தாரங்களில் சுபர், பாவர் அறிந்து
சீவதாரத்தில் சங்கு ஸ்தாபனம் செய்ய வேண்டும்.
தத்தாதாரத்தில் செய்தால் அக்கினி வேதை.
சுபஸ்தாரத்தில் சண்டை.
தூமதாரத்தில் தரித்திரம்.
நிற்சீவதாரத்தில் கேடு உண்டாம்.

## சங்கு செயயய மரம்

228. உத்தம சங்குக் கேதான் உயரம் ஓர் முழம் அது ஆகும்
நத்திய அடியில் ஆறு அங்குலம் நடுவில் கேளு
சுத்தமாய்த் தலைக னந்தான் சொல்லும்அங்கு குலம் ஒன்றுஆகும்
பத்தியாய்த் திரள நன்றாய்ப் பரிவுடன் கடைதல் செய்வாம்.

இ-ள்:- சங்கு செய்யும் விதமாவது: உயரம் ஒரு முழம்; அடியில் கனம் அங்குலம் ஆறு; தலைகனம் அங்குலம் ஒன்று. அதற்காக வாட்டமாய்த் திரளக் கடைசல் செய்யவும் எ-று,

229. தந்தியின் கொம்பு வாச்ச சந்தனம் வன்னி தேக்கு
முந்திய புளியி னோடும் உயர்கருங் காலி செய்வாம்
விந்தையாய் இவையல் லாமல் வேண்டும்பால் மறந்தான்
ஆகும்
அந்தமாம் வயிரத் தோடே அமைந்ததோர் பிரிவு
சொல்வாம்.

இ-ள்:- சங்கு செய்யும் மரம்:- யானைக்கொம்பு, சந்தனமரம், வன்னி, தேக்கு, புளியன், வைரம், கருங்காலி இவையல்லாமல் எந்த மரத்தில் பாலுண்டோ அதிலும் செய்யலாம். ஆகையால் தேவசாதி நான்குக்கும் விபரம் சொல்லுவாம் எ-று.

தேவர் முதல் நான்கு சாதிகளுக்கும் சங்கு செய்யும் மரம்

230. சந்தனத் தந்திக் கொம்பு தகைமைசேர் தேவர்க் காகும்
விந்தையாம் மறையோர்க் கேதான் மிகுகருங் காலி வன்னி
சிந்தைசேர் மன்ன ருக்குத் தேக்கு வைசியருக்கு ஆகும்
புந்தியி னோடு புகலமை சூத்திரர்க் கென்று ஓதே.

இ:ள்- யானைக்கொம்பும் சந்தனமரமும் தேவர்களுக்கு ஆகும். கருங்காலி பிராமணருக்கு ஆம். புளியவயிரம் சூத்திரர்களுக்கு ஆம் எ-று

231. மேவும் முதல்பா கத்தும் மிகுந்த தட்சிண பாகத்தும்
மாஅவச் சாயல் உண்டு மந்தமண் டலத்தில் வந்த
ஒவியப் புள்இ ரண்டில் ஓடவே கிழக்கு மேற்கு
தாவிய அந்நாள் தன்னில் தகைமையை யறிய லாமே.

இ-ள்:- உத்தராயணத்திலும் தட்சிணாயணத்திலும் அவச்சாயல் பாதச்சாயல் உண்டு. அந்த மண்டலத்தில் வந்த புள்ளி இரண்டிலும் நூலை யோடவாங் கிழக்கு மேற்கு மறிவாம் எ-று.

232. இரண்டுபுள் ளியின்பால் மீது ஏகவே வெளியில் நன்றாய்
திரண்டசேர் கயல்மீ னாகச் சிறப்புடன் வீசிப் பின்னும்
முரண்டசேல் மீனின் வாயில் முகத்திலுங் கூடு நூலை
இரண்டதை ஓட வாங்கி ஆகநூல் இரண்டும் சொல்வாம்.

இ-ள்:- இரண்டு புள்ளியின் மீது கயல் மீனாக வீசி மீனின் முகத்திலும், வாயிலும் கூடுதலை இரண்டையும் ஓட வாங்கிக் கொள்ளுவாம் எ-று.

233. திறமைதட் சிணபா கத்தின் சிறந்ததட் சிணத்தின் மீதே
உறமையுத் தரபா கத்தில் உத்தர பாக மீதே
முறைமையாம் இரண்டி டத்தில் உயர்ந்திடு நூலைப் பெற்று
உறமுடன் கொள்ளு வான்பின் உண்மையை விளம்புவேனே.

இ-ள்:- தட்சிணாயணத்திலும் உத்தராயணத்திலும் இரண்டு நூலையும் பெற்றுக் கொள்ளுவோம் எ-று

## கர்ப்பம் வைக்கப் பேழை

234. அலவனில் எழுந்த மண்ணும் ஆனையின் கோட்டு மண்ணும்
நிலனுறு புற்று மண்ணும் நீடிய கயத்தின் மண்ணும்
குலவிய எருது மண்ணும் கூடநீ சேர்த்துக் கொண்டு
பலமிகு கர்ப்பம் வைக்கப் பேழையைப் பண்ணிக் கொள்ளே.

இ-ள்:- நண்டு தோண்டு மண், யானைக் கோட்டு மண், புற்று மண், கயத்துமண், எருதுக் கோட்டுமண் இவையெல்லாம் கூட்டிச் சேர்த்துக் கர்ப்பப் பேழை செய்து கொள்ளவும் எ-று.

235. பண்ணிய கர்ப்பப் பேழைஐந்து ஏழொடு ஒன்பதாக
எண்ணிய பதினைந் தாக அறையினைப் பண்ணிக் கொண்டு
நண்ணிய பணியும் பொன்னும் நற்பல தானி யங்கள்
திண்ணென அடைக்க வென்று செப்பினார் கலைவல்லோரே.

இ-ள்:- ஐந்து அறை, ஏழு அறை, ஒன்பது அறை, பதினைந்து அறை இவற்றில் ஒன்று பொருந்திய அறை பண்ணி அதில் நடு வறையிலே பொன்னும், மணியும் சுற்றிலும் இருக்கும் அறைகளில் பல தானியங்களும் இட்டு வைக்கவும் எ-று.

236. சாலையின் மையம் பற்றித் தன்னினில் அகலம் பற்றிக்
கோலியே ஒன்ப தாக்கிக் குறித்திடும் மேற்கு நாலு
வாலிய கிழக்கு மூன்று தெற்குமே நான்கு விட்டு
சீலமாம் வடக்கு மூன்று நடுவது கர்ப்பஞ் செய்யே.

இ-ள்:- சாலையில் முதல் மையத்தைப் பற்றி பின்பு அகலம் பற்றி அதை ஒன்பது கூறு செய்து மேற்கு நான்கும், கிழக்கு மூன்றும், தெற்கு நான்கும், வடக்கு மூன்றும் விட்டு நடுவில் கற்பஞ்செய்யவும் எ-று.

இந்த சாஸ்திரம் சொன்னபடி சிற்பியானவன் செய்வானாகில் மனைக்குற்றம், பணிக்குற்றம், நிலக்குற்றம் இவைகளால் வந்த தோஷங்களையும் தள்ளும் என்றறிாவும்.

# 8. வீடு கட்டுவதற்கு உரிய பலன்கள்

மாத பலன்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | மாதத்தில் | வீடு கட்டினால் | செல்வம் குறையும். |
| வைகாசி | ,, | ,, | வெற்றி உண்டாகும். |
| ஆனி | ,, | ,, | பகைவர் பயம். |
| | | | புத்திரருக்கு ஆகாது |
| ஆடி | ,, | ,, | பசுக்கள் நஷ்டம். |
| | | | செல்வம் அழியும். |
| ஆவணி | ,, | ,, | உறவினர்கள் வருகை. |
| | | | ஏற்படும். |
| புரட்டாசி | ,, | ,, | பலவகைப் பிணிகள்வருத்தும். |
| ஐப்பசி | ,, | ,, | கலகம். ஆடையணிகள் |
| | | | சேதம் உண்டாகும். |
| கார்த்திகை | ,, | ,, | செல்வம் நிலைக்கும். |
| | | | தீங்கு ஏற்படாது. |
| மார்கழி | ,, | ,, | பயம் மிகுதியாகும். |
| தை | ,, | ,, | மரணம் உண்டாகும். |
| மாசி | ,, | ,, | துன்பம் நீங்கும். |
| | | | செல்வம் உண்டாகும். |
| பங்குனி | ,, | ,, | ஆடை ஆபரணங்களும் |
| | | | உள்ள செல்வமும் கொள்ளை |
| | | | போகும். |

கிரக பலன்

சூரிய சார பலன்

பரணி நட்சத்திரத்தின் பிற்பகுதி இரண்டுபாதங்கள்,

கார்த்திகை நான்கு பாதங்கள்,

ரோகணி முதற் பாதம்—

ஆகிய ஏழு பாதங்களிலும் சூரியன் இருக்க வீடு கட்டினால் தீயினால் பயம் உண்டாகும்.

அங்காரக சார பலன்

கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம், ரேவதி இந்த 7 நட்சத்திரங்களிலும் அங்காரகன் இருக்க வீடு கட்டினால் தீயினால் பயமும், புத்திரர் அழிவும் உண்டாகும்.

புத சார பலன்

அசுவினி, மிருகசீரிடம், அஸ்தம், உத்திரம், சித்திரை, ரோகணி

இந்த 6 நட்சத்திரங்களில் புதன் இருக்க வீடு கட்டினால் புத்திரப் பேற்றுடன் சிறந்த செல்வமும் சுகமும் ஏற்படும். இந்த இலக்கினத்திலாவது, உச்சத்திலாவது புதன் இருக்க வீடு கட்டினாலும், கட்ட ஆரம்பம் செய்தாலும் இதே பலன்கள் கிட்டும்.

குரு சார பலன்

திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிடம், ஆயிலியம், ரோகணி, பூசம்,

இந்த 9 நட்சத்திரங்களில் குரு இருக்க வீடு கட்டினாலும் கட்ட ஆரம்பஞ் செய்தாலும் செல்வம் பெருகும். இந்த இலக்கினத்திலாவது உச்சத்திலாவது குரு இருக்க வீடு கட்டினாலும் இதே பலன் உண்டாகும்.

சுக்கிர சார பலன்:

கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவினி, பூராடம், அவிட்டம், அனுஷம், விசாகம், திருவாதிரை, சதயம் ஆகிய பத்து நட்சத்திரங்களிலும் சுக்கிரன் இருக்க வீடு கட்டினாலும் கட்டத் தொடங்கினாலும் நன்மையும் மங்களமும் தரும்.

சனி சார பலன்

சதயம், பூரட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை இந்த எட்டு நட்சத்திரங்களிலும் சனி இருக்க வீடு கட்டினாலும், வீடு கட்டத் தொடங்கினாலும், பேயும் இராட்சதரும் பட்சிகளும் வந்து சேரும்.

இராகு சார பலன்

இராகு இருந்த இலக்கினத்திற்கு எதிர் சாரம் பதினான்கு நட்சத்திரங்களும் பகைமையானவை. ஆதலால் வீடு கட்டவோ, கட்டத் தொடங்கவோ கூடாது.

இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| மேஷ இராசியில் | வீடு கட்டினால் | | மங்களம் பெருகும். |
| ரிஷப | ,, | ,, | செல்வம் பெருகும். |
| மிதுன | ,, | ,, | பசுக்கள் விருத்தியாகும். |
| கடக | ,, | ,, | நஷ்டம் ஏற்படும். |
| சிம்ம | ,, | ,, | உறவினர் சேர்க்கைஉண்டாகும். |
| கன்னியா | ,, | ,, | நோய் உண்டாகும். |
| துலா | ,, | ,, | சுகம் வளரும். |
| விருச்சிக | ,, | ,, | செல்வம் பெருகும். |
| தனுசு | ,, | ,, | செல்வம் அழியும். |
| மகர | ,, | ,, | தானிய விருத்தியாகும். |
| கும்ப ராசியில் | வீடு கட்டினால் | | இரத்தினலாபம் உண்டாகும். |
| மீன | ,, | ,, | பயம் மிகுதியாகும். |

மேற்குறித்த இராசி பலன்களைக் கண்டு நல்ல இராசிகளில் வீடு கட்டத் தொடங்குவது சிறந்த பலனைத் தருவதாகும்.

திதி பலன்

வளர் பிறைத்திதிகள் வீடு கட்ட நன்மை தருவனவாகும்.

தேய் பிறைத்திதிகள் வீடு கட்ட ஆகாதவை. வளர் பிறையில் திருதியை, முதல் பௌர்ணமி கழித்த சப்தமி வரையில் வளர் பிறைத்திதிகளாகவே கொண்டு வீடு கட்டத் தொடங்கலாம்.

பிற தேய் பிறைத்திதிகளே சிறிதும் ஆகாதவை.

இவற்றுள்

பிரதமை, சஷ்டி, ஏகாதசி (அந்தக திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டத் தொடங்கினால் பொருள் அழிவு ஏற்படும்.

துவிதியை, சப்தமி, துவாதசி (பத்திரை திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் சிறை வாசம் ஏற்படும்

திருதியை, அட்டமி, திரயோதசி (செயித்திய திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் நல்ல பலன் ஏற்படும்.

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி (ரிக்கத் திதி) ஆகிய திதிகளில் வீடு கட்டினால் பகைவர் பயம் உண்டாகும்.

பஞ்சமி, தசமி, பௌர்ணமி (பூரண திதி) ஆகிய திதிகளில் வெற்றி உண்டாகும்.

அமாவாசையில் வீடு கட்டினால் உயிர்ச் சேதம் ஏற்படும்.

மேற் கூறிய திதிகளில் பலன் தரும் திதிகளை அறிந்து வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

வார பலன்

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீடு கட்ட | தீயினால் பயம் உண்டாகும். |
| திங்கள்- | ,, | மங்களம் உண்டாகும் |
| செவ்வாய்- | ,, | தீயினால் பயம் உண்டாகும். |
| புதன்- | ,, | செல்வமுண்டாகும். |
| வியாழன்- | ,, | ,, |
| வெள்ளி- | ,, | ,, |
| சனி- | ,, | கள்ளரால் பயம் உண்டாகும். |

மேற் கூறிய வாரங்களில் பலன் தரும் வாரங்கள் அறிந்து வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

நட்சத்திர பலன்

ரோகிணி, மிருக சீரிடம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய பதினான்கும் வீடுகட்டத் தொடங்குவதற்கு நன்மை தரும் நட்சத்திரங்களாம்.

## வீடு கட்டும் பலன்

### மாத பலன்கள்

### சித்திரை மாதம்

237. செப்பும் சித்திரை சிறந்த மதிதனில்
ஒப்பு மாளிகை ஒவ்வ அமைத்திடில்
தப்பி லாமல் தனம் அதற்கு ஆனியாம்
மெய்ப் புடன்மயன் விரும்பி உரைத்ததே.

### வைகாசி மாதம்

238. பேசும் வைகாசி பெருக்கமா ளிகட்டில்
தேசும் புருஷ செயப்பிர தங்களாம்
நேசமாம் பெண்டிர் நெருங்கும் சுபாபலம்
மாசிலா மயன் மன்னர்க்கு அறைந்ததே.

### ஆனி மாதம்

239. உள்ள இராசி உரைக்கின்றேன் மாந்தர்க்கு
தெள்ளும் ஆனியில் திடமாளி கட்டிடில்
பிள்ளை குட்டி புகல்மிருத் துப்பயம்
கொள்ள மயன்உரை கூறியது உண்மையே.

### ஆடி மாதம்

240. சொல்லும் ஆடி தொடர்ந்த மாளிகட்டில்
சொல்லும் காராம் பசுக்கள் நஷ்டங்களாம்
சொல்லும் செல்வமும் சீரும் அழிந்திடும்
சொல்லு மயனார் தொகுத்த சிற்பநூலே.

### ஆவணி மாதம்

241. உரைத்திடும் ஆவணி மாளிகை கட்டிடில்
நிறைத்திடும் பந்து வர்க்கம் வரத்துமாம்
உரைத்திடும் மயன் வாக்குப்பொய் யாதுகாண்
பரைத்திடும் பஞ்சணத் தார்க்கு அறைந்ததே.

## புரட்டாசி மாதம்

242. தேயு மேபுரட் டாசி மதிதனில்
ஏயு மாளி எழில்பெறக் கட்டிடில்
மாயு நோயும் மகாரோகம் எய்திடும்
தாயு மேமயன் தயவாய் உரைத்ததே.

## ஐப்பசி மாதம்

243. காணும் ஐப்பசி கனத்த மாளிகட்டில்
ஆணும் பெண்ணும் அறியக் கலகமாம்
பூணும் ஆடை புகலும்ஆ பரணமும்
வேணும் சேதம் விளையும்மேன் மேலுமே.

## கார்த்திகை மாதம்

244. கனத்த மாரி கழறுங்கார்த் திகையில்
தனத்த மாரி தகைமையாய்க் கட்டிடில்
அனர்த்தம் வாராது ஒருநாளும் மாந்தர்க்கு
நினைத்த இலட்சுமி நெருங்கும் வாசமதே.

## மார்கழி மாதம்

245. சொல்லு மேதிரு வாதிரை மார்கழி
புல்லு மாளி புகழவே கட்டிடில்
கொல்லு மேபயம் குவலயம் தன்னிலே
வெல்லு மயனார் விரும்பி உரைத்ததே.

## தை மாதம்

246. கிரணம் வீசும் கிளர்க்கும்தை மாதத்தில்
முரண மாக முகிழ்மாளி கட்டிடில்
மரண மேதரும் அக்கினி பயமுண்டாம்
சரணம் பண்ணித் தடுப்பது நன்மையே.

## மாசி மாதம்

247. அருமை யாக அறைகிறேன் சிற்பநூல்
பெருமை யாய்மாசி பிலக்க மாளிகட்டில்
சிறுமை நீங்கிச் சிறக்கும்செல் வங்களாம்
ஒருமை யாக உரைக்கும் மயன்நூலே.

## பங்குனி மாதம்

248. மெள்ளவே பங்குனி மாளிகை கட்டிடில்
உள்ள இரத்தினம் உரையும்ஆ பரணமும்
தெள்ளு மட்ட சிறந்ததோர் செல்வமும்
கொள்ளை போம்என்று கூறுவர் சிற்பரே.

சித்திரை மாதம் வீடுகட்டினால் தன ஆனி.
வைகாசி மாதம் கட்டினால் ஜெயப்பிரதம்.
ஆனி மாதம் கட்டினால் மித்துரு பயம்.
ஆடிமாதம் கட்டினால் பசுக்கள் நஷ்டம்.
ஆவணி மாதம் கட்டினால் பந்து வர்க்கம் வரவு.
புரட்டாசி மாதம் கட்டினால் ரோகம்.
ஐப்பசி மாதம் கட்டினால் கலகம்.
கார்த்திகை மாதம் கட்டினால் இலட்சுமிவாசம்.
மார்கழி மாதம் கட்டினால் பயம்.
தை மாதம் கட்டினால் அக்கினி பயம்.
மாசி மாதம் கட்டினால் பாக்கியம் உண்டாம்.
பங்குனி மாதம் கட்டினால் இரத்தின ஆபரணங்கள் நாசமாம்.

## சூரிய சாரம்

249. கூறும் பரணி குறிக்கும் இரண்டாம்பாதம்
வீருங் கார்த்திகை விளம்பும் நாலாம்பாதம்
கோரும் ரோகணி குறிக்கும் முதற்பாதம்
மாறும் ஏழிலும் வகுக்கும் பரிதியே.

250. பரிதி நின்று பகர்மாளி கட்டிடில்
குருதி அக்கினி கொடிய பயன்சொல்லும்
பரிதி போல்மயன் பகரும்நல் சாத்திரம்
நிருதி மாந்தற்கு நேராய் உரைத்ததே.

பரணி இரண்டு பாதமும், கார்த்திகை நான்கு பாதமும், ரோகணி முதற்பாதமும்—ஆக இந்த பாதம் ஏழிலும் சூரியன் இருக்க வீடுகட்டினால் அக்கினிபயம்.

## அங்காரக சாரம்

251. செப்பி டும்மதி சிறந்ததோர் கார்த்திகை
ஒப்பிடும் பூசம் ஓங்கு மகமுடன்
வெப்பும் பூரமும் விளங்கிடும் அஸ்தமும்
தப்பிலா ரேவதி மூலம்பொல் லாதிதே.

252. பொல்லாது ஐய்யா புகலும் குருமொழி
கொல்லும் நட்சத் திரபலன் ஏழிலும்
வெல்லும் அங்காரன் இருக்க மாளிகட்டில்
புல்லும் புத்திரர் புகல ஆனியதே.

இ-ள்: கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், மூலம், ரேவதி இந்த நட்சத்திரம் ஏழிலும் அங்காரகன் இருக்க வீடு கட்டினால் புத்திர ஆனி உண்டாம் எ-று.

## புதசார பலன்

253. பொன்னும் அஸ்தம் புகலும் அசுவினி
மன்னும் உத்திரம் மாமிருக சீரிடம்
வின்னும் ரோகணி விளங்கிடும் சித்திரை
துன்னும் ஆறும் தொகுப்பாய் உரைத்ததே.

254. உரைத்தி டும்பதி ஓங்கும் புதன்இருந்து
இரைத்திடும் கணத்து இனிதுஎனில் ஆவது
உரைத்தி டும்பதி உச்சத்தில் ஆவது
குறைத்தி டாமாளி கட்டுவது ஆட்சியே.

255. ஆட்சி யன்றி யனிபெறும் புத்திரர்
மாட்சி மேவும் அதிகமாம் மன்னவர்
காட்சி யாவுங் களித்திடும் இப்பலன்
தாட்சி இன்றி தனிய அறைந்ததே.

அசுவினி, மிருகசீரிடம், அஸ்தம், உத்திரம், சித்திரை, ரோகணி இவ் ஆறு நட்சத்திரத்தில் புதன் இருந்தாலும் இலக்கினத்திலாவது உச்சத்திலாவது வீடு கட்ட ஆரம்பம் செய்தால் புத்திர சம்பத்துடன் சுகமாய் இருப்பார்கள்.

### குரு சார பலன்

256. ஆய உத்திரம் ஆன திருவோணம்
தூய உத்திராடம் உத்திரட் டாதியும்
ஏய பூராடம் ஏற்கும் மகாரோகணி
காயு மிருகம் கழறு பூசமதே.

257. பூச மேவும் புகலும் ஆயிலியம்
வாசம் வீசும் வகுக்கு நட்சத்திரம்
நாசம் செய்யும் நவில ஒன்பதும்
நேசம் செய்யா நெருங்கும் பலமதே.

258. செல்ல உத்திரம் செழிக்கக் குருநிற்கில்
வல்ல இலக்கினம் வழங்கும் உச்சத்திலும்
செல்வ மாளி சிறக்கவே கட்டினால்
நல்ல இலட்சுமி நவிலும் வாசமதே.

திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம், மிருகசீரிஷம், ஆயிலியம், ரோகணி, பூசம் இந்த ஒன்பது நட்சத்திரத்தில் குரு இருக்க அல்லது இலக்கினத்தில் ஆகிலும் உச்சத்திலாகிலும் இருக்க வீடு கட்டினாலும் ஆரம்பம் செய்தாலும் இலட்சுமி கடாட்சம் உண்டாகும்.

### சுக்கிர சார பலன்

259. நண்ணும் கேட்டை நவிலும் புனர்பூசம்
ஒண்ணும் சித்திரை ஓங்கும் அசுவினி
வண்ணம் மேவும் வகுக்கும் பூராடமாம்
அண்ண லார்உரை அறையும் அவிட்டமே.

260. மேவிடும் அனுஷம் விசா கத்துடன்
தாவு மேதிரு வாதிரை தன்முதல்
மேவும் சதையம் விளம்பும் இப்பத்திலும்
தூவு சுக்கிரன் தோன்றலும் நன்மையே.

261. நன்மை யாம்பதி நவிலும் சுக்கிரனும்
வன்மை யாக வலுத்துமே நின்றிடில்
புன்மையாம் மாளி புகலவே கட்டிடில்
துன்மை நீங்கிச் சுகம்தரும் உண்மையே.

கேட்டை, புனர்பூசம், சித்திரை, அசுவினி, பூராடம், அவிட்டம் அனுஷம், விசாகம், திருவாதிரை, சதயம் இந்த பத்து நட்சத்திரத்திலும் சுக்கிரன் இருக்க வீடு கட்டினாலும் ஆரம்பித்தாலும் சுபம். நன்மையைத் தரும்.

## சனி சார பலன்

262. வரும் சதயம் வகுக்கும் பூரட்டாதி
இரும் சுவாதி எழில்உத்தி ரட்டாதி
ஒரும் பரணியாம் ஓங்கும் அவிட்டமும்
தரும் அனுஷமும் தாக்கும் கேட்டையதே.

263. இந்த நட்சத்தி ரப்பலன் எட்டிலும்
தொந்த மேவும் தொடரும் சனிநிற்கில்
அந்த மாக அரையமாளி கட்டிடில்
பந்தம் அற்றுப்போய் பாழும் அடைவதே.

264. அடையும் பூதம் அறையும் மாளிதனில்
படையும் அற்றுப் பகரும்மூ தேவியாள்
அடையு மேபிரம்ம ராட்சதன் எப்போதும்
இடையும் சீதேவி எழில் வாக்குத் தப்பாதே.

சதையம், பூராட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை இந்த எட்டு நட்சத்திரத்திலும் சனி இருக்க வீடு கட்டினாலும், ஆரம்பித்தாலும் பேய், பிரம்ம ராட்சதாள் வாசம் செய்வார்கள்.

## இராகு சார பலன்

265. சொல்லு மேவும் தொடரும் இராகுதான்
வெல்லும் இலக்கினம் மேவும் எதிர்சாரம்
புல்லு மேபதி நான்கு நட்சத்திரம்
கொல்லும் மிருத்துவ சாரம்பொல் லாதிதே.

266. பொல்லாது ஐயா புகலும் அந்தசாரம்
நல்ல மாளிகை நவில அமைத்திடில்
சொல்ல ஒண்ணாமல் தோற்றிடும் துன்பமும்
அல்லும் பகலும் மறைய ஒண்ணாதிதே.

இராகு இருந்த இலக்கினத்திற்கு எதிர்சாரம் பதினான்கு நட்சத்திரமும் மிருத்துவுப சாரமானபடியால் அந்த சாரத்தில் வீடுகட்ட ஆரம்பம் செய்யலாகாது.

## இராசி பலன்

267. சொல்லு மேஷம் சுபப்பிர தங்களாம்
வெல்லும் ரிஷபம் வேண்டும் தனலாபம்
புல்லு மிதுனம் புகலும் பசுவிருத்தி
கொல்லும் கடகம் குறிக்கும் சமனதே.

268. அறையும் சிங்கம் அருட்பந்து சேர்தலாம்
நிறையும் கன்னி நெருங்கு மகாரோகம்
இறையுமே துலாம் ஏறும் சௌக்கியம்
நறையும் விருச்சிகம் நாட்டும் அர்த்தபலம்.

269. நலியுந் தனுசு நவில்வர் அர்த்தஆனி
வலியு மகரம் வகுக்குந் தானியவிருத்தி
பொலியுங் கும்பம் புகலும் இரத்தினலாபம்
ஒலியு மீனமும் ஓங்கும் பயமதே.

270. கண்டுமே ராசி காசினி மானிடர்
விண்டுமே சிற்பி விளம்புவாக் கியமதை
கொண்டு சோதிட குறிப்பின் பிரகாரம்
மிண்டி டாமல் முடிப்பது திண்ணமே.

| | | |
|---|---|---|
| மேஷத்தில் | — | சுபப்பிரதம் |
| ரிஷபத்தில் | — | தனலாபம் |
| மிதுனத்தில் | — | பசுவிருத்தி |
| கடகத்தில் | — | இலாபம் நஷ்டமாம் |
| சிம்மத்தில் | — | பந்து சேர்தல் |
| கன்னியில் | — | ரோகம் |
| துலாத்தில் | — | சௌக்கியம் |
| விருச்சிகத்தில் | — | அர்த்தவிருத்தி |
| தனுசில் | — | அர்த்த ஆனி |
| மகரத்தில் | — | தானிய விருத்தி |
| கும்பத்தில் | — | இரத்தின லாபம் |
| மீனத்தில் | — | பயம் |

இவைகளைக் கண்டு வீடுகட்ட ஆரம்பம் செய்ய வேண்டியது.

## திதிபலன்—வேறு

271. நெறியும் சுக்கில பட்சமது நேரும் சுபப்பிரத மாதம்
செறியும் கிருஷ்ண பட்சமது சிறந்த இரவி போனதன்பின்
பெறுகும் திரிதிகை முதலாய்ப் பேசும் பௌர்ணமி தொடங்கி
உறுகும் சத்தமி தன்வரைக்கும் ஓங்கும் சுக்கில பட்சமதே.

## கலி விருத்தம்

272. மற்றநாள் கிருஷ்ண பட்சமுத லாகா
உற்ற பிரதமை ஓங்கும்சஷ் டிகளும்
முற்றும் ஏகாதசி இது கணத்தை
பெற்றதிதி பலன் பேராத்த வாணியே.

273. வாறிட்டார் விதியை சத்த மிகளும்
ஓரிட்டு துவாதசி பத்திரை திதி
நேரிட் டதிதி நிகழ்பலன் பந்தனம்
கூறிட்ட மயன் குறித்த வுண்மையே.

274. தக்க அட்டமி தாக்கும் திரிதிகை
பக்க மேதிர யோதசி தன்முதல்
மக்கன செயத்திய திதி யாமிவை
சிக்குஞ் சுபமெனச் செப்பினர் சிற்பரே.

275. சீர் பெறுஞ் சவுத்தி நவமிகளும்
தார் செறியும் சதுர்த்தசி முதல்
ஊர்பெறு மறிக்கத் திதி யின்பலன்
போர் செறி மிருத்துவின் பயமதே.

276. சொல்லும் பஞ்சமி தோற்றுந் தசமிதான்
வெல்லும் பௌர்ணமி வேண்டும்பூ ரணதிதி
புல்லும் இதன்பலன் போற்றும் செயப்பிரதம்
அல்லும் அமாவாசி அர்த்த ஆனியே.

சுக்கில பட்சம் சுபப்பிரதம கிருஷ்ண பட்சம் அமாவாசை போனதிரிதிகை முதல் பௌர்ணமி போன சப்தமி வரையில் சுக்கில பட்சமாகும். மற்ற நாட்கள் கிருஷ்ண பட்சமாகாது.

பிரதமை, சஷ்டி, ஏகாதசி இவைகளந்த தை திதி; இதன் பலன் அர்த்த ஆனி.

துவிதியை, சப்தமி, துவாதசி இதுகள் பத்திரைதிதி; இதன் பலன் பந்தனம்.

திருதியை, அட்டமி, திரயோதசி இது செயித்திய திதி; இதன் பலன் சுபம்.

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி இவைகள் ரிக்கத்த திதி; இதன் பலன் மிருத்துவின் பயம்.

பஞ்சமி, தசமி, பௌர்ணமி இவை பூரணதிதி; இதன் பலன் செயப்பிரதம்.

அமாவாசையில் அர்த்த ஆனி; இதன்பலன் பிராண ஆனி.

## வார பலன்

277. இனிய வாரம் எழில்பெறும் ஞாயிறு
தனிய செவ்வாய் தனில்அக்கி னிபயம்
இனிய திங்களும் கூறிடும் நற்சுபம்
துணிவு டன்பயன் சொன்னது உண்மையே.

278. உண்மை யாம்புதன் உரைக்கும் வியாழமும்
தன்மையாம் வெள்ளி தாக்கும் சுபஅசுபம்
உண்மை யாம்சனி வார சோரபயம்
வண்மை வாரம் அறிந்து மாடம்கட்டே.

ஞாயிறு, செவ்வாய்—அக்கினிபயம்.
திங்கள்—வரவு.
புதன், வியாழன், வெள்ளி—சுபம்.
சனி—சோர பயம்.
இவ்வாறு பலன் அறிந்து வீடு கட்டவேண்டும்.

## நட்சத்திர பலன்

279. ஓதும் அஸ்தம் உரையும் ரோகிணியும்
நீதி யாய்அவிட் டச்சதை யங்களும்
கோதிலா மிருக சீரிடம் பூசமும்
தீதிலா ததிரு வோணமும் நன்மையே.

280. நன்மை யாம்சுவாதி அனுஷ் டானமும்
துன்மை இல்லாத தொடர்ந்த சித்திரையும்
வன்மை ரேவதி வகுக்கும் உத்திரட்டாதி
பன்மை உத்திராடம் பார்க்க சுபமிதே.

281. பார்க்க உத்திரம் பகருநட் சத்திரம்
ஏர்க்க வேபதி னான்குஞ் சுபந்தரும்
தீர்க்க மாய்ச்சிற்ப நூலாய்த் திரட்டியே
மார்க்க மாக மயன்மதன் சொன்னதே.

மிருகசீரிடம், ரோகணி, அவிட்டம், சதையம், திருவோணம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி இப்பதினான்கும் சுபம்.

## யோக பலன்

282. தங்கு மேசுகம் தாக்கும்பிரம முடன்
பொங்கும் ஐந்திரம் போற்றுநற் சாத்தியம்
எங்கு மேசிவம் ஏற்கும் சுப்பிரமாம்
அங்கம் ஆயிசும் ஆனசௌ பாக்கியம்.

283. காணும் துருவம் கழறும்வை திருதியாம்
வேணும் சோபனம் விரும்பும் சுபமதாம்
தோணும் பிரிதியும் தோற்றும் சித்தங்களாம்
பூணும் யோகம் புகலும் பதினான்கே.

284. மாதுவியாக் காதம் வழுதுங்கண் டகளாம்
கோது சூலம் குறிக்கும் விஷகம்பமாம்
ஓதும் வச்சிரம் ஓங்கு மதிகண்டம்
நீதி யாம்விதி பாதம் பொல்லாதிதே.

285. பொல்லா தையா புகலும் பரிகமாம்
நல்லாவை திருதி இந்த யோகங்களும்
பொல்லாப்பு என்று புகலுவார் சிற்பர்கள்
புல்லா ஒன்பதும் போற்றும் பொல்லாதிதே.

| | |
|---|---|
| சுபபிரதம் | ஆயிசுமான் |
| ஐந்திரம் | துதி |
| சாதியம் | துருவம் |
| சிவும் | சுகர்மம் |

| | |
|---|---|
| சுப்பிரம் | சோபனம் |
| சௌபாக்கியம் | பிரதி, சித்தம் |
| வியாகிரதம் | வைதிருதி |
| கண்டம் | பரிகம் |
| அதிகண்டம் | |
| விஷ்கம்பம் | |
| சூலம் | |
| வச்சிரம் | |
| விதிபாதம் | |

இந்த யோகம் ஒன்பதும் ஆகாது.

## யோக பலன்

வச்சிரம், பரிகம், விதிபக்தம், வைத்ருதி, கண்டம், சூலம், அதிகண்டம், விஷக்கம்பம், வியாக்ரதம் இந்த 9-ம் நலமல்ல. மற்ற 18-ம் உத்தமம்.

நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் அமிசை

| | | |
|---|---|---|
| அசுவினிக்கு | — | அரிசனம் |
| ரோகணிக்கு | — | பிரதி |
| புனர்பூசத்திற்கு | — | விதிபாதம் |
| மகத்திற்கு | — | சோபனம் |
| அஸ்தத்துக்கு | — | சிவம் |
| விசாகத்துக்கு | — | துருதி |
| மூலத்துக்கு | — | சுபம் |
| திருவோணத்துக்கு | — | விருத்தி |
| பூரட்டாதிக்கு | — | ஐந்திரம் |

இந்த 9 நட்சத்திர யோகத்துக்கும் தனம் -4.

| | | |
|---|---|---|
| பரணிக்கு | — | விஷக்கம்பம். |
| மிருக சீரிஷத்துக்கும், | | |
| சித்திரைக்கும், | | |
| பூசத்திற்கும் | — | சௌபாக்கியம் |
| பூரத்துக்கு | — | பரிகம் |
| சித்திரைக்கு | — | சுகர்மம் |
| அனுஷத்துக்கு | — | சாத்தியம் |
| பூரட்டாதிக்கு | — | கண்டம் |

| | | |
|---|---|---|
| அவிட்டத்திற்கு | — | பிரமம் |
| உத்திரட்டாதிக்கு | — | வியாக்ரதம் |

இந்த 9 நட்சத்திர யோகத்துக்கும் தனம் –3.

| | | |
|---|---|---|
| கார்த்திகைக்கு | — | வச்சிரம் |
| திருவாதிரைக்கு | — | ஆயுசுமான் |
| ஆயிலியத்துக்கு | — | வரியான் |
| உத்திரத்திற்கு | — | அதிகண்டம் |
| சுவாதிக்கு | — | சித்தம் |
| கேட்டைக்கு | — | சூலம் |

உத்திரட்டாதிக்கும், சதயத்திற்கும்—துருவம்

| | | |
|---|---|---|
| ரேவதிக்கு | — | வைதிருதி |

இந்த 9 நட்சத்திர யோகத்திற்கும் தனம்.

## நட்சத்திரத்திற்கும் யோகத்திற்கும் தாரபலன்

| | |
|---|---|
| அசுவினிக்கு | பேசிதாரம் |
| ரோகணிக்கு | சரிதாரம் |
| புனர்பூசத்துக்கு | பேசிதாரம் |
| மகத்துக்கு | சரிதாரம் |
| அஸ்தத்துக்கு | பேசிதாரம் |
| விசாகத்துக்கு | சரிதாரம் |
| மூலத்துக்கு | பேசிதாரம் |
| திருவோணத்துக்கு | சரிதாரம் |
| பூரட்டாதிக்கு | பேசிதாரம் |

அசுவினிக்குப் பேசிதாரம் ஆகையால் அந்த நட்சத்திரத்தில் சங்கியம் கூட நட்சத்திரம் 20 கூட்டினால் 2-8-ல் அர்த்தம் 14 ம் ஆகையால் விஷகம்பம் ஆதியாய் 14 யோகமும் அசுவினிக்கு வரும்.

ரோகணி நான்காவது சரிதாரம் ஆகையால் அர்த்தம் இரண்டாவது யோகம் வரும்.

இந்தப் பிரகாரம் சரிபார்த்து நட்சத்திரத்திற்கும், யோகத்திற்கும் தெரிந்து கொள்வது இந்தப்படி பரணி முதல் ஒன்பது நட்சத்திரமும் சொன்னபடி எண்ணிக்கொண்டு யோகத்தை அறியவும்.

## கரண பலன்

286. பண்ணும் பாலவம் பகரும் பவமுடன்
அண்ணலார் உரை அறையுங் கௌளவம்
எண்ணும் வித்துலா மேற்குங் கரசியாம்
நண்ணும் பத்ரவம் நற்சுபம் ஈயுமே.

287. உய்யும் தாகமும் ஒங்கும் சகுனியாம்
பைய சதுஷ்பாதம் பகரும் வனசியும்
மெய்யவே கிமஸ்த்துக் கின மைந்தும்
பொய்யக் கரணம் புகலப் பொல்லாதிதே.

பவம், பாலவம், கௌலவம்
தைதுலை, கரசை, பத்திரை
இக்கரணம் ஆறும் சுபம்.
சகுனி, நாகவம், சதுஷ்பாதம்
கிமிஸ்த்துக்ஷிணம், வனசை
இக்கரணம் ஐந்தும் ஆகாது.

## கரண பலன்

பவம், பாலவம், கௌலவம், தைதுலம் இவை நான்கும் உத்தமம். கரசை, வனசை இவை இரண்டும் மத்திமம். விஷ்டி, சகுனி, நாகவம், சதுஷ்பாதம், கிமஸ்துக்கினம் இவை ஐந்தும் நஷ்டம்.

அமிசை, மத்தியஅமிசை, தருவஅமிசை இம்மூன்றும் அதிகமாயிருக்கக் கோசர அமிசை, புத்திர அமிசை என்னப்படும்.

இப்படியாக அங்குலம் 6 அமிசை, 9 அமிசை அல்லாமல் வேறு அதிகமும் குறைவும் வருகிறதில்லை. 3, 9, நன்மை. 6 ஆகாது.

அமிசை கூடாது-

கர்த்தனுக்கு 60 வயதுக்கு மேல் இருந்தால் பாக்கியப் பிரதம்

60 வயது குறைவானால் ஆனிப்பிரதம்.
தேவேந்திர கர்த்தன் ஆனால் சுபப்பிரதம்.
அக்கினிகர்த்தன் ஆனால் கீழ் மேலாகச் செய்விக்கும்.

## பிரகஸ்பதி சுக்கிரன் அஸ்தமண மானபலன்

288. கூறுடன் சுக்கிரன் குரு தன்முதல்
வீறும் அஸ்தமான போது தன்னிலும்
கூறு மேவும் குறிக்கு நீசத்திலும்
தூறு மேபகை தோன்றலும் உண்மையே.

289. உண்மை யாக உறையும் சேத்திரபதி
தண்மை யாம்சத்து ருக்கள் இருக்கினும்
வண்மை யாய்மாளி வகுக்கவே யாகாது
கண்மை யாமயன் கண்டு உரைத்ததே.

290. கூறு மாளி குறிக்கும் அதிகாரம்
தூறு மெந்தத் துரைசாதி யானாலும்
சேரும் அந்த சிறந்திடும் சாதிக்கு
கோரும் கிரகம் குறிக்கப்பொல் லாதிதே.

291. குறிக்கச் சத்துரு கூட இருக்கினும்
தெறிக்க வேதிகழ் அஸ்தமான போதும்
முறிக்க நீச்ச முடிவுதா னத்திலும்
மறிக்க மாளி யமைப்பது துன்மையே.

292. கூறும் துன்பமும் குறிக்கும் மனிதர்க்கு
நேரும் சங்கர்ப்பம் நிகழும்எக் காலமும்
கூறும் அன்னியர் கூட்டம் இட்டே வந்து
பாரும் அக்கிரம் மாகக்கொள் வார்களே.

குரு, சுக்கிரன், அஸ்தமானாலும் நீச்சதானத்திலாகினும், பகை க்ஷேத்திரத்திலாகினும் சத்துருக்களுடன் கூடினாலும் வீடு கட்டலாகாது.

வீட்டுக்குக் கர்த்தன் எவ்வித சாதியானாலும் அந்தந்த சாதிகளுக்குக் கிரகம் சத்துருக்களுடன் கூடினாலும், அஸ்த மானாலும், நீச்சத்தானத்தில் இருந்தாலும் வீடுகட்டினால் அன்னியர் அபகரித்துக் கொள்வார்கள்.

## ஸ்திரலக்கின ராசிகள் பலன்

293. பால சிங்கம் பகரும் ரிஷபமாம்
நால கும்பம் நவிலும் விருச்சிகம்
கோல மாம்அந்த குறிக்கும் சேத்திரங்கள்
ஏல மேவநன்மை எழில்உத்த மாகுமே.

294. சாரும் கடகம் சாற்றிடு மேஷமும்
சேருமே துலாம் சிறந்த மகரமும்
நேரு நாலும் நிகழ்சர லக்கினம்
பாரு மத்திபம் பகர்சிற்ப நூலிதே.

295. ஏய கன்னியே ஏழிலாம் மிதுனமும்
தூய மீனம் தொடரும் தனுசுவும்
ஆய இந்நான்கும் அறையும் சுபாபலன்
நேய மாம்உப யராசி யானதே.

296. ஆன தினால் அறைமாளி கட்டிடில்
கான மேவும் கடுராசி பொல்லாது
ஊனமாக உரையும் லக்கினபதி
போன கிரகம் புகலப் பொல்லாததே.

297. இலகும் சத்துரு சேத்திரம் தன்னிலும்
குலவும் லக்கினம் கூறும் கணேசுரன்
அலகும் சத்துரு அறையும் சேத்திரத்திலும்
கலக இலக்கினம் பத்தாம் இடமதே.

298. இருந்த மாளி எழிலாய் அமைத்திடில்
பொருந்த வேளை புகலப் பொல்லாதது
பருந்து மேவும் பராதீன மாய்ப்போகும்
தெரிந்து மயனார் தெளிய உரைத்ததே.

ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இந்த நான்கும் ஸ்திர லக்கினம். உத்தமம்.

மேஷம், கடகம், துலாம், மகரம் இந்த நான்கும் சரலக்கினம். மத்திபம்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்த நான்கும் சுபாவமான உபயராசியாகையால் வீடு கட்டக் கூடாது.

ஆரம்ப இலக்கினத்தில் இருந்து கிரகத்துக்குச் சத்துரு க்ஷேத்திரமான இலக்கினேச்சுரன் சத்துரு க்ஷேத்திரத்தில் இருந்தாலும் ஆரம்ப இலக்கினத்திற்குப் பத்தாம் இடத்தில் இருந்தாலும் அப்படிப்பட்ட வேளையில் வீடு கட்டினால் பராதீனமாய்ப் போகும்.

## திக்குகளுக்கு ஆகாத இராசி

299. மன்னு மேவும் கிழக்குத் துவசாயம்
மின்னு விருச்சிக இராசிக்கும் ஆகாது
துன்னு மேவுதென் கிழக்கு தூமாயமாம்
நன்னு மீன ராசிக்குமே ஆகாதே.

300. அறியும் தெற்கு வருள்சிம் மாயமாம்
உறுதென் மேற்கு உரையும்சங் காயமாம்
செறியு மேற்குச் சிறந்த ரிஷபாயம்
நறியும் தனுசு ராசிக்கும் ஆகாதே.

301. அச்ச மான வரையும் வடமேற்கு
நிச்ச காராயம் நேரும் துலாவுக்கு
உச்ச மானது ஒரு போதும் கூடாது
சொச்ச மயானார் சுளுவாய் அறைந்ததே.

302. உன்னு மேவும் உறையும் வடக்கதாம்
நன்னும் கேஜாய் நவில உரைக்கிறேன்
தன்னு மேஷம் ராசிக்காரர்க்கு ஆகாது
அன்ன மயனார் அறிய உரைத்ததே.

303. இலங்கு மேவட கிழக்குக்கு ஆகாயமாம்
துலங்கு கும்ப ராசிக்காரருக்கு ஆகாது
நலங்கொள் மகரம் நவிலும் மிதுனமாம்
பலங்கொள் சிங்கம் பகரும் ரிஷபமே.

304. சொல்லும் இந்த துலங்கும் ராசிக்காரர்
வெல்லும் கிராமம் விளங்கிடும் மதியில்
புல்லும் மாடம் புகலவே கட்டொணாது
அல்லும் மயலார் தமிழில் உரைத்ததே.

305. கட்டினால் மாட மாளிகை பின்னமாம்
கட்டினால் தோஷம் கருதும் ஆனியாகும்
கட்டினால் மாளி விருத்தியும் ஆகாது
கட்டினால் சீரணம் கடுக அடைவதே.

| | | |
|---|---|---|
| கிழக்கு | துவசாயம் | விருச்சிக இராசிக்காரருக்கு ஆகாது. |
| தென்கிழக்கு | தூமாயம் | மீன இராசிக்காரருக்கு ஆகாது. |
| தெற்கு | சிம்மாயம் | கடகராசிக்காரருக்கு ஆகாது. |
| தென்மேற்கு | சுனகாயம் | கன்னி இராசிக்காரருக்கு ஆகாது. |
| மேற்கு | ரிஷபாயம் | தனுசு இராசிக்காரருக்கு ஆகாது. |
| வடமேற்கு | காநாயம் | துலா இராசிக்காரருக்கு ஆகாது. |
| வடக்கு | கெஜாயம் | மேஷ இராசிக்காரருக்கு ஆகாது. |
| வடகிழக்கு | காகாயம் | கும்பராசிக்காரருக்கு ஆகாது. |

மகரம், மிதுனம், சிங்கம், ரிஷபம் இந்த இராசியுடையோர் கிராம மத்தியில் வீடு கட்டல் ஆகாது. இப்போது சொல்லிய பிரகாரம் வீடு கட்டினால் ஆனியாகும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ,ஏ, இதுகள் கிழக்கு முதற்கொண்டிருக்கும்

இதற்குப் பலன்:-

| | | | |
|---|---|---|---|
| இந்திரன் | கிழக்கு முதல் | கெருடன் | கா- க- கா- காக- கா |
| அக்கினி | இரண்டாவது | பூனை | சா, ச, சா, சா, ச, சா |
| இயமன் | மூன்றாவது | சிங்கம் | டா, ட, டா, டா, ட, டா |
| நிருதி | நான்காவது | நாய். | தா, த, தா, தா, த, தா |
| வருணன் | ஐந்தாவது | பாம்பு | பா, ப, பா, பா, ப. பா |
| வாய்வு | ஆறாவது | எலி. | ய, ர, வ, வ |
| குபேரன் | ஏழாவது | யானை | சா, ஷா, ச, ஆ |

ஈசானியன் எட்டாவது முயல் கர்த்தானவர்களுக்கு 5-ஆம் அவர்க்கு சத்துருதானமாகையால் அவ்விடத்தில் வீடு கட்டக் கூடாது. கட்டினால் ஆனியாகும்.

இவைகள் சத்துரு துவந் தெறிந்து வீடு கட்டப்படும்.

## இதற்குத் தோஷப் பரிகாரம்

306. வஞ்சி சேளும் வழங்கு மகாமீனம்
மிஞ்சு மகரம் மேவுங் கடகமும்
செஞ்சுமே பூரண செய ராசிநாம்
சஞ்ச மயனார் கழறுநூல் பொய்யாதே.

307. வகுத்திடும் துலாம் வழங்கும் விருச்சிகம்
தொகுத்திடும் மேஷம் தோன்று மிகப்பாதம்
பகுத்திடும் சல ராசி எனலாகும்
நிகழ்த்து மயனார் நேராய் அமைந்ததே.

308. பாரில் கும்பம் பகுக்கும் ரிஷபமாம்
சேர சிம்மம் சிறக்க இவைகளும்
சீரும் அர்த்த சலராசி யென்னலாம்
பேர மயனார் பேணி உரைத்ததே.

309. பாரெலாம் கன்னி பகரும் மிதுனமாம்
ஏரும் தனுசு ஏற்க இவைமூன்றும்
கார்நி றச்சல ராசி எனப்படும்
சீரும் பூரணம் சேர்சல ராசியே.

310. ஏந்தும் இந்த எழில்பெறும் இராசியில்
போந்த மாளி புகல அமைத்திடில்
வேந்தன் உத்தம மான ராசிதனில்
கூந்தல் வேனில் குருசுக்கிரன் ஆமே.

311. ஆமே சந்திரன் அறையும் பார்வைதனில்
தாமே மாடம் தனிமாளி கட்டிடில்
போமே அங்கார தோஷம் பொலிவில்லை
நாமே சிற்பநூல் நவில உரைத்ததே.

மீனம், கடகம், மகரம் இவை சம்பூரண சலராசி.

விருச்சிகம், துலாம், மேஷம் இவை பாதசலராசி.

கும்பம், ரிஷபம், சிம்மம் இவை அர்த்த சலராசி.

கன்னி, மிதுனம், தனுசு இவை நிறை சலராசி.

பூரணசல ராசியில் கட்டினாலும் உத்தமமான நட்சத்திரத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், பார்வையில் கட்டினாலும் அங்காரக தோஷம் தேவையில்லை.

மாதநாளில் கர்ப்பம் ஓடுவது

### வெண்பா

312. பானு தனுவில் பதின்மூன்றே முக்கால்மேல்
ஆனிக்குக் கற்பம் அறுகாலே—மானேகேள்
நண்டுமுதல் தேள்அளவு நாலரையே நால்மாகாணி
கொண்டதனு சுக்குஒன்றே கூறு.

313. கன்னியில் மனை எடுக்கில்
கைப்பொருள் வந்து சேரும்
அன்னமும் முத்தும் சேரும்
ஆயிழை தானும் நிற்பள்
பொன்னொடு தானி யங்கள்
பொருந்தவே செல்வம் உண்டாம்
முன்னமே அயனார் சொன்ன
முறைமை நூல் விளம்பல் உற்றேன்.

### மனை எடுக்கும் பலன்

314. ஈசானிய மூலை தன்மேல்
இயல்புடன் இருந்து கொண்டு
வாசமாம் இதனில் வாழ்ந்தால்
வரிசையும் வாழ்வும் உண்டாம்
போசனார் புவியோர்க்கு எல்லாம்
பொருந்திய மனுசன் ஆவான்
வாசமின் குழலி னாளே
வகை மனைக் குறிகள் கண்டாய்.

315. வாய்வு மேல் மனைஎ டுக்கில்
வயிற்றினில் பிணிஉண் டாகும்
நேசமாய் நினைத்தது எல்லாம்
நிதமுடன் கேடது ஆகும்
காசநோய் கொண்டு சாவார்
களவினால் பொருளும் போகும்
பேயுமே கூடிக் கொல்லும்
பிணம் சுடு காடது ஆமே.

316. அங்கிமேல் மனை எ டுக்க
மங்கைதான் மலடி ஆவாள்
செங்கைவாள் அரவம் தீண்டும்
தீப்படும் மனையில் பா...
பொங்குமாம் குழலி னாளே
பொருளது களவும் போகும்
அங்கையற்கு அயனார் சொன்ன
வண்மை நூல் விளம்பல் உற்றேன்.

★ ★ ★

# 9. நட்சத்திரம்

நாமநட்சத்திரம்......

பிறந்த நட்சத்திரம் அறிய இயலாதவர்கள் தங்கள் பெயரின் முதல் எழுத்திற்கு உரிய நட்சத்திரத்தினை அறிந்து ஏற்ற பலன் கண்டு நல்ல செயல்களை மேற் கொள்ளவேண்டும். இதற்கு உதவு மாறு பெயர்களின் முதல் எழுத்திற்கு ஏற்ப நட்சத்திரங்களின் பெயர்கள், பட்டியல் இட்டுக் காட்டப்பபடுள்ளன.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் உரிய நான்கு கால் பகுதி களுக்கும் முறையே நான்கு எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையே அந்தந்த நட்சத்திரத்தின் முதற்பாதம், இரண்டாம்பாதம், மூன்றாம் பாதம், நான்காம்பாதம் எனக் கொள்ளுதல் வேண்டும். இவை இராசி முதலியன காணவும் பயன் படுவதாக அமைக்கப்பட்டுள்வன.

நட்சத்திரங்களுக்கு உரிய மிருகம், பட்சி, மரம், கணம் போல்வனவும் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் கொடுக்கப் பட்டுள்ளன. அவற்றின் நன்மை தீமைகள் அறிந்து ஏற்ப மனையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நட்சத்திரப்பலன் பொது

உத்தம நட்சத்திரங்கள் 11,

மத்திம ,, 6,

அதம ,, 10, என்று-அவற்றின்பெயர்களும் கொடுக்கப்பட்டுள்வன. ஆயினும் அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு

செயலுக்குச் சிறந்த நட்சத்திரமாக விளங்குவதைப் பின்வரும் மூன்றுவகை அமைப்பினால் அறியலாம்.

1. ஊர்த்துவமுகம் எனப்படும் மேல் நோக்கு நாளுக்கு உரியன

ரோகணி, ஆதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், அவிட்டம், சதயம், ஆகிய ஒன்பது நட்சத்திரங்களாகும். இவற்றில் வாசற்கால் தூண் முதலியவை வைக்கலாம். பிற பல நற்காரியங்களுக்காம் என்பது உள்ளே உரை நடையில் உள்ளது.

2. திரிமுகம் எனப்படும் பக்கநோக்கு நாளுக்கு உரியன

அசுவினி, மிருகசீரிடம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை. சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களாகும். இவை சுவர் வைத்தல், பிற பயிர் சம்பந்தப் பட்ட தொழில் தொடங்குதல் ஆகியவற்றிற்கு உரிய நட்சத்திரங்களாகும்.

3. அதோமுகம் எனப்படும்கீழ்நோக்கு நாளுக்கு உரியன

பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்களாகும். இவை பிற நற் செயல்களுக்கும் உரியவையாகும். உரிய செயல்கள் உள்ளே உரைநடையில் தரப்பட்டுள்ளன.

கூறிய நட்சத்திரங்களில் முதல் இரண்டு சாம நேரத்தில் வரும் நட்சத்திரங்களின் பலனே சிறப்புடையதாகும்.

பின் இரண்டு சாமத்திலும், மாலை மயங்கும் நேரத்திலும் இராக்காலத்திலும் வரும் நட்சத்திரங்களால் பயன் இல்லை.

மனைகோல சிறந்த நட்சத்திரங்கள் பதினொன்று.

அவை: மிருக சீரிடம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, அனுஷம் உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய பதினொன்றாம்.

இராசிப் பொருத்தம்

நட்சத்திரங்கள் சிறந்தனவாக இருந்தாலும் மனைக்கு உயவரின் பிறந்த இராசியையோ பெயருக்கு உரிய இராசியையோ

பார்த்து அந்த இராசிக்கு முன்னால், வலப்புறமாக உள்ள நட்சத்திரங்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு அன்றி,

தன் இராசிக்குப் பின்னாலும் இடப்புறமுமாக உள்ள நட்சத்திரங்களில் மனை கோலினால் தீமையே விளையும்.

உச்சிக் கோபுரம் வைக்க, உச்சிமேடு மூட நட்சத்திரங்கள்

1. அசுவனி பரணி கார்த்திகை ரோகணி
ஏறு நாட்கள்

2. மிருக சீரிடம் முகட்டு நாள்

3. திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம்
இறங்கு நாட்கள்

4. மகம், பூரம், உத்திரம், அஸ்தம்
ஏறு நாட்கள்

5. சித்திரை முகட்டு நாள்

6. சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை
இறங்கு நாட்கள்

7. மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம்
ஏறு நாட்கள்

8. அவிட்டம் முகட்டு நாள்

9. சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி
இறங்கு நாட்கள்

இவற்றுள்,

ஏறுநாட்களாகிய 12 நட்சத்திரங்களிலும் வீடு கட்டலாம்.

இவை பிற நல்லசெயல்களுக்கும் உரியனவாகும். முகட்டு நாட்களாகிய மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் வீட்டின் உச்சி மேட்டுப்பகுதி மூடுதல் கோபுரங்களில் உச்சிக்கோபுரம் கட்டுதல் போன்ற செயல்களைச் செய்யலாம்.

இறங்கு நாட்களாகிய 12 நட்சத்திரங்களில் இச்செயல்களில் எதையுமே செய்யக் கூடாது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூகட்டு நாள் | | மூகட்டு நாள் | | மூகட்டு நாள் | |
| மி | | சி | | அவி | |
| ரோ | தி | அஸ் | சு | திரு | சத |
| கா | பு | உத் | வி | உத்தி | பூரட் |
| ப | பூச | பூர | அனு | பூரா | உத் |
| அ | ஆ | ம | கே | மூ | ரே |
| ஏறு நாட்கள் | இறங்கு நாட்கள் | ஏறு நாட்கள் | இறங்கு நாட்கள் | ஏறு நாட்கள் | இறங்கு நாட்கள் |

நட்சத்திரமும் நாளும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் வரும் | | | — பரணி |
| திங்கள் | ,, | ,, | — சித்திரை |
| செவ்வாய்க் | ,, | ,, | — உத்திராடம் |
| புதன் | ,, | ,, | — அவிட்டம் |
| வியாழக் | ,, | ,, | — கேட்டை |
| வெள்ளிக் | ,, | ,, | — பூராடம் |
| சனிக் | ,, | ,, | — ரேவதி—ஆகிய |

நட்சத்திரங்களில் மனை கோலினால் வீடு பாழாகும்; பிற நல்ல செயல்கள் செய்தாலும் தீமையே விளையும்.

பிறந்த நட்சத்திரம்

தான்பிறந்த நட்சத்திரத்திற்கு
இரண்டாம் நட்சத்திரம்
நான்காம் ,,
ஆறாம் ,,
எட்டாம் ,,
ஒன்பதாம் ,,

ஆகியவற்றில் நல்ல செயல்களை மேற் கொள்ளலாம்.

தான் பிறந்த நட்சத்திரமாகிய முதல் நட்சத்திரம்,
அந்த நட்சத்திரத்திற்கு—மூன்றாம் நட்சத்திரம்
ஐந்தாம் ,,
ஏழாம் ,, ஆகியவை

நல்ல செயல்களை மேற்கொள்ளப் பொருந்தாதனவாகும். இவ்வாறு, பிறந்த நட்சத்திரம் தொடங்கி ஒன்பது நட்சத்திரம் முடிய ஒன்று முதல் ஒன்பது என்று கொண்டு மீண்டும்—பத்தாம் நட்சத்திரம் முதல் பதினெட்டாம் நட்சத்திரம் முடிய முறையே ஒன்று முதல் ஒன்பது எனக்கணக்கிட்டுப் பயன் காணவேண்டும். அடுத்து பத்தொன்பதாம் நட்சத்திரம் தொடங்கி இருபத்தேழாம் நட்சத்திரம் முடிய ஒன்று முதல் ஒன்பது எனக் கொள்ள வேண்டும் இவ்வாறு கணக்கிட,

பிறந்த நட்சத்திரத்தை ஒன்று எனக் கொண்டு அதிலிருந்து எண்ண,

2, 4, 6, 8, 9 ஆம் நட்சத்திரங்கள்

11, 13, 15, 17, 18 ஆம் நட்சத்திரங்கள்

20, 22, 24, 26, 27 ஆம் நட்சத்திரங்கள் ஆகிய பதினைந்தும் நல்லனவாகக் கொள்ள வேண்டும்.

நீக்கவேண்டிய நாட்கள்

1. சூரியனைச் சூழ்ந்து பரிவேடம் இட்டிருக்கும் நாள்
2. சந்திரனைச் ,, ,, ,,
3. தீமைதரும் கிழமைகள்

4. மேகம் சூழ்ந்து மந்தாரமாக உள்ளநாள்
5. மழைத் தூறல் விழுந்து கொண்டிருக்கும் நாள்
6. சூரிய, சந்திர கிரகணம் உடையநாள்
7. தீமை தரும் நட்சத்திரங்கள்
8. விட்டிகரணம் என்னும் நேரம் (பதினொரு உறுப்புகளில் ஒன்று)
9. வெள்ளி மறையும் நாள்
10. தீமை தரும் நாழிகை
11. அஷ்டமி
12. அமாவாசை
13. சந்திர பக்கங்கள் (4, 9, 14-ஆம் பக்கங்கள்)
14. கால் அற்ற நட்சத்திரங்கள்- கார்த்திகை, உத்திரம், உத்திராடம்
15. உடல் அற்ற நட்சத்திரங்கள்- மிருகசீரிடம், சித்திரை அனுஷம்
16. தலை அற்ற நட்சத்திரங்கள்-புனர்பூசம், விசாகம், பூரட்டாதி
17. வெள்ளி எதிர்படும் நாள்
18. வெள்ளி வலப்புறம் ஆகும் நாள்
19. ஒவ்வொரு மாதத்தின் கடைசி மூன்று நாட்கள்
20. பங்குனிமாதம் 15 தேதிக்குமேல் உள்ள நாட்கள்
21. கிரகண நாளுக்கு முன்பும் பின்பும் ஏழு ஏழு நாட்கள்

போன்ற நாட்களில் நல்ல செயல்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

யோகினி நிலை—திதிகள்—




குறிப்பு: தே. தேய்பிறைத்திதிகள்

இவற்றுள்,

1. தென் கிழக்குத் திதிகளாகிய — திருதியை, திரயோதசி, அஷ்டமி (தே)

2. ஆகாயத் திதிகளாகிய—நவமி, சதுர்த்தி(தே), சதுர்த்தசி (தே)

3. பூமித் திதிகளாகிய — தசமி, பஞ்சமி (தே), அமாவாசை ஆகிய திதிகள் நல்ல செயல்களுக்கு விலக்கப் பட வேண்டியவை களாகும்.

மனையில் தேவதைகள் இருப்பிடம்

வீட்டு மனையின் நீள அகலங்களை எட்டு, எட்டுப் பகுதி களாகப் பிரிக்க 64 பகுதிகளாகும். அவற்றுள்,

1. இடை 4 பாகங்கள் — பிரம்ம பாகம்.
2. அதைத் தொடர்ந்த 4 மூலைப் பாகங்கள் —பேய்ப் பாகம்.
3. 4 திசையும் இரண்டிரண்டுள் 8 பாகங்கள் —உருத்திரபாகம்.
4. பிற 48 பாகங்கள் — தேவர் பாகம்.




சில நல்ல நாட்கள்—

திங்கட் கிழமையில்—வாசற்கால், தூண் முதலியன நாட்ட நன்று
புதன் கிழமையில் — உத்திரம், விட்டம், கழிகள் பரப்ப நன்று.
வெள்ளிக் கிழமையில்— கூரை, ஓடுவேய்தல், தளம் போடல் நன்று.
வியாழக் கிழமையில்— குடிபுக நன்றாம்.

* * *

நட்சத்திரம், மிருகம், பட்சி, மரம், கணம்.

1. அசுவனி- குதிரை- இராசாளி- எட்டி- தேவகணம்
2. பரணி - யானை- காக்கை -நெல்லி- மனித கணம்

3. கார்த்திகை- ஆடு - மயில் - அத்தி - இராட்சசகணம்
4. ரோகணி -பாம்பு- ஆந்தை- நாவல்- மனித கணம்
5. மிருகசீசம் -சாரை- கோழி - கருங்காலி- தேவகணம்
6. திருவாதிரை - நாய்- அன்றில்- செங்கருங்காலி -மனிதகணம்
7. புனர்பூசம் - பெண்பூனை - அன்னம்- மூங்கில்- தெய்வகணம்
8. பூசம் - கிடா - நீர்காக்கை- அரசு - தெய்வகணம்
9. ஆயிலியம் - ஆண்பூனை- சிச்சிலி- புன்னை- இராட்சசகணம்
10. மகம் - ஆண்எலி - ஆண்கழுகு- ஆவ- இராட்சசகணம்
11. பூரம் - பெருச்சாளி- பெண்கழுகு- பலாசு- மனிதகணம்
12. உத்திரம் - எருது - சிள்வண்டு- அலரி - ,,
13. அஸ்தம் - எருமை - பருந்து - ஆத்தி- தெய்வகணம்
14. சித்திரை - ஆண்புலி- மரங்கொத்தி- வில்வம்-இராட்சசகணம்
15. சுவாதி - கிடா - ஈ -மருதை- தெய்வகணம்
16. விசாகம் - பெண்புலி - செவ்வால்குருவி - விளா- இராட்சச ,,
17. அனுஷம்- பெண்மான்- வானம்பாடி - மகிழ- தெய்வகணம்
18. கேட்டை- கலை - சக்கரவாகம் - பிறாய்- இராட்சச,,
19. மூலம் - பெண்நாய் - செம்போத்து - மரா -இராட்சசகணம்
20. பூராடம்- ஆண்குரங்கு- கவுதாரி - வஞ்சி - மனிதகணம்
21. உத்திராடம்- மலட்டுப்பசு- வலியன் - பலா - ,,
22. திருவோணம்- பெண்குரங்கு- நாரை - எருக்கு- தேவகணம்
23. அவிட்டம் - காமதேனு - வண்டு -வன்னி-இராட்சசகணம்
24. சதயம்- பெண்குதிரை-அண்டங்காக்கை-கடம்பு- மனிதகணம்
25. பூராட்டாதி- புருஷாமிருகம்- உள்ளான்- தேமா- மனிதகணம்
26. உத்திரட்டாதி- பால் பசு- கோட்டான்- வேம்பு- மனிதகணம்
27. ரேவதி - பெண்யானை- வல்லூறு- இலுப்பை- தேவகணம்

## நாம நட்சத்திர எழுத்துக்கள்

1. சு- சே- சோ- லா- அசுவனி
2. லீ- லூ- லே- லோ- பரணி
3. ஆ- ஈ- ஊ- ஏ - கார்த்திகை
4. ஓ- வா- வீ- வு - ரோகணி

5. வே- வோ- கா – கி- மிருகசீரிடம்
6. கூ- க- ஞ- ச- திருவாதிரை
7. கே- கோ- ஹ- ஹி- புனர்பூசம்
8. கு- ஹே- ஹோ- ட- பூசம்
9. டீ- டு- டே- டோ- ஆயிலியம்
10. மா- மீ- மு- மே- மகம்
11. மோ-டா- டி- டு- பூரம்
12. டே- டோ- பா- பீ- உத்திரம்
13. பூ- ஷ- நா- டடா-அஸ்தம்
14. பே- போ- ரா- ரி- சித்திரை
15. ரு- ரே- ரோ- த- சுவாதி
16. தீ- தூ- தே- தோ- விசாகம்
17. நா- நீ- நூ- நே- அனுஷம்
18. நோ- யா- இ- யூ- கேட்டை
19. ஏ- யோ- ப்பா- ப்பி- மூலம்
20. பூ- தா- ப- ட- பூராடம்
21. பே- போ- ஜா- ஜி- உத்திராடம்
22. ஜூ- ஜே- ஜோ- க- திருவோணம்
23. க- கீ- கு- கே- அவிட்டம்
24. கோ- சா- சீ- சூ- சதயம்
25. ஸே- ஸோ- தா- தி- பூரட்டாதி
26. தூ- ஸ- த்தா- த்தி- உத்திரட்டாதி
27. தே- தோ- ச்சா- ச்சி- ரேவதி

## நட்சத்திர பலன்

அசுவினி, மிருகசீரிஷம், ரோகணி, பூசம், அஸ்தம், சித்திரை, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் இந்த 11 ம் உத்தமம்.

திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், கேட்டை, உத்திரட்டாதி, ரேவதி இந்த 6ம் மத்திபம்.

பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், பூரட்டாதி, சுவாதி, பூராடம், விசாகம், மூலம் இந்த 10 ம் அதமம்

சுபகாரியங்கள் செய்ய வேண்டியதற்கு மூன்று விதமாகச் சில நட்சத்திரங்களறிய

முதலாவது:— ரோகணி, ஆதிரை, பூசம், உத்திரம்மூன்று திருவோணம்,அவிட்டம்,சதயம் இவை ஒன்பதும் ஊர்த்துவ முகம்

இதில் ஸ்தம்பப் பிரதிஷ்டை, பட்டாபிஷேகம், உத்தியோகத் திற்பிரவேசித்தல், இராசதரிசனம், வியாபாரம், வீடு, ஆபரணம், மெத்தை மேல் மெத்தை, வாசற்கால், தூண், துவஜம், தோப்பு, சாலை, மரம் முதலியவை வைக்கவும். மற்றும் இவை முதலாகிய சுபகாரியங்கள் செய்யவும் அபி விருத்தியாகி வருமென்றறிய வேண்டியது.

இரண்டாவது:— அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி இவை ஒன்பதும் திரிமுகம்.

இவைகளில் சுவர்வைக்க, பயிரிட, நிலம் வாங்க, பசு, எருது, எருமை, குதிரை, யானை பண்டி முதலானவை வாங்கவும்; பொன்னேர் கட்டியுழவும்; விதை விதைக்கவும்; பசு முதலானது களுக்குக் கொட்டாரங்கட்டவும்; யாத்திரை போகவும்; ஏரி வாய்க் கால் வெட்டவும்; நிலத்துக்கு வரப்பு கட்டவும்; இவை முதலாகிய சுபகாரியங்கள் செய்ய உத்தமம்.

மூன்றாவது:— பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம், விசாகம்,மூலம்,பூராடம்,பூரட்டாதி இவை ஒன்பதும் அதோமுகம்.

இவைகளில் நிட்சேபம் வைக்கவும்; வித்தியாரம்பம் செய்யவும்; கிணறு, குளம், அகழி எடுக்கவும்; களஞ்சியம் கட்டவும்; புதையல் வைக்கவும்; கிழங்கு முதலானவை நடவும்; சங்கு ஸ்தாபனம் பண்ணவும் இவை யுத்தமம்.

இவைகளில் முதற்சாமம் உத்தமம்.

இரண்டாம் சாமம் சந்தோஷம்.

மூன்றாம் சாமம் அதமம்.

நான்காம் சாமம், அந்திகாலமும் இராக் காலமும் கூடாது.

கிரக ஆரம்பம்செய்ய முக்கியமானமுகூர்த்த நட்சத்திரங்கள். இது கிரந்தங்களிலிருந்து எழுதப்பட்டது. மிருகசீரிஷம், அஸ்தம், பூசம், சித்திரை, அனுஷம், உத்திரம் மூன்றும், திருவோணம், அவிட்டம், சதயம் ஆக பதினொன்றும் உத்தமம்.

நட்சத்திரங்களின் நன்மை தீமையறியும் விதி

அகலம், நீளம், நிலைக்கால் உயரம் இதில் மூன்றுமிருந்தமனையில் கட்டுத்திசையில் சொல்லப்பட்டது என்னவெனில்:-

அசுவினிக்கு - தென்சார்பு வீடுகட்டுவது. நீளமுழம் 6, அகலமுழம் மூன்றேகால், வாசல் வடக்கு, நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

பரணி - தென்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 5!

கார்த்திகை - மேல்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 53.

ரோகணிக்கு – மேல்சார்பு நீளம் முழம் 7க்கு அகலம் முழம் 3¾க்கு வாசல் கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்குலம் 55.

மிருகசீரிஷத்திற்கும் திருவாதிரைக்கும் – தென்சார்பு – நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் வடக்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

புனர் பூசத்திற்கு – மேல்சார்பு - நீளம் முழம் 10க்கு அகலம் முழம் 3¾க்கு கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்குலம் 55.

பூசத்திற்கும், ஆயிலியத்திற்கும் - மேல்சார்பு நீளம் முழம் 6க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு, நிலைக்கால் உயரம் அங்- 59

மகத்துக்கு வடசார்பு நீளம் முழம் 5¾க்கு அகலம் முழம் 3க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

பூரத்திற்கு - வடசார்பு நீளம் முழம் 11க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 47.

உத்திரத்திற்கு - மேல் சார்பு நீளம் முழம் 9க்கு அகலம் முழம் 3க்கு வாசல் கிழக்கு தெற்குமாக. நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

அவிட்டத்திற்கு - வடசார்பு நீளம் முழம் 13க்கு அகலம் முழம் 3க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

சித்திரைக்கு – வடசார்பு நீளம் முழம் 11க்கு அகலம் முழம 3¾க்கு வாசல் தெற்கு. நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

சுவாதிக்கு - வடசார்பு நீளம் முழம் 5க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 40

விசாகத்திற்கு-வடசார்பு நீளம் முழம் 9 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

அனுஷத்திற்கு - கீழ்சார்பு நீளம் முழம் 5 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

கேட்டைக்கு - கீழ்சார்பு நீளம் முழம் 5 க்கு அகலம் முழம் 3¾ க்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

மூலத்திற்கு - வடசார்பு நீளம் முழம் 7 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

பூராடத்திற்கு - கீழ்சார்பு நீளம் முழம் 6¾ க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 53.

உத்திராடத்திற்கு - கீழ்சார்பு நீளம் முழம் 13 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

திருவோணத்திற்கு - வடசார்பு நீளம் முழம் 11க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் தெற்கு நிலைக்கால் உயரம் - அங்குலம் 53.

அவிட்டத்திற்கு - கீழ்சார்பு நீளம் முழம் 7 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

சதையத்திற்கு - தென்சார்பு நீளம் முழம் 9 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 49.

பூரட்டாதிக்கு - தென்சார்பு நீளம் முழம் 15 க்கு அகலம் முழம் 4 க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 59.

உத்திரட்டாதிக்கு - கீழ்சார்பு நீளம் முழம் 10 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் மேற்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 57.

இரேவதிக்கு - தென்சார்பு நீளம் முழம் 10 க்கு அகலம் முழம் 3 க்கு வாசல் வடக்கு நிலைக்கால் உயரம் அங்குலம் 51.

317. பொல்லாத நாட்கள் வாரம் பொருந்தாத இராசி மாதம்
செல்லாத வெள்ளிப் பாடு தியாச்சியம் இராகு காலம்
எல்லாரும் நன்மை வாஸ்து வெழுந்திருக் கின்ற போதும்
வல்லாமை யுடையோர் எல்லாம் மனைகோலல் ஆகா
தன்றே.

318. நடையினில் முக்கால் நாழி நலமுடன் பொசிப்பு முக்கால்
குடையினில் முக்கால் நாழி கூறிய மலர்க்கண் முக்கால்
படர்மிசை எழுந்தி ருந்து பார்தனை விளக்கு முக்கால்
அடவுடன் வாஸ்து வுக்கு அகத்தியர் உரைத்த வாறே.

## முகூர்த்தம்

319. ஆலயம் நகரம் பட்டணம் கிரகம்
மருளிய தடாகக்கூ பமுமாஞ்
சீலமாஞ் சிற்பன் செய்கின்ற கிரியைச்
செயலதை நீக்கிய வேறோர்
தாலத்தில் அன்னிய சாதியோன் செய்தால்
தாரணி மன்னவர் தமக்கும்
சாலவே கர்த்தன் தனக்குமே தோஷம்
சஞ்சலம் அதுவுமுண் டாமே.

இ-ள்:. ஆலயங்கள், நகரங்கள், பட்டணங்கள், கிரகங்கள் தடாகங்கள், கிணறுகள் இவைகளைச் சிற்பன் கையால் செய்யாமல் அன்னிய வருணத்தான் கையினால் முகூர்த்தஞ் செய்தால் அரசருக்கும் யசமானுக்கும் ஆகாது எ-று.

## மனைகோல அவரவர்கள் இராசிப்பொருத்தம்

320. நன்மனை யெடுப்போர்க்கு எல்லாம் நாளுடன் பூமி தன்னை
முன்வலங் கொள்வ ராகில் முயற்சிபாங் கருமம் நன்றாம்
பன்னெடுங் காலம் வாழ்வர் பயின்றநல் மக்கட் பேறாம்
பின்னிடங் கொள்வ ராகில் பிணியொடு சாதல் ஆமே.

இ-ள்:. மனைக்கு வாசல் பொருத்தம்-அவரவர் பேர்வழி, பிறந்த ராசி, முன்னும் வலமுமாக இருக்கக் கொள்வது நன்றாம். பின்னும் இடமுமாகயிருக்கக் கொள்ளில் தீதாம் எ-று.

## மனைகோலும் நாள்—ஆகாநாள்

321. நன்னாளினில் மனைகோலினு நலனார்தம் இராசி
முன்னாகுதல் வலமாகுதல் முளரித்திரு உறையும்
பின்னாகுதல் இடமாகுதல் பேணிமனை கோலில்
பொன்னாகுதல் பொருளாகுதல் உயிராகுதல் போமே.

## மனைகோலும் மாதங்கள்

322. சித்திரை வைகாசி ஆடி சிறந்த ஆவணியா மிக்க
வைத்த ஐப்பசியி னோடு மன்னுகார்த் திகைய தாகும்
மத்தக விலாத தையும் மாசியோ டெட்டு மாதம்
புத்தியான் மனையே சோலப் புகழுடன் நன்மை யாமே.

இ-ள்:. சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை தை, மாசி, இந்தயெட்டு மாத மும் மனைகோல நன்றாம் எ-று.

## மனைகோலவும் குடிபுகவும் ஆகா மாதங்கள்

323. கூனி யானி புரட்டாசி மார்கழி
ஊன மான ஒரு நான்கு மாதமும்
மானி யாமன் மனைகுடி தான்புகில்
ஈன மாகி யிடர்செயும் நோய்களே.

இ-ள்.- பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி யிந்த நாலு? மாதமும் மனை கோலவும், குடிபுகவும் ஆகாது. இதற்கு விரோத மாய்க் குடிபுகினும் அல்லது மனை கோலினும் பிணியுண்டாம் எ-று.

## குடிபோகும் மாதபலன்

324. ஆடித் திங்களில் இராவணன் பட்டதாம்
ஆலித் தேபெரும் பாரம் மார்கழி
வீடித் தேபுரட் டாசி இரணியன்
வேதத் தோன்முடி அற்றது பங்குனி.

325 நாடித் தேதியில் நன்மனை போயிடில்
நாட்டில் மாந்தர்கள் நாசம் அடைகுவார்
ஓடித் தேசங் குடியேறிப் போனாலும்
ஓட்டிலே இரந்து உண்ணவும் ஆகுமே.

## கிரகப் பிரவேசம்

ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, பங்குனி, மாதங் களும், ஞாயிறு, செவ்வாய், வியாழன், அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி மூன்று உத்திரங்கள், அனுஷம், திருவோணம், தவிர மற்ற நட்சத்திரங்களும் விருச்சிகம் கும்பம், இருத்தையும் ஆகாவாம். அஷ்டம சுத்தமுள்ள இலக் கினம் உத்தமம்.

### இராவிழிப்பு ராசியாவன

| | |
|---|---|
| மேஷம் | கர்க்கடகம் |
| ரிஷபம் | தனுசு |
| மிதுனம் | மகரம் ஆக ஆறு. |

### முகடு வைக்க

326. இலிங்கத்தா பரங்கள் போல இசைந்த மூ வரையுங் கீறி
விலங்கநால் வரையுங் கீறி மேலது முகட்டு நாளாங்
குலுங்குமா விறங்கு நாளிற் கோபுர மாடக் கூடம்
துலங்கு நான் மனைகள் கோலத் துக்கமாய் இடிந்து போமே.

இ-ள்:- இலிங்கம் போல் நீண்ட வளையமாய் மூன்றுவரை கீறி குறுக்கே நான்குவரைகீறஇருபத்தே ழு தானங காணும். அடிவரையில் முதல் ஸ்தானத்தில் துவக்கி அசுவினி முதலாக எண்ணிவர

அசுவினி முதல் நான்கும் ஏறுநாள்;
மிருக சீரிஷம் முகட்டு நாள்;
திருவாதிரை முதல் நான்கும் இறங்குநாள்.
மகம் முதல் நான்கும் ஏறுநாள்;
சித்திரை முகட்டு நாள்;
சுவாதி முதல் நான்கும் இறங்குநாள்.
மூலம் முதல் நான்கும் ஏறுநாள்;
அவிட்டம் முகட்டு நாள்;
சதயம் முதல் நான்கும் இறங்கு நாள் என்றறிக.

ஏறுநாளில் மனைமாடக் கூடம், கோபுரம் கட்டலாம். முகட்டு நாளில் முகடு வைக்கலாம். இறங்கு நாளில் செய்யலாகாது. செய்யில் இடிந்து பாழாய்ப்போம் எ-று.

### பிறந்த நாளும் வாரமும் கூடில் ஆகாநாள்

327. செங்கதிரோன் வாரநாள் பரணி கூடில்
செழுமதியிற் சித்திரைசேய் உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம்பொன் வாரங் கேட்டை
புகற்பூராடம் சுாரி ரேவதியிந் நாளில்
மங்கையரை மணப்புணரில் விதவை யாகும்
மனையெடுக்கின் பாழ்வழியிற் போகிற் சாவாம்
செங்கயற் கண்ணார் பூத்தால் மலடி யாவர்
சிறுகுழவி பெறின்மரிக்குந் திண்ணந் தானே.

இ-ள்:- ஞாயிறு பரணியும்
திங்கள் சித்திரையும்
செவ்வாய் உத்திராடமும்
புதன் அவிட்டமும்
வியாழன் கேட்டையும்
வெள்ளி பூராடமும்
சனி ரேவதியும்—கூடினநாள் ஆகாது.

இந்நாள்களில்—விவாகஞ் செய்யில் கைம்பெண்ணாம்

மனை கோவில் பாழாம்
வழிப்போகில் மரணமாம்
ருதுவானால் மலடியாம்
பிள்ளை பிறக்கில் சாவாம் எ-று

## தினப்பொருத்த முகூர்த்தம்

328. பிறந்தநாள் இரண்டு நான்கும் ஒன்பதும் எட்டும் ஆறும்
சிறந்தசீ ருவவை மற்றுங் கேடல்ல சம்பத் துண்டாம்
அறிந்தநூல் கற்றும் ஒன்றோர் ஐந்துமூன் றேழு நீக்கிச்
சிறந்திட மொழிந்த தெல்லாம் திண்ணமாய்ப் பொருந்துந் தானே.

இ-ள்:- சென்ம நாளுக்கு 2, 4, 6, 8, 9, இந்நாள்கள் நன்றாம்.

1, 3, 5, 7 இந்நாள்கள் பொருந்தா. மற்றவை பொருந்து மென்ப. இப்படி ஒன்பது ஒன்பதாக 27 நாட்களையும் பிரித்துக் கொள்வது என்றவாறு.

329. வட்டமும் கொடிய வாரம் மந்தார மழையி னோடு
தொட்டிடும் கிராணம் பற்றல் சூழ்ந்திடும் பொல்லா நாட்கள்
விட்டியும் வெள்ளிப் பாடும் விடமுறுக் கடிகை தானும்
அட்டமி யுவா விருத்தை ஆகாது நீக்கிக் கூட்டே.

இ-ள்:- சந்திரனையும் சூரியனையும் பரிவேடமிட்டிருத்தல் கொடியவாரம், மந்தாரம், மழைத்தூறல், கிரணந்தீண்டல், பொல்லாத நட்சத்திரங்கள், விட்டிகரணம், வெள்ளிப்பாடு விஷக்கடிகை - அஷ்டமி - உவா - இருத்தை இவையாகாதே என்று நீக்கி நல்ல நாட்களில் முகூர்த்தங் கொள்ளவும் எ-று.

## தலையற்றநாள் - அரையற்றநாள் - காலற்றநாள்

330. காலற்றநாள் உடலற்றநாள் தலையற்ற நாளின்
மாலுக்கொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஏலக்கருங் குழலாரிதில் ருதுவாகினும் மலடாம்
ஞாலத்தவர் வழிபோயினும் நலமெய்திடார் அவமே.

இ-ள்:- காலற்றநாள் - கார்த்திகை, உத்திரம், உத்திராடம்
உடலற்றநாள் - மிருகசீரிஷம், சித்திரை, அனுஷம்
தலையற்றநாள் - புனர்பூசம், விசாகம், பூரட்டாதி
இவ்வொன்பது நாட்களில் மனைகோலில் பாழாம்.
பெண் திரளில் மலடியாம். யாத்திரை செய்யில்
குணப்படுவார் எ - று.

## சுக்கிரன் பாடு

331. சுக்கிரன் எதிரே யாகில் தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் வலக்கண் ஆகில் தோற்றிய பொருளே சேதம்
சுக்கிரன பின்னே யாகில் சுகமுடன் வாழ்வ தாகும்
சுக்கிரன் இடக்கண் ஆகில் துக்கமொன் றில்லை யென்னே.

இ-ள்:- வெள்ளி-எதிரும், வலக்கண்ணும் முடமுமாகாது, மனை
கோலினும் குடிபுகினும் தீதாம். வெள்ளி பின்னும்
இடக்கண்ணுமாகில் மிகஉத்தமம் எ-று.

## சுபகாரியங்கள் செய்யக் கூடாத நாட்கள்

332. மாதாந்தம் மூன்று நாளும் வருடாந்தம் ஒருபத்து ஐந்தும்
தீதாந்த கிரணம் தீண்டும் தினம்முன்பின் சேர்ந்த ஏழும்
காதாந்த கண்ணாய நாளில் கடைஇரு கடிகை தானும்
வேதாந்தம் உணர்ந்தோர் தீதுஎன்று உரைத்தனர் மிகவும்
தானே.

## யோகினி அறிய

333. யோக பூர்வ பிரதமைமுதல் அஷ்டமி
ஒன்பது ஆகாயம் பூமி தசமியாம்
ஆகும் பன்னொன்று பஞ்சமி யந்தமும்
அந்நெறி சஷ்டி முன்னுவா ஈறதாம்

ஏகும் இப்படி முப்பது பக்கமும்
இடமுன் அந்தமாம் பூமிதென் கீழ்த்திசை
லோக யாத்திரை நன்மைக் கிவைகளும்
நோக்கும் பூசுக்கிரன் மற்று நல்லதே.

இ-ள்:- கிழக்கு முதல் வலமாக எட்டுத் திக்கிலும் பூர்வபட்ச பிரதமை முதலாக அட்டமியளவும் திக்கு 8 க்கும் நிற்கும்; நவமி ஆகயாத்திலும் தசமி பூமியிலும் நிற்கும். முற்பக்க ஏகாதசி முதல் அமரபட்சத்துப் பஞ்சமி யிறுதியாக முன்போல நிற்கும். அமரபட்சத்து சஷ்டி முதலாக அமாவாசையிறுதியாக முன்போலவே நிற்கும். இப்படி முப்பது பக்கத்தையும் நிறுத்தி இதில் தென்கீழ்த்திசை நிற்கும் திதியும், ஆகாசம் பூமியில் நிற்கும் திதியும், எதிரும் இடமும் நிற்கும் திதியும் யாத்திரை முதலிய வற்றிற்கும் விலக்கப்பட்டன. அல்லாத பக்கங்களும் வலமும் பின்னும் பூமி சுக்கிரனும் மிகவும் நன்மையாம் எ-று.

## மேற்கோள் யோகினி நிற்கும் நிலை

334. இந்திரன் கனகன் அக்கினி நிருதி யெமன்நீர் வாயு ஈசானன்
முந்தும் ஆகாயம் புவியுடன் பத்து முற்பிர தமைமுத லாக
வந்தபின் இந்த முறைப்படி அமா வாசை ஈறாந்திதி தன்னில்
உந்தும் யோகினியில் எதிரிடப் புவியில் உருப்பன்று புறம் வலம் நன்றே.

இ-ள்—: பூர்வ பட்சப் பிரதமை முதல்
பிரதமை — கிழக்கு
துதியை — வடக்கு
திருதியை — அக்கினி (தென் கிழக்கு)
சதுர்த்தி — நிருதி (தென் மேற்கு)
பஞ்சமி — தெற்கு
சஷ்டி — மேற்கு
சப்தமி — வாயு (வட மேற்கு)
அஷ்டமி — ஈசான்யம் (வட கிழக்கு)
நவமி — ஆகாசம்
தசமி — பாதாளம்.

பின்னும்:-

ஏகாதசி — கிழக்கு
துவாதசி — வடக்கு
திரயோதசி— அக்கினி
சதுர்த்தசி — நிருதி
பௌர்ணமி — தெற்கு

பின்னும்:-

அமர பட்சப் பிரதமை — மேற்கு
துதியை — வாய்வு
திருதியை — ஈசான்யம்
சதுர்த்தி — ஆகாசம்
பஞ்சமி — பாதாளம்

பின்னும்:-

சஷ்டி — கிழக்கு
சப்தமி— வடக்கு
அஷ்டமி— அக்கினி
நவமி — நிருதி
தசமி — தெற்கு
ஏகாதசி — மேற்கு
துவாதசி— வாயு
திரயோதசி — ஈசானியம்
சதுர்த்தசி — ஆகாசம்
அமாவாசை—பாதலம் — நிற்கும்.

இந்த யோகினி முன்னும் இடமும் யாத்திரை முதலானவற்றிற்கும் தீயது. பின்னும் வலமும் நல்லது எ-று.

## கன்னிகா சக்கரம்.

சிவதாரத்தில் இலட்சுமி பயிரதம் இந்த கிரகம் கன்னிகா காலச்சக்கரத்து மூன்று லிங்கம் கணக்கு எழுதி அதற்குக் குறுக்கே ரேகை நாலுகீறி அடிவரையில் அசுவினி நட்சத்திர முதல் 27 நட்சத்திரங்களையும் மூன்று இலக்கத்துக்கும் எழுதவும்.

இந்த சக்கரத்தை எண்ணிப் பார்க்க ஊர்த்தமுகம்.
அந்த குறுக்கு ரேகையில் சூரியன் இருந்தால் அக்கினி பயம்.
அங்காரகன் இருந்தால் மிருத்யு பயம்,

புதன் இருந்தால் ரோகப்பிரதம்.
பிரகஸ்பதி இருந்தால் தானிய ஆனி.
சுக்கிரன் இருந்தால் கலகம்.
சனி இருந்தால் சோரபயம்.
இராகு இருந்தால் தேசபீடை.
கேது இருந்தால் சவம்.

இந்த கிரகம் கன்னிகா சக்கரத்தை எண்ணிக் கொண்டு வருகிற நட்சத்திரத்தால் ஊர்த்த முகமாயிருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் உத்தமம்.

இறங்கி வருகிற நட்சத்திரம் அதோ முகமாய் இருக்கிற நட்சத்திரத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாகாது.

ரோகணி, பூசம், திருவாதிரை, திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இந்த ஒன்பதும் ஊர்த்த முக நட்சத்திரங்கள்.

ஆகையால் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம்.

இவை அன்றி துவசம், மெத்தை, பசுத் தொழுவம், கோபுரம் இவைகள் கட்டலாம்.

திரிமுக நட்சத்திரத்தில் சுவர் வைக்கலாம்.

பசு, ஆடு, மாடு, குதிரை இவைகள் வாங்கலாம்.

ரேவதி, அஸ்தம், புனர்பூசம், சித்திரை, சுவாதி, அசுவினி, மிருக சீரிஷம், அனுஷம், கேட்டை, இந்த நட்சத்திரம் ஒன்பதும் சுவர் வைக்கவும், யானை, குதிரை, ஆடு, மாடு இவை வாங்கவும் உத்தமம்.

அதோமுக நட்சத்திரத்தில் கிணறு, குளம், ஏரி இவை எடுக்கலாம்.

விசாகம், மூலம், ஆயிலியம், கார்த்திகை, பூரம், பூராடம் பூரட்டாதி, மகம், பரணி இந்த ஒன்பது நட்சத்திரங்களும் அதோ முகம் ஆனதால் அகழி, சுரங்கம், கணக்கு, அப்பியாசம், களஞ்சியம் இவைகள் செய்யலாம்; தனம் புதைக்கலாம்; சங்கு ஸ்தாபனம் பண்ணலாம்.

ஸ்தம்பப் பிரதிஷ்டை பண்ண முதற்சாமம் உத்தமம்.
இரண்டாம் சாமம் சந்தோஷம்.
மூன்றாம் சாமம் அதமம்.
நாலாம் சாமம், சந்தியா காலம், இராக்காலங்களிலும் கூடாது.

## விருத்தம்.

335. நாட்டுப் புகழ்சேர் மனையதற்கு நலங்கொள் எட்டுஎட்டு
அறைசெய்து
மீட்டு நடுவில் நாலறையும் விரிஞ்சன் மூலை நாலும்பேய்
ஈட்டுத் திசைகள் ஒருநான்கும் இருநான்கு அறையும்
இறையவராம்
கோட்டு நாற்பத்து எட்டுஅறையும் குணமாய்க்
கொள்வாய் கொம்பனையே.

## ஒருமனையில் அறுபத்து நான்கு பாகத்துக்கு உட்பட்டு வீடுகட்டுவதற்கு இலட்சணம்

336. அகந்தனை எல்லை நான்கும் அன்புடன் ஆய்ந்து கொண்டு
திகழ்தரும் ஆறு பத்து நாலுடன் பாகம் செய்து
பகரவே பிரம ஸ்தானம் மத்தியில் நான்கு பாகம்
சுகம் உயர் திக்கு நான்கும் துமிகர உருத்திர பாகம் தானே.

இ-ள்:- மனையை நான்கு பக்கமாக அளந்து கொண்டு அதை அறுபத்து நான்கு பங்கு ஆக்கி மத்தியில் நான்கு பங்கு பிரமஸ்தானம்; நான்கு திக்கும் உருத்திரபாகம் எ-று.

337. மற்றதோர் திக்கு நான்கு வகையது சோல்லக் கெளாய்
வித்தகன் ஆன விஷ்ணு பாகமாம் விளம்பக் கேளு
சித்தமாம் குறைகள் எல்லாம் தேவதை பாகம் என்றும்
சுத்தமாம் தமிழை ஓதும் சுகமயன் சொன்ன வாறே.

இ-ள்:- திக்குகள் நான்கும் விஷ்ணுபாகம். மற்றவை எல்லாம் தேவர்களது பாகம் என்று மயனென்பவர் சகலருக்கும் தெளிவாகச் சொல்லிய வாக்கியம் எ-று.

338. அண்டத்துக்கு ஒத்த நேர்மை அருளிய பிண்டம் ஆகும்
பிண்டத்துக்கு ஒத்த நேர்மை பெருகிய கிரகம் ஆகும்
கொண்ட நேத்திரமும் நாசி கூறிய கரம்கா லோடு
விணடுயர் உந்தி சென்னி மேவியது வாரம் ஆமே.

இ-ள்:- அண்டத்துக் கொத்தபடி பிண்டம். பிண்டத்துக்கொத்தபடி வீடு. கர,சரண் ஆதிகளோடும் கூடி விளக்கிய கிரகம் வாரம் ஆகும் எ-று.

339. இந்தநல் விதமாய்ச் செய்தால் இயல்புடன் வயது நூறாம்
செந்திரு என்னும் மாது திகழ்பிர காசம் ஆவள்
சந்ததி கன்று காலி தக்கதோர் செம்பொன் சேரும்
சுந்தரப் புகழ் உண்டு என்று சோதித்து மயன்சொன் னாரே.

இ-ள்:- இந்த பிரகாரமாய் வீடுகட்டினால் அதற்கு வயது நிதானம் நூறு. கன்றுகாலிகள், கறவைப் பசுக்கள் இவைகள் நாளுக்கு நாள் விருத்தியாவதும் அன்றி தாமரைக் கமலத்தில் வீற்றிரா நின்ற இலட்சுமியானவள் சேர்ந்து ஆனந்தத்தாண்டவம் புரிந்து கொணடிருப்பாள் எ-று.

## வெண்பா.

340. மதி உதிக்கக் கால்நாட்டி மாலுதிக்கக் கைவைத்து
மிக வெள்ளி தானுதிக்க மேய்ந்து - கதிர்பெறவே
மந்திரியார் தானுதிக்க மாடம் புகுவீரேல்
இந்திரன் போல் வாழ்வீர் இசைந்து.

இ-ள்:- சந்திரன் உதிக்க ஸ்தம்பம் முதலியவை நாட்டி புதன் உதிக்க பறப்பு பூட்டி வள்ளியுதிக்கத்தளம் அல்லது ஓடு இசைத்து வியாழம் உதிக்கக் கிரகப்பிரவேசம் செய்தால் தெய்வசம்பத்துடன் வாழ்வார்கள் எ-று.

# 10. பொருத்தம்

மனையில் வீடு கட்ட விரும்புபவர்கள் அந்த வீட்டிற்கான முழுப் பொருத்தங்களை அறிந்து அவற்றின்படி வீடுகட்டுதல் வேண்டும். அந்த அடிப்படையில் ஆழ்ந்து கவனிக்க வேண்டியன வாக மனைவாஸ்து நூலில்சொல்லப்படுவன பதினாறு பொருத்தங்க ளாகும். அவற்றுள் எட்டுப் பொருத்தங்களக்கு மேல் நன்மை தரு வதாக அமையுமாறு பார்த்தே வீட்டின் அளவினை அமைக்க வேண்டும்.

அப்பொருத்தங்களாவன:-

1 கருப்பம், 2 வரவு, 3 செலவு 4 பிறப்பு, 5 நாள், 6 திதி, 7 நட்சத்திரம், 8 இலக்கினம், 9 அதிர்ஷ்டம், 10 பங்கு, 11 இனம், 12 பார்வை, 13 சூத்திரம், 14 யோகம் 15 பஞ்சம் 16 தாராபலம்.

இப்பொருத்தங்களை அறியும்வழி

நான்கு சாண் நீளமுள்ள முழக்கோலால் மனையில் வீடுகட்ட அமைக்கும் பாகத்தின் நீள அகலங்களை அளக்க வேண்டும்.

அளந்து வந்த நீள அகலங்களைப் பெருக்கி வரும் தொகை குழி களாகும்.

அக்குழிகளை அடிப்படையாகக் கொண்டு இப்பொருத்தங் களைக் காணவேண்டும்.

நான்கு சாண் முழக்கோல் என்பது

சாண் என்பதனை மேலே சொன்ன நுண்ணிய அளவின் வழி அறிவது இடத்திற்கு இடம் வேறுபட்டு விடும். எனவே தற்கால

மெட்ரிக் முறைக்கு முன்பு இருந்த அங்குலம், அடி, கெஜம் என்ற முறையையே பொதுவாகப் பயன்படுத்தி வந்தனர். அந்த முறைப் படி 36 அங்குலம் அல்லது மூன்று அடிகொண்ட ஒரு 'கெஜக் கோலைப்' பொது அளவாகக் கொள்ளுவதே வழக்கு. அதற்குச் சரியான மீட்டர் அளவினையும் எடுத்துக் கொள்ளலாம்.

36 அங்குலம் கொண்ட கோலால் நீள அகலங்களை அளந்து அவற்றைப் பெருக்கக்கிடைப்பது சதுர கெஜம் எனப்படும். அதுவே ஒரு குழி எனக்கொள்ளுவது. அக்குழிக்கணக்கினைக் கொண்டு பிறபொருத்தங்களை அறிதல் வேண்டும்.

1. ஆயப்பொருத்தமும் பலனும்

மனையின் நீள அகலங்களைப் பெருக்கி, வந்த குழியை எட்டால் வகுக்க மீதி எண் ஆயம் ஆகும். அவ் ஆயம்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆனால் | துவச ஆயம் | இந்திரன் புண்ணியவான்ஆவான் |
| 2. | ,, | தூம ஆயம் | அக்கினி |
| 3. | ,, | சிம்ம ஆயம் | இயமன் |
| 4. | ,, | சிவன் ஆயம் | நிருதி |
| 5. | ,, | ரிஷப ஆயம் | வருணன் |
| 6. | ,, | தான ஆயம் | வாயு |
| 7. | ,, | கஜ ஆயம் | குபேரன் |
| 8. | ,, | காக ஆயம் | ஈசானியன் |

ஆயம் காண எட்டால் வகுக்க மிகுதி இல்லையானால் மிகுதி எட்டு என்று கொண்டு பலன் காணவேண்டும்.

மேலும் இவற்றின் பலன்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | க்கு | கருட | கற்பம் | நால்வகை சாதிக்கும் பொருந்தும் |
| 2 | ,, | புறா | ,, | மத்திமம்.வறுமை.வேடனுக்கு ஆகும் |
| 3 | ,, | சிங்க | ,, | உத்தமம் |
| 4 | ,, | சுவான | ,, | மத்திமம். குறவர் இலம்பாடிகளுக்கு ஆகும் |
| 5 | ,, | சுப | ,, | எல்லாச்செயலும்பொருந்திநடக்கும் |
| 6 | ,, | காக்கை | ,, | மத்திமம் -நீச்சனுக்கு உரியது |
| 7 | ,, | யானை | ,, | மத்திமம். மனைமுடியாது |
| 8 | ,, | கழுதை | ,, | மத்திமம். மனை முடியாது முடிந்தாலும் பாழ் அடையும் |

2. மனைக்கு உரியவனுக்கு வரவு

மொத்தக்குழியை எட்டால் பெருக்கிப் பெருக்குத் தொகையைப் பன்னிரண்டால் வகுக்க வந்த மீதி வரவு எனப்படும். அவ்வரவு:-

| | | |
|---|---|---|
| 1 | ஆனால் | செல்வம் உண்டாகும். |
| 2 | ,, | ,, ,, |
| 3 | ,, | புகழும் எல்லா நலமும் உண்டு. |
| 4 | ,, | ,, ,, |
| 5 | ,, | மத்திமபலன்-தானியபலன் உண்டு. |
| 6 | ஆனால் | மத்திமபலன்-தானியபலன் உண்டு. |
| 7 | ,, | மங்களமும் சிறந்த அறிவும் உண்டு. |
| 8 | ,, | ,, ,, |
| 9 | ,, | எல்லாச் சுகமும் அனுபவிப்பான். |
| 10 | ,, | எல்லாச் செயலும் வசியமாகும். |
| 11 | ,, | கருணை உள்ளமும் செல்வமும் உண்டாகும். |
| 12 | ,, | எல்லாம் உத்தமப் பலனாய் நடக்கும். |

பன்னிரண்டால் வகுக்க மீதி இல்லையானால் 12 மீதி எனக் கொண்டு பலன் காணவும். இதேபோல பின்னால் எல்லா எண்களுக்கும் வகுக்கும் எண்ணை இறுதியாகக் கொண்டு பலன் காணவும்.

3. செலவு

மொத்தக்குழியை ஒன்பதால் பெருக்கிப் பெருக்கி வந்த தொகையைப் பத்தால் வகுக்க மிகுந்த எண் செலவு ஆகும். அச்செலவு-(மிகுதி)

| | | |
|---|---|---|
| 1 | வந்தால் | உள்ள செல்வம் எல்லாம் குறைந்து போகும் |
| 2 | ,, | வீடுதீப்படும் - மரணபயம் உண்டாகும் |
| 3 | ,, | குடும்பம் உயர்வு அடையும் |
| 4 | ,, | மத்திமம்-புத்திரப்பேறு மிகும் |
| 5 | ,, | சுபம்-மிகுந்தசெலவு உண்டாகும் |
| 6 | ,, | மத்திபம்-நலம் உண்டாகும் |
| 7 | ,, | வறுமை-மனவருத்தம் உண்டாகும் |
| 8 | ,, | செல்வம் பெருகும் |
| 9 | ,, | புத்திர நாசம் ஏற்படும் |
| 10 | ,, | உத்தமம் |

வரவு அதிக எண்ணாகவும், செலவு குறைந்த எண்ணாகவும் வருவது நல்லது.

4. பிறப்புப் பொருத்தப் பலன்

மொத்தக்குழியை மூன்றால் பெருக்கிப் பெருக்கி வந்த தொகையை எட்டால் வகுக்க மிகுதியாக நின்ற எண் பிறப்பு (யோனி) எனப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | மிகுந்தால் | கருடப்பிறப்பு - இந்திரன் - கிழக்கு - குறைவற்ற செல்வம் உண்டாம் |
| 2 | ,, | பூனைப்பிறப்பு - அக்கினி - தென்கிழக்கு - கலகம் விளையும் |
| 3 | ,, | சிங்கப்பிறப்பு - இமயன் - தெற்கு - வெற்றி உண்டாகும் |
| 4 | ,, | சுவானப் - பிறப்பு நிருதி-தென்மேற்கு-நோய்-உறவிலர்பகை உண்டாம் |
| 5 | ,, | பாம்புப்பிறப்பு - வருணன் - மேற்கு - செல்வம் உறவினர் சேர்க்கை உண்டாகும் |
| 6 | ,, | எலிப்பிறப்பு-வாயு-வடமேற்கு-செல்வம் அற்றுப் போகும் |
| 7 | ,, | யானைப்பிறப்பு -குபேரன் -வடக்கு -எல்லா நன்மையும் உண்டாகும் |
| 8 | ,, | முயல்பிறப்பு - ஈசானியன் -வடகிழக்கு -நோயும் வருத்தமும்மிகும் |

5. நட்சத்திர பலன்

மொத்தக்குழியினை எட்டால் பெருக்கிப் பெருக்குத்தொகையினை 27ஆல் வகுக்க மிகுந்த எண் நட்சத்திரம் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1 | மிகுந்தால் | அசுவினி | வெற்றி உண்டாம். |
| 2 | ,, | பரணி | வீடுகட்டி முடியுமுன் தலைவன் இறப்பான் |
| 3 | ,, | கார்த்திகை | தீயினால் பயம்உண்டாகும் |
| 4 | ,, | ரோகிணி | வெற்றி உண்டாகும் |
| 5 | ,, | மிருகசீரிடம் | மங்களம் உண்டாகும் |

| | | | |
|---|---|---|---|
| 6 | மிகுந்தால் | திருவாதிரை | மத்திமபலனாகவே இருக்கும் |
| 7 | ,, | புனர்பூசம் | புத்திரப்பேறு செல்வம் இவை உண்டு |
| 8 | ,, | பூசம் | ,, ,, |
| 9 | ,, | ஆயிலியம் | மரணபயம் |
| 10 | ,, | மகம் | மத்திம பலன் |
| 11 | ,, | பூரம் | |
| 12 | ,, | உத்திரம் | நாளுக்கு நாள் மங்களகரம் உயரும் |
| 13 | ,, | அஸ்தம் | சிலநாள் விருத்தி உண்டு. |
| 14 | ,, | சித்திரை | மத்திமபலன் உண்டு |
| 15 | ,, | சுவாதி | நல்லசுகம் தரும் |
| 16 | ,, | விசாகம் | துன்பம் உண்டாகும் |
| 17 | ,, | அனுஷம் | எல்லாநலமும் கல்வியும் உண்டாம் |
| 18 | ,, | கேட்டை | அமங்கலம், பகை உண்டாகும் |
| 19 | ,, | மூலம் | நோய், மத்திமபலன் |
| 20 | ,, | பூராடம் | நோய் உண்டாகும். மனை பாழ் அடையும் |
| 21 | ,, | உத்திராடம் | மங்களம் பெருகும் |
| 22 | ,, | திருவோணம் | புத்திரப்பேறு உண்டு. பிற மத்திம பலனாகவே இருக்கும் |
| 23 | ,, | அவிட்டம் | கட்டியவர் சில காலமே அனுபவிப்பவர் |
| 24 | ,, | சதயம் | செல்வம் நிறையும். எல்லா வெற்றியும் உண்டு |
| 25 | ,, | பூரட்டாதி | புத்திரப்பேறு இல்லை. பிறமத்திம. பலன் |
| 26 | ,, | உத்திரட்டாதி | செல்வம் நிறையும்-மங்கலம் |
| 27 | ,, | ரேவதி | எந்நாளும் நோய் உண்டாகும். |

6. திதிபலன்

பரப்பளவாகிய குழியினை ஒன்பதால் பெருக்கிப் பெருக்கி வந்த தொகையை முப்பதால் வகுக்க மிகுந்த எண் திதி ஆகும்.

அந்த மிகுதியில் ஒன்றுமுதல் பதினைந்து முடிய உள்ளவை வளர்பிறைத்திதிகளாகும். 16 முதல் 30 முடிய உள்ளவை தேய்பிறைத்திதிகள் எனப்படும்.

| வளர்பிறை | தேய்பிறை | பலன் |
|---|---|---|
| மீதி 1க்கு பிரதமை | 16க்கு பிரதமை | நன்மைதரும் |
| ,, 2க்கு த்விதியை | 17க்கு த்விதியை | ,, |
| ,, 3க்கு திருதியை | 18க்கு திருதியை | வெற்றி உண்டு |
| ,, 4க்கு சதுர்த்தி | 19க்கு சதுர்த்தி | எதிலும் தோல்வி யடையும் |
| ,, 5க்கு பஞ்சமி | 20க்கு பஞ்சமி | புத்திரப்பேறு உண்டு |
| ,, 6க்கு சஷ்டி | 21க்கு சஷ்டி | ,, ,, |
| ,, 7க்கு சப்தமி | 22க்கு சப்தமி | நன்மை உண்டாகும் |
| ,, 8க்கு அஷ்டமி | 23க்கு அஷ்டமி | பிணி உண்டாகும் |
| ,, 9க்கு நவமி | 24க்கு நவமி | மனை நசித்துப் போகும் |
| ,, 10க்கு தசமி | 25க்கு தசமி | மங்களம் நிலவும் |
| ,, 11க்கு ஏகாதசி | 26க்கு ஏகாதசி | தீமை உண்டாகும் |
| ,, 12க்கு துவாதசி | 27க்கு துவாதசி | உணவு உடைக்குக் குறைவு இராது |
| ,, 13 ,, திரையோதசி | 28க்கு திரையோதசி | செல்வம் பெருகும் |
| ,, 14 ,, சதுர்த்தசி | 29க்கு சதுர்த்தசி | மனைபாழ் அடையும் |
| ,, 15 ,, பூரணை | 30க்கு அமாவாசை | பூரணபலன்கள் உண்டாகும். |

இருவகைத் திதிகளுக்கும் ஒரே மாதிரிபலன் கூறப்பட்டாலும் சிறப்பாக வளர்பிறைத் திதிகளுக்கே முழுமையாகப் பொருந்தும். நல்ல செயல்களுக்கு வளர்பிறைத் திதிகளே மிகவும் நன்மை தருபவை. தேய்பிறையில் பஞ்சமித் திதிவரை உள்ள நன்மைகளே ஏற்றுக்கொள்ளலாம். பிற ஏற்கத் தக்கவை அல்ல.

7. நாள் பொருத்தமும் பலனும்

மொத்தக்குழியினை ஒன்பதால் பெருக்கிப் பெருக்கி வந்த தொகையை ஏழால் வகுக்க மீதிவரும் எண் நாள் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| மீதி 1 | ஆனால் | ஞாயிறு | பயன் தராது |
| ,, 2 | ,, | திங்கள் | நலம் பெருகும் |
| ,, 3 | ,, | செவ்வாய் | தீமை பயக்கும் |
| ,, 4 | ,, | புதன் | செல்வம் நிரம்பியிருக்கும் |
| ,, 5 | ,, | வியாழன் | ;புத்திரப்பேறும் செல்வமும்உண்டாகும் |
| ,, 6 | ,, | வெள்ளி | அதிக நலம் தரும் |
| ,, 7 | ,, | சனி | கலகம் உண்டாகும் |

8. இலக்கினப் பொருத்தமும் பலனும்

மொத்தக்குழியினை நாலால் பெருக்கிப் பெருக்கி வந்த தொகையைப் பன்னிரண்டால் வகுக்க மீதம் வரும் எண் இலக்கினம் ஆகும்.

இலக்கினம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆனால் | மேஷம் | குடும்ப விருத்தி உண்டு. ஆனால் பிணிகள் உண்டாகும் |
| 2 | ,, | ரிஷபம் | பெருமையும் புண்ணியமும் பெருகும் |
| 3 | ,, | மிதுனம் | செல்வம் உண்டு. யாவும் மத்திம பலனாகவே நடக்கும். |
| 4 | ,, | கடகம் | மங்களம், வெற்றி, பூரண ஆயுள் உண்டாகும் |
| 5 | ஆனால் | சிம்மம் | கவர்ச்சியும் செல்வமும் பெருகும் |
| 6 | ,, | கன்னி | அறிவும் ஆயுளும் வளரும் |
| 7 | ,, | துலாம் | எல்லாவகை செல்வமும் உண்டு |
| 8 | ,, | விருச்சிகம் | எல்லா நன்மையும் உண்டு. ஆனால் ஒன்றுக்கொன்று பொருந்தாமலே நடக்கும் |
| 9 | ,, | தனுசு | மங்களமும் செல்வமும் சமமாக இருக்கும் |
| 10 | ,, | மகரம் | பொருளும் புத்திரப்பேறும் பெருகும் |
| 11 | ,, | கும்பம் | செல்வம் உண்டு. ஆயினும் துன்பம் நிலைத்திருக்கும் |
| 12 | ,, | மீனம் | வெற்றிஉண்டு. ஆனால் தாமதமாய் நடக்கும் |

9. இனப் பொருத்தமும் பலனும்

மொத்தக் குழியினை ஒன்பதால் பெருக்கி, வந்த தொகையை நாலால் வகுக்க நின்றமீதி இனம் ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மீதி | 1 | ஆனால் | அந்தண இனம் | நல்லபலனும் மங்களகரமும் நிலைக்கும் |
| ,, | 2 | ,, | அரச இனம் | வெற்றி உண்டாகும் |
| ,, | 3 | ,, | வைசிய இனம் | செல்வம் பெருகும் |
| ,, | 4 | ,, | வேளாள இனம் | தானியம் பெருகும் மத்திம பலனே |

10. அமிசப் பொருத்தமும் பலனும்

மொத்தப்பரப்பளவாகிய குழியை நாலால் பெருக்கி, வந்த தொகையை ஒன்பதால் வகுக்க வரும் மிகுதி அமிசம் ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வந்தால் | தடகர | அமிசம் | எப்போதும் துன்பம் ஏற்படும் |
| 2 | ,, | சோமகர | ,, | எல்லாப்பேறுகளும் உண்டாகும் |
| 3 | ,, | சத்தி | ,, | ஒழுக்கம் உண்டாகும் |
| 4 | ,, | புஷ்கர | ,, | தானியம் பெருகும் |
| 5 | ,, | குரு | ,, | இலாபம் உண்டாகும். |
| 6 | ,, | சுக்கிர | ,, | அரச வாழ்வு கிடைக்கும் |
| 7 | ,, | சனி | ,, | கலகம், மக்கட்பகை இவை உண்டாகும் |
| 8 | ,, | இராகு | ,, | எதிலும் மத்திம பலன் |
| 9 | ,, | கேது | ,, | எல்லாநன்மைகளும் உண்டாகும் |

11. வயதுப் பொருத்தமும் பலனும்

மொத்தக் குழியை இருபத்து ஏழால் பெருக்கி, வந்த தொகையை நூறால்வகுக்க மிகுந்த எண் மனையின் வயது ஆகும்.

வய்து 45 க்கு மேல் வருவது நல்லது.

வயது 60 க்குமேல் வருவது மிகவும் நன்மைதரும்.

வயதுஎண் அதிகமாக அதிகமாக நன்மை பெருகும்.

12. பார்வையும் பலனும்

1. ஞாயிற்றுக் கிழமைக்கு

ரோகிணிமுதல் ஒன்பதும் ஒன்றைக்கண்
அஸ்தம் முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
பூரட்டாதிமுதல் ஆறும் குருட்டுக்கண்

2. திங்கட் கிழமைக்கு

புனர்பூசம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
விசாகம் முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
அசுவினி முதல் ஆறும் குருட்டுக்கண்

3. செவ்வாய்க் கிழமைக்கு

மகரம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
மூலம் முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
ரோகிணி முதல் ஆறும் குருட்டுக்கண்

4. புதன் கிழமைக்கு

அஸ்தம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
திருவோணம் முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
புனர் பூசம் முதல் ஆறும் குருட்டுக்கண்.

5. வியாழக் கிழமைக்கு

விசாகம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
பூரட்டாதி முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
மகம் முதல் ஆறும் குருட்டுக்கண்.

6. வெள்ளி கிழமைக்கு
மூலம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
அசுவனி முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
அஸ்தம் முதல் ஆறும் குருட்டுக்கண்.

7. சனிக் கிழமைக்கு
திருவோணம் முதல் ஒன்பதும் ஒற்றைக்கண்
ரோகிணி முதல் பன்னிரண்டும் இரட்டைக்கண்
விசாகம் முதல் ஆறும் குருட்டுக்கண்.

இவற்றுள்—
ஒற்றைக்கண் - சமபலன் தரும்.
இரட்டைக்கண் - எல்லாபலன்களையும் கொடுக்கும்
குருட்டுக்கண் - தீமையே உண்டாக்கும்.

13. கணம் - அவற்றின் பலன்

1. அசுவனி, மிருக சீரிடம்
புனர்பூசம், பூசம்
அஸ்தம், அனுஷம்
திருவோணம், இரேவதி
சுவாதி - இவை ஒன்பதும் 'தேவகணம்'

2. மூலம், அவிட்டம்
சித்திரை, சதயம்
கேட்டை, மகம்

ஆயிலியம், விசாகம்
கார்த்திகை - இவை ஒன்பதும் 'இராட்சச கணம்'

3. உத்திரம், உத்திராடம்
உத்திரட்டாதி, ரோகிணி
திருவாதிரை, பரணி
பூரம், பூராடம்
பூரட்டாதி இவை ஒன்பதும் 'மனித கணம்'

பலன்

இராட்சச கணமும் மனித கணமும் உண்டாகில் மரணம் உண்டாம்.

தேவ கணமும் மனித கணமும் செல்வ முண்டாம்.
தேவ கணமும் தேவ கணமும் உத்தமம்.
தேவ கணமும் இராட்சச கணமும் ஆகாது.
மனித கணமும் மனித கணமும் நல்லது.
இராட்சச கணமும் இராட்சச கணமும் நல்லது.

மற்ற சுபகாரியம் குறைபட்டதற்குக் கணம் அறிய

பூர்வ பட்சம்:- பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி ஆகிய நான்கும் குருடு.

பஞ்சமி, சஷ்டி, சப்தமி, ஆகிய மூன்றும் ஒற்றைக் கணம்.

அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி ஆகிய ஆறும் இரட்டைக்கணம்.

சதுர்த்தசி, பவறளை; பிரதமை ஆகிய மூன்றும் ஒன்றைக் கணம்

அமர பட்சம்:- துவிதியை, திருதியை, சதுர்த்தி பஞ்சமி, சஷ்டி, சப்தமி ஆகிய ஆறும் இரட்டைக் கணம்.

அஷ்டமி, நவமி, தசமி, ஆகிய மூன்றும் ஒற்றைக் கணம்.

ஏககதசி, துவாதசி, திரியோதசி, சதுர்த்தசசி, அமாவாசை ஆகிய ஐந்தும் குருடு.

பலன்

இவற்றுள் —

ஒற்றைக்கணம் - நன்மை தரும்.
இரட்டைக்கணம் - மிகவும் உயர்வு தரும்.
குருட்டுக்கணம் - தீமைவிளைவிக்கும்.

**14. சூத்திர பலன்**

மனையின் மொத்தக் குழியினை ஏழால் பெருக்கி, வந்த தொகையை ஐந்தால் வகுக்க வந்த மீதி எண் சூத்திரம் ஆகும்.

மீதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஆனால் | பால | சூத்திரம் | உத்தமம். |
| 2 | ,, | குமார | சூத்திரம் | நன்று. |
| 3 | ,, | அரச | சூத்திரம் | நன்று. |
| 4 | ,, | விருத்த | சூத்திரம் | மத்திமம். |
| 5 | ,, | மரண | சூத்திரம் | தீயது. |

**15 பூத பலன்**

மொத்தக் குழியை மூன்றால் பெருக்கி, வந்த தொகையை ஐந்தால் வகுக்க மிகுந்த எண் பூதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிகுந்த எண் | 1 | ஆனால் | பூ | தத்துவம் | செல்வம் பெருகும். |
| | 2 | ,, | உதக | தத்துவம் | மகிழ்ச்சிமிகும். |
| | 3 | ,, | அக்கினி | தத்துவம் | பகைவரால் பயம் உண்டாகும் |
| | 4 | ,, | வாய்வு | தத்துவம் | சுகம் உண்டாகும். |
| | 5 | ,, | ஆகாச | தத்துவம் | வறுமை ஏற்படும். |

**16. இராசி சூல நிர்ணயம்**

மொத்தக் குழியை ஒன்பதால் பெருக்கி, வந்த தொகையைப் பன்னிரண்டால் வகுக்க வந்த மிகுதி இராசி சூலம் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| மிகுதி | 1 | ஆனால் | மேஷம் |
| | 2 | ,, | ரிஷபம் |
| | 3 | ,, | மிதுனம் |
| | 4 | ,, | கடகம் |
| | 5 | ,, | சிம்மம் |
| | 6 | ,, | கன்னி |
| | 7 | ,, | துலாம் |
| | 8 | ,, | விருச்சிகம் |
| | 9 | ,, | தனுசு |
| | 10 | ,, | மகரம் |
| | 11 | ,, | கும்பம் |
| | 12 | ,, | மீனம் |

## சனற்குமார வாஸ்து சொல்லியது

341. தருமதி நாலாம் காலில் தழல் அருள் முதல்கால் தன்னில்
பரிதிதான் நிற்கும் போது பாவக நாளது ஆகும்
மரமய சிலையே செம்பொன் மண்ணினால் மனைகள் செய்யில்
எரியருந் திடுதல் உண்மை எனச்சனற் குமாரர் சொன்னார்.

## மனைக்கு ஆயகம், வயது, வரவு, செலவு, இலட்சணம்

342. திருவளர் மனையை அகமது செய்யச்
சீர்மயன் நூல்தனைக் கேளீர்
உரியநன் மனையை உடையவன் கையால்
கொண்டுசாண் எனும் முழக் கோலால்
மருவிய மனையை நாற்றிசை அளந்து
மகிழ்ச்சியாய்க் குழி தனைப் பெருக்கி
அருமையாம் குழியை எட்டினுக்கு ஈய
ஆயமாய் அடவுடன் சொல்லே.

### கலிவிருத்தம்

343. பூமலி நான்குசாண் பொலிந்த கோலினை
தேமலி மனைதனக்கு எல்லை தேடிய
தாமலி பூருவம் தழைத்த உத்தமம்
காமலி ஆயமாம் கணக்கின் சீரதே.

இ-ள்:- யசமான் சாணால் நாலு சாண்கோல் கொண்டு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இந்நான்கு திக்கையும் அளந்து இரு தொகையும் குழிமாறிய தொகையை ஆயமாய் வைத்துக் கொண்டு திசைப் பொருத்தம் பார்க்க வேண்டியது எ-று.

### வெண்பா

344. சாண்நான்கு கோல்கொண்டு தப்பாமல் நான்கு எல்லை
கோணாம லேஅளந்து குழிமாறி - பூண்ஆர்ந்து
இப்புவியின் மாதே இருநான்கிற் கீவீரேல்
கற்பக் கிரகங்கோல் ஆம்.

345. இட்ட எட்டுடன் பன்னிரண்டு ஆக்கமாம்
ஏற்கும் ஒன்பதோடு ஈரைந்து அழிவதாம்
முட்டி மூன்றுடன் எட்டுமே யோனியாம்
மொழிந்த எட்டுடன் மூஒன்பான் நாளதாம்,

346. வட்ட நான்குடன் முப்பது பக்கமாம்
வளரும் ஒன்பதோடு ஏழும் கிழமையாம்
மட்டல் ஏழுடன் ஈராறு இராசியாம்
மற்ற ஒன்பதும் நால்வகை வருணமாம்
ஒட்டு நான்குடன் ஒன்பது அங்கமாம்
ஓங்கு மூஒன்பது ஒக்குநாறு ஆயுளே.

மயன், சனற்குமார வாஸ்து, கடக வாஸ்து, சுரமாலை, உள்ள முடையான், காலாமிர்தம் இவைகளில் தேவர்கள் அடி ஒன்றுக்கு இப்போது வழங்கி வரும் அங்குலம் 34 என்றும் 32 என்றும் 32⅞ என்றும் மனைக்குரியவன் வீடுகட்டினால் தன்கை சாணென்றும் முழமென்றும்...... வாஸ்தமாகப் பலவாறாகச் சொல்லி இருப்பதை யோசிக்கில், ஒவ்வாமையால் இப்போது அரசரால் நியமிக்கப்பட்டு தேசங்கள் தோறும் மனை முதலிய காணிகளுக்கு வழங்கி வருவது, சாதி அடி ஆகையால் அதை முதன்மையாக வைத்துக் கொண்டு மேற்படி மனையில் எவ்வளவு விஸ்தாரமுள்ள கட்டடம் கட்ட வேண்டுமோ அந்த மனைக் கட்டடத்துக்குட்பட அகல நீள அளவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, இவ்வள வென்று அளவிட்டு ஒன்றுக்கொன்று மாறிய குழித் தொகை யைத் துருவ பதமாக வைத்துக் கொண்டு அத்தொகையை எட்டிற்கு ஈய்ந்து மீந்த தொகைமனைக்குக் கற்பகர ஆயகம்.

### ஆயம் - ஆதாயம் முதலியன அறிய

347. அஞ்சுகோல் ஆதி யாக அதற்கது இரண்டு ஏற்றி
இஞ்சித அகல நீளம் இதற்குழி பெருக்கி எட்டில்
மிஞ்சிய மூன்றும் ஐந்தும் மிகுந்த ஏழா மிகவும் நன்றாம்
வஞ்சமாம் இரண்டும் நான்கும் வறுமைஆறு எட்டும் தீதே.

348. எட்டினில் பன்னிரண்டு ஆதாயம்
இகழ ஒன்பதில் பத்து தீதாம் (விரயம்)
திட்ட மூன்று எட்டில் யோனி
திறனுமெட் டினில்மூவொன் பான்நான்
வட்டமொன் பதிலே வாரம்
வளரவோர் நான்கும் ஒன்பது அங்கிசம்
திட்டமொன் பதில்நாலு சாதி
திதிஒன்பான் முப்ப தாமே,

349. ஆய்ந்தெழு பன்னிரண்டு வளகிய
இராசியாம் இராசியாகும்
வாய்ந்த முன் பெருக்கிப் பின்னில்
வருவதற்கு ஈய்ந்த சேஷம்
ஈய்ந்தது பலன் அதாகும்
விரும்புவார் மறிந்தோ மையால்
வாய்ந்தவேல் விழியி னாளே
வயதுதான் சொல்ல லுற்றேன்.

350. மனையில்வந் திசமம் எட்டும்
மாமுதல் நாலுக்கு ஈய்ந்து
இனியதனால் பெருக்கி நூறில்
ஏறிட வயது ஆகும்
அனைவரும் மயனார் சொன்ன
அருந்தமிழ் சிற்பி நூலே.

351. அங்கிசத்துக்கு முதலெட்டு மூணுபருந்து பூனை
அறிகணங்கள் நாக்கு மூணு
கருப்பை கரிமுயல் யோனி நால்வாய்
எண்டிசைக்கு மேந்த சக்கரன் உளன்
சத்திவினை வோடரசு மிகுமிடராய நோய்ச்
சோகம் சுகத்தோடன் பதுவும்
செல்லயெட் டேழாச் சென்றே.

352. சாதியாதினு யெனுமை நன்மை தரும்
யோனி ஒற்றை நன்றாம்
பேதியாய் இரட்டை தீதாம்
பெற்றிடும் நாளேது என்னில்
கோதில்நால் ஐந்துக் குன்னலா
குறைந்திடில் மிகப் பொல்லாது
தாதுசேர் குழலாய் பத்துப்
பொருத்தமும் தானும் பாரே.

353. ஒன்றினாங் கிரண்டும் எட்டு
ஒன்பது பதினான்கா காது
நின்றிலப் பக்க தீதான்
நிலவன் கொண்ட பக்கம்

கண்டிடில் மிகவும் தீதாம்
கலைவாறப் பக்கத் தோனும்
சென்றபிற் பக்கத் தோரும்
செப்பியீ றெட்டைத் தீதாம்.

354. சாற்றிய உதய ராசி
தன்னைநீ பரிந்து காணில்
போற்றிய மகரம் தீதாம்
புகழ மத்தெல் லாம்
மாற்றிடும் மகரம் தன்னில்
மனையினால் உத்தரையில்
ஆற்றிடும் மனைதான் நன்று
அறிந்தறிந் தன ராசிநூலே.

வாரம்

355. வாரந்தான் கொள்ளும் போது
மதிபுதன் வியாழன் வெள்ளி
சீரிய சிறப்புஉண் டாகும்
செயசனி இரவி வந்தால்
பாரினில் அர்த்த நாசம்
பல்பிணி கலகம் சாவு
சூரிய சோம வாரம்
ஆகிடில் குணம்உண் டாமே.

256. பார்க்குமங் கிசத்துக்குக் கொடியாகும்
பகரும் தென்கிழக்கு அதுவாம்
தெற்குத் தெற்குச் சிங்கமதாம்
தென்மேல் மூலை நாயாகும்
மேற்கு இடபம் வடமேற்கு
மொன்று கழுதை வடக்கானை
ஏற்கும் வடகீழ்கற் கடகமிது
யோனி யெட்டும் வரும்வாறே.

357. கொடியே ஆகில் திருவாகும்
கொலையே காட்டும் பகையாகில்
நெடிய சிங்கம் வெற்றியதாம்
நின்றால் நாயே குற்றம்தாம்
இடபம் ஆகில் மிகநன்மை
மின்னுங் கழுதை நோயாமே
கடகம் யானை நலமுண்டு
காகம் பொல்லாது எனவுரையே,

358. தாளக் காம உள்ளசத்தி
விளை வோடாய சுக்குமிடா
னோயவக் கிறகம் உள்ள சத்தி
தானியம் அரசு நீள
சுகமும் திக்கினி செய்யும்
மனையினுக் கங்குஞ் செப்புகவே.

359. அண்டி பதினொன்றின் சொல்
அருக்கற கேள் யெட்டிலை கட்கும்
மென்றி கிடைசெய கோனை
மானிரசசு தென்னரை மால்
நீறுபோன கொடுமாகும்
சந்தணி புகறகறக முக்கால்
கண்டிய சுள்ளி கண்ணுசனிக்
கஞ்சில் கயற் புருட்டே.

360. செப்பிய குதிரை யானை
ஆடுநீர் நாகம் சாரை
தப்பில்லாப் பெண்நாய் பெண்பூனை
தகறான பூனைஎலி யானை
பேடையே பெருத்த எருமை வேங்கை
கிடாய் புலி யோடு புல்வாய்
கொம்பறு கலைநாய் வல்லன்
குரங்கு வானம் பசுங்குரங்கே.

361. குறமிதுர் மனை ஊர் பெண்டிற்
குருதையிற் பெட்டைக் கூறு
நறகமிற் புருஷன் நல்ல
பால்பசுப் பிடியீ றாக
இருபத்து யேழு நாளும்
யோனி பாய பரியென்
றுறகமேதை யாகச்
சொல்லிடுந் துடியே அன்னாய்.

362. காஞ்சிறை நெல்லி அத்தி
நாவல் தினங்கருங் காலியாகும்
ஆனசண் பகமே புன்னை
ஆல்வகை அரசு வென்னில்

தீஞ்சுவைப் பலா எருக்கு
மாதுளைச் சிறந்த விளாம்
பூஞ்சுவை மருதாழம் மகிழம்
மூங்கில் பொழிலதே மரமே.

363. பொழிலஞ்சி பலாவும் வன்னி
யாம் புளிவேம்பு இலுப்பைப்
பழுதன்றிப் பறிமுன் காண
பால்மரம் பலாசு புன்னை
எழுசாம பூமகிழ்பலா மாவிலுப்பை
சண்பகம் எருச்கு மகிள
வஞ்சியால் சாலத்தி மாதுளை
இவையாம் மற்றே.

364. குடதிசை ஏரும் பார்க்கும்
குன்றிசை கொடியைப் பார்க்கும்
வடதிசை வேழம் பார்க்கும்
மடங்கல்தென் திசையைப் பார்க்கும்
திடம் முள்ளும் மூலிகாக
மதின்கையுமக் கழுதை யெல்லாம்
மடவரல் அருளாலே
பார்ப்பது வார மாமே.

365. பொல்லாத நாள்கள் வாரம்
பொருந்தாத இராசி மாதம்
சொல்லாத வெள்ளிப் பாடு
தியாச்சியம் இராகு காலம்
எல்லாம் நன்மை வாஸ்து
எழுந்திருக் கின்ற வேளை
வல்லாண்மை உடையோர் எல்லாம்
மனைதனைக் கோல நன்றே.

366. சிங்கமும் பருந்து பூனை
சிறந்திடும் திக்கி லேதான்
அங்கொரு குணமுண் டாகில்
அதன்கொடி மனைக்கு ஆகாரம்
தாங்கிய கன்னி மேற்கு
தனுமதிக்கு ஈசன் திக்கில்
மங்கைகேள் கொளத்துக் கோடி
மனையினில் வாழ்வு நன்மை.

367. கண்டது அக்கினி பால
கள்ளமாய்க் குழிக்கணங்கள்
உண்டெனில் அடியாள் சாவாள்
உயிருடன் பொருளும் போகும்
தெண்திறை எமனார் திக்கில்
சிறப்பில்லை மிடிய தாகும்
தண்டி கொடியா திக்கில்
சம்பந்தம் பொருள்வந் தெய்தும்.

368. வண்தமிழ் மேற்குச் செல்வம்
மத்திபம் வடமேற் காக
ஆம்பொருள் கிழக்குச் சோமன்
அஸ்தமுங் கல்வி தானம்
தான்முதல் பலவுஞ் சேரும்
தய்யல்கேள் ஈசன் திக்கில்
மேன்படு மதியில் பட்டு
மிக்கநோய் வறுமை காணும்.

369. சித்திரை மூன்று மாதம்
சித்தெலி பூனை யாகும்
மற்றொரு மூன்று மாதம்
வருமுயல் நோயே வெல்லும்
ஐப்பசி மூன்று மாதம்
அத்தியு அறியே வெல்லும்
மற்றொரு மூன்று மாதம்
சர்ப்பமும் கருடன் ஆமே.

முதலாவது மனைக்கு வந்த குழியைத் துருவமாக்கி எட்டில் கழித்தது கற்பகரம் ஆயகம்.

2 ஆவது எட்டால் பெருக்கி 12-ல் கழித்து மிகுந்த மிச்சம் சேடம் ஆதாயம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | ,, | 9ஆல் | பெருக்கி | 10-ல் | கழித்து | மிகுந்தசேடம்விரையம் |
| 4 | ,, | 3 ,, | ,, | 8-ல் | ,, | மிகுந்த சேடம் யோனி |
| 5 | ,, | 8 ,, | ,, | 27-ல் | ,, | மிகுந்த சேடம் நட்சத்திரம் |
| 6 | ,, | 4 ,, | ,, | 30 ல் | ,, | மிகுந்த சேடம் திதி |
| 7 | ,, | 9 ,, | ,, | 7-ல் | ,, | மிகுந்த சேடம் வாரம் |
| 8 | ,, | 7 ,, | ,, | 12-ல் | ,, | மிகுந்த சேடம் இராசி |
| 9 | ,, | 9 ,, | ,, | 4-ல் | ,, | மிகுந்த சேடம் வமிசம் |
| 10 | ,, | 4 ,, | ,, | 9-ல் | ,, | மிகுந்த சேடம் அமிசம் |
| 11 | ,, | 27 ,, | ,, | 100-ல் | ,, | மிகுந்த சேடம் வயது. |

ஆகப்பொருத்தம் 11-க்கு

ஆயகம் மீறாமல் போனால் 8 வைத்துக்கொள்ளவும்.
ஆதாயம் மீறாமல் போனால் 12 வைத்துக்கொள்ளவும்.
விரையம் மீறாமல் போனால் 10 வைத்துக்கொள்ளவும்.
யோனி மீறாமல் போனால் 8 வைத்துக்கொள்ளவும்.
நாள் மீறாமல் போனால் 27 வைத்துக்கொள்ளவும்.
திதி மீறாமல் போனால் 30 வைத்துக்கொள்ளவும்.
வாரம் மீறாமல் போனால் 7 வைத்துக்கொள்ளவும்.
இராசி மீறாமல் போனால் 12 வைத்துக்கொள்ளவும்.
வமிசம் மீறாமல் போனால் 4 வைத்துக்கொள்ளவும்.
ஆங்கிசம் மீறாமல் போனால் 9 வைத்துக் கொள்ளவும்.
வயது மீறாமல் போனால் 100 வைத்துக் கொள்ளவும்.

ஆதாயம் அதிகப்பட்டு விரையம் குறைவாய் இருந்தால் வீட்டுக்கு உடையவன் தனவான் ஆவான்.

ஆதாயம் குறைவாய் இருந்து விரையம் அதிகமாய் இருந்தால் தரித்திரன் ஆவான்.

ஆதாயமும் விரையமும் சரியாய் இருக்கில் சமனாய் இருக்கும்.

முதல்பதம் என்கிற துருவம் ஆயத்தை எட்டில் கொடுக்க மிகுந்த தொகையை வைத்துக் கொண்டு முதல்:

| | | | |
|---|---|---|---|
| 1 | வந்தால் | துவசாயம் | இந்திரன் |
| 2 | ,, | தூமாயம் | அக்கினி |
| 3 | ,, | சிம்மாயம் | யமன் |
| 4 | ,, | சிவனாயம் | நிருதி |
| 5 | ,, | ரிஷபாயம் | வருணன் |
| 6 | ,, | தானாயம் | வாய்வு |
| 7 | ,, | கெசாயம் | குபேரன் |
| 8 | ,, | காகாயம் | ஈசானியன் |

துவசாயத்துக்கு வடக்கே கட்டலாம். சிம்மாயத்துக்கும், கெசாயத்துக்கும் மேற்கே கட்டலாம். ரிஷபாயம் மேற்கே அல்லாமல் மற்ற இடங்களில் கட்டக் கூடாது.

துவசாயம் அக்கினி மூலையில் கட்டக் கூடாது. மற்ற எந்த் திக்கிலும் கட்டக் கூடாது. மற்ற எந்த திக்கிலே கட்டி இருக்கிறதோ அந்தப் பிரகாரமே இருக்கலாம். மற்றொரு இடங்களிலும் கட்டக்கூடாது.

துவசாயம், ரிஷபாயம், சிம்மாயம், பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் ஆகும்.

கெசாயம், ரிஷபாயம், வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஆகும்.

| | | |
|---|---|---|
| துவசாயம் | - | நல்ல புண்ணிய வானாவான். |
| தூமாயம் | - | மிருத்துப்பிரதம். |
| சிம்மாயப் | - | விஷப்பிரதம். |
| சிவனாயம் | - | ரோகப்பிரதம். |
| ரிஷபாயம் | - | இராட்சதப்பிரதம். |
| கெசாயம் | - | சுபப்பிரதம். |
| காகாயம் | - | நிஷ்பலம். |

காகாயத்துக்கும் இந்த ஆயங்களில் குணந்தெரிவதற்கு ஆயங்கள் நிர்ணயம் பணணும் போது ஒரு அங்குலம் அதிகமானால் பூரண ஆயுள் பலன் அறியவும். சேஷமாய் இருந்தால் சமபலனாய் இருக்கும். அங்குலம் குறைவாய் இருந்தால் குணஸ்தன் என்று அறியவும்.

## இந்த ஆயங்களில் ருணங்கள் தெரிந்து கொள்வதற்கு விபரம்

திதிபலன்.

| | | | |
|---|---|---|---|
| தூமாயத்துக்கு | - | ருணம் | 6 |
| சிம்மாயத்துக்கு | - | ருணம் | 1 |
| சிவனாயத்துக்கு | - | ருணம் | 4 |
| ரிஷபாயத்துக்கு | - | ருணம் | 7 |
| கெசாயத்துக்கு | - | ருணம் | 5 |
| காகாயத்துக்கு | - | ருணம் | 8 |

இந்த ஆயங்களுக்கும் ருணங்களுக்கும் ஏற்றக் குறைவு இல்லை. அமாவாசை அதற்கு மறுநாள் பிரதமை துக்கப்பிரதம். சதுர்த்தி நவமி - சதுர்த்தசி இம்மூன்றும் வீட்டைப்பாழ் பண்ணும்.

அமாவாசை கர்த்தனுக்கு மித்துரு பயம் உண்டாக்கும்.

### முதலாவது ஆயகம் வெண்பா.

370. அஞ்சில் அரசாள்வர் ஆறில் இருந்துயரம்
மிஞ்சிய மூன்றுஒன்றும் வேள்வியாம் — துஞ்சாமல்
நாலெட்டு இரண்டு நாசமாம் மனைக்கு
மேல்எட்டே சொல்ல விதி.

இ-ள்:- கெற்பநிலை அறியும் படி

யசமானுடைய சாணால் நாலுசாண் நீளக்கோலால் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு கோணாமல் அளந்து இரண்டு தொகையும் குழிமாறி வந்த தொகையை எட்டில் கழிக்க.

ஐந்து வந்தால் சுபகற்பம். அதற்குச் சகல காரியமும் செய்து பொருந்தி நடக்கும்.

ஆறு வந்தால் காக்கை கற்பம். அது மத்திபம். நீச்சனுக்கு இருக்க வேண்டியது.

ஒன்று வந்தால் கருட கற்பம். நால்வகைச் சாதிக்கும் பொருந்தி இருக்கும்.

மூன்று வந்தால் சிங்க கற்பம். அது உத்தமம்.

ஏழு வந்தால் கஜகற்பம். அது சுபம்.

இரண்டு வந்தால் புறாகற்பம். அது மத்திபம். வேடனுக்கு ஆகும்.

நான்கு வந்தால் சுவானகற்பம். அது மத்திபம். குறவர், இலம் பாடிகளுக்கு ஆகும்.

எட்டு வந்தால் கழுதை கற்பம். அது மத்திபம். மனைமுடியாது. அல்லது ஒரு வேளை முடிந்தாலும் அந்த மனை பாழடைந்து போம். அது தொம்பரவாள் குடுகுடுப்பைக் காரர்களுக்கும் இலமான் இவர்களுக்குப் பொருந்திய மனையாகும் எ-று.

## இரண்டாவது ஆதாயம்

சீர்பெறு மாயத்தைச்

...... ...... ...... ......

...... ...... ...... ......

இ-ள்:- முன் ஆயத்தை எட்டிற் பெருக்கி வந்த தொகையைப் பன்னிரண்டில் கழிக்க மிகுந்தது ஆதாயம் எ-று.

371. மேவிய ஒன்றிரண்டு ஏக போகமாம்
மேவிய திரிசதுர் கீர்த்தி சௌரியம்
தாவும் ஐந்து ஆறினில் தானி யம்தனம்
மேவும்ஏழு எட்டினில் சுகமெய்ஞ் ஞானமே.

இ.ள்:- ஆதாயம் ஒன்று இரண்டு வந்தால் ஏகபோக பாக்கிய முண்டாம்.

மூன்று, நான்கு வந்தால் கீர்த்தியும் சௌகரியமும் உண்டாம். ஐந்து, ஆறு வந்தால் தனதானியம் உண்டாம். ஏழு, எட்டு வந்தால் சுபமும் மெய்ஞ்ஞானமும் உண்டாம் எ-று.

372. எட்டுடன் ஒன்றினிற்கு இயன்ற போகமாம்
வட்டரும் தசம்தனில் வசியம் மன்னுமே
எட்டுடன் மூன்றுமே வினிய தன்மமாம்
சட்டமாம் துவாதசம் சமஸ்த நன்மையே.

இ.ள்:- ஒன்பது வந்தால் மிகுந்த போகபாக்கியம். பத்து வந்தால் சகலகாரியங்களும் வசியமாகும். பதினொன்று வந்தால் தரும சிந்தை உண்டாகும். பன்னிரண்டு வந்தால் சமஸ்தமும் உத்தம பலனாய் நடக்கும் எ-று.

## மூன்றாவது விரையம்

373. நன்மையாம் ஆயத்தை நவத்தில் தாக்கியே
பொன்னிய பத்தினில் பொருந்தி நீக்கினால்
அந்நிலை சிலவதாம் அறியல் ஒன்றினில்
குன்னிய அல்இரண்டு ஏத்தம் குன்றுமே.

இ.ள்:- முன் ஆயத்தை ஒன்பதில் பெருக்கிப் பத்தில்கழிக்கப் பத்துக்குள்ளாக வந்தால் செலவு.

ஒன்று மிகுந்தால் செல்வம் குன்றிப்போம்.
இரண்டிற்கு வீடு தீப்படும். எ-று.

374. குன்றிட மூன்றினில் குலவும் நற்சுகம்
வென்றிசேர் நாலினில் விளங்கும் புத்திரர்
ஒன்றிவை ஐந்தினில் ஒங்கு நற்சயம்
என்றனர் தரித்திரம் ஏழுக்கு என்னவே.

இ.ள்:- மூன்று வந்தால் குடும்ப விருத்தியுண்டாம். நாலு வருமாகில் புத்திர விருத்தியுண்டாம். ஐந்துவரில் விருதாவான செலவு நேரிடும். ஆறு மிகுந்தால் ஆரோக்கியம் உண்டாம். ஏழுவரில் தரித்திரம் உண்டாம் எ-று.

375. எண்ணவே எட்டினில் இலக்குமி வாசமாம்
பன்னிய நலத்தினிற் பாலர் ஆவிபோம்
முன்னிய தசமதில் உத்த மம்தரும்
மின்னும்எம் கோன்எனக்கு எடுத்து உரைத்ததே.

இ-ள்:- எட்டு வந்தால் இலட்சுமி வாசமாய் இருப்பாள். ஒன்பது வந்தால் புத்திர நாசமாகும். பத்து வந்தால் உத்தமம் எ-று.

இந்த ஆதாயத்திக்கும் விரையத்திற்கும் விபரம்:-

ஆதாயத்திற்கு விரையம் அதிகப்படில் கெடுதி. விரையத்திற்கு ஆதாயம் அதிகப்படில் நன்மை. ஆதாயமும் விரையமும் சமனாய் இருக்கில் சமபலன்.

## நான்காவது யோனிப் பொருத்தம்

376. உரைத்தஆ யத்தையும் உரைத்து மூன்றினில்
பொருத்தமாத் திரைஅட்ட மத்திற் போக்கிட
விருத்தியாய் நின்றது விளங்கும் யோனியாம்
பொருத்திடும் வேலினைப் போன்ற கண்ணியே.

இ-ள்:- முன் ஆயத்தை மூன்றில் பெருக்கி எட்டுக்குள்ளாக நின்றது அஷ்டம யோனி யென்றறியவும் எ-று.

377. சொற்றதில் ஏகமாம் சுப்பிர பாக்கியம்
மாற்றிரண்டு அதனில்மா கனகம் மன்னுமே
சுத்தமூன் றினில்சயம் துலங்கு நாலினில்
கத்துசுவா னம்பிணி காட்டும் என்பரே.

இ-ள்:- யோனி ஒன்று மிகுந்தால் இந்திரன்-கிழக்கு. அது கருட யோனி எந்நாளும் குறைவில்லாப் பாக்கியம் உண்டாம். இரண்டு மிகுந்தால் தென்கிழக்கு- அக்கினி. அது பூனையோனி. அதற்குக் கனகம்.

மூன்று மிகுந்தால் தெற்கு-யமன். அது சிங்கயோனி. செயம் பொருந்தும்.

நான்கு மிகுந்தால் தென்மேற்கு-நிருதி, சுவான யோனி, எந்நாளும் பிணியாய் இருக்கும் எ-று.

378. காட்டிய ஐந்தினில் கற்பம் கனதனம்
பூட்டிய ஆறினில் பொலியும் பொக்கிஷம்
கூட்டிய வேழகசங்கு உலவும் நற்சுகம்
நீட்டிய வாயசம் எட்டில் நிஷ்பலம்.

இ.ள்:- ஐந்துக்கு மேற்கு- வருணன். சர்ப்பயோனி. கஷம் பொருந்திய தனம் பெருகும்.

ஆறுவருமாகில் வடமேற்கு-வாய்வு. எலியோனி. எல்லாப்பொருளும் அற்று நிர்ப்பாக்கியம் ஆகும்.

ஏழுவருமாகில் வடக்கு-குபேரன். யானையோனி. அந்த குடும்பம் சுபிட்சமாய் இருக்கும்.

எட்டு வருமாகில் வடகிழக்கு-ஈசானியன். முயல் யோனி. அதற்கு ஒன்றுமில்லாமல் நிர்ப்பாக்கியமாகி விடும் எ-று.

## ஐந்தாவது நட்சத்திர பலன்

ரோகிணி, ரேவதி, பூசம், அஸ்தம், மிருகசீரிஷம், அனுஷம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி இவை 9-ம் உத்தமம். சித்திரை, புனர்பூசம், மூலம், அவிட்டம், சுவாதி, சதயம் இவை 6-ம் பொது மிசிரம். அசுவினி, பரணி, திருவாதிரை, ஆயிலியம், கார்த்திகை, மகம், பூரம், விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், பூரட்டாதி இப்பன்னிரண்டும் மத்திமம் ஆகாது.

## ஆறாவது திதிபலன்

இதில் பூர்வபட்சம் நன்று.
அமரபட்சம் மத்திபம்.
அஷ்டமி, உவா, இருத்தை மத்நியத்திலும் மத்திபம்.

## ஏழாவது வாரப் பொருத்தம்

379. சாருமுன் வரவுஅதைத் தனித்த ஒன்பதில்
ஏரவ பெருக்கிஏழுக்கு ஈந்த மீதியை
வாரமாம் தினகரன் வரக்கு ரோதமே
சேரவே சோமனில் செழிப்புண் டாகுமே.

இ-ள்:- மூன் ஆயத்தை ஒன்பதில் பெருக்கி ஏழுக்கு ஈய்ந்த மிகுதி வாரம்.

ஒன்றுக்கு ஆதிவாரம் நின்றால் அந்த மனையில் எந்நாளும் குரோதம் உண்டாம்.

இரண்டிற்கு சோமவாரம் நின்றால் நாளுக்குநாள் செழித்து அதிக சந்தோஷம் உண்டாம் .எ-று.

380. ஆகும்அங் காரகன் அர்த்த நாசமாம்
சேகரம் புந்தியில் சேர சௌக்கியம்
பாகமாம் குருவினின் மன்னும் புத்திரர்
சோகநீர் சுங்கனிற் சொல் லும் நன்மையே.

இ-ள்:- மூன்றில் மங்கள வாரம் நின்றால் பழம்பொருளும் புதுப் பொருளும் இல்லாமல் அற்றுப்போகும்.

நாலில் புதவாரம் நின்றால் அதனால் இலட்சுமி வாசமாய் இருப் பாள்.

ஐந்தில் குருவாரம் நின்றால் அதனால் புத்திர சம்பத்து உண்டாய் இருக்கும்.

ஆறில் சுக்கிரவாரம் நின்றால் அதனால் சகலகாரியமும் நன்மை யாய் நடக்கும்.

ஏழில் சனிவாரம் நின்றால்கலகமும் சோரபயமும் உண்டாம் எ-று.

## எட்டாவது இராசிப் பொருத்தம்

ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இந்த நான்கும் ஸ்திர ராசி. இவைகள் நன்மையைத் தரும்.

மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்த நாலும் உபயராசி. உத்தமம்.

மேஷம், கர்க்கடகம், துலாம், மகரம் இந்த நான்கும் சரராசி. இது மத்திபம்.

## ஒன்பதாவது சாதிகள் பொருத்தம்

பிராமணன் பொது
க்ஷத்திரியன் நன்று
வைசியன் நன்று
சூத்திரன்-மத்திபம்.

## பத்தாவது அங்கிஷப் பொருத்தம்

| | | |
|---|---|---|
| 1க்கு | தடகரஅங்கிஷம் | தீது |
| 2க்கு | சோமகரஅங்கிஷம் | பாக்கியம் |
| 3க்கு | சத்தி அங்கிஷம் | நன்மையுண்டாகும் |
| 4க்கு | புஷ்கரஅங்கிஷம் | தானியங்கள் விருத்தியுண்டாம் |
| 5க்கு | குரு அங்கிஷம் | இராச்சிய பரிபாலனம் உண்டு |
| 6க்கு | சுக்கிர அங்கிஷம் | யோகபலன் |
| 7க்கு | சனி அங்கிஷம் | நோயுண்டாம், தீது |
| 8க்கு | இராகுஅங்கிஷம் | தரித்திரம், தீது |
| 9க்கு | கேது அங்கிஷம் | சகலமும் நன்மை. |

## பதினொன்றாவது மனைக்கு வயது

60 வருஷத்துக்கு மேற்பட்ட தொகை நன்மை.

60 வருஷத்துக்குக் குறையில் அந்த மனை பொல்லாது.

இவைகளில் ஆயகம், சிலும்பு வரினும், ஆக்கம் சிறுத்து அறிவு பெருகினும் அங்கிஷம் நாள், பக்கம், யோனி, வாரம், இராசி பொல்லாதவை வரினும் ஆயுசு குறையினும் மனைக்கு ஆகாது.

மனைக்கு வந்த வாரத்தின் மேல் நேத்திரம் அறிவது

இ.ள்:- மனைக்கு எந்த வாரமோ அந்த வாரம்முதல் ஆதிவாரம் வரைக்கும் எண்ண எத்தனை வந்ததோ அந்த தொகையை 3 ஆல் பெருக்கி, வந்த தொகை எத்தனையோ அத்தனையும் கணக்குக்கு அசுவனி முதலாகத்தள்ளி நின்ற நாள் 9 வரைக்கும் ஒருகண். அதற்குமேல் 12 நாள் இரண்டு கண், அதற்குமேல் 6 நாள் குருடு. இப்படி மனை நட்சத்திரத்திற்குள் துன்னுள்ள தென்பது.

மனைக்கு - பால, யவ்வன, மூப்பு, மரணபருவம் அறிவது

மனைக்கு வந்த அங்கிசத்தொகையை ஏழில் பெருக்கி ஐந்திலே கழிக்க வந்தது,

1 க்கு பாலன்
2 ,, யவ்வனம்
3 ,, கௌமாரம்
4 ,, மூப்பு
5 ,, மரணம் என்பது.

## தாரகால பலன்

எசமான் நட்சத்திரத்திற்கும்
மனை நட்சத்திரத்திற்கும்
கண்ட தொகையை ஒன்பதில் கழித்து
மிஞ்சினதிற்குப் பலன்.

| | | |
|---|---|---|
| 1க்கு | ஜென்ம தாரே | திரேகநாசம் |
| 2க்கு | சம்ப தாரே | சம்பத்துண்டாம் |
| 3 ,, | விபதாரே | விபத்துண்டாம் |
| 4 ,, | சேமதாரே | தன விருத்தியாம் |
| 5 ,, | பரிதற்தாரே | காரிய நாசம் |
| 6 ,, | சதகதாரே | சருவ சித்தியாம் |
| 7 ,, | வாத தாரே | தனநாசம் |
| 8 ,, | விரதிய தாரே | சருவ சித்தியாம் |
| 9 ,, | பரமதேர தாரே | ஆயிரோகயம். |

இந்தப்படி பொருத்தம் பார்த்துச் செய்யவும்.

## பஞ்சகம் பார்க்கிறது

திதி, வாரம், நட்சத்திரம், இலக்கினம்
இந்நாலுங் கூட்டி ஒன்பதில் கழித்து
நின்ற சேடத்திற்குப் பலன்.

| | | |
|---|---|---|
| 1க்கு | மிருது பஞ்சகம் | ஆகாது |
| 2 ,, | அக்கினி ,, | ஆகாது |
| 3 ,, | நிலப் பஞ்சகம் | நல்லது |
| 4 ,, | இராசப் பஞ்சகம் | தீது |

| | | | |
|---|---|---|---|
| 5 | க்கு | நிஷ் பஞ்சகம் | நல்லது |
| 6 | ,, | சோர ,, | ஆகாது |
| 7 | ,, | நிஷ் ,, | நல்லது |
| 8 | ,, | ரோக ,, | ஆகாது |
| 9 | ,, | நிஷ் ,, | நல்லது. |

பஞ்சகம் வராவிட்டால் துருவம் சேர்த்துப் பார்க்க

மனைக்கு வருகிற வாரம் எந்த வாரம்

வருகிறதோ அதற்கு விபரம்

| | | |
|---|---|---|
| ஞாயிறு | 15 | |
| திங்கள் | 10 | |
| செவ்வாய் | 12 | |
| புதன் | 4 | |
| வியாழன் | 8 | |
| வெள்ளி | 8 | |
| சனி | 4 | சேர்த்துப் பார்க்கவும். |

மிறத்தி யோகம் அறிய

அருக்கன் 17 அனுசம் அம்புலி 21 உத்திராடம்
முருக்கமுடன் செவ்வாய் 24 சதையம்—செருத்த புதன்
அமுத நாளாம் அவதி செம்பொன் அயதாம
மிருகசி ரிடம்வெள்ளி நவமாம் ஆயிலியம் சனி
அஸ்தம் இவ்வாறு மிரிதியோகம்.

## மனை-பொருத்தத்தின் விவரம்

| | |
|---|---|
| கர்ப்பம் | புத்திர விருத்தி |
| ஆதாயம் | அங்கம் |
| செலவு | பிராணன் |
| யோனி | வாகனம் |
| நட்சத்திரம் | சிரசு |
| சூஸ்திரம் | தயவு |
| வாரம் | முகம் |
| அங்குசம் | கை |
| பஞ்சமுக | குணம் |

| | |
|---|---|
| இராசி | பாசம் |
| சாதி | வருநாச்சாரம் |
| நேத்திரம் | யோகம் |
| கணம் | தேவதைவாசம். |

## ஷை நட்சத்திரம் பார்க்கும் விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1க்கு | பூசம் | 15க்கு | உத்திரம் |
| 2க்கு | விசாகம் | 16 ,, | பூராடம் |
| 3 ,, | சதயம் | 17 ,, | அசுவனி |
| 4 ,, | மிருக சீரிடம் | 18 ,, | ஆயிலியம் |
| 5 ,, | அஸ்தம் | 19 ,, | அனுஷம் |
| 6 ,, | உத்திராடம் | 20 ,, | பூரட்டாதி |
| 7 ,, | பரணி | 21 ,, | திருவாதிரை |
| 8 ,, | மகம் | 22 ,, | சித்திரை |
| 9 ,, | கேட்டை | 23 ,, | திருவோணம் |
| 10 ,, | உத்திரட்டாதி | 24 ,, | கார்த்திகை |
| 11 ,, | புனர் பூசம் | 25 ,, | பூரம் |
| 12 ,, | சுவாதி | 26 ,, | மூலம் |
| 13 ,, | அவிட்டம் | 27 ,, | ரேவதி |
| 14 ,, | ரோகிணி. | | |

காலாமிர்த சுலோகத்தின் கருத்து

வீடுகட்ட நிச்சயிக்கும் போது, நட்சத்திரங்கள் நிற்கும் நிலை, வீடு அஸ்திவார முகூர்த்தம், ஸ்தம்ப பிரதிஷ்டைக்கும்:-

சூரியன் -கார்த்திகை, பரணி 4-ஆம் பாதம், ரோகணி முதற் பாதம் இவற்றில் இருக்கினும்

மேற்படி சந்திரன்–கார்த்திகையிலிருக்கினும்

மேற்படி செவ்வாய்- கார்த்திகை, மகம், ரேவதி, உத்திராடம், அஸ்தம், மூலம், பூசம், இந்த ஏழு நாளிலும் இருந்தால் கிரகபதியாகிய எசமானுச்கு அத்தியந்த துக்கம் உண்டாம். அந்த வீடானது அக்கினியில் பஸ்பமாய்ப் போகும்.

மேற்படி சனி- அனுஷம், கேட்டை, சுவாதி, பூரட்டாதி, உத்திரட்டாதி, பரணி இந்த ஆறு நாளிலே இருக்க எந்த வீடு கட்டினாலும் அந்த வீடு சீக்கிரமாய்ப் பிரம்ம ராட்சச பூதங்கள் வாசம் பண்ணும்.

மேற்படி சுபக்கிரகமானாலும், பாபக்கிரகமானாலும் சத்துரு க்ஷேத்திரத்திலிருந்து லக்கினத்துக்குப் பத்திலாவது ஏழிலாவது இருந்தால் அந்த வீடு பராதீனமாய் விடும்.

மேற்படி புதன் - சித்திரை, அசுவினி, உத்திரம், அஸ்தம், மிருக சீரிஷம், ரோகணி, இந்த ஆறிலும் இருந்தால் எசமானுக்கு ஐசுவரியம் உண்டாம்.

குரு- ரோகணி, பூசம், மிருகசீரிஷம் ஆயிலியம், திருவோணம், உத்திரம் மூன்று, பூராடம் இந்த ஒன்பதும் பத்திலும் இருந்தால் புத்திரப் பிரதம்.

மேற்படி சுக்கிரன்- திருவாதிரை, புனர்பூசம், அவிட்டம், விசாகம், சதையம், சித்திரை, இந்த ஆறிலும் இருந்தால் தானியப் பிரதம்.

ஏழாம் வீட்டில் சுக்கிரன் இருந்தால் தானிய விருத்தி உண்டாம்.

## கோள சக்கரநிலை

ஈசானியம் முதல்- மீனம் ஆதியாய் வைத்துப் பன்னிரண்டு இராசியையும் இந்த சக்கிரத்தில் பிரதட்சணமாய் எழுதி கர்த்தன் இராசிக்கு விடப்படுகிற இடத்தை எண்ணிக் கொண்டு வரும் சக்கரமாகையால் கர்த்தன் நாம இராசியிலும், ஐந்தாம் இராசியிலும் வீடு கட்டினால் பந்துக்களைப் பொசிப்பான். அவன் இராசிக்கு 3, 7, 11 இந்த இராசியில் வீடுகட்டினால் அன்னியரைப் பொசிப்பான். 2, 6, 10 இராசியில் வீடுகட்டினால் நாசம் ஆம்.

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் | மீனம் முதல் வைத்துப் பார்க்கவும் | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## பூதபலன்

மேற் சொல்லிய துருவ பதத்தை மூன்றில் பெருக்கி ஐந்தில் கொடுக்க:-

1 மிகுந்தால் பூ தத்துவம்- இதன்பலன் பாக்கியப் பிரதம்.

2 மிகுந்தால் உதக தத்துவம்- இதன்பலன் சந்தோஷம்.

3 மிகுந்தால் அக்கினி தத்துவம்- இதன்பலன் மிருத்வு பயம்.

4 மிகுந்தால் வாய்வு தத்துவம்- இதன்பலன் சுகம்.

5 மிகுந்தால் ஆகாச தத்துவம்- இதன்பலன் தரித்திரம்.

★ ★ ★

# 11. அருக்கன் நிலை

அருக்கன் நிற்கும் நேரமும் திசையும்

| நாள், நேரம். | | திசை |
|---|---|---|
| 1. | சனி - இரவு 30 நாழிகை<br>ஞாயிறு - பகல் 30 நாழிகை | தெற்கு |
| 2. | ஞாயிறு - இரவு 30 நாழிகை<br>திங்கள் - பகல்,இரவு - 60 ,, | தென்மேற்கு |
| 3. | செவ்வாய் - பகல் 30 நாழிகை<br>,, முன் இரவு 10 ,, | மேற்கு |
| 4. | செவ்வாய் - இரவு மிகுதி 20 நாழிகை<br>புதன் - பகல் 30 ,, | வடமேற்கு |
| 5. | புதன் - இரவு 30 நாழிகை<br>வியாழன் - பகல் 30 ,,<br>வியாழன் - முன் இரவு 10 நாழிகை | வடக்கு |
| 6. | வியாழன் - இரவு மிகுதி 20 நாழிகை<br>வெள்ளி - பகல், இரவு 60 ,, | வடகிழக்கு |
| 7. | சனி - பகல் 30 நாழிகை | கிழக்கு |
| 8. | பாழ் | தென்கிழக்கு |




மனை கோலல், கால் நாட்டல், கூரைவேய்தல், குடிபுகுதல் போல் வனவாகிய நல்ல செயல்களுக்கும், பிரயாணம் செய்தல் போன்ற பிறசெயல்களுக்கும் மேற்கூறிய அருக்கன் நிற்கும் நிலை, நாள், நேரம், திசை முதலியன அறிந்து - அதற்கு எதிர் திசையில் நிற்கும் பகைப்பொருளின் வன்மை,மென்மை அறிந்து அவற்றிற்கு ஏற்ப அச்செயலைத் தொடங்குதலோ விடுதலோ செய்ய வேண்டும்.

இச் செயலுக்கான முழு விளக்கம்

1. சனி இரவு, ஞாயிறு பகல் - இக்காலங்களில் ஒரு செயலைத் தொடங்கினால்:-

இந்நாட்களுக்குரிய திசை தெற்கு - பிறப்பு - சிங்கம். எதிர் திசை வடக்கு. அதற்குரிய பிறப்பு - யானை. இவற்றில் யானை இரை யாகும் மிருகமாதலின் சிங்கம் யானையை நோக்கிச் செல்லலாம். எனவே இந்நாட்களில் நல்ல செயல்களுக்காகத் தெற்கிலிருந்து

வடக்கு நோக்கிச் செல்லலாம். பிற திசைகளிலும் சிங்கத்திற்குப் பகை இல்லை. ஆதலின் பிறதிசைகளை நோக்கியும் செல்லலாம்.

2. ஞாயிறு இரவு, திங்கள் பகல், இரவு இக்காலங்களில் செல்ல விரும்பினால்:-

இந்நாட்களுக்குரிய திசை - தென்மேற்கு - பிறப்பு - நாய். எதிர் திசை - வடகிழக்கு - அத்திசைக்குரிய பிறப்பு முயல். இவற்றிலும் முயல் இரையாகும் மிருகம் ஆதலின் இந்நாட்களில் வடகிழக்கு நோக்கிச் செல்லலாம். பிறதிசைகளிலும் நாய்க்கு எதிர் பகை எதுவும் இல்லை. அத்திசைகளிலும் செல்லாம்.

3. செவ்வாய் பகல் முதல், இரவு 10 நாழிவரை ஆகிய காலத்தில் தொடங்கினால்:-

எதிர் திசை - கிழக்கு - பிறப்பு - கருடன். இவற்றில்,கருடன் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் செவ்வாய்க் கிழமைக்குரிய மேற்கி லிருந்து (பாம்புத் திசையிலிருந்து) கருட திசையாகிய கிழக்கு நோக்கிச் செல்லலாகாது. பிறதிசைகளில் செல்லலாம்.

4. செவ்வாய் இரவு மிகுதி 20 நாழிகை, புதன் பகல் 30 நாழிகை ஆகிய இந்தக்காலத்தில் ஒரு செயலைத் தொடங்கு வதானால்:

இக்காலத்திற்கு உரிய திசை - வடமேற்கு – பிறப்பு - எலி
எதிர் திசை - தென்கிழக்கு, ,, - பூனை

இவற்றில் எதிர் திசையிலுள்ள பூனை இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் செவ்வாய், புதன் ஆகிய மேற் குறித்த நாட்களுக்குரிய வடமேற்குத் திசையிலிருந்து (எலித்திசையிலிருந்து) பூனைத்திசை யாகிய தென்கிழக்கு நோக்கிச் செல்லுதல் கூடாது. பிறதிசை களில் செல்லலாம்.

5. புதன் இரவு 30 நாழிகை–வியாழன் பகல் முதல், முன் இரவு 10 நாழிகை ஆகிய இந்த காலத்தில் ஒரு செயலைத் தொடங்குவதா னால்:-

இக்காலத்திற்குரிய திசை - வடக்கு - பிறப்பு - யானை
எதிர்திசை - தெற்கு - ,, சிங்கம்

இவற்றிலும் எதிர் திசையிலுள்ள சிங்கம் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் புதன் இரவு, வியாழன் பகல், இரவு 10 நாழிகை வரை

யுள்ள காலத்தில் அதற்குரிய திசையாகிய வடக்குத் திசையிலிருந்து சிங்கத் திசையாகிய தெற்கு நோக்கிச் செல்லலாகாது. பிறதிசைகளில் செல்லலாம்.

6. வியாழன் இரவு பின் 20 நாழிகை-
வெள்ளி பகல், இரவு ஆகிய காலத்தில்
ஒரு நல்ல செயலைச் செய்யத் தொடங்குவதானால்
இக்காலத்திற்குரியதிசை - வடகிழக்கு – பிறப்பு - முயல்
எதிர்திசை - தென்மேற்கு ,, - நாய்

இவற்றிலும் எதிர் திசையிலுள்ள நாய் இரை எடுக்கும் பிறப்பு ஆதலின் மேற்கண்ட வியாழன், வெள்ளி நாட்களுக்குரிய வடகிழக்குத்திசையிலிருந்து நாய்த்திசையாகிய தென்மேற்குத் திசைக்குச்செல்லக்கூடாது. பிற திசைகளில் செல்லலாம்.

7. சனி- பகல் 30 நாழிகை ஆகிய காலத்தில் ஒரு செயலைத் தொடங்குவதானால்:-

| | | | |
|---|---|---|---|
| இக்காலத்திற் குரியதிசை | கிழக்கு | பிறப்பு | கருடன் |
| எதிர் திசை | மேற்கு | ,, | பாம்பு |

இவற்றில் எதிர்திசையிலுள்ள பாம்பு இரையாகும் பிறப்பு ஆதலின் சனிக்கிழமை கிழக்குத்திசையிலிருந்து பாம்புத்திசையாகிய மேற்கு நோக்கிச் செல்லலாம். பிற திசைகளுக்கும் தடை இல்லை.

8. பூனைத்திசையாகிய தென் கிழக்குத் திசையிலிருந்து எலித் திசையாகிய வடமேற்கு நோக்கி எப்போதும் செல்லலாம். பிற திசைகளுக்குச் செல்லவும் தடை இல்லை. மேலும்

இப்பகுதியில்

1. திருமணம் முதலிய நல்ல செயல்களுக்கு ஆகாத இராசிகள் மட்டும் தனியே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

2. இதே போல நல்ல செயல்களுக்கு உரிய தலைவனின் இராசிச் சக்கரத்தில் எந்த இடம் சுத்தமாய் இருக்கவேண்டும் என்ற எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. எந்த எந்த நாட்கள், எந்த எந்த செயலுக்கு ஏற்றவை என்பது அட்டவணை இட்டுக் காட்டப்பட்டுள்ளது.

குற்றமுடைய நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| வளர்பிறை | சதுர்த்தசியில் | ஐந்தாம்சாமம் | மேற்கு |
| ,, | அஷ்டமியில் | இரண்டாவதுசாமம் | தென்கிழக்கு |
| ,, | ஏகாதசியில் | ஏழாம் சாமம் | வடக்கு |
| ,, | பூரணையில் | நான்காம் சாமம் | தென்மேற்கு |
| தேய்பிறை | திருதியையில் | ஒன்பதாம் சாமம் | வடமேற்கு |
| ,, | சப்தமியில் | மூன்றாம் சாமம் | தெற்கு |
| ,, | தசமியில் | எட்டாம் சாமம் | வடக்கு |
| ,, | சதுர்த்தசியில் | முதற்சாமம் | கிழக்கு |

ஆகிய நேரங்கள் குற்றம் (தோஷம்) உடையனவாகும். எனவே இந்தநேரங்களில் நல்லசெயல்கள் செய்வதைத் தவிர்க்கவேண்டும். இந்த திசைகளில் பயணம் செய்வதையும் இந்த நேரங்களில் தவிர்க்கவேண்டும்.

பஞ்ச கோள்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. சூரியன் | நின்ற | நட்சத்திரத்திற்கு | 7, 10, 15, 21 | ஆகிய நட்சத்திரங்கள் |
| 2. செவ்வாய் | நின்ற | நட்சத்திரத்திற்கு | 7, 10, 15, 21 | ,, |
| 3. புதன் | நின்ற | ,, | 8, 18, 24 | ,, |
| 4. வியாழன் | நின்ற | ,, | 7, 9 | ,, |
| 5. வெள்ளி | நின்ற | ,, | 7, 9 | |
| 6. சனி | நின்ற | ,, | 5, 6, 10, 11, 20 | ,, |

7. இராகு, கேது ஆகியவற்றிற்கு ஏழாம் நட்சத்திரம் ஆகியவற்றில் நல்ல செயல்கள் எவற்றையும் செய்யக்கூடாது.

கரிநாள்

பன்னிரண்டு மாதங்களிலும் கரிநாட்கள் வரும் தேதிகள் உள்ளே முறைப்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன.

கட்டாயம் நீக்கவேண்டிய நேரங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | மாலை மணி | 6.48க்கு | மேல் | 1மணி | 30நிமிடம் | நீக்கவும் |
| திங்கள் | இரவு ,, | 10.48க்கு | ,, | ,, | ,, | ,, |
| செவ்வாய் | மாலை மணி | 6.24க்கு | ,, | ,, | ,, | ,, |
| புதன் | இரவுமணி | 10.48க்கு | | ,, | ,, | ,, |
| வியாழன் | மாலை மணி | 6.24க்கு | ,, | ,, | ,, | ,, |
| வெள்ளி | பிற்பகல் மணி | 2 24 ,, | ,, | ,, | ,, | ,, |
| சனி | பகல் மணி | 11.36 ,, | ,, | ,, | ,, | ,, |

குளிகை காலம்

பகல் குளிகை

ஞாயிறு - ஏழாம் முகூர்த்தநேரம் அதாவது 22½ நாழிமுதல் 26¼ நாழிமுடிய.

(மாலை 3.00 மணி முதல் 4.30 மணி முடிய)

திங்கள்- ஆறாம் முகூர்த்தநேரம்-அதாவது 18¾ நாழி முதல் 22½ நாழி முடிய.

(பிற்பகல் 1.30 மணி முதல்- 3.00 மணி முடிய).

செவ்வாய் - ஐந்தாம் முகூர்த்தநேரம்- 15 நாழி முதல் 18¾ நாழி முடிய.

(பகல் 12.00 மணி முதல் 1. 30 மணி முடிய)

புதன் - நான்காம் முகூர்த்த நேரம்- 11¼ நாழிமுதல் 15 நாழிமுடிய

(முற்பகல் 10.30 மணிமுதல் 12. 00மணி முடிய)

வியாழன் - மூன்றாம் முகூர்த்த நேரம்- 7½ நாழிமுதல்- 11¼ நாழி முடிய.

(காலை 9.00 மணிமுதல் 10.30 மணிமுடிய)

வெள்ளி- இரண்டாம் முகூர்த்தநேரம்-3¾நாழிமுதல்7½நாழிமுடிய.

(காலை 7.30 மணிமுதல் -9.00 மணி முடிய)

சனி - முதல் முகூர்த்த நேரம்-காலை முதல் 3¾ நாழிமுடிய.

(காலை 6.00மணி முதல் 7.30மணி முடிய)

இரவு குளிகை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | மூன்றாம் | முகூர்த்தம் | நாழி | 7½-11¼ | இரவு | 9.00-10.30 |
| திங்கள் | இரண்டாம் | ,, | ,, | 3¾-7½ | ,, | 7.30-9.00 |
| செவ்வாய் | முதல் | ,, | ,, | 0-3¾ | பின்மாலை | 6.00-7.30 |
| புதன் | ஏழாம் | ,, | ,, | 22½-26¼ | விடியல் | 3.00-4.30 |
| வியாழன் | ஆறாம் | ,, | ,, | 18¾-22½ | இரவு | 1.30-3-00 |
| வெள்ளி | ஐந்தாம் | ,, | ,, | 15-18¾ | நள்ளிரவு | 12.00-1.30 |
| சனி | நான்காம் | ,, | ,, | 11¼-15 | ,, | 10.30-12.00 |

இக்குளிகை கால நேரங்களில் மனை கோலுதல் கால் நாட்டுதல், குடிபுகுதல், பயணம் தொடங்குதல் போன்ற எல்லா வகையான நல்ல செயல்களையும் மேற்கொள்ள நன்மை உண்டாகும்.

x x x

## அருக்க நிலை

1. சனிக்கிழமை இரவு 30 நாழிகையும்
   ஞாயிற்றுக்கிழமை பகல் ,, ,, தெற்கிலும்
2. ஞாயிற்றுக்கிழமை இரவு 30 நாழிகையும்
   திங்கட்கிழமை 60 நாழிகையும் தென்மேற்கிலும்
3. செவ்வாய்க்கிழமை பகல் 30 நாழிகையும்
   இரவு 10 நாழிகையும் மேற்கிலும்
4. செவ்வாய்க்கிழமை இரவு மற்ற 20 நாழிகையும்
   புதன்கிழமை பகல் 30 நாழிகையும் வடமேற்கிலும்
5. புதன்கிழமை இரவு 30 நாழிகையும்
   வியாழக்கிழமை பகல் 30 ,,
   ,, ,, இரவு 10 ,; வடக்கிலும்
6. வியாழக்கிழமை இரவு மற்ற 20 நாழிகையும்
   வெள்ளிக்கிழமை 60 நாழிகையும் வடகிழக்கிலும்
7. சனிக்கிழமை பகல் 30 நாழிகையும் கிழக்கிலும்
   அருக்கனிருக்கும்;
8. அக்கினி மூலை – பாழ்

## திசையோனி நிலை

1. கருடன் - கிழக்கு
2. சிங்கம் - தெற்கு
3. பாம்பு - மேற்கு
4. யானை - வடக்கு
5. பூனை - தென்கிழக்கு
6. நாய் - தென்மேற்கு
7. எலி - வடமேற்கு
8. முயல் - வடகிழக்கு

அருக்கனில் கருடனை வைத்து முறையே பார்க்கும்போது எதிருக்கு எதிர் பகையோனி நிற்கும். அவைகளுள்-

கருடன் திசையிலிருந்து பாம்பு திசைக்குப் போகலாம்;

பாம்புத் திசையிலிருந்து கருடன் திசைக்குப் போகலாகாது ஏன் எனில்

கருடன் இரை எடுக்கப்போகும்.

பாம்பு இரையாக வரும், ஆதலால் என்க.

ஒருவன் யாத்திரைக்குப் பட்சி முதலிய சகுனங்கள் பார்க்கிற போது,

இரையாகும் யோனித்திசையிலிருந்து

இரையெடுக்கும் யோனித்திசைக்கு அவை போகலாகாது.

381. அருக்கன்நிலை யில்கருடன் ஆனதொரு பூனை
நெருக்கியநல் சிங்கமொடு நின்றிலகு நேர்நாய்
தருக்கமுடன் நாகம்எலி யானைமுயல் எட்டும்
இருக்குமுதல் இந்திரன்நே ராம்பகை எதிர்த்தே.

## இராசி விசேஷம்

| | |
|---|---|
| விவாகத்துக்கு | மேஷம் |
| திதிகொடுக்க | ரிஷபம் |
| யாத்திரைக்கு | மிதுனம் |
| மரம்வைக்க | கர்க்கடகம் |
| குருவைக்காண | சிங்கம் |
| புணர்ச்சிக்கு | கன்னி |
| வீடுகட்ட | துலாம் |
| உழவுக்கு | விருச்சிகம் |
| கிணறுவெட்ட | தனுசு |
| கப்பல்யாத்திரைக்கு | மகரம் |
| மயிர்கழிக்க | கும்பம் |

வித்தியாரம் பத்துக்கு- மீனம் ஆகாது.

## மடசுத்தம்

| | | | |
|---|---|---|---|
| குடிபுக | 12 | முடிசூட்ட | 11 |
| அன்னப் பிராசனத்துக்கு | 10 | மயிர்கழிக்க | 9 |

| | | | |
|---|---|---|---|
| உபநயனத்துக்கு | 8 | விவாகத்துக்கு | 7 |
| கோடியுடுக்க | 6 | யாத்திரைக்கு | 5 |
| வித்தியாரம்பத்துக்கு | 4 | பொன் பூண | 2 |

நிஷேகத்துக்கு இலக்கினம் சுத்தமாக இருக்கவேண்டும்.

## வாரபலன்

சுக்கிரவாரம், சோம வாரம் - சுபகரம்
புதன், வியாழன் - தனப்பிரதம்
ஆதிவாரம், மங்கள வாரம் - துக்கப்பிரதம்
சனிவாரம் - சோரபயம்

இவ்வாரங்களுக்குக் கரணம் அறிய

ஆதிவாரத்துக்கு - வணிகரணம்
சோம வாரத்துக்கு - கரகரணம்
மங்கள வாரத்துக்கு - தைதுலாம்
புத வாரத்துக்கு - கௌலவம்
குருவாரம், சுக்கிரவாரத்துக்கு - பவம்
சனி வாரத்துக்கு - பத்திரை.

## வார விசேஷம்

ஞாயிறு - உத்தியோகம் செய்ய
திங்கள் - விதை விதைக்க
செவ்வாய் - போர் செய்ய
புதன் - வித்தியாரம்பஞ் செய்ய
வியாழன் - விவாஹஞ் செய்ய
வெள்ளி - மயிர் கழிக்க
சனி - தவஞ் செய்ய - உத்தமம்.

## கவி

382. மன்னுமுதல் சதுர்த்தியின் ஐந்தாஞ் சாமம்
மருவியஅட் டமிஇரண்டு பதினொன்று ஏழாம்
முன்னில்உவா நாற்சாமம் பின்பக்கத்தின்
மூன்றிலிரு மூன்றுஏழில் மூன்றாம் சாமம்

பன்னியபின் பத்தினிலே எட்டாஞ் சாமம்
பதினான்கின் முதல்சாமம் பகர்ந்த விஷ்டி
இன்னதனை யச்சாமம் என்றும் மற்றை
இரவி முதல் திசைகள்தீது என்னு மாமே.

## விஷ்டிதோஷம்

பூர்வபட்ச

| | | | |
|---|---|---|---|
| சதுர்த்தசியில் | ஐந்தாம் | சாமம் | மேற்கிலேயும் |
| அஷ்டமியில் | இரண்டாம் | ,, | தென்கிழக்கிலேயும் |
| ஏகாதசியில் | ஏழாம் | ,, | வடக்கிலேயும் |
| பூரணையில் | நாலகாம் | ,, | தென்மேற்கிலேயும் |

அமரபட்ச

| | | |
|---|---|---|
| திருதியையில் | ஒன்பதாம் சாமம் | வடமேற்கிலேயும் |
| சப்தமியில் | மூன்றாம் சாமம் | தெற்கிலேயும் |
| தசமியில் | எட்டாம் சாமம் | வடக்கிலேயும் |
| சதுர்த்தசியில் | முதற்சாமம் | கிழக்கிலேயும் |

விஷ்டியுண்டு. ஆதலால் இச்சாமங்களில் சுபகாரியங்களும் இத் திசையில் யாத்திரையுஞ் செய்யலாகாது.

## பஞ்ச கோள் நின்ற தோஷம்

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு—
ஏழாம் நட்சத்திரம் உற்பாத மென்றும்
பத்தாம் நட்சத்திரம் தாரக மென்றும்
பதினைந்தாம் நட்சத்திரம் பிரம தண்ட மென்றும்
இருபத்து ஒன்றாம் நட்சத்திரம் காலனென்று பேராம்.

செவ்வாய் நின்ற நட்சததிரத்துக்கு ஏழாம் நட்சத்திரம் சூல மென்றும்,

பத்தாம் நட்சத்திரம் சக்கர மென்றும்
பதினைந்தாம் நட்சத்திரம் கண்டமென்றும்
இருபத்து ஒன்றாம் நட்சத்திரம் காலனென்றும் பேராம்.

புதன் நின்ற நட்சத்திரத்துக்கு எட்டாம் நட்சத்திரமும் பதினெட்டாம் நட்சத்திரமும் இருபத்து நான்காம் நட்சத்திரமும் கண்டமென்றும் பேராம்-

சுக்கிரன் நின்ற நட்சத்திரத்துக்கு ஏழாம் நட்சத்திரமும் ஒன்பதாம் நட்சத்திரமும், வியாழன் நின்ற நட்சத்திரத்துக்கு ஏழாம் நட்சத்திரமும் ஒன்பதாம் நட்சத்திரமும் கொடுமை யென்றும் பேராம்.

சனிநின்ற நட்சத்திரத்திற்கு ஐந்தாம் நட்சத்திரமும் ஆறாம் நட்சத்திரமும் பத்தாம் நட்சத்திரமும் பதினோராம் நட்சத்திரமும் இருபதாம் நட்சத்திரமும் பந்தம் என்றும் பேராம்.

ராகு, கேது நின்ற நட்சத்திரத்திற்கு ஏழாம் நட்சத்திரம பரிகம் என்றும் பேராம்.

இவை சுபகாரியங்களுக்கு ஆகாவாம்.

## கரி நாள் வரும் தேதிகள்

கவி

383. இன்பமுறு மேடமதில் ஆறுபதி னைந்தாம்
ஏறதனில் ஆறுபதி னாறுபதி னேழாம்
அன்புமிகும் ஆனிஒன்றும் ஆறுஅலவன் இரண்டோடு
ஐயிரண்டும ஐநான்கும் ஆவணி இரண்டும்
ஒன்பது எழு நான்கும் கன்னி யுற்றபதி னாறு
ஒன்றொழிமுப் பான்துலையில் ஓர்ஆறுஇரு பான்தேளில்
முன்சோம வாரமொன்று பத்துபதி னேழாம்
முனியாறும் ஒன்பதும்பதி னொன்றும் உத வாநாள்.

384. உதவாத நாள்கலையின் ஒன்றிரண்டு மூன்றும்
ஒருபதுடன் ஒன்றுபதி னேழதுவும் ஆகா
துதிபெருகு மாசிபதி னைந்துபதி னாறும்
சொல்லுபதி னேழுகடை மாதமதில் ஆறும்
பதினைந்தும் ஒன்றொழிஐந் நான்கும்மிகு தீதாம்
பகர்ந்தமா தந்தோறும் தெய்தியெனக் கொண்டு
கதிதருநள் பொதியவரை முனிவன்உரைத் திட்ட
கறிநாள்முப் பாநான்குங் கண்டறிகு வீரே.

| | |
|---|---|
| சித்திரை மீ" | 6, 15 |
| வைகாசி | 6, 16, 17 |
| ஆனி | 1, 6 |
| ஆடி | 2, 10, 20 |

| | |
|---|---|
| ஆவணி | 2, 9, 28 |
| புரட்டாசி | 16, 29 |
| ஐப்பசி | 6, 20 |
| கார்த்திகை முதற் சோம வாரமும் | 1, 10, 17 |
| மார்கழி | 6, 9, 11 |
| தை | 1, 2, 3, 11, 17 |
| மாசி | 15, 16, 17 |
| பங்குனி | 6, 15, 19 |

## வாரத்தியாச்சியம்

கவி

385. ஞாயிறு நாலெட்டாம் நல்திங்கள் ஏழாறாம்
தீய செவ்வாய் பொன்முப்பத்து ஒன்றாகும்—ஏயபுதன்
நாற்பத் திரண்டாகும் நல்லவெள்ளி மூவேழாம்
காற்சனியீர் ஏழுவிஷங் காண்.

ஞாயிறுக்கு 32 நாழிகைக்கு மேலும்

திங்கள் புதனுக்கு 42க்கு மேலும்

செவ்வாய்க்கும் வியாழனுக்கும் 31க்கு மேலும்

வெள்ளிக்கு 21க்கு மேலும்

சனிக்கு 14க்கு மேலும்

3¾ நாழிகை தியாச்சியம்.

நட்சத்திரத்தியாச்சிய துருவம் ஆவன

| | | | |
|---|---|---|---|
| அசுவினி | 50 | பரணி | 24 |
| கார்த்திகை | 30 | ரோகணி | 40 |
| மிருகசீரிஷம் | 14 | திருவாதிரை | 11,21 |
| புனர்பூசம் | 30 | பூசம் | 20 |
| ஆயிலியம் | 32 | மகம் | 30 |
| உத்திரம் | 18 | அஸ்தம் | 22 |
| சித்திரை | 20 | சோதி | 14 |
| விசாகம் | 14 | அனுஷம் | 10 |
| கேட்டை | 14 | மூலம் | 20,56 |

| | | | |
|---|---|---|---|
| பூராடம் | 24 | உத்திராடம் | 20 |
| திருவோணம் | 10 | அவிட்டம் | 10 |
| சதையம் | 18 | பூரட்டாதி | 16 |
| உத்திரட்டாதி | 24 | ரேவதி | 30 |

## இலக்கின தியாச்சியம்

இந்நாழிகைக்கு மேல் 4 நாழிகை தியாச்சியம்.

மேஷம், ரிஷபம், கன்னி, தனுசு ஆக நான்குக்கும் முதலில் இ நாழிகையும்

மிதுனம், சிம்மம், துலாம், கும்பம், ஆக நான்குக்கும் நடுவில் இ-நாழிகையும்

கடகம், விருச்சிகம், மகரம், மீனம் ஆக நான்குக்கும் கடையில் இ-நாழிகையுமாம்.

### சரராசி யாவன

மேஷம், கர்க்கடகம், துலாம், மகரம் ஆக நான்கும்.

### ஸ்திர ராசியாவன

ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆக நான்கும்.

### உபய ராசி

மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆக ஆறும்.

## இராகு காலக் கவி

அகியிரு பத்தா றேகால் அம்புலி மூன்றே முக்கால்
எரிவண்ணன் இருப தோடு இரண்டரை புதன்மூ வைந்து
குருபதி னெட்டே முக்கால் குளிர்வெள்ளி பதினொன்றே முக்கால்
கரியன் ஏழரை இராகு காலம்என்று அறிந்து கொள்ளே.

| | | | | |
|---|---|---|---|---|
| ஞாயிறு | 26¼ | நாழிகை | தொடங்கி | இராகுகாலம் |
| திங்கள் | 3¾ | ,, | ,, | ,, |
| செவ்வாய் | 22½ | ,, | ,, | ,, |
| புதன் | 15 | ,, | ,, | ,, |
| வியாழன் | 18¾ | ,, | ,, | ,, |
| வெள்ளி | 11¼ | ,, | ,, | ,, |
| சனி | 7½ | ,, | ,, | ,, |

## பகற்குளிகன்

386. ஞாயிறுமுகூர்த்தம் ஏழாம்நன்மதிக்கு ஆறாம் செவ்வாய்க்கு
ஏயஐந்து ஆகும் புந்திக்கு ஈரிரண்டு ஆம்பொன் மூன்றாம்
தூயநல் புகர்க்கு இரண்டாம் சுன்னிஹுக்கு ஒன்ற தாகும்
ஆயஇம் முகூர்த்தத் தோடே அற்றிடும் குளிகம் எல்லில்

## இராக் குளிகன்

387. கதிரவன் தனக்கு மூன்றாம் கவின்மதிக்கு இரண்ட தாகும்
சதிபெறு செவ்வாய்க்கு ஒன்றாம் சாற்றிய புதற்கு ஏழாகும்
மதிவளர்பொன்னுக்கு ஆறாம்மன்புகர்க்கு ஐந்தாம் நான்கு
கதிர்மகற்கு ஆம்முகூர்த்தம்காட்டிய பகல்போல்கொள்ளே.

| | | | | பகல் | | இரவு |
|---|---|---|---|---|---|---|
| குளிகன் | பகல் | இரவு | புதன் | 15 | ,, | 26¼ |
| ஞாயிறு | 26¼ நாழி | 11¼ | வியாழன் | 11¼ | ,, | 22½ |
| திங்கள் | 22½ ,, | 7½ | வெள்ளி | 7½ | ,, | 18¾ |
| செவ்வாய் | 18¾ ,, | 3¾ | சனி | 3¾ | ,, | 15 |

## பார்வையின்அளவு

388. சேரு முதலாம் ஏழிடங்கள் முழுநோக்கு ஒன்பான்எட்டும் அரை
பாரீர் ஐந்தோ அரை நோக்காம் பத்து நான்கும் கால் நோக்காம்
ஆறு மூன்றும் பதினொன்றும் அரைக்கால் நோக்காம் ஆறுடனே
நாரி இரண்டும் பன்னிரண்டும் நாட்டம் இல்லை நல கோட்கே.

1,7 முழுப் பார்வை
8,9 முக்கால் பார்வை
5 அரைப் பார்வை
4,10 கால் பார்வை
3,11 அரைக்கால் பார்வை.

# 12. ஆரூடம் முதலியன

இப்பகுதியில் ஆரூடம் சொல்லும் முறை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நட்சத்திரம் என்ற பகுதியில் அட்டவணை இட்டுக் காட்டப்பட்டுள்ளவற்றில் மனைக்கு உரிய தலைவன் பெயரின் முதல் எழுத்திற்கு ஏற்பப் பிறப்பு நட்சத்திரத்தினை அறிந்து, அதனை அடிப்படையாகக் கொண்டு பிற பலன்களைக் கூறும் முறை உரைநடையில் விளக்கப்பட்டுள்ளது.

அதேபோல தூண் நிறுத்துவதற்கான நாட்களும் இராசிகளும் தரப்பட்டுள்ளன.

சுவர் வைக்கும் கன அளவு பழைய முறைக்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

மனையில் பிற இடங்கள் அமைத்தல்

கிழக்கு-வெளியே குப்பைக்குழி, வெளியே ஆட்டுக்கொட்டில், குளிக்கும் அறை

தென்கிழக்கு- பணப்பேழைவைக்கும் அறை, சமையல் அறை

தெற்கு - படுக்கை அறை

தென்-மேற்குவெளியே வைக்கோல் போர், தோப்பு, நூல்கள் வைக்கும் அறை

மேற்கு - வெளிப்புறம் எருமைத்தொழுவம், சாப்பிடும் இடம்

வடமேற்கு - தானியக் களஞ்சியம்

வடக்கு - வெளிப்புறம் பசுத்தொழுவம்

வடகிழக்கு - ரமையல் பொருள் அறை, பூசைஅறை.

தண்ணீர் ஓட்டம்

வீட்டுத்தண்ணீர் கிழக்கு, வடக்குத் திசைகளில் ஓடுமாறு கால்வாய் அமைத்தல் வேண்டும். வடகிழக்கு மூலை நோக்கி ஓடு மாறும் அமைக்கலாம்.

கிணறு அமைத்தல்

இராசிகளுக்குரிய பலன்

| | | | |
|---|---|---|---|
| 1. | மேஷராசியில் | கிணறு எடுத்தால் | கற்பாறை விழும் |
| 2. | ரிஷப ராசியில் | ,, | தண்ணீர் கிடைக்கும் |
| 3. | மிதுன ராசியில் | ,, | கடற்கரை ஏற்படும் |
| 4. | கடக ராசியில் | ,, | தண்ணீர் மிகுதியாக ஓடும் |
| 5. | சிங்க ராசியில் | ,, | கற்பாறை விழும் |
| 6. | கன்னியாராசியில் | ,, | பெருமளவு நீர் கிடைக்கும் |
| 7. | துலா ராசியில் | ,, | புற்று ஏற்படும் |
| 8 | விருச்சிக ராசியில் | ,, | பழங்கிணறு தோன்றும் |
| 9. | தனுசு ராசியில் | ,, | வெள்ளம் காணும் |
| 10. | மகர ராசியில் | ,, | இடிகரை காணும் |
| 11. | கும்ப ராசியில் | ,, | குடைக்கல் தோன்றும் |
| 12. | மீனராசியில் | ,, | கல்லும் தண்ணீரும்கிடைக்கும். |

மேற்கண்ட ராசிகளில் கிணறு எடுக்கும் முறை

கிணறு எடுக்கும் பகுதிக்கு உரிய மனையைப் பன்னிரண்டு பாகம் செய்து-(இடைப் பகுதியைப் பிரம்மஸ்தானமாக வைத்து மற்றபாகத்தைப் பன்னிரண்டு பாகம் செய்து)

வடமேற்குப் பாகம் மேடம் எனக்கொண்டு வலமிடமாக 1 இராசிகளையும் அமைத்து அந்தந்த இராசிகள் அமையும் இடத்திற்கு ஏற்ற பலனை அறிதல் வேண்டும்.

மேலும் இவற்றில் சந்திரனும் வெள்ளியும் நிற்கும் இடம் மிகுதியான நீர் உண்டு என அறியலாம்.

சனி, ஞாயிறு, செவ்வாய் நிற்குமிடம் நீர் இருக்காது என்று அறியலாம்.

இராகு, கேது நிற்குமிடம் பழங்கிணறு அமையும்.

புதன் நிற்குமிடம் கற்பாறை யாகிவிடும். கீழ்நீர் சிறிது தோன்றும்.

வியாழன் நிற்குமிடம் சிறிது நீர் கிடைக்கும்.

கிணறு எடுக்கும் திசை

வருணதிசையாகிய மேற்குத் திசையில் நல்லநீர் தோன்றும் என்பது பொதுவிதி ஆயினும் கட்டப்பட்ட வீட்டின் அல்லது மனையின்

| | |
|---|---|
| வடகிழக்கில் எடுத்தால் | செல்வம் பெருகும் |
| பிரம்மத்தானமாகிய நடுப் பாகத்தில் எடுத்தால் | எல்லாநன்மையும் உண்டு |
| வடக்கு, வடமேற்கில் எடுத்தால் | தானியம்பெருகும். |

என்பன திசைக்குரிய பலன்களாகும்.

கிணறு வெட்டும் மாதம் முதலியன

மாதம்: சித்திரை, வைகாசி, ஆனி இம் மாதங்களில் கிணறு வெட்டினால் எப்போதும் நீர் பெருகி இருக்கும்.

நட்சத்திரம்:- பரணி, கார்த்திகை, ஆயிலியம், மகம், பூரம் விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் கிணறு வெட்ட, விரும்பிய பலன் கிடைக்கும். இந்த நட்சத்திரங் களில் முதல்சாமம் உத்தமம்.

தொடுகுறி இலக்கணம்

கிணறு வெட்டத் தொடங்கு முன் விநாயகபூசை செய்து, அவ் விடத்தில்ஒரு சிறுவனைக் கிழக்கு முகமாக நிறுத்தி, அவன் உடலில் வேறு ஒரு சிறுவனை விட்டுத் தொடச் சொல்லி தொட்ட உறுப் பிற்கு ஏற்பப் பலன்களையும் சொல்லாம்.

| | தொடும்உறுப்பு | பலன் |
|---|---|---|
| 1. | தலை, தோள்—வடமேற்கு மூலையில் | 7முழத்தில் தண்ணீர் கிடைக்கும் |
| 2. | முகம், கண் — ,, | ,, 6முழத்தில் ,, ,, |
| 3. | கழுத்து, நெற்றி, வலக்கால் | ,, 11முழத்தில் ,, ,, |
| 4. | மார்பு — தென்கிழக்கு மூலையில் | அதி ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும் |
| 5. | விரல் — ,, | 9 முழத்தில் ,, |
| 6. | இடுப்பு, பாதம் — நீரில்லை. | |

## க்ஷேத்திர ஆருடம்

இந்தத் திக்கில் வீடு கட்டினால் நல்லதா? என்று கேட்கும் போது, அந்த திக்கிலிருப்பவர்க்கு எதுவோ அந்த கணக்கை, வலப் பக்கத்தில் வைத்து கர்த்தனாமாதி அச்சரவர்க்கும் இதுவே அந்த கணக்கு இடப்பாகத்தில் வைத்து எட்டுப் பேருக்குக் கொடுக்க மிகுந்தது தனம்.

முன் வலப்பாகத்திலிருந்த கணக்கை இடப்பாகத்தில் வைத்து எட்டுப்பேருக்குக் கொடுக்க மிகுந்தது ருணம்.

தனம் அதிகமாய் இருந்து ருணம் குறைவாய் இருந்தால் நல்லது.

ருணம் அதிகமாய் இருந்து தனம் குறைவாய் இருந்தால் நல்லதல்ல.

தனமும் ருணமும் சரியாய் இருந்தால் ஆதாயமும்விரையமும் சமமாய் இருக்கும்.

ஜென்ம நட்சத்திரம் பார்க்கும் நிலை

சென்ம நட்சத்திரமுதல் கடைசி நட்சத்திரம் வரைக்கும் எண்ணின தொகையை நாலில் பெருக்கித் திதிவாரம் கூட்டி, நவக் கிரகத்தில் கிழக்கே நின்றது

ஆதித்தன், சோமன் இலாபயோகம்

அங்காரகன், மிருத்தியு, புதன், பிரகஸ்பதி இலாபம்

சுக்கிரன் சௌக்கியம்

சனி மகா பாண்டம்

இராகு காத பாதம்

கேது மகதயன் இது நித்தியபலன். இலக்கினத்தில் பிரகஸ்பதி யிருந்தாலும் சுக்கிரன் இருந்தாலும் அப்போது வீடுகட்டினால் ஐந்நூறு வருஷம் சுகமேயிருப்பார்கள்.

இலக்கினத்தில் புதன் இருந்தால் ஐம்பது வருஷம்

இலக்கினத்தில் புதனும், சுக்கிரனும் பிரகஸ்பதியும் இருந்தால் ஐம்பது வருஷம் ஸ்தம்பப் பிரதிஷ்டை.

இலக்கினத்தில் பிரகஸ்பதி நாலில் சந்திரனும், அங்காரகனும், சனியும் 11இல் இருக்க நாற்பது வருஷம் சுபமாக விருக்கும்.

இலக்கினத்தில் சுக்கிரன் இருக்க நூறுவருஷம். சிங்கம், கன்னி துலாம் இந்த மூன்று இராசியிலும் சூரியன் இருக்க ஈசானியத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும். கும்பம், மேஷம் இந்த இரண்டு இராசியிலும் சூரியன் இருக்க நிருதி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்ய வேணும்.

ரிஷபம், கடகம், மிதுனம் இந்தப் மூன்று இராசியிலும் சூரியன் இருக்க அக்கினி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும்

இந்தப்படிக்கு விவாகம் முதலானதற்கும் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவேணும்.

இப்படிப்பார்த்துச் செய்யாமல் அன்னியமாகச் செய்தால் தரித்திரமும் துக்கமும் வரும். புருஷனுக்கு ஆனியாம்.

## பூமி சல்லியம்

389. களத்திரத் தானம் தன்னிற் கனியொடும் உமி எலும்பும்
வளத்துடன் மனையில்நின்றால் மனையவள் மரணமாவாள்
விளைந்திடும் துன்மை மேலாம் வியாதியாம் சங்கை பீடை
கிளைத்திடும் குலங்கள் மாயுங் கெடுதியாம் மயன் சொன்னாரே.

இ-ள்:- உதய ஆருட இராசி ஏழாம் இடத்தில் கிரகங்கள் நிற்குமாகில் அதற்கு ஒன்று, நான்கு, ஏழு சந்திரன் நின்றால் சல்லியம் இருக்கிறது என்று நிச்சயமாய்ச் சொல்லப்படும். அதன் பலன் ஸ்திரீகளைக் கொல்லும்; குலத்துக்குக் கெடுதி வரும்; பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் உண்டாம்; அம் மனையில் சௌக்கியமில்லை எ-று.

390. சாம்பலோடு எலும்பு கூடித்தழைத்திடும் மனையில் நின்றால்
சோம்பலே மிகஉண்டாகும் சுகமதற்கு இல்லை கண்டாய்
பாம்பினால் அச்சம் உண்டாம் பாரியாள் விரோதம் உண்டு
நாம்பல நூல்கள் பார்த்து ஞாயமாய் வகுத்த வாறே.

இ-ள்:- உதய ஆருடங்களில் கிரகங்கள் நிற்கில். அதற்குக் கேந்திரங்களில் சந்திரன் நின்றால் அந்த மனையில் சாம்பலும் எலும்புமிருக்குது என்று அறியவேண்டும். அதற்குப்பலன் சோம்பலும், பாம்பினால் அச்சமும் உண்டு. பாரியாள் விரோதம், சம்பத்து நசிக்கும். சங்கை, பீடை என்று சொல்ல வேண்டும் எ-று.

391. புத்திரத் தானம் தன்னில் பொருந்திய சல்லி யங்கள்
சத்துவ மான கல்லும் தரித்திட மரங்கள் கட்டை
பெற்றிட எலும்பும் கூடிப் பெரியஅம் மனையில் நின்றால்
அற்றிடும் குலங்கள் என்று ஐயனாம் மயன்சொன் னாரே.

இ.ள்:- உதய ஆருடத்திற்கு ஐந்தாம் இடத்தில் கிரகங்கள் நின்று அதற்குக் கேந்திரங்களில் சந்திரன் நின்றால் கருங் கல்லும் மரமும் கட்டையும் எலும்பும் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அதற்குப்பலன் குலமல்லாத புருஷர் களை அடுக்கும் எ-று.

392. உயிரதற்கு இரண்டி டத்தில் உற்றதோர் சல்லி யங்கள்
மயிர்முளை கூடி நின்றால் மன்னவர் தமக்கும் ஆகா
தைரியம் பலன்சம் பத்து தானதும் அழியும் என்றே
குயின்மொழி உடைய மாதே குறிப்புடன் மயன்சொன் னாரே.

இ.ள்:- உயிர் என்பது ஆருட லக்கினம் சந்திர லக்கினம் இதற்கு இரண்டாமிடத்தில் சந்திரன் நின்றால் அது சல்லியமென்று அறிவது.

அதற்குப்பலன்: அந்த வீட்டு யசமானுக்கு ஆகாது. தைரியம் பலன் சம்பத்து இவைகளெல்லாம் அழியும் எ-று.

393. கருங்கல்லோடு எலும்பு கூடிக் காரியத் தானம் தன்னில்
இரும்பொடு துராவும் கட்டை ஈயம்பித் தளைதான் சேர்ந்தால்
அரும்பொருள் நாசம் ஆகும் அம்மனை யழியும் என்றே
தகுந்திருப் புவன மாதே சாபித்திர மயன்சொன் னாரே.

இ.ள்:- காரியத்தானத்திற்குப் பத்தாம் இடத்தில் கிரககங்கள் நின்றால் கருங்கல், எலும்பு, துறா, ஈயம், பித்தளை இவை களில் ஒன்று இருக்கும்.

அதற்குப்பலன்:- பொருள் அழிந்து மனிதர் சேதமாகி அந்த மனை எடுபட்டுப்போம். அருட்டி சொர்ப்பன முண்டாம் எ-று.

394. ஆறு எட்டுப் பன்னி ரண்டில் ஆனதோர் சல்லி யங்கள்
கூறிட்டு நின்றது ஆனால் குற்றமே இல்லை நன்மை
வீறிட்ட லாபம் ஏழு வித்தைசேர் மூன்றில் நின்றால்
பேரிட்ட சல்லியங்கள் பெரும் பிணி மிகவுண் டாமே.

இ.ள்:- ஆறாம் இடம், எட்டாம் இடம், பன்னிரண்டாம் இடம் இவைகளில் கிரகங்கள் நின்றால் சல்லியம் உண்டு; பெரும் பிணியாகிய கர்ம வியாதியுண்டாகும் எ-று.

395. சாடியோடு எலும்பு கூடித் தழைத்திடும் மனையில் நின்றால்.
ஓடிய கப்பல் ஆழி உடைந்தது போலே யோகங்
கூடியே மனையில் நின்றால் குலந்தனை நாசஞ் செய்யும்
பாடியேமயனார்சொன்னார் பயன் அறிந்து உரைத்தவாறே.

இ.ள்:- சாடியோடு எலும்பு யிருக்குதென்று உதய லக்கினத்தில் கிரகங்கள் நின்றால் அதற்குக் கேந்திரங்களில் சந்திரன் நின்றால் சல்லியம் உண்டு என்று அறியவும்.

அதற்குப்பலன்:- ஓடி வருகிற கப்பல் சமுத்திரத்தில் உடைந்தாற் போல யோகமானது ஸ்திரீகளை மரணமாக்கும்; குலத்துக் கெல்லாம் கேடு நேரிடும் எ-று.

396. ஆருடந் தன்னில் இராகு வரற்கு நாலு ஏழு பத்தில்
காரியும் மதியும் நின்றால் கரியொடு உமி எலும்பு
வீரியமுடனே காணும் மேல் அதன் இரண்டில் மூன்றில்
சூரியன் மதியும் நின்றால் ஆணியும் இருக்குந் தானே.

இ.ள்:- ஆருடராசிகளில் உதயத்தில் இராகு நின்றாலும் 7,4,10-ல் சனியும் சந்திரனும் நின்றாலும், கரி, ஓடு, எலும்பு இவைகள் இருக்கின்றன என்று சொல்ல வேண்டியது.

2, 3 - இல் சந்திரனும் சூரியனுங் கூடி நிற்கில் சிலைக் கருங்கல் காணும்.

செவ்வாய் கூடிநின்றால் வெண்கலம், பித்தளை, ஓடு, எலும்பு ஈயம், இவைகளிருக்குதென்று சொல்வது எ-று.

397. உதய ஆருடந்தன்னில் உடல் உயிர் அறிய வேண்டில்
மதியமாய் வந்த நாட்கள் வரும்முழு நாள்கள் தன்னிற்
புதியதாய் உடலிதென்றும் பிரபல்லிய மாக வெண்ணிப்
பதியவே பலன்கள் சொல்வாய் பகர்ந்தனம்அறையுமாதே

இ-ள்:- உதய ஆருடராசியில் சந்திரன் நின்ற இராசியில் உடல் என்றும் உதய ஆருடம் உயிர் இரண்டும் இந்த ராசிகளில் முழு நாளை எண்ணிப் பலன் சொல்லும்.

398. தொட்டலக் கினத்தில் காரி சூரியன் செவ்வாய் இராகு
திட்டநாலு ஏழு பத்திற் சீரண மதியே சேர்ந்தாற்
பட்டிடும் மரங்கள் கட்டை பானையோடு எலும்பு சாம்பல்
சட்டமாய் இருக்குது என்றே தார்சடை முனிசொன் னாரே.

இ.ள்:- யாரேனும் ஒருவர் கேட்கவரில் அவரை ஒரு ராசியைத் தொடச்சொல்லி அந்த ராசிக்குச் சனி, சூரியன், செவ்வாய், இராகுநான்காம் இடம், ஏழாம் இடம், பத்தாம் இடம் அமர பக்கம் சந்திரனுங் கூடி இருந்தால் பட்ட மரமும் பானை யோடும் எலும்பும் சாம்பலும் இருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

399. மதிக்கு நாலு ஏழுபத்தில் மந்திரி புந்தி கூடி
அதற்கு மூன்று எட்டில் ஆறில் ஆதித்தன் வலமதாகி
இதற்கு ஓர் பத்தினாலே இருந்தவன் பலவான் ஆகில்
நிதிக்குளோர் பயனே சொல்லும் நிச்சயம் மயன்சொன் னாரே.

இ-ள்:- சந்திரனுக்கு 4, 7, 10 ஆம் இடம் இராசனாகிலும் புதனாகிலும் நிற்கில் அதற்கு 3,6,8இல் சூரியன்இருந்தால் நிதியுண்டு என்று சொல்ல வேண்டும்.

400. சுக்கிரனுக்கு எதிரே புந்தி தோன்றிய காரி மன்னன்
வக்கிரம் இல்லாது இருந்தால் மன்னவர்க்கு ஆறில் மந்தன்
நிக்கவே திரவி யங்கள் நிலந்தன்னில் உள்ள தாகும்
பக்குவ மான வெள்ளி பாரினில் மிகவுண் டாமே.

இ.ள்:- சுக்கிரனும் புதனும் கூடி அதற்கு எதிர் இராசன் இருக்க, இவர்கள் வக்கிரம் இல்லாதிருக்க இராசனுக்கு ஆறில் சனி இருக்க அந்த பூமியில் திரவியம் உண்டு; அது இல்லா விடில் வெள்ளியாகிலுமிருக்கும் என்று சொல்ல வேண்டும் எ-று.

## இலக்கின சுபகிரக இராசி நிர்ணயம்

4ஆம் இராசி, 10ஆம் இராசி, 7ஆம் இராசி, 9ஆம் இராசி 5ஆம் இராசி, இவைகளில் சுபக்கிரகம் இருந்தாலும் சுபக்கிரகம் இலக்கினத்தைப் பார்த்தாலும் சுபக்கிரகம் உச்சத்திலிருந்தாலும் பாவக்கிரகம் 6ஆம் இராசி, 3ஆம் இராசி, 11ஆம் இராசியில் இருக்க ஸ்தம்பப் பிரதிட்டை செய்யில் சுபகரம் உண்டாம்.

மாதங்களில் காலசர்ப்ப கதி இலட்சணம்

**கால சர்ப்பகதி:-**

ரிஷபம், மிதுனம், கடகம் இந்த மூன்று சங்கராந்தியிலும் கால சர்ப்பம்-

ஈசானியத்தில் சிரமும்
வாய்வு மூலையில் இடுப்பும்
நிருதி மூலையில் வாலும்
இதன் பின்பக்கமாய் வந்து
சிம்மம், கன்னி, துலாம் இந்த மூன்று சங்கராந்தியிலும்,
வாய்வு மூலையில் சிரசும்
நிருதி மூலையில் இடுப்பும்
அக்கினி மூலையில் வாலும்
இதன் பக்கமாய் வந்து
விருச்சிகம், தனுசு மகரம் இந்த மூன்று சங்கராந்திலும்
நிருதி மூலையில் சிரசும்
அக்கினி மூலையில் இடுப்பும்
ஈசான்ய மூலையில் வாலும்
இதன் பக்கம் வந்து
கும்பம், மீனம், மேஷம் இந்த மூன்று சங்கராந்தியிலும்
அக்கினி மூலையில் சிரசும்
ஈசானிய மூலையில் இடுப்பும்
வாய்வு மூலையில் வாலும்

இவ்விதமாய் இருக்க ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யில் சுபப் பிரதம்.

சிரசில் செய்யில் மிருத்துபயம்.
முதுகின் மேல் செய்யில் கெடுதி உண்டாம் .
வாலின் மேல் செய்யில் சலனம்.

இப்படி இருக்கிற ஸ்தம்பப் பிரஷ்டை செய்யில் சம்பத்து உண்டாம்.

## சூசிகா சங்கராந்தி நிர்ணயம்

ரிஷபம், கடகம், மிதுனம் இந்த சங்கராந்தியில் சூரியன் இருக்க,

கன்னி, சிம்மம், துலாம் இதில் சம்பந்தம் ஆனாலும் உத்திரம், அஸ்தம், சித்திரை இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க அக்கினி மூலையில் ஸ்தம்பப்பிரதிஷ்டை செய்யலாம்.

கும்பம், மீனம், மேஷம் இந்த சங்கராந்தியில் சூரியன் இருக்க ரிஷபம், மிதுனம், கடகம் இதில் சம்பந்தம் ஆனாலும் ரோகிணி, மிருகசீரிடம், புனர்பூசம் இந்த மூன்று நட்சத்திரத்திலும் சந்திரன் இருக்க நிருதி மூலையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யவும்.

இந்தப் படிக்குப் பிரதம ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்யலாம் சுபப்பிரதம அன்னிய மார்க்கத்தில் செய்தால் கேடு வரும்.

வீட்டுக்கு இலக்கின கேந்திர கிரகபலன்

பிரகஸ்பதி இருக்கும் இலக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை பண்ணி,

புதன் இருக்கிற இலக்கினத்தில் தூலம் ஏற்றிச் சுக்கிர இருக்கிற இலக்கினத்தில் ஓடு மூடினால் அந்த வீட்டுக்கு அக்கினி பயம், சோரபயம் இராசபயம் ஆகியவை இல்லை.

சலராசியில் சந்திரன் இருக்கவாகிலும் 5-இல், 9 இல் சந்திரன் இருக்க சுக்கிர வாரத்தில் வீடு கட்டினால் சம்பத்து உண்டாம் இப்பால் ராஜயோகம்.

குருவாரத்தில், கடகம், மீனம், தனுசு இந்த இலக்கினங்களில் பிரகஸ்பதியானாலும் சுக்கிரனானாலும் இருக்க வீடு கட்டினால் அந்த வீட்டில் சௌக்கியமாய் ராஜாதியாய், புத்திர சம்பத்துண்டாகி சுகமேயிருப்பார்கள்.

சுபக்கிரகம் 10இல் இருந்தாலும் இலக்கினத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், அப்படிப்பட்ட வேளையில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுபப்பிரதமாகும்

மீன இலக்கினத்தில் சுக்கிரன் இருக்க வானாலும் 4-இல் பிரகஸ்பதி இருக்கவானாலும் 10-இல், 2இல் உச்சதானமாய் இருந்த சனி 11இல் இருந்தாலும் அப்படிப்பட்ட இலக்கினத்தில் ஸ்தம்பப் பிரதிஷ்டை செய்தால் சுபம் உண்டாகும்.

## மாதாமாதம் சூரியன் இருக்கும் நிலை

### வெண்பா

401. சித்திரையும் ஐப்பசியும் சீரொக்கும் சித்திரையின்
அத்திங்கள் ஐந்தும் அருகுஏறும்—பத்திப்
பின்ஐந்து மாதம் பிசகாமல் அறாவேறும்
முன்னே விடுபூ முடி.

## சுவர்கனம் உயர்வு இலட்சணம்

ஒரு முழ அகலப் பிரமாணத்திற்கு இரண்டு முழப் பிரமாணம் சுவர் வைக்கவேண்டும். பத்து சாண் உயரம் உள்ள சுவர் அரசர்களுக்கும் பிராமணர்களுக்கும் ஆம். ஒன்பது சாண் உயரம் உள்ள சுவர் வைசியர்க்கும், சூத்திரருக்கும் ஆம். எட்டு சாண் உயரம் உள்ள சுவர் சங்கமசாதிகளுக்கு ஆகும். இந்த கணக்கிற்குக் குறைவாய் இருக்கக் கூடாது. இதை அறிந்து செய்ய வேண்டியது.

சுவர் வைக்கும் போது விழுந்தால் சோரபயம். வெளிப்பக்கமாய் விழுந்தால் கலகம். உட்புறம் விழுந்தால் வீட்டுக்கு உடையவனுக்கு ஆகாது.

## வாரபலன்

ஆதிவாரம் அக்கினிபயம்
சோமவாரம் கலகம்
மங்களவாரம் மித்துருபயம்
புதன், வியாழன், வெள்ளி இந்த மூன்று வாரங்களில்
செய்யில் சுபம் உண்டாகும்.
சனிவாரம் புத்திர ஆனி.

## நட்சத்திர பலன்

அஸ்தம், ரேவதி, அசுவினி, சதயம், அவிட்டம், பூசம், திருவோணம், புனர்பூசம், ரோகிணி, சித்திரை, அனுஷம், உத்திரம் உத்திராடம், உத்திரட்டாதி இந்த நட்சத்திரங்களில் பிரதிஷ்டை செய்யில் தனமும் புத்திர சுகமும் உண்டாகும்.

## வளவு கட்டும் இலட்சணம்

402 தெற்கிலிடு குப்பைதிகழ் நிருதியிடு வைக்கோல்
இக்குட திசைக்குளொரு மைந்தொழு வியற்று
மற்கொள்வட மேற்குமலி கூடுணவு கட்டு
பற்புகழ் வடக்கது பசுத்தொழு வியற்றே.

இ-ள்:- இருந்த மனைக்குத் தெற்கில் குப்பைகொட்டவும், தென்மேற்கு மூலையில் வைக்கோல் போர் கட்டவும், மேற்கில் எருமைத் தொழுவம் இயற்றவும், வடமேற்கில் தானியத் தொம்பை யமைக்கவும், வடக்கில் பசுத்தொழுவம் கட்டவும் உத்தமம் எ-று.

403 இயற்றுவட கீழ்த்திசை யடுக்களை யமைப்பாம்
பயிற்றரு கிழக்கதனில் ஆடுகள பரப்பாம்
செயிற்றெறிய அங்கியினில் வைகுமது சேமம்
பயிற்றப்பட மொழிந்தபடி பார்த்திடுதல் நன்றே.

இ-ள்:- வடகிழக்கில் அடுக்களை வீடுகட்டவும், கிழக்கில் ஆட்டுக் கொட்டிலமைக்கவும், தென்கிழக்கில் பொக்கிஷ வீடு இயற்றவும் உத்தமம். கிழக்குத்திக்கில் குளிக்குமிடமும், அக்கினிமூலையில் சமையல் பண்ணுமிடமும், தெற்கில் சயனஸ்தலமும், நிருதிமூலையில் சாஸ்திர முதலானதும் வைக்குமிடமும், மேற்கில் போசனம் புசிக்கும் வீடும், வாய்வு மூலையில் பசுத்தொழுவமும், வடக்கில் தனதானிய வீடும், ஈசானிய மூலையில் பூசை வீடும் கட்ட ராஜ யோக முண்டாம் எ- று.

404. நண்ணாம் கிழக்கு முதலெட்டும் மடநல்லான் தொழுக் குப்பைக்
குன்றாம் படப்பை எருமை நிலை தொழு நெல் கூடு
தண்ணீரட்ட சால நன்றாம் மனைக்கு கிணறு கீழ்சன்மத்தி நீரெளிருக்கிவை
தன்றான கதிர்மேல் நீட்டி எதிராக வைத்து இடங்கீழ்தான் கிடக்கும்.

மனையில் சருக்க மூலைக்கு மிடங்கள்

மனைக்குக் கிழக்கே ஆட்டுத் தொழு, தென் கிழக்கு பசுத் தொழு, தெற்கு குப்பை, தென் மேற்கு தோப்பு, மேற்கு எருமைத் தொழு, வடமேற்கு நெல் கூடு, வடக்கு உண்ணுமிடம், வடகிழக்கு விடுதி. வடகிழக்கு இன்பம். வடக்கு விளைவு. வடமேற்கு ஆயிழையாள் மரணம், மேற்கு சம்பத்து, தென்மேற்கு மிரத்தி, தெற்கு ஸ்திரி மரணம், தென் கிழக்கு ஆயுத ஆனியும், புத்திர ஆனியும் என்று சொல்வது.

சலதாரை இலட்சணம்

அண்டை வீட்டுத் தண்ணீர் தன் வீட்டுக்கு வரக்கூடாது.
நமது வீட்டுத் தண்ணீர் கிழக்கே போனால் உத்தமம்.
அக்கினி மூலையில் போனால் எசமானனுக்கு ஆகாது.
வாய்வு மூலையில் போனால் பசுக்கள் நஷ்டமாகும்.
வடக்கே போனால் தனமுண்டு.
ஈசானிய மூலையில் போனால் சுபக்ரகம் உண்டாகும்.
தன் வீட்டில் தானே தண்ணீர் இருந்தால் நாசமாம்.

## கிணறு எடுக்கும் இலட்சணம்

### கலிவிருத்தம்

405. ஆன மேஷம் அறையுங்கற் பாறையாம்
வான ரிஷபம் வரையும்தண் ணீர் ஆகும்
பான மிதுனம் பகரும் கடற்கரை
மான கர்க்கடகம் மதிக்கஆறு ஓடுமே.

406. வேந்தன் சிங்கம் விரும்புங்கற் பாறையாம்
ஏந்து கன்னி இசைந்ததோர் தெற்குமுன்
போந்த கல்லும் புகழும் வடக்கதாம்
கூந்தல் மோழை குமுற வருகுமே.

407. ஆயபுற்று அமையும் துலாம் இடம்
தூய விருச்சிகம் தோன்றும் பழங்கிணறு
ஏய வேதனு சுக்குவாய் மட்டமுன்
பாய வேகிழக் கும்படு மோழையே.

408. ஆன கர்மம் அறையும் இழக்கரை
தான கும்பம் தடுக்கும் குடலைக்கல்
மீனம் தெற்கு மிசைந்த கல்வடக்கு
ஊனம் இல்லா உயர்ந்த தண்ணீராமே.

| | |
|---|---|
| மேஷம் | கற்பாறை |
| ரிஷபம் | தண்ணீர் |
| மிதுனம் | கடற்கரை |
| கடகம் | ஆறோடும் |
| சிங்கம் | கற்பாறை |
| கன்னி | தெற்கு, வடக்கு மோழை வரும் |
| துலாம் | புற்று |
| விருச்சிகம் | பழங்கிணறு தங்கியது |
| தனுசு | வாய்வு மட்டத்துக்குக் கிழக்கில் மோழை கர்மம் |
| மகரம் | இடிகரை |
| கும்பம் | குடலைக்கல்லு |
| மீனம் | தெற்குக்கல்லு, வடக்குத்தண்ணீர். |

### சுக்கிரபலன்

409. சுக்கிர பலனெதிரே யாகில்
தொல்குடி சாவு கேடாம்
சுக்கிரன் லக்கின னாகில்
தோண்டிய பொருளுங் கேடாம்

சுக்கிரன் பின்னே யாகில்
சுசமுடன் வாழ்வ தாகும்
சுக்கிரன் இடக்கண் ணாகில்
துறக்க மொன் றில்லை யென்றே.

நின்ற வேட்ட தறட ... செய்யுமிடத்தில் நால் சதுரமாக மெழுகி விநாயகன் வைத்து பாக்கு வெற்றிலை, தட்சிணை தீப தூபமும் கொடுத்து, பூசை பண்ணி, அவ்விடத்தி லொருவனைக் கிழக்குமுகமாகநிற்கச் சொல்லி அவன் அங்கத்திலே ஒருவனை விட்டுத்தொடச்சொல்லி தொடுகுறி பார்த்துச் சொல்லுவது.

தலையைத் தொடில் நாலு முழத்திற்குக் கீழ் வடமேல் மூலையில் வெகு வெள்ளங்காணும். அந்த ஊத்துக்கண் அடைபடும் அதற்கும் கீழ் மூன்று முழம் வெட்டினால் வெகுதண்ணீர் காணும்.

முகத்தைத்தொடில் ஆறு முழத்தில் தண்ணீர் காணும். கழுத்தைத்தொடில் பதினொரு முழத்தில் தண்ணீர் காணும்.

கண்ணைத்தொடில் ஆறுமுழத்தில் நல்ல தண்ணீர் காணும்.

நெற்றியைத்தொட்டால் வலக்காலு பதினோரு முழத்தில் அற்பமாய் ஊற்றுகாணும். வாயைத் தொட்டால் நாலு முழத்தில் தண்ணீர் காணும். மிகுதமாய் கல்லும் காணும். தோளைத் தொட்டால் ஏழு முழத்தில் வெகு வெள்ளங்காணும்.

மார்பைத் தொட்டால் வெகு பாறையும், அதிலிருந்து மூன்று முழம் வெட்டினால் தென்கிழக்கு மூலையில் தண்ணீர் காணும்.

விரலைத் தொட்டால் ஒன்பது முழத்தில் கீழோடும் நீராய் வெகு வெள்ளங்காணும். உதரம் தொடில் பழையனென்றினைய தென்ற பத்து முழத்துக்குக் கீழ் கொஞ்சந் தண்ணீர் காணும்.

அரையைத் தொடில் நீரில்லை. தொடையைத் தொடில் ஆறு முழத்துக்குக் கீழ் பெருவெள்ளங்காணும்.

காலைத்தொடில் அஞ்சு முழத்தில் இருந்த தண்ணீர் காணும்
பாதந்தொடில் நீரில்லை.
இந்தப்படி தொடுகுறி பார்த்துச் சொல்லுவது.

## வெண்பா

410. முல்லை கரிசல் முனாபாதம் தான் வெளுப்பு
செக்லாக் குறிஞ்சி செவப்பாகும் - நல்ல
மருதம் பெருமணலாம் வாநெய்தல் நீற்க சிலாம்
கருதும் படிவோர்க் கருது.

என்பது முல்லை நிலமாவது-கரிசல். இதில் வரும்படியிலும் மிடசு, முல்லை, தென்னை, யிலுப்பை, பிரண்டை, புத்து இதற்கு தண்ணீர் காண்பது சாண் 24. இதில் மணல் சாண் 8. சுக்காம் பாறையும் காக்கைப்பொன்னும், கல்லும் நீலக்கால் மண்சாண் 4 கோலப்பாறை, அடுக்குப் பாறை மண் சாண் 8½சாண் 24.

பாலை நிலமாவது - இளஞ்செவ்வல் தரை. இதற்குத் தண்ணீர் சிறிதுமண் பின்னிலத்துக்குத் தண்ணீர் காண்பது. இந்நிலத்துக்குத் தண்ணீர் காண்பது சாண் 32. இதில் மண்ணும் கல்லும் சாண் 8. சுக்காம் பாறையும், பலநிறக் கல்லும் காக்கைப்பொன்னும் காண்பது சாண் 26.

குறிஞ்சி நிலம் - கடும் செவ்வல்தரை. கருவறியும்படி கல் புத்து, சாரணத்தி, அத்திக்கால், இவற்றில் பூவாயெருக்கலை அடுக்குப் பாறையும், மகரும் பாறையும் மண்ணு சாண் 1ஆக சாண் 12.

நெய்தல் நிலம் - உப்புத்தரை, நீர்க்கசிவு. இதின் கருவறியும் படிக்குடப்புத்துச் சேறி நீராத்தி. இதற்கு மட்டஞ் சாண் 25 ல்தில் மண்ணும் கல்லும் சுக்காம் பாறையும், காக்கைப் பொன் கல்லும், சாரக்கல்லும் சாண் 16 ஆக சாண் 32.

மருதநிலம் - பெருமணல் தரை - இதில் கருவறியும்படி எலும்பின் புத்து யேளிலை.

பாலை வில்வம் பூளை, சாரனத்திக் கொறந்தைக் கல்லும் சாண் 12. அடுக்குப் பாறையும், கொடும் பாறையும் சேரும் மண்ணும் சாண் 4. நீர்வாளி கல்லும் அடுக்குப்பாறையும் சாண் 8 சுக்காம் பாறை பலநிறக்கல்லு.காக்கைப் பொன்கல்,சேறு சுரண்டி அடுக்குப்பாறையும் கொடும்பாறையும் கல்லும் சேறும் சாண் 62 பருகுநாணல், கள்ளி, மாதுளை, பூலா, ஆத்தி, வெள்ளருகு இலந்தை. இதற்குத் தண்ணீர் மட்டம் இதற்கு சாண் 18. இதில் மண் சாண் 3.

## துரவுகள் எடுக்க

(அகலம், நீளம், சுற்றுமுழம் அறியவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | அடி | துரவுக்கு | நீளம் | அடி | -10 |
| 5 | ,, | ,, | ,, | ,, | -15 |
| 6 | ,, | ,, | ,, | ,, | -18 |
| 7 | ,, | ,, | ,, | ,, | -21 |
| 8 | ,, | ,, | ,, | ,, | -24 |

## கிணறுவெட்ட, கரைகட்ட

ஐப்பசி மாதம்:- நடுப் பத்திலே.

உத்திரம் மூன்றும்,

கேட்டை, ரேவதி, சித்திரை, ரோகணி, திருவோணம் அஸ்தம், மிருகசீரிடம், பூராடம், மகம், பஞ்சமி சத்தமி, திரிதியை ஏகாதசி, திரியோதசி, பிரதமை, கும்பம், மீனம், மகரம், ரிஷபம் கற்கடகம் சுப வாரங்களும் உத்தமம்.

சித்திரை நடுபத்தில் முன் சொன்னபடியே கூடிய சுபதினத்தில் கரைகட்ட உத்தமம்.

## சாயல் மாத விலக்கம்

411. மேவுவை காசியோடு மிகுபுரட்டாசி இரண்டும்
தாவஅவச் சாயல் இல்லை சாற்றுவேன் இனிது சேளும்
ஆவணி ஆனி யோடும் ஐப்பசி சித்திரை மாதம்
மேவிய சாயல் இரண்டும் உண்மைஅங் குலம்என்று ஓதே.

வைகாசி, புரட்டாசி இவ்விரண்டு மாதத்திற்கும் விலக்கம் இல்லை. ஆவணி, ஆனி, ஐப்பசி, சித்திரை இந்நான்கு மாதத்திற்கும் இரண்டங்குலம் விலக்கம்.

412. ஆடிகார்த் திகைபங் குனி அங்குலம் நான்கு சாயல்
நீடுமார் கழியும் மாசி நிறைவிரல் ஆறு சாயல்
தேடுதை மாதம் எட்டும் திறமைஅங் குலம்சா யல்தான்
பாடலாம் புகழைக் கூறப் பண்பிது பகரு வேனே.

ஆடி, கார்த்திகை, பங்குனி இம்மூன்று மாதத்திற்கும் நாலு அங்குலஞ் சாயல்.

மார்கழி, மாசி இவ்விரண்டு மாதத்திற்கும் ஆறு அங்குலஞ் சாயல்.

தைமாதம் எட்டு அங்குலஞ் சாயல் எ-று.

கீழ்வீடு, மேல்வீடு, உயரம் குறைச்சலுக்குப் பாட்டு

413. ஓதிய கீழ்வீட் டுக்குச் சந்தோரம் மேல வீடு
நீதியாய் உசரு மாகில் நிச்சயம் இரண்டும் வாழும்
ஆதியாய் மேலவீடு அளவுடன் குறையு மாகில்
சேதியாய் உயிர்கள் போகும் தீப்படும் மனையும் பாழாம்.

414. நேருடன் சூரிய வாஸ்து நெருங்கவே வீடு நின்றால்
சீருடன் பாரில் என்றும் சிறக்குமே னாகம் பாழாம்
ஆருடன் கருட வாஸ்து அதிகமே சிங்கம் பாரதி
பாருடன் ஆனை பாழாம் பண்புடன் மயனு ரைத்தார்.

415. கலங்காத வீரியா னாலும் போகின்ற காலம் வந்தால்
நலங்காயலே வெல்ல மாட்டுவரோ வித் நானிலத்தில்
ஜலங்காணும் கோட்டை மதிலேழ் தலைபத்துந்தானிருந்தும்
இலங்காபுரி நின்றதோ வெள்ளை நாவலிருப்பவனே.

பாட்டுக்கு மாத்திரம் நல்லோரைப் பாடிப் பதம் பெறலாம்.

## சூல நிர்ணயம்

மேற்படி துருவபதத் தொகையை ஒன்பதால் பெருக்கி 12-இல் கொடுக்க:-

| | |
|---|---|
| 1 மிகுந்தால் மேஷம் | 2 மிகுந்தால் ரிஷபம் |
| 3 மிகுந்தால் மிதுனம் | 4 மிகுந்தால் கடகம் |
| 5 மிகுந்தால் சிங்கம் | 6 மிகுந்தால் கன்னி |
| 7 மிகுந்தால் துலாம் | 8 மிகுந்தால் விருச்சிகம் |
| 9 மிகுந்தால் தனுசு | 10 மிகுந்தால் மகரம் |
| 11 மிகுந்தால் கும்பம் | 12 மிகுந்தால் மீனம் |

இதில் எந்தத் தொகை வருமோ அத்தொகை நாலு பாத முள்ள நட்சத்திரத்திற்குப் பின் இராசியாகும்.

மனையடி சாஸ்திரம் முற்றுப்பெற்றது.

# நட்சத்திரங்களுக்கு ஏற்ப-கிழமைகளுக்குரிய யோகங்கள்

| வ.எண் | நட்சத்திரம் | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அசுவனி | சித்த | சித்த | சித்த | மரண | அமிர்த | அமிர்த | சித்த |
| 2 | பரணி | மரண | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| 3 | கார்த்திகை | சித்த | மரண | மரண | அமிர்த | மரண | சித்த | அமிர்த |
| 4 | ரோகணி | சித்த | அமிர்த | அமிர்த | சித்த | மரண | மரண | சித்த |
| 5 | மிருக சீரிடம் | சித்த | அமிர்த | சித்த | மரண | மரண | சித்த | சித்த |
| 6 | திருவாதிரை | சித்த | சித்த | மரண | சித்த | மரண | சித்த | சித்த |
| 7 | புனர்பூசம் | சித்த | அமிர்த | சித்த | சித்த | அமிர்த | சித்த | சித்த |
| 8 | பூசம் | சித்த | மரண | சித்த | சித்த | அமிர்த | மரண | சித்த |
| 9 | ஆயில்யம் | சித்த | மரண | சித்த | சித்த | சித்த | மரண | மரண |
| 10 | மகம் | மரண | மரண | சித்த | சித்த | அமிர்த | மரண | அமிர்த |
| 11 | பூரம் | மரண | சித்த | சித்த | அமிர்த | சித்த | சித்த | சித்த |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | உத்திரம் | அமிர்த | சித்த | அமிர்த | அமிர்த | மரண | சித்த | மரண |
| 13 | அஸ்தம் | அமிர்த | சித்த | சித்த | மரண | சித்த | அமிர்த | மரண |
| 14 | சித்திரை | சித்த | மரண | சித்த | சித்த | சித்த | சித்த | மரண |
| 15 | சுவாதி | சித்த | அமிர்த | சித்த | சித்த | அமிர்த | மரண | அமிர்த |
| 16 | விசாகம் | மரண | மரண | மரண | சித்த | சித்த | சித்த | சித்த |
| 17 | அநுஷம் | மரண | சித்த | மரண | சித்த | சித்த | சித்த | சித்த |
| 18 | கேட்டை | மரண | சித்த | மரண | சித்த | மரண | மரண | சித்த |
| 19 | மூலம் | அமிர்த | சித்த | அமிர்த | மரண | மரண | அமிர்த | சித்த |
| 20 | பூராடம் | சித்த | மரண | சித்த | அமிர்த | சித்த | மரண | சித்த |
| 21 | உத்திராடம் | அமிர்த | மரண | மரண | அமிர்த | சித்த | சித்த | சித்த |
| 22 | திருவோணம் | அமிர்த | அமிர்த | சித்த | சித்த | சித்த | மரண | மரண |
| 23 | அவிட்டம் | மரண | சித்த | சித்த | மரண | சித்த | சித்த | மரண |
| 24 | சதயம் | சித்த | சித்த | மரண | சித்த | மரண | சித்த | அமிர்த |
| 25 | பூரட்டாதி | சித்த | மரண | மரண | அமிர்த | சித்த | சித்த | மரண |
| 26 | உத்திரட்டாதி | அமிர்த | சித்த | அமிர்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| 27 | ரேவதி | அமிர்த | சித்த | சித்த | மரண | மரண | அமிர்த | மரண |

## பொருத்தப் பலன்கள்

வீடு கட்டுவதில் மிக முக்கியமாகக் கவனித்து அறிய வேண்டியவை மனைக்குரிய பொருத்தங்களே என்றோம். அப் பொருத்தங்கள் அனைத்தையும் இப்பகுதியில் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன்.

1. முதல் வரிசையில் வீடுகட்டும் நிலப்பகுதியின் சதுரகஜமாகிய குழியின் அளவு 3 குழிமுதல் 300 குழிமுடிய அமைக்கப்பட்டுள்ளது. நூலினுள் 36 ஆம் பக்கத்தில் கொடுத்துள்ளவற்றில் நல்ல பலன் உடைய ஒரு அளவினை வீட்டிற்கு அகல அளவாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். முழு அளவு குழி அமைப்பதற்கு ஏற்றபடி நீள அளவில் சிறிது கூடுதலாகவோ குறைவாகவோ அமைத்து முழுக்குழியாக அமைத்துக் கொள்வது நலம்.

சான்று

